நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும்

பழ. அண்ணாமலை.

திரு...

நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும்

பழ. அண்ணாமலை

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற்பதிப்பு : டிசம்பர் 1994

விலை ரூ. 25.00

பக்கங்கள் : viii+188 = 196

அச்சிட்டோர் :
கவின்கலை அச்சகம், கந்தசாமிநகர்,
பாலவாக்கம், சென்னை-600 041
தொலைபேசி : 492 77 21

30-2

முன்னுரை

இன்று வளர்ந்து வரும் துறைகளில் நாட்டுப்புற இயலும் (Folk Lore) ஒன்றாகும். இந்த இயல் அண்மைக் காலமாகத் தான், ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளாகத்தான் மிகவும் பெரிதும் மதிப்புப் பெற்றுவருகிறது. நகரத்தார் இனத்தில் தினந்தோறும் நடைபெறும் நிகழ்ச்சிகளே பழக்கங்களாகத் தொடங்கி வழக்கங்களாக நிலைபெற்றுவிட்டன. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெற்றோர்களால் நடத்தப்பெறும் நிகழ்ச்சிகளும், காலங்களைக் கடந்து சடங்குகளாக நிலைபெற்று விட்டன. நகரத்தார் சமூகத்தில் நடைபெறும் சடங்குகளும், பழக்கவழக்கங்களும் காரணம் பற்றியே வடிவெடுத்துள்ளன. இன்றைய தலைமுறையினருக்கு அந்தச் சடங்குகளின்காரணம். தன்மை, நிகழ்த்துகின்ற முறை பெரும்பாலும் தெரியாத தாகவே இருக்கிறது. காலப்போக்கில் இவைகள் மறைந்து, சரித்திரமாகி விடக்கூடாதே என்ற எண்ணமே இந்த நூல் உருவானதற்குக் காரணம்.

ஆய்வு எண்ணங்களுக்கு என்றுமே தமிழகத்தில், அதிலும் குறிப்பாக நகரத்தார் பெருமக்களிடையே, பெரும் வரவேற்பு இருக்கும் என்பதில் ஐயமில்லை, மேலும் மற்ற இனச் சடங்கு களுடன் நகரத்தார் குலச் சடங்குகளையும் ஒப்பிட்டு ஆய்வு செய்பவர்களுக்கு இந்த நூல் பெரிதும் துணைபுரியும்.

எழுத்துலகிற்கு என்னை அறிமுகம் செய்துவைத்த தொழிலதிபர் திரு. மு.மு, முருகப்பன் அவர்களுக்கும், என்னோடு உடன் இருந்து எழுதி ஒவ்வொரு நிலையிலும் எனக்கு உற்சாக மூட்டி உதவிய என் உடன்பிறவா இளவல்

தேவகோட்டை முல்லை காந்தி ராமசாமிக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி.

தரமான நூல்களையே வெளியிடும் பாரிநிலையத்தினர் இந்த நூலை வெளியிடுவதே என் நூலுக்குக் கிடைத்த சான்றிதழாகக் கருதுகிறேன். பாரி நிலைய உரிமையாளர் திரு. க.அ.செல்லப்பன் அவர்கள் ஒரு பழுத்த அனுபவ முடையவர்கள். அவர்கள் என்மீது கொண்டிருக்கும் அன்பை எண்ணி எண்ணி மெய்சிலிர்க்கின்றேன். நூல்களை ஆழ்ந்து படித்து ஏற்றமுடையதாக இருந்தால்தான் புத்தகமாக வெளியிட முனைவார்கள். அவர்களை இருகரம் கூப்பி வணங்கி, என் நன்றியினை உரிமையாக்கி மகிழ்கின்றேன்.

குடும்பப் பொறுப்பு எதையுமே என் கவனத்திற்கு கொண்டுவந்து தொல்லை தராமல், என் எழுத்துப் பணிக்குப் பக்கபலமாக இருந்துவரும் என் வாழ்க்கைத் துணைநலம் திருமதி சிவகாமிக்கு என் அன்பு.

இந்த நூலுக்கு உங்கள் அன்பும் ஆசியும் என்றும் உண்டு என்ற நம்பிக்கையில் உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

பழ. அண்ணாமலை

30-2

பதிப்புரை

நகரத்தார் பற்றி ஏற்கெனவே பல நூல்கள் வந்துள்ளன.

சிவனடி மறவாத சிந்தையும், செந்தமிழைப் பேணும் சிறப்பும், அறநெறி வழுவாத வாழ்வும் எவ்வுயிரும் ஒன்றெனஎண்ணும் பொதுமையும், நகரத்தார் பெருமக்களின் பொதுச் சிறப்புகளாகும்.

திரு பழ. அண்ணாமலை அவர்கள்இந்நூலை ஓர் ஆய்வு நூலாக எழுதியிருக்கிறார்கள்.


நகரத்தார் பெருமக்களின் நடைமுறைப் பழக்க வழக்கங்கள், உணவு முறை, விருந்து பேணும் உயர்வு, வாழ்வியல் அணுகுமுறை, வாணிபம் செய்யும் சிறப்பு, இவற்றையெல்லாம் நுட்பமாக ஆராய்ந்து அவற்றின் சிறப்புக்கள் வெளிப்படும்படி இந்நூலை எழுதியிருக்கிறார்கள்.

வாழ்வாங்கு வாழும் நகரத்தார் பெருமக்களைப் பற்றி யாவரும் அறிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கில் இந்நூலை வெளியிட்டு மகிழ்கிறோம்.

— பாரி நிலையத்தார்

பொருளடக்கம்

கழுத்துரு



1, 13 கடைமணி

2,3,4,6,8,16
12,14,15,16,17
19,20,21,24,26
29,30,31 } உரு

7,11,29,27 – சரிமணி

5,13,22,28 – ஏத்தனம்
25 – லட்சுமி ஏத்தனம்
9 திருமாங்கல்யம்

பார்க்க 1 பக்கம் 80

—ஒன்று—

தோற்றமும் வளர்ச்சியும் :

நீரால் சூழ்ந்த இந்தத் தீபகற்ப "இந்தியாவில் சம்புத் தீவின் கண் அமைந்த நாகநாட்டில் சந்தியாபுரி நகரில் சந்திரகுல கோத்திர வைசியர்கள் கோபதீசுவர சுவாமி தரிசனமும், சதாசிவ குருபீடத்தில் தீட்சா கிரியையும் மரகத விநாயகர் பூசையும் இரத்தின மணி வியாபாரமும் செய்து கொண்டு இராஜபோக வாழ்வு வாழ்ந்து வந்தனர். மன்னனுக்கு இணையான மரியாதையையும் பெற்று, சிவாகம் புராண சித்தாந்த சைவதீட்சா சம்பன்னர்களாய், விபூதி, உருத்திராட்ச மாலிகாபரணராய், சிவநெறி தவறாத தர்மம் காக்கும் நல்ல தலைவர்களாக விளங்கினர். அப்படி வாழும் காலத்தில் அரசன் கொடுமை தாங்காமல் கலியுக வருடம் 204ல் தொண்டை மண்டலத்திலுள்ள காஞ்சிபுரத்திற்கு வந்து சேர்ந்தனர்."

மேலே சந்திரகுல கோத்திர வைசியர் எனக் குறிப்பிடப் பட்ட தனவணிகர்கள் கலியுகம் ஆண்டு 204ல் காஞ்சிபுரத் திற்கு வந்து சேர்ந்தனர். எனவே, கலியுகம் 4870 ஆண்டுக்கு முன்பு வரையில் அவர்கள் நாகநாட்டில் சாந்தியாபுரி என்ற நகரின் கண்ணே தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

காஞ்சிபுரத்தில் : தொண்டை மண்டலத்தை அப்போது ஆட்சி செய்த அரசன் தனவணிகர்களுக்கு மதிப்பு அளித்து

நல்ல வரவேற்புக் கொடுத்து, தனக்கு நிகரான இராஜ உபசாரம் செய்து, அங்கேயே குடியேறி வாழ வேண்டும் என்று கேட்டுக்கொண்டான் அவ்வேண்டுகோளுக்கிணங்கித் தனவைசியர்களும் கலியுகம் 2312ஆம் ஆண்டுவரை (2108 ஆண்டுகள்) காஞ்சீபுரத்தில் தங்கியிருந்தனர். அதன்பின் பிரதாபன் என்பவன் தொண்டைநாட்டு மன்னனாக முடி சூடினான். அவன் ஆட்சியில் வணிகர்களுக்குரிய சலுகைகள் நீக்கப் பெற்றன. அபராதங்களும், தண்டனைகளும் வழங்கப்பெற்றன. கொடுங்கோல் ஆட்சி நிலவியது. இந்த நிலையில் நல்ல மக்களைக் கொண்ட நாடே பேரும் பெருமையும் பெறும் என்பதை உணர்ந்த, மனுநீதிச் சோழன் காஞ்சீபுரத்தில் வணிகநெறி தவறாமல், வாக்குத் தவறாத தனவணிகப் பெருமக்களை தன் நாட்டின் புகார் நகரில் வந்து வணிகம் செய்யும்படி விரும்பி அழைத்தான். அவர்களுக்கு வாழ்வின் வசதிகளை எல்லாம் செய்ததோடு அல்லாமல் புகார் நகரின் கிழக்கு, மேற்கு, தெற்குத் தெருக்களில் அவர்கள் மட்டுமே வசிப்பதற்கு வழிவகுத்துக் கொடுத்தான்.

நகரத்தார்கள் தங்கள் மாளிகைகளில் தங்கக் கலசங்கள் அமைத்துக் கொள்வதற்கும் சிங்க இலச்சினை பொறித்த கொடிகளைப் பறக்க விட்டுக் கொள்வதற்கும் அனுமதி அளித்தான். இவர்களின் சிறப்பினையும், பெருமையையும் உணர்ந்த மன்னன் தங்கள் வம்சத்திற்கு மகுடம் சூட்டும் மாபெரும் உரிமையையும் கொடுத்து மகிழ்ந்தான். நகரத்தார்களுக்கு மன்னர்களுக்கு இணையான இரத்தினமகுடம் அணிந்து கொள்ளும் பெருமையையும் அளித்து "இரத்தின மகுடவைசியர்" என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தான்.

இத்தகைய வளமும் வாழ்க்கையும் அமைத்துத்தந்த புகாரில் கலியுகாதி 2312ல் விரோதிகிருது வருடம் - கி.மு. 789ல் சுமார் எண்ணாயிரவர் காஞ்சியில் இருந்து புகார் வந்து

புது வாழ்வு அமைத்துக் கொண்டு பெரும் வாணிகம் செய்து ஏறத்தாழ 1400 ஆண்டுகள் பொலிவோடும் புகழோடும் நிறைவோடும், நிம்மதியோடும் புதுவாழ்வு அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர்.

கலியுகாதி வருடம் 3275ல் பூவந்திச் சோழன் காலத்தில் நகரத்தார் சமூகம் வேதனை கலந்த பல சோதனைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. பூவந்திச் சோழனின் உல்லாசக் களியாட்டத்தில் புகார் நகரின் பெண்கள் சிக்கிச் சீரழிந்தனர். இவ்வேதனை தாங்காது பல ஆயிரம் தன வணிகர்கள் தீக் குளித்து உயிரை மாய்த்துக் கொண்டனர்.

சுண்டைக்காடு வேலங்குடிக் கல்வெட்டில், சற்று ஏறக் குறைய எண்ணாயிரம் நகரத்தார் குடும்பங்கள் தங்கள் குரு ஆத்மநாப சாஸ்திரிகளிடம் 1502 ஆண் வணிக வாரிசுகளை யும், மரகத வினாயகர் சிலையையும் ஒப்புவித்து உயிர் நீத்தனர்'' என்று தெரிய வருகிறது. மேற்குத் தெருவில் 600 பேர்களும், தெற்குத் தெருவில் 400 பேர்களும், கிழக்குத் தெருவில் 502 பேர்களுமே இந்த 1502 பேர்களாவார்கள்.

கொடுங்கோல் ஆட்சி புரிந்த பூவந்திச் சோழனும் கலியுகாதி 3784ல் மரணம் அடைய, அவனுடைய புதல்வன் ராஜபூஷணச் சோழனுக்குப் பட்டம் சூட்ட வேண்டிய சூழ் நிலை உருவாயிற்று. தங்கள் முன்னோர்கள் நகரத்தார் பெருமக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி, அவர்களே வந்து தனக்கு மகுடம் சூட்ட வேண்டும்' என்று ஆத்மநாப சாஸ்திரிகளிடம் கேட்டனர். இந்த 1502 பேர்களும் மணம் ஆகாத இளைஞர்கள் ஆதலால் எக்கருமத்திற்கும் தகுதி யற்றவர்கள் என்ற சூழ்நிலையில் ஆத்மநாப சாஸ்திரிகள் வைசியர் குருவான ஈசானிய சிவாச்சாரியாரிடம் ஆலோசனை கேட்டனர். சிவாச்சாரியாரும் ''முற்காலத்தில் வைசியர்கள் என்று இருந்த பொதுவான பிரிவு காலத்தின் சுழற்சியில் தன

வைசியர், பூவைசியர், கோவைசியர் என மூன்று பிரிவுகளாகப் பிரிந்து வாழத் தலைப்பட்டனர். ஆகவே, பூவைசியர் என்ற வேளாளப் பெருமக்களின் பெண்களை நகரத்தார்கள் மணந்து கொள்ளலாம் என்ற தன் கருத்தை ஈசானிய சிவாச்சாரியார் வெளியிட்டபோது, அந்தக் கருத்து எல்லோராலும் ஏற்கப்பட்டு காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்து கொண்டிருந்த கார்காத்த வேளாளர் பெண்களை மேற்குத்தெரு 600 பேர்களுக்கும், காணி ஆள வேளாளர் பெண்களை தெற்குத் தெரு 400 பேர்களுக்கும் சோழிய வேளாளர் பெண்களைக் கிழத்தெரு 502 பேர்களுக்கும் திருமணம் செய்து வைக்கப் பெற்றது. இந்த ஏற்பாட்டினால், சோழர் குலத்திற்கும் வைசியர் குலத்திற்கும் இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து, மன்னனது அன்பும் அரவணைப்பும் மீண்டும் நகரத்தார் பெருமக்களுக்குக் கிடைத்தது.

இவர்கள் நிறைவான, நிம்மதியான வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தபொழுது பாண்டிய மன்னன் சௌந்திர பாண்டியன் இராஜபூஷணச் சோழனிடம் தன் முன்னோர் கீர்த்திபூஷண பாண்டியன் காலத்தில் கடல் பெருகி திருப்புவனம் வரை அழிந்து விட்டதால், மீண்டும் அதை வளப்படுத்த புகார் நகரில் வாழ்ந்து வருகின்ற இரத்தின மகுட பூபால வைசியர்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று, வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டான். இந்த வேண்டுகோளை, நகரத்தார்களிடம் சொல்லிய போது' அவர்கள் நாங்கள் எங்கு இருந்தாலும் நாங்கள் ஒன்றாகவே இணைந்து வாழ வேண்டும் என்றும் அதற்கு வசதிகள் செய்து தரவேண்டும் என்றும், எங்களது இறைவழிபாட்டிற்குக் கோயில்களும், எங்களுடைய குருமார்களுக்கு மடங்களும் அமைத்துத்தர வேண்டும் என்றும், அவைகளை நிர்வகிக்கும் முழு உரிமையையும் தங்களுக்கே தரவேண்டும் என்றும், தங்கள் எண்ணத்தைச் சொல்லியபோது, சௌந்திர

பாண்டியன் அவர்களுடைய அத்தனை கோரிக்கைகளையும் ஏற்று பாண்டிய நாடு வந்து வாழவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். இதனால் நகரத்தார்கள் சாலிவாகன சகாப்தம் 629ல் (பிலவங்க வருடம் வைகாசி மாதம் 21ஆம் தேதி வெள்ளிக்கிழமையும் அஸ்த நக்ஷத்திரமும் கூடிய நல்ல நாளில்) பாண்டிய நாட்டில் உள்ள தற்போது காரைக்குடி என்று வழங்கிவரும், ஓங்காரக்குடி என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தனர்.

சௌந்திர பாண்டியன் நகரத்தார்களுக்கு தான் முன் கூறியபடி பாண்டிய நாட்டில் கடலுக்கு மேற்கு, வைகை நதிக்கு வடக்கு, பிரான்மலைக்கு கிழக்கு வெள்ளாற்றுக்குத் தெற்கு என்று இந்த நான்கு எல்லைக்கு உட்பட்ட நிலப் பரப்பில் குடியமர்த்தினான்.

நகரத்தார்கள் அவ்வாறே முதன்முதலில் பாண்டி நாட்டிற்கு வந்து குடியேடி வாழ்ந்து வருகின்ற எல்லையை

''வெள்ளா றதுவடக்காம் மேற்குப் பிரான்மலையாம்
தெள்ளார் புனல்வைகை தெற்காம்—ஒள்ளியசீர்
எட்டிக்கடல் கிழக்காம் இஃதன்றோ நாட்டரண்சேர்
செட்டிநாட் டெல்லையெனச் செப்பு''

என்று மகாகவி பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள் கவிதையில் கண்டபடி வகுத்துக்கொண்டு பலர் முத்து ராமலிங்க மாவட்டத்திலும் (அன்றைய இராமநாதபுர மாவட்டம்), சிலர் புதுக்கோட்டை சமஸ்தான எல்லையிலும் (இன்றைய புதுக்கோட்டை மாவட்டம்) குடியேறி வாழ்ந்து வந்தனர். இவர்கள் வாணிபச் செழிப்பில் சிறந்து விளங்கினர். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து இவர்கள் பாண்டிய நாட்டிற்கு வந்த வரலாறு A General History of the Pudukottai State என்ற நூலிலும் காணப்பெறுகிறது.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் காவிரி நதியின் முகத்துவாரத்திலிருக்கும் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து பாண்டிய நாட்டுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் சோழ மன்னர்களால் ஆதரிக்கப் பெற்று வந்ததாகவும், சோழ மன்னர்கள் பட்டத்திற்கு வரும்போது, மணிமுடி சூட்டும் பெருமையும், உரிமையும் பெற்றிருந்தார்கள் என்றும் கூறப் படுகிறது. சோழ மன்னன் ஒருவன் நகரத்தார் குலத்துப் பெண் ஒருத்தியைச் சிறை செய்ய விரும்பியதால், அவர்கள் அனைவரும் சோழ நாட்டைவிட்டு, இனி தங்கள் பெண்களை வெள்ளாறு தாண்டி சோழ நாட்டிற்கு விடுவதில்லை என்ற உறுதிப்பாட்டுடன் வெள்ளாற்றிற்குத் தெற்கே ஒரு கூட்ட மாக வந்து குடியேறியிருக்கின்றனர்.'' என்றும் இந்த ஆய்வாளர் குறிப்பிட்டிருப்பதைக் காண்கிறோம்.

இன்று வாழ்கின்ற மக்களுக்கு ''நாட்டுக்கோட்டை நகரத்தார்கள்'' என்றால் செட்டியார் என்று தான் தெரியும். இவர்களுக்கு ''பிரதான வைசியர்'', மகுட வைசியர், தன வைசியர், இரத்தின வைசியர், உபயகுல பூபால வைசியர், சந்திர கங்காகுல வைசியர், சிவகோத்திர வைசியர், இளை யாற்றங்குடி வைசியர். நாட்டுக்கோட்டை நகர வைசியர் என்னும் ஒன்பது காரணப் பெயர்களால் அழைக்கப் பெற்றனர். இதற்கு ப. சொ. ஆண்டியப்பன் அவர்கள் எழுதிய 'சிவகோத்திர வைசிய விருத்தி' - பாகம் - 1 என்ற நூலில் ''மேதக்க சோழ வளநாடு சோறுடைத்து'' என நமது ஔவைப் பிராட்டியார் புகழ்ந்து கூறப்பெற்ற, எந்நாட்டிலுஞ் சிறந்த நன்னாடாகிய சோழ நாட்டுக்குத் தலைநகராக விளங்கிய காவிரிப் பூம்பட்டினத்து, பல வகை வைசிரியரிலும் பெருந் தன்மையும் பேரறச் செய்கையுமுடையராய், பூரண மாக நிறைந்த செல்வப் பேருடையராய் பலவகை நல்லொழுக்கங்களிலும் சிறந்தோராய் விளங்கினராகலின் பிரதான வைசியா என்றும் சோழ மன்னர் மக்கட்கு முடி

சூட்டுங் கௌரவமுடையராய் அக்காலம் வாழ்ந்து வந்தனரா கலின் வைசியர் என்றும், இந்தக் காலத்தும் நிறைந்த செல்வப் பேருடையராகலின் தனவைசியர் என்றும் இஃதோடு இரத்தின வியாபாரச் செய்கையுடையராகலின் இரத்தின தனவைசியர் என்றும் உழவர் மேழியர் காராளிளங்கோ புகழ் பூபாலர் பூவைசியர்' பெயரே என்பது பிங்கலத்தைச் சூத்திரமாகலின் பூவைசியராகிய கெங்காகுல வேளாளப் பெண்களை திருமணம் செய்து கொண்டாகர்களாகலின் உபயகுல பூபால வைசியர் என்றும், நமது கோத்திராதியள வைகட்கு இலக்காகவும், அடிப் பீடமாகவும் நிற்பன. சிவாலயமாகலின் சிவகோத்திர வைசியர் என்றும், ஒருபோது நமது மரபார் யாவரும் ஒருங்கே இளையாற்றங்குடி நகரத்தில் மட்டும் வாசஞ் செய்து கொண்டிருந்தனராகலின் இளையாற் றங்குடி நகர வைசியர் என்றும், பாண்டி வள நாட்டின் கண் இளையாற்றக்குடி நகரம் நாட்டுக்குள் கோட்டைபோல் நடு மண்டலமாக அமைந்து இருந்தமையால், அங்கே இருந்தவர் களுக்கு நாட்டுக்கோட்டை வைசியர் என்னும் காரணச் சிறப்புப் பெயரும் தோன்றலாயின.''

நகரத்தார்கள் இப்போது பாண்டி வள நாட்டின் பசும் பொன் முத்துராமலிங்க மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும் தங்கி வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் தங்கி வாழும் பகுதியை ' செட்டிநாடு'' என்னும் பெயரால் அழைக்கிறார்கள். இவர்கள் முன்னர் தங்கி வாழ்ந்த ஊர்கள் இந்த இரு மாவட்டங்களிலும் சிறுசிறு கிராமங்களாக இருந்த தால், நாகரீகத்தின் வளர்ச்சியாலும் தங்கள் வாழ்க்கை வசதி களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற அவாவினாலும் இந்த மாவட்டங்களுக்குள்ளேயே 96 ஊர்களை உருவாக்கிக் கொண்டு வாழ்ந்து வந்தனர்.

சுண்டைக்காடு வேலங்குடிக் கல்வெட்டுக்களில் இருந்து நகரத்தார்களின் சரித்திரத்தை ஆராயும்போது, அவர்

களுடைய பூர்வீக இருப்பிடம், பின்னர் தொண்டை மண்டலம் வந்தது, அங்கிருந்து காவிரிப்பூம்பட்டினம் வந்தது, அதன் பின்னர் பாண்டி நாட்டிற்கு வந்து ஒன்பது கோயில்களை அமைத்துக் கொண்டு வாழத் தொடங்கிய விபரங்களைக் கீழ்க்கண்ட இந்த அத்தியாயத்தின் முடிவில் கண்டுள்ள பட்டியல் மூலம் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களின் The Ancient History of Nagarathars"[1] என்ற கட்டுரையில் இருந்து அறிய முடிகிறது.

தனவணிகரைச் செட்டிகள் என்பர். வடநாட்டில் சேட்டுகள் என்பர். சிரேஷ்டி என்ற பதமே இவ்வாறு மருவி வழங்குகிறது. சிலர் சிக்கனம் என்ற சொல்லிலிருந்து வந்தது தான் "செட்டி" என்று கூறுகின்றனர். முன்னாள் நடுவண் அரசு அமைச்சரும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தருமான டாக்டர் எஸ். சந்திரசேகரன் அவர்கள் 'செட்டி' என்ற சொல்லுக்குக் கூறும் விளக்கம்.

"The term is derived from the Sanskrit word shresti. The root of the Sanskrit term shresta means important or superior and it has even come down to this day as a proper surname as Mr. Kula Shresta (meaning Prominant family or one belonging to such a family) Jawaharlal Nehru - writing in a different Contest, points out "The Chettys of Madras have also been leaders in business and banking especially from ancient

1. An article 'The Ancient History of Nagarathars by Dr. V.SP. Manickam - Collected Papers - Publshed by him in 1978.
2. The Nagarathars of South India Dr. S. Chandrasekaran published by Macmillan Company of India Ltd., in 1980.

times. The word 'Chetty' is dervied from the Sanskrit 'Shresty' leader of merchant guild. Tha Common applelation, 'Seth' is also dervied from 'Shreshti'. The Madras Chettys have not only played an important part in South India, but they have spreadout all over Burma. even in the remote villages'' (Discovery of India by Pantit Jawaharlal Nehru. Page 351) Thus Chetty in the South and seth (or sethji, a common denominator for rich merchants) in South India are Popularlarly held to be dervied from the Sanskrit 'Shreshta', meaning great or prominant.

இத்தகையக நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் தமிழ் நாட்டில் சிறுபான்மைப் பிரிவினராகத் தங்களுக்குள் ஒன்பது கோயில்களையும 23 உட்பிரிவுகளையும அமைத்துக் கொண்டு, திருமண உறவு முறைகளை நடத்திக் கொண்டு வருகின்றனர். இந்த ஒன்பது நகரக் கோயில்கள் பாண்டிய மன்னர் ஒருவரால் இவர்களுக்கு வழங்கப்பட்டதென நகரத்தார் சரித்திரம் கூறுகிறது.

தன வணிகர்கள் வணங்கி வழிபடுகின்ற தெய்வங்களில் தலையாய தெய்வம் முருகக் கடவுளே, குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகன் இடத்தில் பேரன்பு பூண்டவர்கள், பெரும் பக்தியுடையவர்கள். குன்றுதோறும் குமரனைக் குல தெய்வமாகக் கொண்டாடும் தன்மை தனவணிகர்களுக்கு இன்றும் உரியது என்பதை இடையறாது நினைந்து நினைந்து உருகி உருகி வழிபடும் பேறு பெற்றவர்கள். விண்ணிலே எழுந்த முழுமதுபோல், என்றும் அருள் ஒளிகாட்ட வேல் பிடித்து விளங்கும் செந்தமிழ் முருகனை இவர்கள் சிந்தையில் வைத்ததில் வியப்பே இல்லை.

எத்தகைய சிவபக்தியும் மனத்திண்மையும் உடையவர் களாக இருந்தாலும் விதிவசத்தால் சிற்சில நேரங்களில் இவர் களிடையே சிறுசிறு பிணக்குகள் கொண்டதாலும்—ஒரு சந்தர்ப்பத்தில் இவர்களிடையே ஏதோ ஒரு மனக்கசப்பு தோன்றியதன் காரணமாக ஒரே கூட்டுக்குழுவாக இருந்தவர் கள் பாண்டிய நாட்டின் தென்பகுதியில் தொண்ணூற்றாறு ஊர்களை ஏற்படுத்திக்கொண்டு, குடியேறி வாழ்ந்தனர்.

சாலி வாகன ஆண்டு	கலி ஆண்டு	தமிழ் ஆண்டு	கிறித்தவ ஆண்டு	அரசர்கள்
203 வரை	203 வரை	—	கிமு 2898	—
204	204	—	கிமு 2897	பிரதாராசன்
—	2312	விரோதி	கிமு 789	மனுநீதிச் சோழன்
596	3775	—	கிபி674	பூவந்திச் சோழன்

நாடுகள்	நிகழ்ச்சிகள்	குருஸ் தானம்	வணங்கிய இறைவன் பெயர்	ஏனைய பிற குறிப்புகள்
நாகநாடு சந்தியா புரி	பூர்வீகக் குடியிருப்பு	சதாசிவ குரு பீடம்	கோமதீஸ்வரர்	மரகத வினாயகர் வழிபாடு சைவ சித்தாந்த வாழ்க்கை முறை நவரத்தின வியாபாரம்
தொண்டை மண்டலம் காஞ்சிபுரம்	நாக நாட்டு அரசனின் கொடுமையில் முதல் குடியேற்றம்	அருணகிரி சிவ சங்கராச்சாரியார்	சத்திய புரீஸ்வரர்	மன்னிணை மரியாதை மேற்கண்ட வாழ்க்கை முறைகளுடன் புஷ்கரணி நதியில் தீர்த்தம் ஆடுதலும்
சோழ நாடு காவிரிப் பூம் பட்டினம்	காஞ்சி அரசனின் கொடுமைகளால் இரண்டாவது குடியேற்றம்	சிதம்பரம் ஈசானிய சிவாச்சாரியார்	ருத்திர புரீஸ்வரர்	காவேரியில் நீராடுதல், எண்ணாயிரம் குடும்பங்கள் மூன்று தெருக்களில் சிங்கக் கொடியுடன் தங்கக் கலசங்களை அமைத்து அரசர்க்கு முடிசூட்டும் தகுதி பெற்று இரத்தின மகுட வைசியர்களாக மரகத விநாயகரை வழிபட்டு வாழ்ந்தனர்.
மேற்படி	மூன்று வகுப்பாரின் ஆயிரத்தி ஐநூற்றி இரண்டு ஆண் குழந்தைகள் நீங்கலாக மற்ற அனைவரும் உயிர் நீத்தல்	திருவாரூர் கும்ப கோணம் பாவேஞ்சியம் மூன்று ஊர்களில் வெள்ளாளப் பெண்களுக்கு மூன்று குருமார்கள்	—	மரகத வினாயகர் வழிபாடு ஆத்மநாத உபாத்தியாயர் 1502 ஆண் குழந்தைகளையும் அழைத்து வருதல் வைசியர்களுக்கும் வெள்ளாளர்களுக்கும் உடன்படிக்கை 1502 ஆண் குழந்தைகளுக்கும் வெள்ளாளப் பெண்களை மணத்தல்

சாலி வாகன ஆண்டு	கலி ஆண்டு	தமிழ் ஆண்டு	கிறித்தவ ஆண்டு	அரசர்கள்
605	3784	—	கிபி 683	இராஜ பூஷணச் சோழன்
622	3799	—	கிபி700	மேற்படி
629	3808	பிலவங்க வைகாசி வெள்ளிக் கிழமை	கிபி 707	சௌந்தர பாண்டியன்
634	3813	—	கிபி 712	—
636	3815	—	கிபி 714	—
640	3819	—	கிபி 718	—

நாடுகள்	நிகழ்ச்சிகள்	குருஸ்தானம்	வணங்கிய இறைவன் பெயர்	ஏனைய பிற குறிப்புகள்
மேற்படி	முடி சூட்டுதல்	பெண்களுக்கு உபய குருக்கள்	—	உபய குலபூபால வைசியர் இரத்தின தன மகுட பூபால வைசியர், சந்திராங்கர் குல வைசியர்
மேற்படி	—	வைசியப் பெண்களுக்கு உபயகுரு ஏற்படுத்துதல்	—	குருக்களின் மூத்த புதல்வர்களைக் குருஸ்தானமாக ஏற்படுத்துதல்
பாண்டிய நாடு ஓங்காரக் குடி	பாண்டிய மன்னரின் வேண்டுகோளுக் கிணங்கி தற்போது வாழ்கின்ற பகுதிகளில் மூன்றாவது குடியேற்றம்	பாண்டிய நாட்டு ஆச்சாரியார்		கீர்த்தி பூஷணப் பாண்டியனும் 18 அரசர்களும் கிராமங்களும் கோயில்களும் பிரித்துக்கொள்ளல் மூன்று வகுப்பாரிடையே ஒற்றுமைக் குறைவு, சாதி முறை நியாயங்கள் தீர்மானித்தல்
மேற்படி	ஒன்பது கோயில் நிர்மாணித்தல்	—	—	இளையாற்றங் குடி நகரத்தார்களிடம் மனவேறுபாடு. அதி வீரபாண்டியபுரம் திருவுன சக்கர வர்த்தி நியமராஜன் போன்ற சரித்திரப் பெயர்கள்
மேற்படி	இரணியூர், பிள்ளையார்பட்டி, நேமங்கோயில், இலுப்பைக்குடிக் கோயில்கள் தோற்றம்	—	—	—
மேற்படி	சூரைக்குடி, வேலங்குடிக் கோயில்கள் தோற்றம்	—	—	—

சாலிவாகன ஆண்டு	கலி ஆண்டு	தமிழ் ஆண்டு	கிறித்தவ ஆண்டு	அரசர்கள்
1083	4262	—	கிபி 1161	காருண்ய பாண்டியர்
1220	4389	சர்வதாரி	கிபி1288	—
1463	4644	—	கிபி	—
—	4665	—	1464	—
1487	4666	அட்சய ஐப்பசி முதல்தேதி திங்கள் கிழமை	—	—

நாடுகள்	நிகழ்ச்சிகள்	குருஸ் தானம்	வணங்கிய இறைவன் பெயர்	ஏனைய பிற குறிப்புகள்
—	முத்து மீனாளை விடுவிப்பதற்கு ஒக்கூருடையர் ஒருதலை வேனாகத் தந்தது	—	—	ஒக்கூருடை யாருக்கு முதல் மரியாதை, அரசன் தண்டனையைக் கட்டாயப் படுத்தவில்லை
சேரநாடு	அரியூர்ப் பட்டினத்தில் 64 வைசியர்கள் கேரளாவில் குடியேற்றம்	—	—	சேர நாட்டிலுள்ள கொட்டாரக் கரையில் வைசியர்கள் வசம் மரகத விநாயகர்
பாண்டிய நாடு	நாட்டரசன் கோட்டையில் இடர்ப்பாடுகள் பெண்கள் கற்பழிக்கப் பட்டனர்	வைசியர்களின் ஒரு பகுதிக்கு திருப்புனவாயில் குருவும், மற்றவர்களுக்கு நிரம்ப அழகிய குருவும்	—	குரு ஸ்தானங்களின் வேண்டுகோளையும் மீறிப் பெண்கள் தண்டிக்கப் பட்டனர். 2 குருக்கள் கங்கையில் குளித்து முக்தி அடையச் செல்லல்
—	21 ஆண்டுகளுக்குப்பிறகு பாண்டியர் குருக்கள் திரும்புதல்	—	—	பாண்டிய நாட்டு திருப்புனவாசல் குருஸ்தானத்தை ஏற்றுக்கொள்ளுதல்
—	இளஞ்சேரிப் பட்டணத்தில் குரு ஸ்தானம் தோற்றுவித்தல்	திருப்புவனவாயில் இராமநாத சுவாமி	—	ஆண்களுக்குக் கலா மடம் பாதரக்குடியிலும் பெண்களுக்கு துளாவூரிலும் மடங்கள் தோற்றுவித்தல்

—இரண்டு—

கோயில்களும் குருபீடங்களும் :

நகரத்தார் பெருமக்கள் சோழநாட்டை விட்டுப் பாண்டிய நாட்டில் குடியேறியதும், பாண்டிய மன்னன் தன்னுடைய துறைமுகங்களுக்கு அருகிலுள்ள கானநாட்டை எல்லைப் படுத்தி அந்த நாட்டையே கோட்டையாக அமைத்து பிரம்பூர் என்னும் பாலையூர் நாட்டை, கேரளனுக்கு சிங்கம் போன்று இருந்த தன் பெயரால் 'கேரள சிங்க வளநாடு' என்று பெயர் மாற்றியும் குன்றங்களை அடுத்துள்ள பாகங்களை 'கல்வாச நாடு' எனப் பெயர் அமைத்தும் 'தொண்ணூற்றாரூர்' நகரத்தார் 'ஏழகப் பெருந்திரு நாட்டுக் கோட்டையார்' எனும் பட்டங்களைக் சூட்டிக் கொடுத்தான்.

பெரியபுராணம் நாயன்மார்களில் காரைக்காலம்மையார், இயற்பகை நாயனார், அமர்நீதி நாயனார் மூவரையும், ஜீவமுக்தி பெற்ற பட்டினத்தடிகள் போன்ற பெரியார் களையும் பெற்ற மரபில் பிறந்து வளர்ந்த சைவ சமய வித்துக்களாக இருந்ததைக் கருதி இவர்களுக்குக் கொடுத்த பாண்டிய நாட்டிலுள்ள ஒன்பது கோயில்களையும், அவர் களிடமே ஒப்படைத்து விட்டான். இன்று இந்தக் கோயில்கள் அவர்களுக்குப் பிறவிச் சொத்துக்களாகவும் வாழ்க்கை முடிச்சுக்களாகவும் அமைந்திருக்கின்றன. ஒக்கூருடையார் அரும்பார்க்கிளையரான பட்டணசாமியார், பெருமருதூருடையயர் கழனி வாசற்குடியார், இங்கிணிக் கூருடையார் பேரசந்தூருடையார், சிறுசேத்தூருடையார்

என்னும் ஏழகப் பெருந்திருவாக மதிக்கப்பெற்ற எழுவரும் சென்று பாண்டியனைக் கண்டபோது, அவர்களிடம் குலசேகரபுரம் எனப் பெயரிடப் பெற்று இளையாற்றங்குடிக் கோவில் ஒப்புவிக்கப்பட்டது.

அந்தக் கல்வாச நாட்டில் மருதங்குடியில்[3] இரணியூரும் மருதங்குடி[3] பிள்ளையார் பட்டியும், இராஜ நாராணபுர மாகப் பெயரிடப்பட்டு, திருவேட்பூருடையார் இரு பிரிவினரிடம் கொடுக்கப் பெற்றது. கேரளசிங்க வளநாடாக மாற்றப்பட்ட பிரப் பூர் நாட்டிலுள்ள வீரபாண்டியபுரமான [4]மாற்றூர்க் கோயிலை உறையூருடையார், அரும்பாக் கூருடையார், மணலூருடையார், மண்ணூருடையார், கண்ணூருடையார், கருப்பூருடையார், குளத்தூருடையார் என்ற ஏழு பிரிவினரும் ஏற்றுக் கொண்டனர். அதே பிரம்பூர் நாட்டில் பெரிய வகுப்பு, தெய்யனார் வகுப்பு, பிள்ளையார் வகுப்பு என மூன்று பிரிவாகிய சிறுகுளத் தூருடையார், கழனிவாசலுடையார், மருதேந்திரபுர முடையார் என்ற மூன்று பிரிவினரும் வீரபாண்டியபுரமான [5]வைரவன் கோயிலை நிர்வகித்து வந்தனர். அங்குள்ள குலசேகரபுரமான [6]நேமத்துக் கோயிலை தேனாறு பாயும் இளநலமுடையார் ஒப்புக் கொண்டனர். பெரம்பூர் நாட்டில் புகழிடம் கொடுக்கும் பட்டினமாகச் சூடாமணி புரமுடையார் [7]இலுப்பைக்குடிக் கோயிலைப் பெற்றுக் கொண்டனர். கேரளசிங்க வளநாடாகிய [8]சூரைக்குடிக் கோயில் புகழ் வேண்டிய பாக்கமுடையார் பக்கம் சேர்ந்தது. பாலையூர் நாட்டு [9]வேலங்குடி தேசிக நாராயணபுரம் என்று பெயரிடப் பெற்று கழனி நல்லூருடையார் நிர்வகித்தனர். இங்ஙனம் இந்தக் கோயில்களின் நிர்வாகங்களை ஏற்றுக் கொண்டு சைவ சமயத்தை வளர்க்கத் தொடங்கினர்.

இந்த ஒன்பது நகரக் கோயில்களும் பசும்பொன் முத்து ராமலிங்கம் மாவட்டத்திலேயே அமைந்துள்ளன. இந்த

ஒன்பது கோயில்களின் வரலாற்று விளக்கங்கள் சுருக்க மாகக் கீழே தரப் பெற்றுள்ளன.

இளையாற்றங்குடிக் கோயில் :

கீழச்சீவல் பட்டியிலிருந்து 3 கல் தொலைவில் ஆவினிப் பட்டிச் சாலையில் இக்கோயில் அமைந்துள்ளது. காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து பாண்டிய நாட்டுக்கு வந்த நகரத்தார் ஏழு பிரிவினர். இந்த இளையாற்றங்குடியில்தான் ஒன்றாகத் தங்கி இளைப்பாறினார்கள். பின்னர் பிள்ளையார்பட்டிக் கோயிலும், இரணிக்கோயிலும் அமைக்கப்பட்டபின் நகரத்தார்கள், ஒன்பது கோயில் நகரத்தார்கள் என்றே அழைக்கப்பட்டனர். பொதுவாகவே இவர்களுக்கு இளை யாற்றங்குடிச் செட்டியார்கள் என்ற பெயரும் உண்டு.

பிரம்மாண்டபுராணத்தில் இத்திருத்தலத்தின் சிறப்பு களை முதன் முதலில் பிரம்மதேவர், நாரத முனிவருக்கு கைலாயத்தில் சிவபெருமான் திருமுன் அருளினார் என்றும், பிறகு காசியில் வஷிஷ்டருக்கு அகத்தியனார் கூறினார் என்றும், அதற்குப் பின்னர் நைமிசாரணிய முனிவர்களுக்கு சூதக முனிவரால் கொடுக்கப்பெற்றதென்றும் கூறப்பட் டுள்ளது. இத்திருத்தலம் சிவனுக்குரிய தலங்களில் சிறப்புப் பெற்றதாகவும் கருதப்படுகிறது. இளைப்பினை ஆற்றுகின்ற பகுதி என்ற பொருள் கொண்டது இந்த இளசைப் பதியே ஆகும். இங்கே வீற்றிருந்து அருளாட்சி புரியும் இறைவனின் திருநாமம் கைலாச நாதர், இறைவியின் திருப்பெயர் நித்ய கல்யாணி அம்பாள். இந்தக் கைலாய நாதர் கோயில் தவிர இளையாற்றங்குடியின் ஒக்கூருடையார், பட்டணசாமியார், பெருமருதூருடையார், கழனிவாசற் குடியார், இங்கிணிக் கூருடையார், பேரசந்தூருடையார், சிறுசேத்தூருடையார் ஆகிய 7 பிரிவு நகரத்தார்களுக்கும் தனித்தனியே பிள்ளையார் கோயிலும் திருக்குளமும் உள்ளது. பட்டண சாமிப் பிரிவினருக்குத் தனியே ஒரு சிவாலயமும் இருக்கிறது.

கழனிவாசற்குடியார் தங்களுக்கெனத் தனியே ஒரு விஷ்ணு ஆலயமும் அமைந்துள்ளனர். சுபத்திரா என்ற பெரிய முனிவரின் ஒன்பது செல்வர்களும் இத்தலத்தில் உள்ள சித்த தீர்த்தம் என்ற திருக்குளத்தில் புனித நீராடி, சித்தர்களாகத் திகழ்ந்து இருக்கிறார்கள். இந்திரன் முதலான தேவர்களுக்கு அபயம் அளித்து, அசுரர்களிட மிருந்து காப்பாற்றப்பட்டதும், கல்லுவ முனிவர் முக்தி பேறு அடைந்ததும் இத்திருத்தலமே ஆகும். இத்திருத்தலத்துக்கு சிவபுரம், நித்தியகல்யாணபுரம், சித்தபுரம், பூகைலாசம் என்ற பல பெயர்கள் வழங்கி வருகின்றன. இத்திருத் தலத்தில் மனதால் நினைத்தாலும் காதால் கேட்டாலும், திருக்கரங்களால் கைகூப்பி வணங்கினாலும் எல்லாப் பாவங்களும் நீங்கி சகல விதமான மங்கலங்களும் உண்டாகும் என்பது அகத்திய முனிவரின் அருள் வாக்கு.

இற்றைக்கு சுமார் 800 வருடங்களுக்கு முன் மதுரையை ஆண்ட பாண்டிய மன்னனால் கட்டப்பெற்று ஏறத்தாழ 400 வருடங்களுக்கு முன் இப்பகுதியில் குடியேறிய நகரத்தார்களுக்கு பாண்டிய மன்னனால் வழங்கப் பெற்ற திருக்கோயிலாகும். இளையாற்றக்குடி நகரத்தார்களில் ஒருவராகிய அருணாசலம் செட்டியார் மகள் 5 வயதுடைய முத்து மீனாள் என்ற பெண்ணை, அப்பொழுது அரசாண்டு வந்த காருண்ய பாண்டிய மன்னன் தன் அரண்மனைக்குக் கொண்டு சென்று விட்டான். நகரத்தார்கள் இதனைத் தன்மானப் பிரச்சினையாகக் கருதி மன்னரிடம் சென்று முத்துமீனாளை விடுவிக்க வேண்டும் என்று கூறினர். பாண்டிய மன்னனும், தான் முத்துமீனாளை விடுவிப்ப தாகவும், பின்னர் அவளுக்கு தங்கள் குல வழக்கப்படி மரண தண்டனை கொடுத்தால் அவளுடைய ஒரு தலைக்கு ஈடாக எட்டுத் தலைகள் தர வேண்டும் என்று நிபந்தனை இட்டான். நகரத்தார்கள் விடுவித்துக் கொண்டு வரப்பட்ட முத்துமீனாளை தங்கள் குல வழக்கப்படி கொன்று

விட்டார்கள். இதன் பின்னர் நகரத்தார்கள் ஒன்று கூடி அரசன் ஆணையை மீறியதால் எட்டுத் தலையும் எண்ணாயிரம் பொன்னும் கொடுப்பதற்கு ஆலோசனை செய்தார்கள். நகரத்தார்கள் ஏழு வழிக்கு ஒரு தலை வீதம் கொடுத்தாலும் எட்டாவது தலையை யார் கொடுப்பது என்பதே சிக்கலாக இருந்தது. இந்த நிலையில் ஏழு வழியில் ஒரு வழியாராகிய இளையாற்றங்குடி இரணியூர், பிள்ளையார் பட்டி என்று சொல்லக்கூடிய மூன்று கோயி லாகும் எங்கள் வழி ஒன்றாக இருந்தாலும், கோயில்கள் மூன்றாக இருப்பதால் தாங்களே ஒரு தலை அதிகமாகத் தருவதாகக் கூறினார்கள். அப்பொழுது இளையாற்றங்குடிப் பிரிவினருள் ஒருவராகிய ஒக்கூர் உடையார் தங்களுக்குக் கோயில் குருமடங்களில் முதல் மரியாதை தர நகரத்தார்கள் சம்மதிப்பார்களேயானால் அதிகமாகக் கொடுக்க வேண்டிய ஒரு தலையைத் தாங்கள் தருவதாகக் கூறி, எல்லோரும் ஒப்புக் கொண்டு மன்னனிடம் சென்று முத்துமீனாளை எங்கள் சாதி வழக்கப்படி செய்து விட்டோம் என்றும், அதற்கு ஈடாக எட்டுத் தலையும் எண்ணாயிரம் பொன்னும் தருவதாகவும் கூறினார்கள். அவர்களின் நேர்மையையும் நாணயத்தையும் போற்றி அவர்களைத் தண்டிக்காமல் அனுப்பி வைத்ததாக ஒரு கர்ண பரம்பரைக் கதையும் உண்டு. இது பொய்யல்ல உண்மை என்பதற்கு ஆதாரமாக இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இன்றும் எல்லாக் கோயில் களிலும், குருமடங்களிலும் இளையாற்றங்குடிக் கோயில் நகரத்தார்களின் ஒக்கூர்ப் பிரிவினருக்கே முதற் காளாஞ்சியும் மரியாதையும் கொடுத்து வருவதைக் கண்கூடாகக் காண முடிகிறது.

இரணியூர்க் கோயில் :

திருப்பத்தூரில் இருந்து 13 மைல் தூரத்திலும், கீழச் சிவல்பட்டியில் இருந்து 4 கல் தொலைவிலும் அமைந்

துள்ளது. இக்கோயிலில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் இறைவன் பெயர் ஆட்கொண்ட நாதர்—இறைவியின் பெயர் சிவபுரந்தேவி. நரசிம்மர் இரணியனை அழித்த பிறகு சீற்றம் நீங்காமல் இருந்தார். இரணியனைக் கொன்றதால் நரசிம்மருக்கு ஏற்பட்டுள்ள தோஷத்தை எவ்வாறு நீக்குவ தென்றும் அவருக்கு ஏற்பட்டுள்ள சீற்றத்தை எவ்வாறு தணிப்பது என்றும் தேவர்கள் எல்லோரும் திருக்கோட்டியூரில் கூடி ஆலோசனை செய்தனர். இரணியூர் சென்று சுயம் புலிங்க வடிவான ஈசனை வணங்கிப் பரிகாரம் காண்பது என முடிவு செய்தனர். நரசிம்மரும் அவர்கள் எண்ணப்படி அங்கு சென்று சூரிய புஷ்ப கரணியில் நீராடி ஈசனை வணங்கி நின்றார். ஈசனும் அவருடைய பாவத்தை நீக்கி அருளினார்.

இரணியூரில் உள்ள நகரத்தாரிகளுக்குச் சொந்தமான சிவபுரந்தேவி உடனாய ஆட்கொண்ட நாதர் ஆலயம் இவர்களது கலைச் சிறப்பிற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். சிவபுரந்தேவி சன்னதி எதிரே ஒன்பது சக்திகளின் உருவங்கள் நவதுர்க்கை மண்டபத்தில் அழகிய சிற்பங்களாகக் காட்சி தருகின்றன.

அஷ்டலக்ஷ்மி மண்டபத்தில் எட்டு வகை லெட்சுமி உருவங்கள் அலங்கரிக்கின்றன. சுவாமி கோயிலில் கிழக்கு நோக்கியும் அம்மன் தெற்கு நோக்கியும் அமைந்துள்ளன. இங்கு 50 செப்புத் திருமேனிகள் உள்ளன. இரணியூர்க் கோயில் பற்றி 10க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் எடுக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. கி. பி. 14ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இளையாற்றங்குடிக் கோயில் ஏழு வழியாரில் ஒரு வழியாராகிய இரணிக்கோயிலார் தனியாகப் பிரிந்து சென்றனர். இதனால் ஏழு கோயில் பிரிவினராக இருந்த நகரத்தார்கள் ஒன்பது கோயில் பிரிவினராக ஆயினர். திருவேட்பூருடையார் என்ற அண்ணன் தம்பி இருவரில் இரணியூர்க் கோயிலார் மூத்த சகோதரர் வழி வந்தவ ராவார்கள்.

இலுப்பைக்குடிக் கோயில் :

காரைக்குடி நகருக்குக் கிழக்கே 6 கல் தொலைவில் அரியக்குடி மாத்தூர்ச் சாலையில் உள்ளது. கேரள சிங்கவள நாடாகிய பிரம்பூர் நாட்டில் இலுப்பைக்குடியான புகழிடம் கொடுத்த பட்டணத்தில் சூடாமணிபுரமுடையார் என்று இவர்கள் அழைக்கப் பெறுவர்.

இலுப்பை மரங்கள் நிறைந்த ஊர் ஆதலால், இலுப்பைக் குடி எனப் பெயர் பெற்றது. இந்த ஊருக்கு மதுவாபுரம் என்ற பெயரும் உண்டு. இங்கிருந்து அருளாட்சி செய்கின்ற இறைவனின் பெயர் தான் தோன்றீசுவர. இறைவியின் பெயர் சௌந்திர நாயகியம்மன்.

தான் தோன்றீசர் சுயம் பிரகாசலிங்க வடிவில் உள்ளார். பொன்னாசை மிக்க கொங்கண முனிவர் இரும்பு, தாம்பிரம் முதலிய நவலோகங்களை பொன்னாக்கினார். பொன்னாசை தணியாத கொங்கண முனிவரிடம் இறைவன் இரக்கம் கொண்டு ஆயிரம் ஆயிரம் மாற்றுப் பொன்னாய் இறைவன் காட்சி தந்தார். கொங்கண முனிவரின் பொன்னாசை அகன்று பேரானந்த நிலையை அடைந்தார், இந்தக் கோயிலில்தான் தோன்றீசருக்கு வடபகுதியில் கொங்கண முனிவரின் சிலையும் இருக்கிறது.

ஆரம்பத்தில் கூரைக் கோயிலாக இருந்த இந்தக் கோயிலில் 200 ஆண்டுகளுக்கு முன்னால் இலுப்பைக்குடி நகரத்தார்களால் கருங்கல் கோயிலாகக் கட்டப்பட்டது. இக் கோயிலிலுள்ள சிற்பங்கள், நுண்ணியவேலைப்பாடு மிக்கவை. இக்கோவிலில் வைரவர் தனிச் சன்னிதியில் எழுந்தருளி யுள்ளார். மூலவரை விட வைரவருக்குத் தான் இங்கு சிறப்பு அதிகம்.

நேமம் கோயில் :

குன்றைக்குடிக்கு வடக்கே சுமார் 2 கல் தொலைவில் கீழச்சீவல்பட்டி சாலையில் அமைந்து உள்ளது. இங்கிருந்து அருளாட்சி செய்கின்ற இறைவனின் பெயர் ஜெயங்கொண்ட சோழீசர். இறைவியின் பெயர் சௌந்தர நாயகி அம்மன். கேரள சிங்க வளநாடாகிய நேமமாகிய குலசேகர புரத்தில் தேனாறு பாயும் இளநலமுடையார் என இவர்கள் அழைக்கப் பெறுவர்.

நேமம் என்ற சொல்லுக்குக் கோயில் என்ற பொருள் உண்டு. நியமம் என்ற பெயரே காலப் போக்கில் நேமம் என்றும் மருவி வழங்கப் பெறுகிறது.

பூங்குன்ற நாட்டு வேலன்குடிக் கல்வெட்டுகளில் இருந்து இக்கோயில் கி. பி. 7ஆம் நூற்றாண்டில் சௌந்தரபாண்டிய மன்னனால் வழங்கப் பட்டதெனத் தெரிகிறது. இங்கே இறைவன் கிழக்கே பார்த்தும் இறைவி தெற்கே பார்த்தும் விசேஷ மூர்த்தியான வைரவர் மேற்கே பார்த்தும் எழுந்தருளி யுள்ளனர்.

அழகுமிக்க பரிவார தேவதை சிலைகளும் நுண்ணிய வேலைப்பாடுமிக்க உற்சவமூர்த்திகளின் சிலைகளும் இக் கோயிலின் கலைச் சிறப்பை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. மகாகவி பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள் ஜெயங் கொண்ட சோழீசர் மீது பிள்ளைத் தமிழ், பதிற்றுப் பத்தந்தாதி, ஊசல், சதகம் போன்றவற்றின் மூலம் இறைப் பெருமையை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

பிள்ளையார்பட்டிக் கோயில் :

இக்கோயில் காரைக்குடி, திருப்பத்தூர் ஆகிய இரு ஊர் களுக்கு இடையே அமைந்து உள்ளது. பிள்ளையார் கோயில் கொண்டுள்ள இவ்வூருக்குப் பிள்ளையார் பட்டி என்றுபெயர்.

எருக்காட்டூர், மருதங்குடி, திருவீங்கைக்குடி, இராச நாராயணபுரம் என வேறு பெயர்களும் உண்டு. இங்கிருந்து அருளாட்சி புரிவோர் கற்பக விநாயகர், திருவீசர், சிவகாம வல்லி, வாடாமலர் மங்கை முதலிய தெய்வங்கள்.

பாண்டியர் காலத்தில் ஐந்தாம் நூற்றாண்டில் இவ்வூர்த் தலைவன் பெரும்பரணன் இக்குகைக் கோயிலைத் தோற்று வித்தான். ஊருக்கு நடுவில் கோயிலும் ஆலயத்துக்குள் ஆறடி உயரத்தில் இருந்த நிலையில் பிள்ளையார் வடக்கு நோக்கி உள்ளார். இந்த விநாயகர் தான் கற்பக விநாயகரான தேசி விநாயகப் பிள்ளையார். இந்த விநாயகருக்குக் கரங்கள் இரண்டு, தொந்தி குறைவு, விநாயகரின் துதிக்கை வலம் சுழித்ததாக அமைந்து இருக்கிறது. கருவறையில் திருவீங்கைக் குடி மகாதேவர் குடிகொண்டிருக்கிறார். இங்கு 10 நாட்கள் விநாயக சதுர்த்தி விழா நடைபெறுகிறது. ஆண்டு முழுதும் சதுர்த்தியில் விரதம் இருந்து ஆவணித் திங்கள் வளர்பிறைச் சதுர்த்தியில் விரதத்தைப் பூர்த்தி செய்து நல்ல பலன்களைப் பெறுகின்றனர்.

பிள்ளையார்பட்டி குடவறைக்கோயிலில் 11 கல்வெட்டுக் கள் உள்ளன, இவற்றின் மூலம் அன்றைய அரசாட்சி மற்றும் கோயில் பற்றிய பல செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன.

மாற்றூர்க் கோயில் :

காரைக்குடிக்குக் கிழக்கே 5 கல் தொலைவில் இலுப்பைக் குடிக் கோவிலுக்கு வடகிழக்கே 2 கல் தொலைவில் அமைந் திருக்கிறது. இங்கிருந்து அருளாட்சி செய்கின்ற இறைவனின் பெயர் ஐநூற்றீசர் இறைவியின் பெயர் பெரிய நாயகி அம்பாள்.

முன்பு இக்கோயிலைச் சேர்ந்த நகரத்தார்கள் உறையூர், அரும்பாக்கூர், மணலூர், மண்ணூர், கண்ணூர், கருப்பூர்,

குளத்தூர் ஆகிய ஏழு ஊர்களில் வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஒவ்வொரு ஊரினரும் ஒவ்வொரு பிரிவினராகக் கருதப் பட்டனர். இவர்கள் தங்களது பொருளாதார நிலையை மேம்படுத்த இன்று பல ஊர்களுக்குச் சென்று விட்டபோதிலும் அவர்கள் முன்பு வாழ்ந்த ஊர்களின் அடிப்படையில் உறையூருடையார், அரும்பாக்கூருடையார், மணலூருடையார், மண்ணூருடையார், கண்ணூருடையார், கருப்பூருடையார், குளத்தூருடையார் என்றே அழைக்கப் பெறுகின்றனர்.

கொங்கண முனிவர் 500 மாற்றுத் தங்கத்தைக் கண்டு பிடிக்க இங்கு தவம் இருந்து பல முயற்சிகளைச் செய்தார். இந்த முயற்சியில் அவர் வெற்றி பெற்று தங்கத்துக்கு 500 மாற்றுக் கண்டு பிடித்தால் அவருக்கு தேவ லோகத்தில் இந்திர பதவி கிடைக்கும். இதனை அறிந்த இந்திரன், சிவபெருமானிடம் சென்று முறையிட்டார். இறைவனும் இந்திரனுக்காக உச்சாடனர் வேடம் பூண்டு கொங்கண முனிவர் குடிலுக்கு வந்து அவரிடம் தனக்கு தாகம் பொறுக்க முடியவில்லை என்று தண்ணீர் தர வேண்டும் என்று வேண்டினார். முனிவரும் தண்ணீர் எடுத்து வர உள்ளே சென்ற போது அவர் தயாரித்து வைத்திருந்த அடுப்பின் மீதும் பாத்திரங்களின் மீதும் உள்ள திரவங்களைச் கீழே கொட்டி விட்டு மாயமாக மறைந்து விட்டார். தண்ணீர்ச் செம்புடன் வந்த முனிவரும் பாத்திரங்களில் இருந்த கலவைகள் கொட்டப்பட்டதையும், வந்து நின்ற உச்சாடனர் மறைந்து போனதையும் அறிந்து, அவ்வாறு வந்தது சிவபெருமானே என்றும் அவருக்குத் தம் முயற்சிகளில் விருப்பம் இல்லை என்பதையும் தம் ஞானக் கண்ணால் உணர்ந்து கொண்டார். அந்த முனிவர் பிரதிஷ்டை செய்த இங்கு உள்ள இறைவனுக்கு ஐநூற்றீசுவரர் என்ற பெயரும் இந்த முயற்சியில் ஈடுபட்டிருந்த இடத்தில் இவ்வூர் தோன்றியதாலும் மாற்றூர் என்று

பெயர் பெற்றது. காலப் போக்கில் இதுவே மாத்தூர் என மருவியுள்ளது.

பல்லவ காலத்தில் திசையாயிரத்து ஐநூற்றுவர் என்னும், வணிகப் பெருமக்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் நார்த்தாமலைக்கு அருகில் ஐநூற்றுவப் பெரும் பள்ளி என்ற ஊரில் வாழ்ந்ததாகவும் தமிழறிஞர் சோமலெ அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இந்த நகரத்தார் மலையே நார்த்தாமலை என்று மருவி விட்டதாகவும் இவர்கள் கூறுவது நகரத்தார்கள் நினைவில் கொள்ளத்தக்கது. இந்த ஆலயத்தின் உள்ளே முன்பகுதியில் உள்ள தூணுடன் இணைந்து காணப்படும் வல்ல கணபதி சிலையும் மயில் வாகனத்துடன் கூடிய சுப்பிரமணியர் சிலையும், அக்காலச் சிற்பக்கலையை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. கோயிலில் நுழைந்தவுடன் உட்புறத்தில் முன் பகுதியில் உள்ள மேல் பகுதியில் 12 காட்சிகளுக்குரிய சிற்பங்கள் காட்சியளிக்கின்றன. கோயிலின் தலவிருக்ஷம் மகிழ மரம்.

சூரைக்குடிக் கோயில் :

பள்ளத்தூருக்குத் தெற்கே 2கல் தொலைவில் குன்றக்குடிச் சாலையில் பூவாண்டிபட்டி என்ற நகர சூரக்குடிக் கோயில் அமைந்துள்ளது. இவ்வூரில் இருந்து அருளாட்சி செய்யும் இறைவன் பெயர் தேசிகநாதர். இறைவியின் பெயர் ஆவுடை நாயகி.

சேரள சிங்க வளநாட்டில் சூரைச்குடியான தேசிக நாராயணபுரத்தில் புகழ் வேண்டிய பாக்கமுடையார் என்று அழைக்கப்பெறுவர். இங்கே இறைவி சதுர்புஜமாய் அமைந்து அழகுக்கு அழகு சேர்க்கிறது. இந்த ஆலயத்தில் வைரவர்க்குச் சூலம் இல்லை. அதற்குப் பதிலாகக் கையில் கதையை ஏந்தியுள்ளார். இங்குள்ள தக்ஷிணாமூர்த்தி அதி அற்புதமான கலை நுணுக்கத்துடன் அமைந்துள்ளார்.

வைரவன் கோயில் :

குன்றக்குடியில் இருந்து 4கல் தொலைவில் அமைந்துள்ளது. இங்கிருந்து அருளாட்சி செய்கின்ற இறைவனின் பெயர் வளரொளிநாதர். இறைவியின் பெயர் வடிவுடையம்மன்.

கேரள சிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்திருவான வீர பாண்டிய புரத்தில் சிறு குளத்தூருடையார், கழநிவாசல் உடையார். மருதேந்திரபுரமுடையார் என்று இவர்கள் குறிப்பிடப் பெறுவர். சிறு குளத்தூருடையார் பெரிய வகுப்பு பிள்ளையார் வகுப்பு, தெய்யனார் வகுப்பு என்ற 3 பிரிவுகளை உடையவர்கள். இக்கோயிலின் ஆபரணத்துள் ஒரு பிள்ளையார் உள்ளார். இப்பிள்ளையாரை முக்கியமாகக் கொண்டவர்கள் பிள்ளையார் வகுப்புஎன்றும், தெய்வநாயகர் உருவச்சிலை அமைந்துள்ளது. இவர் வழி வந்தவர்களை தெய்வநாயகர் வகுப்பினர் என்றும், புள்ளியில் மிகுதியாய் இருந்த காரணத்தால் மற்றொரு பிரிவினர் பெரிய வகுப்பினர் என்றும் அழைக்கப் பெற்றனர்.

இந்த ஆலயத்துள் வீற்றிருக்கும் வடிவுடையம்மன் உடனாய வளரொளி நாதர், தேவர்களின் குறைதீர்க்க வைரவர் வடிவம் தாங்கி அசுரர்களை அழித்ததாக இக்கோயிலின் தலபுராணம் கூறுகிறது. வைரவர் முன்பு நான்முகனும் திருமாலும் தாங்களே பிரம்மம் என்று அகந்தை கொண்டு போர் புரிந்த பொழுது, அவர்களுக்கு நடுவில் சோதி உருவில் தோன்றிய சிவனே பின்பு மலையாகக் குளிர்ந்து நின்றார். அதனைக் கண்டு நான்முகனும் திருமாலும் அகந்தை நீங்கி ஈசனை வணங்கி நின்றனர். சோதி குளிர்ந்து மலையான சிவனார் வளரொளி என்று பெயர் பெற்றார்.

இத்தலத்தில் தல விருக்ஷம் ஏறழிஞ்சில். இந்த மரத்தில் இருந்து பழம் கீழே உதிர்ந்தால் மீண்டும் கிளையில் ஒட்டிக் கொள்ளும் என்று கூறுகின்றனர்.

வேலங்குடிக் கோயில் :

கோட்டையூரில் இருந்து பள்ளத்தூருக்குச் செல்லும் சாலையில், கோட்டையூரில் ஒரு பகுதியாக அமைந்துள்ளது வேலங்குடிக் கோயில் ஆகும். இங்கிருந்து அருளாட்சி புரியும் இறைவனின் பெயர் சண்டிகேசுவரர். இறைவியின் பெயர் காமாக்ஷி அம்மன்.

கேரள சிங்க வளநாடாகிய பாலையூர் நாட்டில் வேலங் குடியான தேசிக நாராயணபுரத்தில் கழநி நல்லூருடையார் என்று இவர்கள் அழைக்கப் பெறுவர். இக்கோவில் மிகவும் பெருமை வாய்ந்தது இக்கோவிலிலுள்ள அருள்மிகு தண்டபாணி, பழநி நாயகனின் மறு உருவமாகும். சொல் கேட்ட விநாயகரின் ஊருணியின் வடக்குப் பக்கத்தில் உயர்ந்த கோபுரங்களோடு அமைந்துள்ளது. ஊருணியின் வடமேற்கே அருள்மிகு தேசிக நாராயண ஸமேத அலமேலு நாயகி அமைந்துள்ள திருக்கோயில் அமைந்துள்ளது.

துளாவூர் மடம் :

இம் மடம் குன்றக்குடிக்குத் தெற்கே துளாவூர் என்ற சிற்றூரில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்திற்குச் செல்ல நல்ல பாதைகள் எதுவும் இல்லை. கால்நடையாகவோ, மாட்டு வண்டியிலோ தான் செல்ல வேண்டும். நிரம்ப வழகிய தேசிகர் என்பவரே இந்த ஆதீனத்தை தோற்றுவித்தவர். இவ்வாதீனத்தினர் இல்லறவாசிகளே. குடும்பத்தின் முதற் பிள்ளையே ஆதீனத்தின் தலைவராக வருவது மரபு. இவர் தங்களிடம் வரும் நகரத்தார் பெண்களுக்கு தீக்ஷா குருவாக விளங்குகிறார். நிரம்ப வழகிய தேசிகர் சோழ மண்டலத்தில் திருமறைக் காட்டில் சைவ வேளாளர் குருமார்களாகிய அபிஷேகத்தன் குலத்தில் தோன்றியவர். இவர் இலக்கண இலக்கியங்களிலும், சைவ சாத்திரங்களிலும் சிறந்து விளங்கி யவர். இவருக்குப் பின் முறைபாக யார் யார் பட்டத்துக்கு

வந்தனர் என்று திட்டமாகக் கூறஎந்தவித சான்றும் கிடைக்க வில்லை. நகரத்தார்கள் புகாரில் இருந்து வந்தபோது, ஆடவர்களின் எண்ணிக்கைக் கேற்ப பெண்கள் இல்லாத காரணத்தால், வேளாளர் பெண்களைத் திருமணம் செய்து கொண்டனர். அவ்வாறு திருமணம் செய்து வைத்தபோது துளாவூரில் உள்ள தங்கள் மடத்தில் நகரத்தார் பெண்கள் உபதேசம் கேட்டுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் படி இன்றும் துளாவூர் மடத்தில் நகரத்தார் பெண்கள் உபதேசம் கேட்டு வருகிறார்கள்.

கோயிலூர் மடம் :

தமிழ்நாட்டில் உள்ள பல மடங்களில் கோயிலூர்த் திருமடம் தனிப்பெருமை வாய்ந்தது. சைவசித்தாந்தக் கொள் கைகளை விளக்கவும், வைணவக் கொள்கைகளை விளக்கவும் பல மடங்கள் இருந்தபோதிலும் வேதாந்தக் கொள்கைகளுக்கு விளைநிலமாக அமைந்தது கோயிலூர்த் திருமடமே.

கி.பி. 19ஆம் நூற்றாண்டில் இந்த மடம் நகரத்தார் களால் தோற்றுவிக்கப் பெற்றது. இம்மடத்தின் முதற் குரவரான ஆண்டவர் ஓதாது உணர்ந்த பெரும்ஞானி யாவார். சிக்கல் அருகே உள்ள பொருள்வைத்த சேரியில் உகந்தலிங்க தேசிகரால் ஞானம் கைவரப் பெற்ற அருளாளர்.

கோவிலூர் மடம் நிர்வாகத்துக்குத் தரும் முதன்மை மிகக் குறைவு. ஞான அறிவுக்கே அவர்கள் சிறப்பிடம் தந்தனர். பாடம் கேட்டல் என்பது கோவிலூர் மடத்திற்கு உரிய பெருஞ் சிறப்பு ஆகும். கோவிலூர் மடத்தில் வீற்றிருந்த நகரத்தார்கள் பலர் ஆவர். அவர்களுள் ஆண்டவர் முத்து ராமலிங்க ஞான தேசிகர், துறவு சுவாமிகள், சிதம்பர அய்யா பொன்னம்பல சுவாமிகள், சுப்பையா சுவாமிகள் என்பவர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

சிதம்பரம். சிக்கல் அருகே உள்ள பொருள்வைத்தசேரி, திருக்களர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் கோயிலூர் மடத்துக்கு கிளைமடங்கள் உள்ளன. கிளை மடங்களில் நகரத்தார் அல்லாதோரும் பட்டத்திற்கு வரலாம் என்றாலும் கோயிலூரில் உள்ள தலைமை மடத்தில் மட்டும் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த துறவிகளே தலைமைப் பதவியில் இருக்கலாம். கோவிலூரில் உள்ள லிங்கம் சுயம்பு. இந்த லிங்கத்தின் உதவியால் வீரசேகர பாண்டியன் கொற்றவாள் என்ற அதிசய வாளைப்பெற்றதாகவும், அதனால் இந்த லிங்கத்தைச் சுற்றிக் கோயில் அமைத்து ஊர் உண்டாக்கிய தால் இவ்வூருக்கு கோயிலூர் எனப் பெயர் வந்தது எனவும். செவிவழிச் செய்தியாக அறிய முடிகிறது. இக்கோயிலில் இருந்து அருளாட்சி செய்கின்ற இறைவனின் பெயர் கொற்றவளீஸ்வரர். இறைவியின் பெயர் திருநெல்லையம்மன். இக்கோயிலில் 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுக் கள் உள்ளன.

இக்கோயிலூர் மடத்தின் இன்றைய தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசி விசுவநாத ஞானதேசிகர் ஆவார்கள்.

—மூன்று—

ஊரும் பேரும்

கி.பி 1500ஆம் ஆண்டு முதல் முகமதியர் கலகங்களும், சிற்றரசர்களின் சண்டைகளும். பாளையக்காரர்களின் கொள்ளைகளும் ஏற்பட்டதால், நகரத்தார்கள் தங்கள் வசம் இருந்த கோயில்களில் இருந்த கிளைகளையும். பண்டம் பாத்திரங்களையும் மண்ணில் புதைத்துவைத்து அந்தந்த ஊர்க்குடிமக்களுடன் வசித்துவரத் தொடங்கினார்கள். இப்படிப்பட்ட காலத்தில்தான் தொண்ணூற்றாறு ஊர் என்று கணக்கிடப்பெற்றது. கிறித்துவச் சுழற்காற்று அடித்தபோதும் இஸ்லாமியப்புயல் வீசியபோதும் நகரத்தார்களில் ஒருவராவது மதம்மாறவில்லை என்பது இவர்களுடைய மதவைராக்கியத்தையும் மனத்தெளிவையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

நமது நாட்டின் பழம் பண்பாட்டையும் நாகரிகத்தையும் விளக்கும் ஊர்ப்பெயர் ஆராய்ச்சி இதுவரை யாரும் மேற்கொண்டதில்லை. மேலைநாடுகளைப் போல விரிவான விளக்கமான ஆய்வுகளை நம்மால் இப்போது செய்ய வாய்ப்பில்லை எனினும், நகரத்தார்கள் தற்காலம் வாழ்ந்து வருகின்ற ஊர்களைப்பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள இங்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்று தமிழகத்தின் தலைநகரமாகவும் கடற்கரைப் பட்டினமாகவும் விளங்குகின்ற சென்னையைப் போல,

அக்காலத்தில் புகார் நகரமும் மிகப்பெருமை வாய்ந்து இருந்தது. நகரத்தார்கள் தங்கள் வசமுள்ள கோயில்களில் இருந்து வெளியேறி முதன்முதலில் கீழ்க்கண்ட ஊர்களில் வசித்து வந்ததாக பண்டிதமணி திரு மு. கதிரேசச்செட்டியார் அவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அரணிக்கோட்டை	கடகம்பட்டி
அழகிச்சிபட்டி	கண்ணனூர்
ஆத்திக்காடு	கல்லிவயல்
ஆர்க்காடு (நேமம் அருகில்)	களபம்
ஆய்ங்குடி	காவனவயல்
ஆலங்குடி	கானப்பூர்
ஆலம்பட்டு	கைக்குளம்
இடையப்பட்டி	கிரணிப்பட்டி
இரவிசேரி	கீழமாகாணம்
இலங்குடி	குருவிக்கிணாம்பட்டி
இலுப்பைக்குடி	குளத்துப்பட்டி
இளையாத்தங்குடி	கூத்தளூர்
உடப்பன்பட்டி	கொ. அழகாபுரி
உதயாச்சி	கொல்லங்குடி
உறங்கான்பட்டி	கொரட்டி
ஒணான்குடி	கொன்னையூர்
ஒலைக்குடிப்பட்டி	கௌரிபட்டினம்
கத்தப்பட்டு கருங்குளம்	சாக்குக்கோட்டை
கத்தாளைப்பட்டி	சாத்துக்குளி
கடியாவயல்	சாளூர்
கம்பனார்	சித்தாட்டிவயல்
கம்பங்காடு	சித்திவயல்
கருணாக்குடி	சிராத்தக்குடி
கண்ணன்கோட்டை	சுண்டைக்காடு

சூரைக்குளம்
செங்கல்கோயில்
செப்பவயல்
செம்பொன்மாறி
செவரக்கோட்டை
செவலூர்
செஞ்சை
சேந்தணி
தட்டட்டி
தளக்காவூர்
தாஞ்சூர்
திருக்கோளக்குடி
துவார்
தெண்ணீர்வயல்
தேக்காட்டூர்
தேவிரிப்பட்டி
நகரம்பட்டி
நடுவிக்கோட்டை
நெய்க்குளம்
நெய்வாசல்பட்டி
நேமம்
பக்கிரிப்பட்டி
பட்டணம்
பரளிப்பட்டணம்
பரியன்வயல்
பழையஆத்தங்குடி
பாளையப்பட்டி
புலிக்குத்தி
புலிக்குளம்
புளியங்குடி
பெருங்காஞர்
பேயன்பட்டி
பொய்யலூர்
பொன்னாங்குடி
மலம்பட்டி
மல்லாக்கோட்டை
மல்லுப்பட்டி
முனையத்தை
மேலமங்கலம்
மேலமாகாணம்
வடகாட்டுப்பட்டி
வாணியங்குடி
வாரியப்பட்டி
வைரவன்பட்டி
வெளியாறு
வேங்காவயல்
வித்ராவயல்.

நகரத்தார்கள் இங்ஙனம் மேற்கண்ட ஊர்களில் குடிவந்து அந்தந்த ஊர்ப் பொதுமக்களான கள்ளர், மறவர், அகம்படியர், அமராவதி நாட்டு வல்லம்பர், பாளையநாட்டு வல்லம்பர், வலையர், முதலானோர்களுடன் அவர்கள் தொழுதுவந்த காளி, பிடாரி, மாரி, கருப்பர், அய்யனார்

முதலிய தெய்வங்களையே குலதெய்வங்களாகத் தொழுது கொண்டாடி வந்தனர்.

பின்னர் காலம் செல்லச் செல்ல தங்கள் வாழ்க்கை வசதிகளை வளப்படுத்திக் கொள்ளவும். நாகரிகத்தின் சூழ் நிலை கருதியும் தங்களுக்கென்று தனித்தனியே ஒரு ஊரை உருவாக்கி பிற இனத்து மக்களையும், அங்கு குடியேற்றி வாழ்ந்து வரத்தொடங்கினர். இவ்வாறு மேலே குறிப்பிட்ட பல ஊர்களில் இருந்து தங்களுக்கென 96 ஊர்களை அமைத்துக் கொண்டதாகவும், இன்று இவர்கள் வாழ்ந்து வருகின்ற ஊர்கள் 74ஐயும் அவற்றிற்கான பெயர்க் காரணத்தையும் கீழே தரப்பெற்றுள்ளது.

அமராவதி புதூர் : காரைக்குடிக்குத் தெற்கே சுமார் 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இவ்வூர்.

இவ்வூர் உருவாகி சுமார் 300 ஆண்டுகள் இருக்கலாம். இவ்வூரிலுள்ள அமராவதி கண்மாயை வைத்தே அமராவதி புதூர் என்ற பெயர் பெற்றது.

அரண்மனை சிறுவயல் : இந்த ஊர் அ. சிறுவயல் என்றே அழைக்கப்படுகிறது. காரைக்குடிக்குத் தெற்கே 19 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. 'செருவயல்' என்ற சொல்லின் திரியே சிறுவயல் என்று ஆனது. செருவயல் என்பது போர்க் களத்தைக் குறிக்கும் சொல், மருது சகோதரர்களின் காலத்தில் இங்கு போர் நடந்ததாகச் சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன.

இச்சிற்றூர் சிவகங்கைப் பெருமன்னர்கள் ஆட்சியில் குறுநில மன்னர்களாகிய அரண்மனையாளர்களால் ஆளப் பெற்று வந்துள்ளதாகக் கூறுகின்றனர்.

அரிமழம் : புதுக்கோட்டையிலிருந்து தென்கிழக்கே சுமார் 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அரி என்பது

சிங்கம். மழம் என்பது இளமை. இப்பகுதியில் மறவர்கள் வாழ்ந்து வந்தனர். ஆதலால் இளஞ்சிங்கம் போன்ற வீரர்கள் வாழ்ந்து வந்ததால் அரிமழம் என்ற பெயர் வந்திருக்கக்கூடும்.

அரியக்குடி: காரைக்குடிக்குத் தென்கிழக்கே சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. ஹரிகுடியின் திரிபே அரியக்குடி ஆகி இருக்கக் கூடும்.

திருவேங்கடமுடையான் அலர்மேலுமங்கை ஆலயம் மிகவும் பெருமை பெற்றது. இந்தக் கோயிலின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள மூல கருடன் மிகவும் சக்தி வாய்ந்தது. பெரும்பாலான எல்லாக் காணிக்கைகளும் இந்த மூலக் கருடனுக்கே செலுத்தப்படுகிறது.

அலவாக்கோட்டை: சிவகங்கை—திருப்பத்தூர் நெடுஞ் சாலையில் மதகுபட்டிக்கு மேற்கே சுமார் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நிலவளம் நிரம்பிய இவ்வூருக்கு அலவைக் கண்மாய், காரக்கண்மாய் முதலியவற்றால் நீர் வளம் தந்து நெல்மணிகளைக் கோட்டை கோட்டையாகக் குவித்து வாழ்ந்ததின் காரணமாகவும் அளவைக்கோட்டையே மருவி நாளடைவில் அலவாக்கோட்டை என ஆகி இருக்கக் கூடும் என்று கூறுகின்றனர்.

க. அழகாபுரி: இவ்வூர் காரைக்குடிக்கு வடகிழக்கே சுமார் 9 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அளகன் என்றால் குபேரன். இங்கு வந்து குடியேறிய நகரத்தார்கள் அனைவரும் குபேரனுக்கு ஒப்பான செல்வம் படைத்த காரணத்தால் இவ்வூருக்கு அழகாபுரி என்றும், இவ்வூர் கோயிலிலிருந்து அருளாட்சி செய்கின்ற அம்மன் பெயர் அழகிய நாச்சியா ரம்மன் என்பதால் இவ்வூருக்கு இப்பெயர் ஏற்பட்டதென்றும் செவிவழிச் செய்தி வாயிலாக அறியமுடிகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கீழச்சீவல் பட்டிக்குப் பக்கத்தில் ஒரு அழகாபுரியும் இருப்பதால், இதனை வேறு படுத்திக்காட்ட பக்கத்தில் உள்ள கண்டனூரின் முதல் எழுத்தைக் கொண்டு க. அழகாபுரி என்று பெயரிடப் பெற்றிருக்கிறது.

கொ. அழகாபுரி : காளையார் மங்களத்திலிருந்து தென் கிழக்கே சுமார் 6 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர். இந்த ஊருக்குச் சமீபத்தில் ஏற்கனவே உருவான ஊர் கொல்லங்குடி. இங்கு கொல்லர்கள் அதிகமாக வாழ்ந்ததால் கொல்லங்குடி என்று பெயர் ஏற்பட்டிருக்கக்கூடும்.

கோயிலூர் மடாலயத்தின் ஆதீனகர்த்தராக இருந்த ஒருவர் இவ்வூருக்கு வந்து இருந்தபொழுது அழகாபுரி எனப் பெயரிட்டதாகக் கூறுகிறார்கள்.

ஆத்தங்குடி : இவ்வூர் திருமயத்திலிருந்து தெற்கே சுமார் 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அரசு அலுவலகக் குறிப்புகளில் எல்லாம் ஆத்தங்குடிக்கு அரண் மனைப்பட்டி என்ற பெயரே காணப்படுகிறது.

ஆத்தங்குடி மீனாக்ஷி சுந்தரேசுவரர் சந்தப் பதிகத்தில் ''சீத வளம் தரும் ஆத்தன் திருநகரம்'' எனப் பாடி இருப்பதி லிருந்து இவ்வூர் இறைவனையே ஆத்தன் – கடவுள் என்ற பொருளால் விளித்து இருப்பதால் இவ்வூருக்கு ஆத்தன்குடி எனப்பெயர் வந்தது பொருத்தம் உடையதாகத்தெரிகிறது.

ஆ. முத்துப்பட்டணம் : ஆத்தங்குடிக்குப் பக்கத்தில் புதிதாக ஏற்பட்ட ஊர் பகையணப்பட்டி – முத்துப்பட்டணம். இதுவே பிற்காலத்தில், ஆத்தங்குடிக்கு அண்மையில் இருப்பதால் ஆ. முத்துப்பட்டணம் என ஆயிற்று. இங்கும் நகரத்தார்கள் மிகுதியாக வாழ்கின்றார்கள். ஒரே ஒரு சிறு

கால்வாய்தான் ஆத்தங்குடியையும், முத்துப்பட்டணத்தையும் பிரித்துக் காட்டுகிறது.

ஆத்திக்காடு தெக்கூர் : திருப்பத்தூரிலிருந்து வடமேற்கே சுமார் 8 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிறது. செட்டிநாட்டு மேலவட்டகையில் பிரசித்தி பெற்ற ஊர். ஆத்தி மரங்கள் அடர்ந்த காடாக இருந்ததால் முன்பு ஆத்திக்காடு எனப் பெயர் பெற்றிருந்தது. இங்கு இருந்த காடுகளை அழித்து நிலத்தைத் திருத்தி வீடுகள் கட்டிக் கொண்டு நகரத்தார்கள் வாழத் தொடங்கினர். இந்த ஆத்திக்காட்டின் தெற்குப் பகுதியில் நகரத்தார்கள் வீடுகள் அதிகம் கட்டிக் கொண்டதன் காரணத்தால், இதற்கு ஆத்திக்காடு தெற்கூர் என்று பெயர் வந்ததாகக் கூறுகின்றனர்.

ஆவினிப்பட்டி : இவ்வூர் திருப்பத்தூருக்கு வடக்கே சுமார் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. முனீசுவரர் இவ்வூரில் எங்கும் உலவிக் கொண்டு இருப்பதால் ஆ-முனிப் பட்டியா? என யாவரும் அஞ்சி வியக்கும் வகையில், ஆமுனிப்பட்டி என்பதே காலப்போக்கில் ஆவினிப்பட்டி என ஆயிற்று எனக் கூறுகின்றனர்.

உ. சிறுவயல் : இவ்வூர் காரைக்குடிக்கு வடமேற்கே சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்து உள்ளது. இவ்வூர் இரு பகுதிகளாக உள்ளது. வடபகுதியை உய்யக் கொண்டான் என்றும், தென்பகுதியை சிறுவயல் என்றும், இரண்டையும் சேர்த்து உய்யக் கொண்டான் சிறுவயல் என்றே அழைக்கின்றனர். இவ்வூரின் தென்பகுதி சிறுசிறு வயல்களால் சூழப் பெற்று இருப்பதாலும் வடபகுதியே உய்யக்கொண்டான் என்ற அரசன் வந்து தங்கியிருந்ததாலும் இப்பெயர் ஏற்பட்டதென செவிவழிச் செய்திகள் மூலம் அறிய முடிகிறது.

உலகம்பட்டி : இவ்வூர் பொன்னமராவதி புழுதிப்பட்டி சாலையில் பொன்னமராவதிக்கு வடமேற்கில் சுமார் 3 கி.மீ.

தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள நகரச் சிவன் கோவிலில் இருந்து அருளாட்சி செய்கின்ற உலகநாயகி சமேத உலகநாதர் பெயராலேயே உலகன்பட்டி என்ற பெயர் பெற்றது. பின்னர் மருவி உலகம்பட்டி என்றாயிற்று என்று கூறுகின்றனர்.

இங்கு வலைய இனத்தவர்கள் வாழுகின்ற காரணத்தால் ஒரு காலத்தில் வலையன்பட்டி என்றபெயர் இருந்து பின்னர் அதுவே உலகன்பட்டி என மருவியுள்ளது என்றும் கூறு கின்றனர். உலகம் என்ற சொல்லுக்கு வலையன் என்ற பொருளும் உள்ளது என்பதை இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒக்கூர் : சிவசங்கையிலிருந்து தெற்கே செல்லும் நெடுஞ் சாலையில் வடக்கே சுமார் 12 கி.மீ. தொலைவில் உள்ளது.

நகரத்தார்களின் குலத்தொழிலாகிய கடல் வாணிபம் கருதி, கடல் கடந்து பொருள் தேடி மீண்டும் தாயகம் வந்ததும் சுற்றத்தார் அனைவரும் அவர்களைக் காண வருவது இயல்பு ஒக்கல் என்ற சொல்லுக்கு உறவினர் என்று பொருள். எனவே. சுற்றத்தார் இங்ஙனம் வந்து கண்டு செல்வதால் இது ஒக்கல் ஊர் என்று உருவாகி, பின்னர் காலப் போக்கில் ஒக்கூர் என மருவியிருக்கக்கூடும் என்று சிலர் கூறு கின்றனர். இவ்வூருக்கு ஒக்கை என்ற பெயரும் உண்டு. பரிமேழலகர் பாடலில் ஒக்கைக் காவலர் என்று கூறப்படுவதை இங்கு உற்று நோக்க வேண்டும்.

கடியாபட்டி : இவ்வூர் இராமச்சந்திரபுரம் என்றும் அழைக்கப்படுகிறது. இது திருமயத்திற்குக் கிழக்கே 8 கி.மீ தொலைவில் அமைந்து இருக்கிறது.

கடுகை என்பது நொடியைக் குறிக்கும், கடிகைக்காரன் என்பவர் நாழிகை குறித்துக் கொடுப்பவர், இங்ஙனம்

நாழிகை குறித்துக் கொடுப்பவர்களை கடிகாரப் புலவர்கள் என்று அழைத்திருக்கிறார்கள். இவ்வூரில் கடிகாரப் புலவர்கள் ஒரு காலத்தில் வாழ்ந்ததாகவும் அதனாலேயே இவ்வூருக்கு கடிகார நல்லூர் என்ற பெயர் இருந்ததாகவும், நாளடைவில் இதுவே கடியாபட்டி என்று மருவிவிட்டதாகவும் கூறுகின்றனர். கடியாபட்டி என்ற பெயர் இந்த ஊருக்குப் பேச்சு வழக்கில் மட்டுந்தான் இருக்கிறது. அஞ்சலகம், அரசினர் அலுவலகங்கள் எல்லாவற்றிலும் இராமச்சந்திரபுரம் என்றேதான் அழைக்கப் பெற்று வருகிறது.

கண்டரமாணிக்கம் : இவ்வூர் திருப்பத்தூருக்குத் தெற்கே சுமார் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

நகரத்தார்கள் இவ்வூருக்குக் குடியேறி, ஊருக்குத் தேவையான தண்ணீருக்காக ஒரு ஊருணி வெட்டும்போது அங்கு அம்மன் சிலை ஒன்று கண்டு எடுத்தனர். மிக அழகானதும் அருள்பாலிக்கக்கூடியதுமான அந்த அம்மனுக்கு ஒரு கோயில் நிர்மாணம் செய்து மாணிக்கவல்லி அம்மன் எனப் பெயரிட்டனர். அந்த மாணிக்கத்தைக் கண்ட இடத்திற்கு கண்டமாணிக்கம் எனப் பெயர் வைத்துச் சொல் வழக்கில் இன்று கண்டர மாணிக்கம் என்று ஆயிற்று எனக் கூறுகிறார்கள்.

கண்டவராயன்பட்டி : இவ்வூர் திருப்பத்தூருக்கு வடமேற்கே சுமார் 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரிலுள்ள பழ. கரு. ஊருணியின் கரையிலுள்ள கல்வெட்டு ஒன்று "வராயன்" என்ற வீர வம்சத்திற்கு அரசன் ஒருவரால் செப்புப் பட்டயம் கொடுக்கப்பட்டுள்ள செய்தி தெரிகிறது. வராயன் என்ற வீரன் ஒருவனை அரசன் இங்கு கண்டதாலேயே இவ்வூருக்குக் கண்டவராயன்பட்டி எனப் பெயர் வந்ததாகக் கூறுகின்றனர்.

கண்டனூர் : காரைக்குடிக்கு வடகிழக்கில் ஏறத்தாழ 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை பாடிய வீரவனம் புராணத்தில், வீரவனத்துக்கு மேற்புரத்தே சோலை வனம் சூழ கண்டன் அமைத்த சிற்றூரே கண்டனூர் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

கருங்குளம் : இவ்வூர் திருப்பத்தூருக்குத் தெற்கே சுமார் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

மிகவும் வரசித்தி பெற்ற தெய்வமான பரணாச்சி அம்மன் இங்கு கருமருது மரத்தடியில் வீற்றிருந்த காரணத்தால் ஒரு காலத்தில் கருமருது என்றே பெயர் பெற்று இருந்ததாகவும், வேளாண்மை செய்து வந்த கருங்குளத்தார் வீட்டார் இவ்வூரை உருவாக்கியதால் கருங்குளம் எனப் பெயர் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர்.

கல்லல் : இவ்வூர் காரைக்குடிக்குத் தென்மேற்கே சுமார் 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இது 22 கிராமங்கள் சுற்றிச் சூழ்ந்துள்ள கள்ளர் நாடு. இங்கு வசித்து வருகின்றவர்களின் பெரும்பான்மையோர் கள்ளர் இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்ததால், கள்ளர் என்ற சொல்லே காலப்போக்கில் கல்லல் என ஆயிற்று என்று கூறுகின்றனர்.

கல்லுப்பட்டி : இவ்வூர் காரைக்குடிக்குத் தெற்கே சுமார் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரில் கோயில் கொண்டு இருக்கும் அருள்மிகு சுப்பிரமணியர் பெயராலேயே சுப்பிரமணியபுரம் என்று அழைக்கப் பெற்று இருந்தாலும் பழைய பத்திரங்களிலும், அரசாங்கக் குறிப்புகளையும் பார்த்த பொழுது அதில்கூட

சுப்பிரமணியபுரமாகிய கல்லுப்பட்டி என்றேதான் எழுதப் பட்டிருக்கிறது.

காரைக்குடி : இவ்வூர் திருப்பத்தூருக்குக் கிழக்கே சுமார் 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இராமேசுவரம்-சென்னை இருப்புப் பாதையில் அமைந்துள்ள பெரிய சந்திப்புகளில் இதுவும் ஒன்று.

முன்காலத்தில் இங்கு முட்கள் நிரம்பிய விஷச் செடியான காரைச் செடிகள் அடர்ந்த காட்டுப்பகுதியாக இருந்திருக்கிறது. காட்டை அழித்து மக்கள் வாழ்வதற்குத் தக்க ஊராக மாற்றி இங்கு குடியேறியதும் இது காரைக்குடி எனப் பெயர் பெற்றது. புராதனக்கலை அல்லது இலக்கிய நூல்களில் காரிகுடி என்றே கையாளப் பெற்று வந்துள்ளது. நகரத்தார்கள், முதன் முதலில் புகாரை விட்டு பாண்டி நாட்டிற்கு வந்து தங்கிய முதல் ஊராகிய ஓங்காரக்குடியே இப்பொழுது காரைக்குடியென வழங்கி வருகிறது.

காளையார் மங்களம் : இவ்வூர் ஒக்கூருக்குத் தென் கிழக்கே 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர் காளையார் கோயில் சரகத்தைச் சார்ந்ததால் காளையார் மங்களம் என்று பெயர் பெற்றிருக்கலாம். மருதுபாண்டியர் சிவகங்கைச் சீமையை ஆண்ட காலத்தில் இவ்வூர் முக்கியப் பங்கு வகித்ததாகக் கூறப்படுகிறது.

கானாடுகாத்தான் : காரைக்குடிக்கு வடக்கே சுமார் 24 கி மீ தொலைவில் அமைந்துள்ளது. வெள்ளாற்றின் தெற்கே உள்ள நிலப்பரப்பு கானாடு எனப் பெயரி பெற்றிருந்தது. காட்டுக்கு மறுபெயர் கான் என்பதால் காத்தான் என்ற சொல் காக்கின்றவன் என்பதனைக் குறிக்கும். நாட்டைக் காப்பதற்கு காவலர்களை ஊரில் வைத்து இருந்தனர். ஆதலால், கானாடுகாத்தான் எனப் பெயர் பெற்றது.

''வெள்ளாற்றுக்கு வடக்கே உள்ள பகுதி கோனாடு என்றும், தெற்கே உள்ள பகுதி கானாடு என்றும் வழங்கப் பெற்றது. கானாட்டுக்கு 'கானநாடு' என்ற பெயரும் உண்டு. கான்நாடு, கானநாடு என்பன காட்டு நாடு என்று பொருள் படும். இந்நாட்டின் வட எல்லையாக கானாடுகாத்தான் இருந்திருக்கலாம்'' என்று திரு. சோமலெ அவர்கள் செட்டி நாடும் தமிழும் என்ற நூலில் எழுதியிருப்பதை இங்கு நினைவில் கொள்ளலாம்.

கீழச்சிவல்பட்டி : இவ்வூர் திருப்பத்தூருக்குக் கிழக்கே சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

சிவப்பட்டி என்பது சிவத்தலம் என்ற பொருளில்தான் வழங்கியிருக்க வேண்டும். சிவம் பெருக்குவதாலேயே சிவப்பட்டி என்ற பெயர் வந்தது. மேலைச் சிவல்பட்டி, கீழைச் சிவல்பட்டி என்ற இரண்டையும் திசையால் வேறு படுத்திக் காட்டுவதற்கே கீழச்சிவல்பட்டி என்ற பெயர் வந்தது. இவ்வூரைப் பற்றி ஒன்பது பிரபந்தங்கள் எழுதப் பட்டுள்ளன எனத் தெரிகிறது.

கீழப்பூங்குடி : இவ்வூர் ஒக்கூர் மேலூர் நெடுஞ் சாலையில் சிவகங்கைக்கு வடக்கே சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

எல்லாம் வல்ல பரம்பொருளாகிய ஈசுவரனை மதியாமல், தானே எல்லாம் என்ற ஆணவத்துடன் பிரம்மா இருக்க, அந்த ஆணவத்தை அழித்து, அறிவு புகட்ட எண்ணிய பரம்பொருளே வைரவக் கடவுளாகத் தோன்றி, பிரம்மாவின் ஒரு தலையை வெட்டி விடுகிறார். சிரமிழந்த பிரமன், ஆணவம் ஒழிந்து ஆண்டவனை வேண்டித் தவமியற்றி மீண்டும் சிரத்தைப் பெற நினைத்து, இவ்வூரில் ஒரு குளம் உண்டாக்கி அதில் மலர்களை மலரும்படி செய்து, பக்கத்தில் கடம்ப மரத்தின் அடியில் சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து, குளத்தில் தோன்றிய மலர்களைக் கொண்டு

அர்ச்சித்து வழிபட்டார் என்றும், குளத்தில் பூக்கள் நிறைந்து குடி கொண்ட காரணத்தால் இவ்வூருக்கு பூங்குடி எனப் பெயர் வந்ததாகவும் அதற்குச் சான்றாக இன்னும் 'ஈஸ்வரன் திடல்' என்ற இடம் இவ்வூரில் இருப்பதாகவும் கூறுகின்றனர். கண்டாசுரனோடு போரிட்டு வெற்றி கண்ட தேவியை பூமாரி செய்து தேவர்கள் வாழ்த்திய இடம் பூங்குடி. இங்குள்ள கள்ளர் இனத்தவர்கள் இவ்வூருக்கு மேற்குப் பக்கத்தில் சென்று குடியேறியதால் அப்பகுதி மேலப்பூங்குடி என்றும், கிழக்குப் பக்கத்தில் உள்ள இவ்வூர் கீழப்பூங்குடி என்றும் பெயர் பெற்றது எனக் கூறப்படுகிறது.

குருவிக்கொண்டான்பட்டி : இவ்வூர் இராங்கியத்தில் இருந்து தெற்கே சுமார் 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

வீரன் ஒருவன் தன் பகைவனுடைய குருதியை கொண்டு வந்து இங்கு விழாவாகவே கொண்டாடியதால், குருதி கொண்டான்பட்டி என வழங்கலாயிற்று என்று சிலரும், குருவி, நரி பிடிப்பதையே தொழிலாகக் கொண்ட இனத்தவர் இவ்வூருக்கு அருகேயுள்ள குடகுமலை என்ற சிறு குடியிருப்பில் வாழ்ந்து வருவதால், இவ்வூர் குருவிக்காரன்பட்டி என்று ஆகியிருக்கலாம் எனச் சிலரும் கூறுகின்றனர். இந்தக் குருவிக் காரன்பட்டியே காலப்போக்கில் குருவிக்கொண்டான்பட்டி யாகியது என்று நம்ப வேண்டியிருக்கிறது.

குழிபிறை : இவ்வூர் திருமயத்திற்கு வடமேற்கே சுமார் 11 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்பு பாண்டிய மன்னர்களில் ஒருவன் இங்கு முகாமிட்டிருந்தபோது, அவன் மனைவி குழையினுடைய பிறை ஒன்று காணாமற் போயிற்று. அதைக் 'கூழி', என்ற முதியவள் ஒருத்தி தேடிக்கண்டுபிடித்துக் கொடுத்த இடம் என்பதால் 'கூழிபிறை' என்று சிலரும், இவ்வூர் நிலப்பகுதி மேடும் பள்ளமுமாக அமைந்துள்ளதால் (குழி - பள்ளம், வரை - மேடு) குழிவரையே காலப்போக்கில்

'குழிபிறை'யாக மருவி விட்டதெனச் சிலரும், குழிபிறை என்பதே, குழை என்ற அரசியாருடைய பிறை பற்றிய கதையால் குழிபிறை என்று சிலரும் 'கூழ் பிறை' என்பதே குழிபிறை என மருவிற்று எனச் சிலரும் கூறுகின்றனர். பிறை என்ற சொல்லுக்கு உணவு சேருமிடம் என்று பொருள். இவ்வூர் உணவு சேகரித்து வைக்குமிடமாக வெள்ளாளர் காலத்தில் இருந்ததால் இப்பெயர் வந்தது எனவும் கூறுகின்றனர்.

கொத்தமங்கலம் : இவ்வூர் பள்ளத்தூருக்கு வடக்கே 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

அழகிய சிற்றம்பலக் கவிராயர் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னதாக வள்ளல்களை நாடி தென்னாடு வந்து சேர்ந்தார். அங்கு மன்னர் சேதுபதியைப் புகழ்ந்து தளசிங்கமாலை எனும் நூல் பாடியதற்காக மிதிலைப்பட்டி என்ற ஊரைப் பரிசாகப் பெற்றார் என்று சேதுநாடும் தமிழும் என்ற நூலில் திரு. ரா. ராகவையங்கார் கூறியிருக்கிறார். இதுபோலவே மங்களப்ப நாயக்கர் குறவஞ்சி என்ற நூலையும் இந்தக் கவிராயர் படைத்துள்ளார். இந்தச் சிற்றம்பலக் கவிராயர் கொடையாகப் பெற்ற ஊர்களைப் பற்றி அவர்களுடைய புதல்வர் குமாரசாமிக் கவிராசன் என்பவர் இயற்றிய சுசீல வள்ளல் அம்மானை என்ற நூலில் வருகின்ற ஒரு பாடலில் கொத்தமங்கலம் என்கின்ற ஊரும் இடம் பெற்றிருப்பதால், அவருக்குக் கிடைத்த ஊர்களில் இதுவும் ஒன்றெனத் தெரிகிறது என்றாலும், இதற்கான சரியான பெயர்க் காரணம் எதுவும் தெரியவில்லை.

மகாகவி பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள் தங்களுடைய திருமுகவிலாசம் என்கிற நூலில் இவ்வூரில் உள்ள உலகநாயகி அம்மன் கோயிலுக்குப் பக்கத்ததில் உள்ள மடத்தில் தான் ஏழு ஊர் நகரத்தார்கள் கூடி சாதிமுறை நியாயங்கள் நடத்துவார்கள் என்று எழுதியிருப்பதிலிருந்து

இவ்வூரில் நெடுங்காலமாக நகரத்தார்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது.

கொப்பனாபட்டி : இவ்வூர் பொன்னமராவதியில் இருந்து வடக்கிழக்கில் சுமார் 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரில் உள்ள கொப்பனான் கண்மாயை வைத்தே இவ்வூருக்குப் பெயர் வைத்திருப்பதாகச் சிலர் கூறுகிறார்கள். இவ்வூருக்குப் பழைய பெயர் கொன்னையூர். மலர்கள் பூத்துக் குலுங்கும் கொன்னை மரங்கள் இங்கு மிகுதியாக வளர்ந்திருந்ததால், கொன்னையூர் என்ற பெயரே, இப்போது கொப்பனாபட்டி என்று ஆயிற்று எனவும் சிலர் கூறுகின்றனர்.

கோனாபட்டு : இவ்வூர் திருமயத்திற்குத் தெற்கே சுமார் 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

புதுக்கோட்டை மன்னர் ஒவ்வொரு ஆண்டும் நவராத்திரியின்போது பாரி வேட்டைக்காகப் பல ஊர்களுக்குச் செல்வது வழக்கம். இவ்வூர் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் இருந்தபோது மன்னர் வேட்டைக்கு வருகின்ற ஊர்களில் கோனாபட்டும் ஒன்றாக இருந்திருக்கிறது. கோன் - ஆர் - பட்டு என்பதன் திரிபே கோனாபட்டு என ஆயிற்று என்று கூறுகிறார்கள்.

கோட்டையூர் : காரைக்குடிக்கு வடக்கே 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இங்கு கோட்டைகள் எதுவும் இல்லாவிடினும் மகாகவி பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள் பாடிய,

"கோட்டையூர் மாவணிகர் கொண்டு விற்றுக்
கொண்டுவந்த
தேட்டையெல்லாம் கண்டு இயம்பினோம்-கோட்டையூர்
நாட்டைவிட்டுச் சென்ற நகரத்தார் யாவரும் பொன்
கோட்டையுடன் வருவார் கண்டு"

என்ற பாடலுக்கிணங்க, இவ்வூர் நகரத்தார்கள் வெளிநாடு களில் வணிகம் செய்தும், தொழில்கள் நடத்தியும் பொன் கோட்டையுடன் திரும்பி வந்த காரணத்தால் இவ்வூருக்குக் கோட்டையூர் எனப் பெயர் வந்ததாகக் கூறுகின்றனர். பத்தாம் நூற்றாண்டில் ஏழகப்பெருந்தெரு பிரபலமாக இருந்தது. இதில் கொற்றவை கோயில்கள் புகழ் பெற் றிருந்தன. இன்னும் இவ்வூரில் கொற்றவை கோயில்கள் இருப்பதைக் காணலாம். ஏழகப்படை இருந்த கோட்டையின் கீழ்பால் மக்கள் வாழ்ந்த ஊரே கோட்டையூர். ஏழகப் படையைத் தமிழக வரலாறு வியந்து பாராட்டுகின்றது, எனவே பல நூற்றாண்டுகால வரலாற்றுப் பின்னணித் தொன்மையுடையது கோட்டையூர் என்றும் கூறுகின்றனர்.

சக்கந்தி : சிவகங்கைக்கு மேற்கே சுமார் 6 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது.

போர்வீரர்கள் தங்கியிருக்கும் இடத்திற்குப் 'பாளையம்' எனப்பெயர். நாயக்கர் காலத்தில் சக்கந்தியும் படாமத் தூரும் பாளையங்களாகக் கருதப்பட்டு வந்திருப்பதால், ஏறத் தாழ 600 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ''சக்கந்தி'' என்ற பெயரே வந்திருப்பதாக அறிய முடிகிறது. இவ்வூருக்கு இப் பெயர் வரும் முன்பு ஏந்தலாய் இருந்தது என்றும் அங்கு போர் வீரர்கள் முகாமிட்டிருந்ததால், 'படைகொண்டான் ஏந்தல்' என்ற பெயரிலிருந்து தெரிகிறது. பிறகுதான் பெயர் மாற்றம் பெற்று 'சக்கந்தி' என ஆயிற்று எனக்கூறுகின்றனர். ஆயினும் 'சக்கந்தி' என்ற சொல்லுக்குப் பொருள் என்ன என்று தெரிய வில்லை.

சக்கு என்றால் அழுக்கு, அந்தி என்றால் நீக்கம், எனவே அழுக்கு நீங்கித் தூய்மையாகவுள்ள ஊர் ஆதலின் சக்கந்தி எனப்பெயரி பெற்றதாகத் திரு. சுப. செந்தமிழன் அவர்கள் தன்னுடைய நூலில் குறிப்பிட்டிருப்பதையும் காணமுடிகிறது.

சண்முகநாதபுரம் : இவ்வூர் காரைக்குடியிலிருந்து தேவகோட்டை செல்லும் வழியில் வடகிழக்கே செல்லும்

குறுக்குச் சாலையில் சுமார் 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வெளியேறிய நகரத்தார்கள் தேவகோட்டைக்கு அருகில் உள்ள சேந்தணி, கொரட்டி போன்ற சின்னஞ்சிறு கிராமங்களில் குடியேறி பின்னர் தங்கள் வசதிக்காகப் பல ஊர்களை அமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தனர் என்பது வரலாறு. அவ்வாறு சேந்தணி என்ற கிராமத்தில் தங்கியிருந்த நகரத்தார்கள். 1840 - 1850க்கு இடைப்பட்ட காலத்தில் குன்றக்குடி ஆதீனத்தில் மனை இடங்கள் வாங்கி அங்கு ஊரை உருவாக்கி, அல்வூருக்கு சண்முகநாதபுரம் எனப் பெயர் வைத்ததாகக் கூறுகின்றனர். இவ்வூருக்கு சண்முகநாதபுரம் என்ற பெயரே இருந்தாலும் ஆறாவயல் என்ற பெயரும் இவ்வூருக்கு உண்டு.

சிறாவயல் : இவ்வூர் காரைக்குடிக்கு வடமேற்கே சுமார் 14 கி மீ தொலைவில் அமைந்துள்ளது.

மருது பாண்டியர்கள் காலத்தில் அவர்கள் வேட்டையாடுவதற்காக, இவ்வூருக்கு அருகில் உள்ள மருதங்குடி என்ற கிராமத்தில் வந்து பல நாள் தங்குவது வழக்கம். அவ்விதம் தங்கும்போது, நாவிதர்கள் வந்து அவர்களுக்கு சிகை மழிப்பதற்காக வந்து செல்வார்கள். அங்ஙனம் சிகை வழிக்கும் தொழில் செய்யும் நாவிதர்களுக்கு மருது சகோதரர்கள் விட்டுக் கொடுத்த இடம், சிறைவயல் ஆயிற்று. சிறைவயலே காலப்போக்கில் சிறாவயல் என மருவி வழங்கலாயிற்று.

சிறுகூடல்பட்டி : காரைக்குடியிலிருந்து வடமேற்கே சுமார் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

புகழ்பெற்ற மருதுபாண்டியர்கள் காலத்தில் நாயக்கர்களுக்காக விட்டுக் கொடுக்கப்பட்ட ஊர் குமாரப்பேட்டை. இதுதான் முதலில் தோன்றிய ஊர். இதற்குப் பக்கத்தில் உள்ள செந்நெல்குடி என்ற ஊரும் இந்தக் குமாரப்பேட்டையும் ஒன்றுகூடும் இடம் 'சிறுகூடல்பட்டி', 'இந்த மூன்று ஊர்

களுக்கும் இங்குள்ள மையமான இடத்தில் அமைந்துள்ள எல்லைக் கற்களைக் காணலாம். 3 சிறு ஊர்கள் கூடுகின்ற இடமாதலால் இதற்குச் சிறுகூடல்பட்டி எனப் பெயர் வந்த தாகவும், மக்கள் வழக்குச் சொல்லாக 'சிறுளப்பட்டி' என்றே அழைத்து வருகின்றனர்,

செம்பனூர்: கல்லல் ஊராட்சி ஒன்றியத்தில் கல்லலில் இருந்து மதுரை செல்கின்ற வழியில் மேற்கே சுமார் 5 கி மீ, தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரின் மண்வளம் செம்மண் பூமியாக இருப்பதால், செம்மண்ணூரே காலப்போக்கில் செம்பனூர் என ஆயிற்று என்றும், இவ்வூர் மக்கள் பொருள் வளத்தில் சிறந்திருந்த காரணத்தால் செம்பொன்னூர், மருவி செம்பனூர் ஆயிற்று என்றும் கூறுகின்றனர்.

செவ்வூர்: இவ்வூர் பொன்னமராவதிக்குத் தென்கிழக்கே 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

செம்மண் பூமியாகி நிலவளம் நிரம்பிய இப்பகுதிக்கு நீர் வளம் தருகின்ற செவல் கண்மாய் இவ்வூரில் இருப்பதாலேயே இதற்கு மண்வாகிலும், நீர்நிலைவாகிலும் செவ்வூர் எனப் பெயர் பெற்றதாகச் சொல்லப்படுகிறது,

சொக்கநாதபுரம்: இவ்வூர் கல்லலில் இருந்து மேற்கே சுமார் 6 கி.மீ, தொலைவில் அமைந்துள்ளது.

ஏறத்தாழ நூறு ஆண்டுகட்கு முன் உருவாக்கப்பெற்ற இவ்வூரின் அண்மையில் உள்ள கத்தாழம்பட்டு, ஓலைக்குடி, பக்கிரிப்பட்டி, கத்தப்பட்டுக் கருங்குளம் ஆகிய சிறுசிறு கிராமங்களிலிருந்து நகரத்தார்கள் ஒன்றுகூடி சிவகங்கை சமஸ்தானத்தில் கவுல் உரிமை பெற்று புதிதாக இவ்வூரில் குடியேறி வாழத் தொடங்கினர், எல்லாம்வல்ல பரம் பொருளாகிய சொக்கநாதப் பிரபுவைத் தியானித்து வந்த அகத்தியர் சிலையும் இவ்வூரில் உள்ள ஆலயத்தில் பிரதிட்டை செய்திருப்பதால், அவர் வணங்கிய சொக்கநாதர் பெயரா லேயே இவ்வூர்ப் பெயரும் ஆயிற்று.

சொக்கநாதபுரம் : இதனை 'மதகுபட்டி' என்றும் அழைக்கிறார்கள். இது சிவகங்கை திருப்பத்தூர் சாலையில் சிவகங்கைக்கு வடகிழக்கில் 10 கி.மீ, தொலைவில் அமைந்துள்ளது.

சிங்கம்புணரிக்கு அருகில் மற்றொரு சொக்கலிங்கபுரம் என்ற ஊர் இருப்பதால் இவ்வூரை வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே ''மதகுபட்டி சொக்கலிங்கபுரம்'' எனப் பெயரிட்டாலும், இவ்வூரின் மேற்கே உள்ள பெரிய ஏரியின் கீழ்ப்புறத்தில் உள்ள மடவாயில் (நீர் பாயும் மடை) பெரியதொரு மதகும், பலகை அடைப்பும் காணப்படுவதால் 'மதகுபட்டி' எனப் பெயர் வந்ததாகக் கூறுகின்றனர்.

சொக்கலிங்கம்புதூர் : இவ்வூர் ஆத்தங்குடிக்கு அருகில் கிழக்கில் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

ஆத்தங்குடி. வலையபட்டி, பழைய ஆத்தங்குடி, காரைக்குடி முதலான ஊர்களிலிருக்து நகரத்தார்கள் இங்கு வந்து வீடுகட்டிக்கொண்டு குடியேறியிருப்பதாகத் தெரிகிறது. 'மயூரகிரி' என வழங்கும் குன்றக்குடி முருகப் பெருமானுக்கு பால் அபிஷேகம் செய்வதற்கென்றே சிவகங்கை ஜமீன்தாரிணி காத்தமரி நாச்சியாரவர்களால் தொத்தம் சேர்வை என்பவருக்கு இனாமாக அளிக்கப்பட்டது, சொக்கனேந்தல் என்ற இவ்வூர். நகரத்தார்கள் இவ்வூருக்குக் குடியேறியதும் சொக்கனேந்தல் என்ற இவ்வூரின் பெயரை 'சொக்கலிங்கம் புதூர்' என மாற்றி அமைத்துக்கொண்டதாகக் கூறுகின்றனர்.

சோழபுரம் : சிவகங்கை திருப்பத்தூர் பேருந்துச் சாலையில் சிவகங்கைக்கு வடகிழக்கே ஆறு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

சோழமன்னர்களில் ஒருவன் தென்பகுதிக்கு யாத்திரையாக வந்த வழியில் முன்பு கந்தர்வர்கள் தங்கியிருந்த கந்தவனப் பொய்கையாகிய சோலையில் தங்கியிருந்தான்.

அப்போது அந்த ஊரில் உள்ள அம்மன் அருளால் அவனுடைய ஊமைப்பெண் பேசியதாகவும், அதன் காரணமாக இப் பகுதிக்குச் 'சோழன்புரம்' என்று பெயர் வந்தது என்றும், அதுவே மருவி நாளடைவில் 'சோழபுரம்' என ஆயிற்று எனக் கூறுகின்றனர்; கவியோகி சுத்தானந்த பாரதியார் நீர் நிலைகள் நிரம்பிய சோலைகள் அடர்ந்த 'சோலைபுரமே' பின்னர் 'சோழபுரம்' என ஆகியிருக்கக்கூடும் என்று கூறுவதாயும் அறிகிறோம்.

தேவகோட்டை : காரைக்குடிக்குத் தென்கிழக்கே சுமார் 17 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இவ்வூர்.

'தேவியின் கோட்டை'யாகிய 'தேவகோட்டை'யே மருவி இப்போது 'தேவகோட்டை'' என வழங்கி வருவதாகக் கூறுகின்றனர். சிலர் தேவர்கோட்டை என்றும் கூறுகின்றனர். பல நூற்றாண்டுகட்கு முன்பு காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வாழ்ந்து வருகின்ற சிறப்பான ஊர். இவ்வூருக்கு அண்மையில் ''தேவகோட்டை' என்ற ஒரு சிற்றூர் உள்ளது. அங்கிருந்து இங்கு குடியேறி வந்ததால் தேவகோட்டை என்றும் ஆகியிருக்கலாம்.

தேனிபட்டி என்ற கழனிவாசல்: இவ்வூர் அரிமளத்திலிருந்து தென்மேற்கே சுமார் 4 கி.மீ. தொலைவில் உள்ளது.

வயல்கள் நிறைந்துள்ள பகுதிகளைக் கழனி என்று சொல்வது மரபு. இந்த வயல்கள் சூழ்ந்துள்ள பகுதியின் முன்பு ஒரு சிறு ஊரை உருவாக்கிக் கொண்டு நகரத்தார்கள் இங்கு குடியேறி இவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் ''கழனியுடையார் ஐயனார்'' பெயரால் இவ்வூருக்கு ''கழனியின் வாசல்'' என்ற பெயரை ஏற்படுத்தினர். இதுவே காலம் செல்லச் செல்ல 'கழனிவாசல்' ஆயிற்று. தேனிபட்டியும் இதற்குப் பக்கத்திலேயே அமைந்துள்ள சிறு ஊர்தான், முதலில் நகரத்தர்ர்கள் தேனிபட்டிக்கு வந்த பிறகுதான் ழனிவாசல் என்ற ஊரை உருவாக்கியுள்ளார்கள்.

நடராசபுரம் : இவ்வூர் காரைக்குடிக்குத் தென்மேற்கே சுமார் 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

சிவகங்கை ஜமீன்தாரிடம் வரிகட்டி மனைகள் பெற்று 1905ல் இவ்வூர் உருவாயிற்று, இவ்வூரை நகரத்தார்கள் ஐந்து பேர்கள் பொதுவில் கிரயம் வாங்கி கோயிலூர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ வீரப்ப சுவாமிகளை அழைத்துப் பிரித்துக் கொண்டுள்ளனர். பின்னர் புலவர் ஆலங்குடியார் அவர்களை அழைத்துவத்து 'நடராசபுரம்' எனப் பெயர் சூட்ட ஏற்பாடு செய்தார்கள்.

நச்சாந்துபட்டி : இவ்வூர் திருமயத்திலிருந்து வடக்கே சுமார் 7 கி.மீ. தொலைவில் உள்ளது.

புதுக்கோட்டைக்குத் தெற்கே 20 கி.மீ. தொலைவில் உள்ளது; திருமயம் என்று பேச்சு வழக்கில் கூறப்படுகின்ற திருமெய்யம்' என்ற ஊர். இவ்வூரில் விஜயரெகுநாத சேதுபதி மன்னரால் ஏழு சுவர்களையும் ஒரு அகழியையும் உடைய ஒரு கோட்டை 1687ல் கட்டப்பெற்றது. இது பிரசித்திபெற்றது. கட்டபொம்மன் ஊமைத்துரை இருவரும் சில நாள்கள் ஆங்கில ஏகாதிபத்திய கெடுபிடிகளுக்கு அஞ்சி ஒழிந்திருந்த கோட்டை, இந்த கோட்டை கட்டுவதற்குரிய நல்ல சாந்து (சுண்ணாம்புக்கல் கலவை) இவ்வூரிலிருந்து எடுத்துச் செல்லப் பட்டதால் இவ்வூருக்கு "நற்சாந்துபட்டி" எனப்பெயர் பெற்று பேச்சுவழக்கில் 'நச்சாந்துபட்டி' என அழைக்க லாயிற்று எனக் கூறுகின்றனர். ஆயினும் இதற்கு முன்பு ஏற் பட்ட பெயர் 'திருமலை சமுத்திரம்' என்பதே.

நாச்சியார்புரம் : திருப்பத்தூரிலிருந்து காரைக்குடி தேவகோட்டை செல்லும் நெடுஞ்சாலையில் காரைக்குடி யிலிருந்து வடகிழக்கே சுமார் 6 கி மீ. தொலைவில் உள்ளது.

சுமார் 100 ஆண்டுகட்கு முன்பு இவ்வூருக்கு அண்மை யிலுள்ள பல ஊர்களில் வசித்துவந்த நகரத்தார்கள், சிவகங்கை சமஸ்தானத்தில் புன்செய் நிலங்களை மேல்வாரப்

பாத்தியதைக்கு நிலக்குத்தகை கொடுத்து வாங்கி இவ்வூரை ஏற்படுத்தியதாகவும் இவ்வூரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் மருது சகோதரர்களால் தோற்றுவிக்கப்பட்ட காட்டு நாச்சியம்மன் கோவில் இருப்பதால் அந்த அம்மனின் பெயராலேயே "நாச்சியார்புரம்" எனப் பெயர் பெற்றதாகவும் கூறுகின்றனர்.

நாட்டரசன் கோட்டை : சிவகங்கையிலிருந்து கிழக்கே 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து 1000 ஆண்டுகட்குமுன் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பொட்டலாகக் கிடந்த இவ்வூரில் வந்து ஒரு கோட்டைக்குள் வாழ்ந்து வந்ததால் நாட்டுக் கோட்டையே காவப்போக்கில் 'நாட்டரசன் கோட்டை'யாக மாறியிருக்கிறது என்று கூறுகின்றனர். இதற்கு முன்பு இருந்த பெயர் 'முடிகொண்ட பாண்டியபுரம்' என்பதாம்.

இராமநாதபுர மாவட்டம் என்ற நூலில் சோமலெ கூறுகிறார்.

"களவழி நாடாள்வான் கண்ணன் கூத்தன் என்ற சொற்றொடர்க்கேற்ப, இவ்வூர் திருவிழாக்களில் கள்ளர் வகுப்பினர்க்கு நாட்டரசன் என்ற சொற்றொடரின் காரணம் கூறி திருநீறு வழங்கப் பெறுகிறது. நாட்டரசன் என்ற குடும்பம் இன்றும் உளது. பல ஆண்டுகட்கு ஒருமுறை நிகழும் கவியாட்ட விழாவில் இக்குடும்பத்தார்க்கு சிறப்பான பங்கு இருந்து வருகிறது.

இவ்வூரில் உள்ள பூதத் தெருவிலிருந்து சிலப்பதிகாரத்தில் சதுக்க பூதங்கள் பற்றிய குறிப்புகள் தெரிவதால் நகரத்தாருக்கும் சிலப்பதிகாரத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று புலனாகும்,"

நெற்குப்பை : திருப்பத்தூருக்கு வடமேற்கில் 19 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

நாயக்கர்கள் காலத்தில் இவ்வூர் நெற்களஞ்சியமாக, நெற்களைச் சேகரித்து வைக்கின்ற கிடங்குகள் அடங்கிய ஊரா.க இருந்திருக்கிறது. ஏறத்தாழ 16,000 கலம் கொள்ளக் கூடிய பல கிடங்குகள் இங்கு இருந்திருக்கின்றன. இப்போது கூட 5000 கலங்கள் கொள்ளக்கூடிய நெற்கிடங்குகளைக் காணலாம். 'குப்பை' என்பது குவியலைக் குறிக்கும், நெற் குவியல்கள் அதிகமாக இருந்த காரணத்தால் இவ்வூருக்கு "நெற்குப்பை" எனப் பெயர் வந்ததாகக் கூறுகின்றனர்.

நேமத்தான்பட்டி : (என்ற 'நேமுத்துப்பட்டி) இவ்வூர் காரைக்குடிக்கு வடக்கே 17 கி.மீ. தொலைவில் அமைந் துள்ளது.

நகரத்தார்கள் இவ்வூருக்குக் குடியேறினபின். இவ்வூர் உருவாவதற்கான வரவு செலவு கணக்குகளைப் பார்ப்ப தற்காக 'நியமம்' என்ற ஊரிலிருந்து ஒரு அந்தணரை வர வழைத்து நியமித்துக்கொண்டதாலேயே 'நியமித்தான்பட்டி' எனப் பெயர் பெற்றது என்றும் பின்னர் காலப்போக்கில் மருவி நே. முத்துப்பட்டி, நேமத்தான்பட்டி என்று வழங்க லாயிற்று எனவும் கூறுகிறார்கள்.

பட்டமங்கலம் : இவ்வூர் திருப்பத்தூருக்குத் தெற்கே 4 கி. மீ. தொலைவிலும் கல்லலிருந்து வடமேற்கில் சுமார் 8 மைல் தொலைவிலும் அமைந்துள்ளது.

இப்பகுதி அடைக்கலங் காத்த நாடு எனப்படும். முன்பு இவ்வூருக்கு "பட்டமங்கை" என்றே பெயர். திருவாசகம் முதலான பல இலக்கியங்களிலும் 'பட்டமங்கை' என்ற சொல்லே கையாளப்பட்டு வந்திருக்கிறது. கார்த்திகைப் பெண்டிர் அறுவரும், அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்ற எண்வகைச் சித்திகளான "அட்டமா சித்தி" அடைய சிவபெருமானிடம் வேண்ட, அவரும் பார்வதி மூலம் பெறும்

படி கூற, அவ்வாறே பார்வதி மூலம் கற்றனர். ஆயினும் முன் செய்த வினைகளின் காரணமாகக் கற்றதை மறந்தனர். இது கண்டு சினங் கொண்ட இறைவன் அவர்களைக் கல்லாக ஆகுமாறு சபித்தனர். அம்மங்கையர் பெயரால், அட்டமா சித்தி ''பெற்ற மங்கலம்'' என்றும் அட்டமாசித்தி ''பட்ட மங்கலம்'' என்றும் பெயர் பெற்றது. காலப்போக்கில் இது பட்ட மங்கலம் என்றே அழைக்கப் பெற்று வருகிறது.

பலவான்குடி : கானாடுகாத்தான் குன்றைக்குடி நெடுஞ் சாலையில் கானரச்குடியிலிருந்து வடக்கே 8 கி. மீ தொலைவில் அமைந்துள்ளது.

முருகப்பெருமான் சூரக்குடியில் சூரனை வென்று திருவேலங்குடியில் அமர்ந்து, மாலையிட்டான் பட்டியில் மாலை சூடிக் கொண்டு ஆலத்திப் பட்டியில் ஆலத்தி எடுத்துக் கொண்டு பலவான்குடியில் பல வாணர்கள் இருந்து தொழுத பின் இறுதியாக குன்றக்குடிக்கு ஏகினான் என்பது வரலாறு. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய ''சூரைப் பாணர் புராணத்தில்'' இந்தச் செய்திகள் கிடைக் கின்றன. மேற்கூறிய சூரக்குடி, வேலங்குடி, மாலையிட்டாம் பட்டி, ஆலத்திப்பட்டி முதலிய ஊர்கள் அனைத்தும் சூரக் குடியிலிருந்து குன்றக்குடி செல்லும் ஒரே வழியில் அமைந் திருப்பது குறிப்பிடத்தக்கது. பல வாணர்கள் வாழ்ந்து வந்ததினால் இவ்வூருக்குப் ''பலவாணர்குடி'' என்றிருந்து பிறகு மருவி இப் பெயர் வந்ததாகக் கூறுகின்றனர்.

பள்ளத்தூர் : இவ்வூர் காரைக்குடிக்கு வடக்கே சுமார் 12 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர்ச் சாலைகள் வடக்கே ஏற்றமும், தெற்கே இறக்கமு மாக அமைந்திருப்பதால் மழை நீர் ஆறாகப் பாய்ந்து தெற்கே உள்ள ஊருணியில் தேங்கி நிற்கும். நிறையும். இவ்வூர் பள்ளமான பகுதியில் அமைந்திருந்தலால் பள்ளத்தூர் எனப்

பெயர் பெற்றது. இரணிக்கோவில் உ. அ. வகையினர் மித்ரா வயலிலிருந்து இங்கு பழையூரில் வசித்து வந்தார்கள். இவர்கள்தான் இப்போதுள்ள பள்ளத்தூர் என்ற இடத்தில் கவுல் வாங்கிப் புதிதாக ஊரை உருவாக்கினர். அது புதூர் என்றாகிப் பின்னர் நிலத்தின் தன்மையால் பள்ளத்தூர் என்றாயிற்று.

பனங்குடி : இவ்வூர் காரைக்குடிக்குத் தென்மேற்கே சுமார் 32 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது.

பனை மரங்கள் மிகுதியும் அடர்ந்த ஒரு பகுதியில், நகரத்தார்கள் வாழத் தொடங்கினர். அது சமயம் பிற ஊர்களில் வாழ்ந்து வந்த நகரத்தார்கள் அவர்களைப் 'பனைக்குடியினர்' என்றும், அந்தப் பகுதியை 'பனைக்குடி' என்றும் அழைத்து வந்தனர். இந்தப் பனைக்குடியே பின்னர் மருவி பனங்குடி ஆயிற்று என்றும் கூறுகின்றனர். இவ்வூரில் உள்ள நல்ல வளம்மிக்க நிலங்களுக்கு நீர்வளம் தந்து உதவும் "பனங்குடி"க் கண்மாய் இங்கிருப்பதாலும் இப்பெயர் வந்திருக்கக் கூடும் என்று கூறுகின்றனர்.

பனையபட்டி : இவ்வூர் திருமயத்திற்கு வட மேற்கில் 7 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர் மேலப் பனையூர் என்னும் கிராமத்தின் துணைக் கிராமமாகவே தோன்றியுள்ளது. மேலப்பனையூரில் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் பெறுகின்ற புறம் பனையான் வாழ்கோட்டம் என்று கூறப்படும் ஐயனார்சாமி உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு அமைத்ததே மேலப் பனையூர். இவ்வூருக்கு அருகில் அமைந்த குடியிருப்புக்குப் 'பனையபட்டி' என்று பெயர் வந்ததாகக் கூறுகின்றனர்.

பாகனேரி : இவ்வூர் சிவகங்கைக்கு வட கிழக்கே திருப்பத்தூர் செல்லும் நெடுஞ்சாலையில் 16 கி. மீ. தொலைவில் உள்ள குறுக்குச் சாலையினுள் அமைந்துள்ளது.

அடர்த்தியான காடுகள் நிரம்பிய இவ்வூரில் மதம் பிடித்த யானை ஒன்றினை அடக்குவதற்காக மாவுத்தன் (பாகன்) ஒருவன் அந்த யானையின் மீதேறி அடக்கியதால் இவ்வூர் 'பாகன் ஏறி' என்று ஆயிற்று. பின்னர் பேச்சு வழக்கில் 'பாகநேரி' என மருவி வழங்கி வருவதாகக் கூறுகின்றனர். இவ்வூரில் பாகன் என்பவர் பெயரால் உள்ள குளம் ஒன்றிற்குப் பாகநேரி என்ற பெயர் என்பதால் இவ்வூரையே பாகனேரி என்று அழைக்கப் பெற்றதாகவும் சிலர் கூறுகின்றனர்.

பொன் புதுப்பட்டி : இவ்வூர் பொன்னமராவதியிலிருந்து கிழக்கில் சுமார் 2 கி மீ. தொலைவில் அமைந்துள்ளது.

சில ஊர்களின் பெயர்கள் அதன் பழமையையும் புகழையும், புதுமையையும் உள்ளடக்கி அமையப் பெற்றிருக்கும், 'புதுப்பட்டி' புதிதாகத் தோன்றிய ஊரைக் குறிப்பதாக இருக்கிறது.

புது வயல் : இவ்வூர் காரைக்குடியிலிருந்து வட கிழக்கே சுமார் 14 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது.

கி. பி. 19ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய தமிழ்ப் புலவரான மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் வட மொழியிலிருந்து மொழி பெயர்த்து வீரவனப் புராணத்தை சொற்சுவை, பொருட்சுவை நிரம்பிய செய்யுள் களாக எழுதியுள்ளார்கள். அந்த மகாவித்துவானுடைய தனிப்பெரும் மாணாக்கரான தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்கள் அந்த வீரவனப் புராணத்திற்கு அரும் பதவுரை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். அந்தப் புராணத்திலிருந்து தான் சாக்கோட்டையின் தல வரலாறு தெரிய வருகிறது. வீரை எனும் மரங்கள் அடர்ந்த காடு 'வீரவனம்'. இது புது வயலுக்குக் கிழக்காக அமைந்துள்ளது. இந்த வீரவனம்தான் இன்று 'சாக்கோட்டை' எனப் பெயர் பெற்றுள்ளது. வில்வ

ஆரண்யம், வீர ஆரண்யம், வீரை, வீரையூர், அளகைச் சாக்கோட்டை, சாக்கனூர் சாக்கை முதலியன பிற பெயர்கள். சாக்கைக் கோட்டையே காலப்போக்கில் மருவி சாக் கோட்டை என ஆயிற்று. இந்த சாக்கோட்டைக்கு முன்புறம் புதிதாகத் தோன்றிய பள்ளமான வயல்களையுடைய பகுதியே புதுவயல்.

பூலாங் குறிச்சி : இவ்வூர் பொன்னமராவதிக்கு கிழக்கே சுமார் 8 கி மீ. தொலைவில் அமைந்துள்ளது.

காட்டில் அடர்ந்து வளர்ந்திருந்த பூலான் (புல் வகையைச் சார்ந்தது) செடிகள் அதிகமாக இருந்தது எனவும், அவைகளை அகற்றி இவ்வூர் உருவாக்கப் பெற்றது என்பதாலும், இவ்வூருக்குப் 'பூலான்குறிச்சி' ஆயிற்று என்று கூறுகின்றனர். இங்ஙனம் செடிகளைத் தோண்டி அகற்றியபோது கிடைத்த அம்மன் சிலையே இவ்வூர்க் கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்டிருப்பதாகவும் கூறுகின்றனர்.

பொன்னமராவதி : இவ்வூர் திருப்பத்தூருக்கு வட மேற்கே சுமார் 20 கி. மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

பொன்னை, அமரன் என்ற இரு அரசர்கள், நெடிராஜ பாண்டியன், நாயக்க மன்னர்கள் முதலியவர்களால் தோற் கடிக்கப்பட்டவர்கள். இவ்வூரிலுள்ள வைணவக் கோவிலுக்கு கி. பி. 1527ல் பொன்னம்பலநாதத் தொண்டைமான் வீர. நரசிங்கராயர் பெயரால் நிலங்கள் வழங்கப்பட்ட செய்தியும் தெரிகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இங்குப் பாண்டியர் சிங்களவர் போர் நடைபெற்றிருக்கிறது. பதினேழாம் நூற்றாண்டில் இவ்வூர் மருங்காபுரிச் சிற்றரசர்கள் ஆட்சியில் இருந்து கி. பி. 1730ல் சேதுபதிகள் கைக்கு மாறியிருக்கிறது. இந்த பொன்னன், அமரன் என்ற அரசர்களில் ஒருவனாகிய அமரன் பெயரால் அமைந்த அமர கண்டான் ஊருணியும் இங்கு இருக்கிறது.

இவ்வூர் அழகிய நாச்சியம்மன் மீது பாடப்பெற்றுள்ள பாடல்களில் இருந்து பொன்னன், அமரன் என்ற இரு அரசர்களால் உருவாக்கப்பட்ட ஊரே 'பொன்னமராவதி' என்று தெரிகிறது.

மகிபாலன்பட்டி : இவ்வூர் காரைக்குடிக்கு வடமேற்கே சுமார் 13 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது.

சோழ அரசர்களில் ஒருவனாகிய மகிபாலன் என்பவன் ஆண்டு வந்த காரணத்தால் 'மகிபாலன்பட்டி' எனப் பெயர் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர். இதன் பூர்வீகப் பெயர் 'பூங்குன்றம்' என்பதாகும். சோழர் காலத்திலேயே மகிபாலன் பட்டி என்ற பெயர் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. பாண்டிய நாட்டில் 24 கிராமங்களைக் கொண்ட பூங்குன்ற நாட்டின் தலைநகரமாக இருந்திருக்கிறது.

மானகிரி : காரைக்குடிக்கு மேற்கே சுமார் 5 கல் தொலைவில் அமைந்துள்ளது.

சுமார் 150-200 ஆண்டுகளுக்கு முன்னால் இவ்வூருக்கு அருகிலுள்ள தளக்காவூர் நாச்சியாபுரத்துக்கு சமீபத்தில் உள்ள கம்பனூர் என்ற ஊர்களிலிருந்து நகரத்தார்கள் இவ்வூருக்கு வந்து, இவ்வூரை உருவாக்கியிருக்கிறார்கள். 'கிரி' என்ற சொல்லில் முடியும் ஊர்கள் பெரும்பாலும், மலையும் மலையைச் சார்ந்த ஊர்களாகவும் விளங்குவது காணலாம்.

மிதிலைப்பட்டி : இவ்வூர் புதுக்கோட்டைக்குத் தென் மேற்கில் சுமார் 35 கி. மீ. தொலைவில் உள்ளது.

வடநாட்டில் மட்டுமில்லாமல், தமிழகத்திலும் கூட இராமாயணக் காவியத்தின் தொடர்பால் பெயர் பெற்ற பல ஊர்கள் இருக்கின்றன. கொங்கரத்தி என்ற ஊர் (கண்டர மாணிக்கத்திற்கு அருகில்) இராவணனுடைய சகோதரி சூர்ப்பனகையின் தனங்களை இலக்குவன் அறுத்த இடம்

என்பதால் பெயர் பெற்றது தேவகோட்டைக்கு சமீபத்தில் உள்ள கண்டதேவி எனும் ஊர், மனைவியைப் பிரிந்து வருத்த முற்றிருந்த காகுத்தனிடம் 'கண்டேன் சீதையை' என்று அனுமன் சொல்லியதை நினைவு கூருமிடம். இறகு சேரி என்ற இடத்தில் தான் ஜடாயுவின் இறக்கைகள் வீழ்ந்த இடமாகக் கூறுகின்றனர். இதுபோல் அனுமன் பெயரால் அனுமந்தப்பட்டி, அஞ்சனமங்கலம் முதலிய ஊர்களும் இருக் கின்றன. இராமன் சிவதனுசுவை ஒடித்து ஜானகியை மணந்த மிதிலை நகரின் பெயரைத் தாங்கி நிற்கும் இவ்வூரும் இராமாயணக் காவியப் பற்றினால் பெயர் பெற்றதே எனக் கூறுகின்றனர்.

மேலைச்சிவபுரி : இவ்வூர் திருப்பத்தூரிலிருந்து வட மேற்கே சுமார் 22 கி. மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

இதுவும் ஒரு சிவத்தலம். செம்மண் பூமி நிறைந்த பகுதி. இதுவும் முன்பு மேலைச் சிவல்பட்டி என்ற பெயரிலேயே வழங்கி வந்திருக்கிறது.

செம்மண் நிறைந்த பூமி என்பதால் பெயர் ஏற்பட்டிருந் தாலும், இங்கு சிவன் உறைகின்ற ஊர் ஆனதாலும், நகரத் தார்கள் சைவமதத்தைச் சார்ந்தவர்கள் என்பதாலும், இது சிவப்பட்டி என்றுதான் பெயர்கொண்டிருக்க வேண்டும். பின்னர் நாகரீகம்கருதி சிவப்பட்டி என்பது சிவபுரி ஆகியிருக்க வேண்டும். திருப்பத்தூருக்குச் கிழக்கே ஒரு சிவபுரி இருந்த தால் திசையால் வேறுபடுத்தி இதை மேலைச் சிவபுரி என்று கொண்டிருக்கின்றனர்.

ராங்கியம் : இவ்வூர் புதுக்கோட்டைக்குத் தென்மேற்கே 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ராசசிங்கமங்கலம் என்ற ஒரு ஊர் இருக்கிறது. இவ்வூருக்கும் பழைய பெயர் அதுவே. பல்லவ மன்னன் ராஜசிம்மன் பெயரால் வழங்கும்

ஊர். இவ்வூரும் அவன் பெயரால் வழங்கி இருக்கவேண்டும். அல்லது அங்குள்ள மறவர்கள் இவ்வூரில் குடிபெயர்ந்து தாங்கள் வாழ்ந்த பழைய ஊரின் நினைவாக இவ்வூருக்கும் அந்தப் பெயரைச் சூட்டியிருக்கலாம் எனக்கூறுகின்றனர்.

ராயவரம் : இவ்வூர் புதுக்கோட்டைக்குத் தென்கிழக்கில் சுமார் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது,

ஒணான்குடி. வையாபுரிப்பட்டி, தாஞ்சூர், மேனிலைப் பட்டி, ஆயங்குடி முதலான கிராமங்களிலிருந்து இங்குவந்து குடியேறி 'ராஜமாநகர்' எனப்பெயர் சூட்டி வாழ்ந்து வந்திருக் கின்றனர். ஒரு காலத்தில் புலமைமிக்க பல கவிராயர்கள் மிகுதியும் இங்கு வாழ்ந்து வந்திருந்த காரணத்தால் ''ராயர் புரம்'' என்பதே ராயவரம் எனமருவி வந்திருக்கக் கூடும் எனத்தெரிகிறது,

கொ. லெட்சுமிபுரம் : இவ்வூர் திருமயத்திற்குத் தென் கிழக்கே சுமார் 12 கி,மீ, தொலைவில் அமைந்துள்ளது,

ஏறத்தாழ 12 ஆண்டுகட்கு முன் சிவகங்கை சமஸ்தானத் திலிருந்து, இரண்டு நகரத்தார் பெருமக்கள் கவுல் வாங்கிப் பிரித்துக் கொண்டனர், இங்குள்ள நகரத்தார்கள் மிக்க செல்வச் செழிப்புடையவர்களாக இருந்த காரணத்தால் செல்வத்திற்கு அதிபதியான இலக்குமியின் பெயரையே இவ்வூருக்கும் சூட்டினர். திருமயம் ஒன்றியத்திலுள்ள விரை யாச்சிலைக்குப் பக்கத்திலும் 'இலக்குமிபுரம்' என்ற ஊர் ஒன்று இருப்பதால், இவ்வூரினை வேறுபடுத்திக் காட்டுவதற் காகவே இவ்வூருக்கு அண்மையிலுள்ள கொத்தமங்கலத்தின் முதல் எழுத்தை சேர்ந்து 'கொ. இலக்குமிபுரம்' என்று அழைத்தனர்.

வி. லெட்சுமிபுரம் : இவ்வூர் திருமயத்திலிருந்து வட மேற்கே சுமார் 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

கொ. லெட்சுமிபுரத்திற்கு ஏற்பட்டுள்ள பெயர்க் காரணமே இதற்கும் பொருத்தம் உடையது, நெய்க்குணம் என்ற ஊருக்குப் பக்கத்தில் இருப்பதாலும் சிலர் இதை நெ. லெட்சுமிபுரம் என்றும் கூறுகின்றனர்,

வலையபட்டி : இவ்வூர் பொன்னமராவதிக்கு மேற்கே சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரில் ஒரு காலத்தில் வலையர் இனத்தவர்கள் மிகுதியாக வாழ்ந்திருந்த காரணத்தால் இவ்வூருக்கு அந்த இனத்தவர்களின் பெயரால் வலையபட்டி எனப் பெயர் பெற்றதாகக் கூறுகின்றனர். நாகரிகம் கருதி இப்போது 'வலம்புரி' என்றும் 'வலையமாநகர்' என்றும் கூறுகிறார்கள், இவ்வூர் இறைவன் வலம்புரி நாதர் பெயரால் இவ்வூருக்கு வலையபட்டி எனப் பெயர் வந்ததாகவும் சிலர் கூறுகின்றனர்.

விராமதி : இவ்வூர் திருப்பத்தூருக்கு வடகிழக்கில் சுமார் 4½ கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர் சுமார் 106 ஆண்டுகட்கு முன்புதான் உருவாகியிருக்கக்கூடும் என்று சொல்கிறார்கள். குறுகிய மன்னர்களாகிய ஜமீன்தார்களில் ஒருவரால் ஏற்படுத்தப்பட்ட இவ்வூர் முன்பு 'மராமலி' என்றே இருந்திருக்கவேண்டும். பின்னர் நாளடைவில் ''மராமதி'' ஆகி இப்போது 'விராமதி' என மருவி இருக்கக்கூடும் என்றும் கூறுகின்றனர்.

விரையாச்சிலை : இவ்வூர் திருமயத்திற்கு வடமேற்கில் சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

வீரர்சிலை என்பதே விரையாச்சிலை என ஆயிற்று என்றும் வராகி அம்மன் (அடைக்கலங்காத்தம்மன்) அவதாரமாதலால் 'வராகிசிலை' விரசச்சிலை ஆகியது என்றும், இவ்வூரில் உள்ள லிங்கம் சுயம்பு ஆதலால், வரையாச்சிலையே 'விராச்சிலை' என்றும் கள ஆய்வின்போது பலரும் பல செய்தி

களைச் சொல்லியிருந்தாலும். இங்குள்ள சிவலிங்கம் சுயம்பு என்பதாலும் எவராலும் வடிக்கப்படாத ஒன்றென்பதாலும் 'வரையாச்சிலை' பெற்றுள்ள இவ்வூர் 'விராச்சிலை' என மருவி வழங்கலாயிற்று என்று கொள்வதே மிகப் பொருத்தம்.

வெற்றியூர் : கல்லலிலிருந்து தெற்கே சுமார் 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இவ்வூர்.

புகழ் வாய்ந்த சின்னமருது, பெரிய மருது என்ற இரு மன்னர்களும் தங்கள் பகைவர்களுடன் போரிட்டு வெற்றி கண்ட இடம் என்ற காரணத்தால் இவ்வூருக்கு ''வெற்றியூர்'' எனப் பெயர் வழங்கிற்று. அம்மை கண்டாசுரனை வெற்றி கண்ட இடமென்பதால் இவ்வூருக்கு வெற்றியூர் எனப்பெயர் வந்தது எனப் புராண வரலாறும் உண்டு.

வேகுப்பட்டி : இவ்வூர் பொன்னமராவதிக்கு தெற்கே சுமார் 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரில் நிலவளத்துக்கு நீர்வளம் தந்துதவும் வேகுக் கண்மாய் இருப்பதாலேயே வேகுப்பட்டி எனப்பெயர் பெற்ற தாகக் கூறுகின்றனர்.

புதுக்கோட்டை மன்னர் தன்மகளை ராங்கியர் வகையறாவில் திருமணம் செய்து கொடுத்தபோது. அந்தப் பெண்ணுக்கு வேவு எடுத்தபோது இனாமாகக் கொடுத்த கிராமம், வேகுப்பட்டி (வேவுப்பட்டி). எனவே இவ்வூருக்கு வேவுப்பட்டி எனப்பெயர் ஏற்பட்டு பின்னர் மருவி வேகுப் பட்டி என ஆயிற்று என்றும் கூறுகின்றனர்.

வேந்தன்பட்டி : இவ்வூர் புதுக்கோட்டையிலிருந்து தென்மேற்கில் சுமார் 28 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

'முந்நூறர் ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு'

என்று புறநானூற்றுப் புலவன் கபிலனால் பாடப்பெற்ற பாரி ஆண்ட பிறம்பு நாட்டின் 300 ஊர்களில் தொன்மையானது''

இவ்வூர் என்று டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள்கூறுவதை அறிக. இந்தத் தொன்மையான ஊரில் வாழ்ந்துவந்த வேந்தப் பனம்பலம் என்பவர் நகரத்தார்களை அவ்வூருக்குக் குடியேறும்படி வேண்டியதால்—அந்த நன்றிக்கு அடையாள மாக அவர் பெயராலேயே 'வேந்தன்பட்டி' என அழைக்கவா யினர்.

தமிழ்நாட்டின் பரப்பு 1,29,000 சதுர மைல் ஆகும். இந்த நகரத்தார் வாழுகின்ற 74 ஊர்களுக்கும் பொதுவான பெயர் செட்டிநாடு, இதன் பரப்பளவு இன்றைய கணக்குப்படி ஏறத்தாழ 1700 சதுர கி மீட்டர்கள். சென்னை தனுஸ்கோடி இரயில் பாதையில், திருமயத்திற்கும் காரைக்குடிக்கும் நடுவே அமைந்துள்ள இப்பகுதி கானாடுகாத்தானுக்குத் தென் மேற்கே 2 கி மீ. தொலைவிலும் பள்ளத்தூருக்கு வடமேற்கே 3 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நிலத்தை ஐவகைப்படுத் தினர். நகரத்தார்கள் வாழுகிற 74 ஊர்களும் நெய்தல் நிலத் தைத்தவிர மற்ற எல்லாவகை நிலங்களிலும் அமைந்துள்ளன. இந்தச் செட்டிநாட்டுப் பகுதியின் கால நிலைகள் பின் வருமாறு :

தென்மேற்குப் பருவக்காற்று ; ஜூன் முதல் செப்டம்பர் வரை

வடகிழக்குப் பருவக்காற்று : அக்டோபர் முதல் டிசம்பர்வரை

வெப்பக்காலம் : மார்ச்சு முதல் ஆகஸ்டு மாதம் வரை

மழைக்காலம் : செப்டம்பர் முதல் நவம்பர் வரை

பனிக்காலம் : டிசம்பர் முதல் பிப்ரவரி வரை

இந்தப் பகுதி வறட்சியான பூமியாகஇருந்தாலும் ஆண்டு ஒன்றுக்கு தென்கிழக்குப் பருவக்காற்றால் பதினைந்து முதல் இருபது அங்குலம் வரையிலும் வடகிழக்குப் பருவக்காற்றால் இரண்டு முதல் நான்கு அங்குலம் வரையிலும் உள்ள மழை தான் கிடைக்கின்றது.

இந்தப் பகுதியில் பலமொழி பேசுகின்ற இனத்தவர்களும் வாழ்ந்து வருகின்றார்கள். இங்கு வாழுகின்ற மக்களில் மொழிவாரியாக எத்தனை சதவிகித மக்கள் உள்ளனர் என்பதைக் கீழ்க்கண்ட பட்டியலில் தோராயமாகத் தரப்பட்டுள்ளது.

மொழி	செட்டிநாட்டு மக்கள்தொகையின் சதவிகிதம்
தமிழ்	89.49%
தெலுங்கு	8.28%
கன்னடம்	1.32%
சௌராஷ்டிரம்	.53%
உருது	0.17%
மலையாளம்	0.16%
மராத்தி	0 02%
இந்தி	0 02%
குஜராத்தி	0.01%
	100%

செட்டிநாட்டிற்கு மையமான பகுதி குன்றக்குடி. இதன் தெற்கேயுள்ள நகரத்தார வாழுகின்ற ஊர்களை 'தெற்கு வட்டகை' என்றும், முறையே கிழக்கு, மேற்குப் பகுதிகளில் இருக்கின்ற நகரத்தார் ஊர்களை மேற்கு வட்டகை, கிழக்கு வட்டகை என்றும் அழைக்கிறார்கள்.

இனிவரும் பகுதியில் நகரத்தார்களின் வாழ்வியல் முறைகளையும் பழக்கவழக்கங்களையும் விரிவாகக் காண்போம்.

—நான்கு—

வாழ்வியலும் பழக்கவழக்கங்களும்

நகரத்தார்கள் சிவநெறிச் செல்வர்களாகவே இருந்தார்கள். நிறைய முடிவைத்துக் கொண்டும், எப்போதும் தலைப்பாகை கட்டிக் கொண்டும். காதுகளை வளர்த்து தண்டிக்கடுக்கன் இட்டுக்கொண்டும், மூன்று விரல்பட அழிவாது திருநீறுபூசி ஆடைகளைக் கொய்து மடிவைத்துக்கட்டி அதில் திருநீற்றுப் பையையும் வைத்து ஜெபமாலையும் வைத்து வாழ்ந்தார்கள். நகரத்தார்கள் சைவசமயத்தை அன்றி வேறு மதங்களைத் தழுவியதாக வரலாறு இல்லை. இது அவர்களிடம் இருந்த மதக்கட்டுப்பாட்டைத் தெற்றென விளக்கிக் காட்டுகிறது.

பிறப்பும் - புதுமையும் : நகரத்தார்களுக்கு குழந்தை—குறிப்பாக முதல் குழந்தை—பிறப்பது எந்த வீட்டிலும், குடும்பத்திலும் ஒரு முக்கியமான மகிழ்ச்சி நிறைந்த நிகழ்ச்சியாகும். நகரத்தார்—பிள்ளை பிறந்தபோது கொண்டாடப் படுகிற விழா மகப்பேறு விழாவாகும். பெண் மகப்பேற்றைக் காட்டிலும், ஆண் மகப்பேறும் அதிலும் முதல் மகப்பேறு சிறப்பாகக் கொண்டாடப்பெறும், என்று 'பழந்தமிழராட்சி' என்ற நூலில் கூறப்பட்டுள்ளது, இங்ஙனம் நம்முடைய முதல் ஆண் அல்லது பெண் குழந்தைகளுக்குக் 'காப்புக்'கட்டுப் புதுமை' என விழா நிகழ்த்தி வந்திருக்கின்றார்கள்.

கார்த்திகைப் புதுமை : பெற்றோர்கள் தங்களுக்குத் திருமண வயதுடைய ஆண் மக்கள் இருக்கின்றனர் என்பதை சுற்றத்தார்க்கு தெரிவிக்கின்ற நிகழ்ச்சியே 'கார்த்திகைப் புதுமை' என்ற பெயரால் நடைபெற்று வந்துள்ளது. இது கார்த்திகை நட்சத்திரத்தன்று நடைபெறும். இதனைச் சூழ்பிடி என்றும் கூறுவார்கள்.

திருவாதிரைப் புதுமை : பெண் திலகமான ஆதிரை என்பவள் மணிமேகலையில் குறிப்பிடப் பெறுகிறாள். இவளும் நம் நகரத்தார் மரபினளே. இந்த திருவாதிரை என்பது வயது வந்த பெண்பாலர்க்கு திருமண மாகுமுன்னர் மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் நடைபெறும். திருமணத்திற்கு உரிய பருவம் அடைந்த பெண்களை விளம்பரம் செய்யும் நிகழ்ச்சியாக திருவாதிரை அமைந்திருக்க வேண்டும்;

மணிமேகலை வணிகர்குலக் கோவலன் மகளே. அவளுக்கு அமுதிட்ட ஆதிரையும் அக் குலத்தவளே. மணிமேகலையில் உயர்ந்தவள் என்றும் கருதப்பட்டவள். தம் குலத்து மகளிர் எல்லாம் அவள் போல விளங்கவேண்டும் என்பதே இவ்விழாவின் நோக்கமாகும். மணிமேகலை பாத்திரம் பெற்றவுடன், ஒரு பத்தினிப் பெண்ணிடம் பிச்சை பெறவேண்டும் என்ற நியதிப்படி ஆதிரை என்பவளிடம் பிச்சை கேட்டாள். "பாரத மடங்கிலும் பசிப்பிணி யறுக" எனச் சொல்லி அவளிட்ட பிச்சை, பெருகி உலகப் பசிப் பிணியைப் போக்கிற்று. இதைக் கருத்தில் கொண்டுதான் திருவாதிரை விழாவின்போது மகளிர் வீடு வீடாகச் சென்று

"ஆடிஆடி வாரோம் அவரக்காய் போடுங்க
பாடிப்பாடி வாரோம் பாகற்காய் போடுங்க
கூடிக்கூடி வாரோம் கொத்தவரங்காய் போடுங்க"

என்று உண்ணும் பொருட்களையே விரும்பிக் கேட்டு

வந்திருக்கின்றனர் என்று "சோமலெ" அவர்கள் எழுதியுள்ள "செட்டிநாடும் தமிழும்" என்ற நூலில் குறிப்பிட்டிருப்பதை இங்கு நினைவு செய்கிறேன். இப்படி வீடுவீடாகச் செல்லும் போது நல்ல ஆடை அணிமணிகளும், திருவாதிரைக் கழுத்து உருவையும் அணிந்து கொள்வர்.

உபதேசப் புதுமை: பஞ்சாட்சர உபதேசம் பெற்றுக் கொள்வது என்பது தொன்றுதொட்டு நம் நகராத்தார்களிடம் இருந்து வரும் சிறந்த பழக்கமாகும். இதனைத்தான் உபதேசம் என்று சொல்கிறோம். உபதேசம் கேட்டுக் கொண்டதை முன்பெல்லாம் உபதேசப் புதுமை என்றே ஐந்து நாட்கள் ஒரு விழாவாகவே கொண்டாடி வந்திருப்பதாக தொண்ணூற் றாரூர் நகரக் கூட்டத் தீர்மானங்களிலிருந்து அறிய முடிகிறது.

சைவ சாதனங்களாகிய திருநீறு, உருத்திராக்கம், ஸ்ரீபஞ்சாட்சரம் ஆகியவற்றை நாம் கைக்கொள்வதற்குரிய தகுதி நமக்கு சிவதீட்சையினாலேயே வருவதாகும்.

"துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திடாதே
அஞ்செழுத்தோதின் நாளும் அரனடிக்கு அன்பதாகும்"

என்று அப்பர் அடிகளும்

"வேத நான்கிலும் மெய்ப் பொருளாவது
நாதன்நாமம் நமச்சிவாயவே"

என்று சம்பந்தப் பெருமானும் தேவாரங்களில் பாடி யிருப்பதை அறிக. உடலைத் தூய்மை செய்துகொள்ள நீராடுவதைப்போல, உள்ளத்தைத் தூய்மை செய்றுகொள்ள பஞ்சாட்சரத்தை ஜெயம் செய்ய வேண்டும். முற்காலப் பழக்கப்படி ஏழாம் ஆண்டு முதல் ஒன்பதாம் ஆண்டுக்குள் சமய தீட்சையைப் பெற்று சாதகர்களாய் நம் முன்னோர்கள் வாழ்ந்திருந்தனர். பின்னர் உபதேசம் என்னும் பெயருடன் உருமாற்றமும் செயல் மாற்றமும் பெற்றுத் தோன்றிய சமய

திட்சை கூட, இப்போது திருமணத்திற்குப் பின்னர்தான் கேட்டுக் கொள்கிற நிலை வந்து விட்டது.

நகரத்தார் திருமண முறை :

தொல்காப்பிய உரையில் இளம்பூரணர் காட்டும் எட்டு வகையான திருமணங்கள்.

1. பிரமம்
2. பிரசாபத்தியம்
3. ஆரிடம்
4. தெய்வதம்
5. காந்தர்வம்
6. அசுரம்
7. இராக்கதம்
8. பைசாசம்

பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வதம் ஆகிய நான்கும் பெருந்திணை என்று அழைக்கப்படும்.

கந்தர்வத்தைக் களவுகண்டம் என்றழைப்பார்கள்.

அசுரம், இராக்கதம், பைசாசம் ஆகிய மூன்றும் கைக்கிளை என்று அழைக்கப்படும்.

எட்டுவகை திருமணங்களுக்கான விளக்கங்கள்.

1. பிரம்மம் : அலங்கரிக்கப்பட்ட பெண்ணை வேதம் ஓதி நற்குணங்களுடன் கூடிய வாலிபனுக்கு அவள் தந்தையால் கன்னிகாதானமாகக் கொடுப்பது.
2. பிரசாபத்தியம் : தலைமகனினத்தார் வேண்டத் தலைமகளினத்தார் உடன்பட்டு தீ முன்கொடுத்தல்.
3. ஆரிடம் : பசு, எருது இரண்டொன்று வாங்கிக்கொண்டு கன்னிகையைக் கொடுத்தல்.

4. தெய்வதம் : வேள்ளியால் தோன்றிய கன்னிகையைத் தீ முன் கொடுத்தல்.
5. காந்தர்வம் : ஆணும் பெண்ணும் எவரும் அறியாமல் காதல் மணம் புரிந்து கொள்வது.
6. அசுரம் : மணமகன் மணமகளுக்கும், அவள் பெற்றோர்களுக்கும் பொருள் கொடுத்து அவளை மணம் செய்து கொள்வது.
7. இராக்கதம் : உடன்பாடின்றி ஒரு கன்னிகையை வலிதிற் புணர்தல்—மணம் செய்து கொள்ளல்.
8. பைசாசம் : பெண் சுய நினைவு இல்லாமல் இருக்கும் பொழுது புணர்ந்து பின் அவளையே மணந்து கொள்வது.

'பிரமம்' என்ற திருமண அமைப்பே சிறந்தது என்று மேலோர் கூறுகிறார்கள்.

கல்வி, செல்வம், ஒழுக்கம், அறிவு ஆகிய நான்கிலும் சிறப்பு நிலை எய்திய பிறகு குணநலம் மிக்காளை ஊரார் அறிய உறவினர்கள் ஏற்றுக் கொள்ள மனைவியாக ஏற்றுக் கொள்ளலே திருமணமாகும்.

வாழ்நாள் முழுவதும், இன்பம், துன்பம் இரண்டிலும் சரி சமமாகப் பங்கு கொண்டு வாழ்க்கையில் அறநெறியைத் துவக்கும் முதற்படி திருமணம்.

கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புலனு கர்வில் ஐக்கியமாவதற்கும் அடித்தளம் அமைப்பது திருமணமே ஆகும்.

மணமகன் மற்றும் மணமகளிடம் இருக்க வேண்டிய எண்வகை நிறைவுகள் 1. நல்ல குடிப்பிறப்பு 2. வயது 3. கற்பு 4. உணர்வு 5. ஆண்மை 6. அழகு 7. கனிவு 8. செல்வம் ஆகிய எண்வகை நிறைவுகள்.

தொல்காப்பியமும் இவைகளைத் தொட்டுக் காட்டியுள்ளது.

"பிறப்பே குடிமை, ஆண்மை, ஆண்டோடு
உறுப நிறுத்தக் கர்ம வாயில்
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

பையன் வீட்டார் பெண்ணிடம் கீழ்க்கண்ட தகுதிகள் உள்ளனவா என்று விசாரித்து அறிந்து கொள்வார்கள்.

வயது, பருவ வளர்ச்சி, தன் கணவன் ஈட்டுகின்ற பொருளைப் பேணிக் காப்பாற்றக் கூடிய தகுதி, சகிப்புத் தன்மை, நாவடக்கம், புகுந்த வீட்டுப் பெருமையைக் கட்டிக் காத்தல், பொறுப்பு, கணவனுக்கு ஏற்படும் இன்ப துன்பம் களில் இதமாகப் பேசி யோசனை கூறும் சாமர்த்தியம், தெய்வ நம்பிக்கை, குடும்பத்தை வழி நடத்தும் பண்பு, பொழுதை வீணாக்காமல் வீட்டுக் கடமைகளை ஆற்றும் பக்குவம், அறுசுவை உணவை ஆக்கிப் படைக்கும் அன்பு, கணவன் தன்னை விரும்புகின்ற முறைக்கு எல்லா கோணங் களிலும் இன்பம் தந்து மகிழ்விக்கின்ற குணநலன்.

பெண் வீட்டார் பையனிடம் கீழ்க்கண்ட தகுதிகள் உள்ளனவா என்று விசாரித்துத் தெரிந்து கொள்வார்கள்.

வயது, ஆண்மையின் வளர்ச்சி, தானாகப் பொருள் ஈட்டும் தகைமை, சகிப்புத் தன்மை, குடும்பத்திலும், தொழிலிலும் பொறுப்பு, எந்தச் சூழ்நிலைகளிலும் தன்னம்பிக்கையுடன் செயலாற்றும் ஆற்றல், மனைவி என்னும் இன்ப வீணையை இதமாக மீட்டி இன்பந் துய்க் கின்ற திறன்.

(மணம்) பேசி முடித்தல்

பையனின் தாய் தந்தையரும், பெண்ணின் தாய் தந்தையரும் கூடி மணநாள் குறிப்பதை சிலப்பதிகாரம் சிறப்பாகச் சொல்கிறது.

"இருபெருங் குரவரும் ஒரு பெரும் நாளில்
மணவணி காண மகிழ்ந்தனர்"

பெண் வீட்டார் பெண்ணைக் கொடுப்பதற்கு இசைந்தவுடன் ஒரு நடுமனிதர் மூலமாக இன்னின்ன வகைகளில் சீர் செய்ய முடியும் என்று பையன் வீட்டுக்குச் சொல்லியனுப்புவார்கள். பையன் வீட்டிலும் சம்மதம் தெரிவித்தவுடன்,

(மணம்) பேசி முடித்தல் என்ற நிகழ்ச்சி பெண் வீட்டில் நடைபெறும்.

ஒரு குறிப்பிட்ட நல்ல நாளில் பையனுடைய பெற்றோர்கள் தங்கள் உற்றார் உறவினர்களுடன் பெண் வீட்டிற்கு வருவார்கள். அவர்களை இன்முகத்துடன் சந்தனம் கொடுத்து பன்னீர்தெளித்து வரவேற்பார்கள்.

பையனுடைய பெற்றோர்கள், விரளி மஞ்சள் வெற்றிலை பாக்கு கற்கண்டு, பழம் போன்றவற்றை அவர்கள் தகுதிக்கு ஏற்ப கொண்டு வருவார்கள்.

பிறகு திருமணம் நிச்சயிக்கப்படும். இன்னார் மகளைத் திருமணம் செய்வதாகவும் இன்னின்ன முறைகளில் பெண் வீட்டாரும் பையன் வீட்டாரும் செய்வது என்றும் இரண்டு பிரதிகள் எழுதப்படும். தாம்பாளத்தில் மலர், வெற்றிலை பாக்கு, மஞ்சள் முதலியன வைத்து, ஒப்பந்த நகலையும் வைத்து ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வார்கள்.

பிறகு சிற்றுண்டி நடைபெறும். பையன் வீட்டார் பெண் வீட்டாரிடம் சொல்லிக் கொண்டு செல்லும் பொழுது அவர்களைக் கௌரவிப்பதற்காக வெற்றிலை பாக்கு ரொக்கம் வைத்துக் கொடுப்பார்கள்.

பேசி முடித்துக் கொண்டபின் ஒரு நல்ல நாளில் கழுத்துருவுக்குப்பொன் கொடுக்கின்ற நிகழ்ச்சி நடைபெறும்.

கழுத்துருவிற்குப் பொன் கொடுத்தல்

"புலிப்பல் கோத்த புலம்பு மணத்தாலி
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகனே"

என்ற அகநானூற்றுப் பாடல்வரிகளால் தாலிகட்டும் பழக்கம் நீண்ட நெடுநாளைய வழக்கம் என்று தெரிய வருகிறது.

மணமகளுக்குச் செய்கின்ற அணிகலன்களில் தலையாயது கழுத்து உரு என்று சொல்லப்பெறுகின்ற பெரியதாலிதான்.

கழுத்து உரு மொத்தம் 34 உருப்படிகள் கொண்டதாக இருக்கும். இது இரட்டை வடமாக அமைக்கப்பட்டிருக்கும் நடுவில் செல்வச் செழிப்பிற்கும், மங்கலவாழ்விற்கும் உரிய தெய்வமாகிய மகாலட்சுமியின் உருவம் பொறித்த திருமாங்கல்யம் இருக்கும்.

புலிப்பாதங்கள் போன்ற ஐந்து உருப்படிகள் கழுத்து உருவில் உண்டு. இவற்றை ஏத்தனம் அல்லது ஏனாதி என்று அழைப்பார்கள்.

கழுத்துருவை அழகான முறையில் கோத்து அலங்கரிப்பதற்கான சரிமணியும் இடம் பெறும்.

கழுத்துருவின் உருப்படிகள் உருவி வந்துவிடாமல் இருப்பதற்காக கடைமணி கழுத்துருவின் இறுதியில் இடம் பெறும்.

இப்படி 31 உருப்படிகளைக் கோத்து திருமணத்தன்று அணிவார்கள்.

திருமணம் முடிந்த மறுநாள் அல்லது மணமகளுடைய கன்னித்தன்மை கழிந்த பிறகு மணமகன் வீட்டில் நல்ல நாளாகப் பார்த்து இந்தக் குச்சி, தும்பு, துவாளை ஆகிய மூன்று உருப்படிகளையும் மணமகன் வீட்டுப் பெரியவர்கள் கழுத்துருவில் கோத்து வைப்பார்கள்.

முகூர்த்தக்கால் ஊன்றுதல்

முகூர்த்தக்கால் ஊன்றும் நிகழ்ச்சி பெரும்பாலும் திருமணத்திற்கு ஒருவாரம் முன்னதாக மணமகன், மணமகள் ஆகிய இருவருடைய வீடுகளிலும் நடைபெறும்.

ஒரு நல்லநாளில், நல்ல நேரத்தில் கொட்டகை போடுபவர் ஒருவர் வந்து வீட்டின் நடுவாசலில் ஈசானிய மூலையில் மஞ்சள் தடவிய ஒரு மூங்கில் கழியின் முனையில் மாவிலைகட்டி ஊன்றிவைப்பார், பிறகு அதற்குத் தேங்காய் உடைத்து கற்பூர தீபம் காட்டுவர்.

ஈசானிய மூலைக்கு உரிய தெய்வம் ஈஸ்வரன் ஆகும். ஆகவே மணவாழ்வு சிறக்கவேண்டி ஈஸ்வரனை வேண்டிக் கொள்ளும் குறிப்பாக இது அமைந்துள்ளது.

முகூர்த்தக்கால் ஊன்றிய பிறகு துக்க நிகழ்ச்சிகளில் மணவீட்டார்கள் கலந்து கொள்ளமாட்டார்கள்.

மணம் சொல்லுதல்

மணமகன், மணமகள் ஆகிய இருவீட்டாரும் செய்ய வேண்டிய நிகழ்ச்சி இது.

மணமக்களின் தாய் தந்தை ஆகியவர்கள் தங்களுடைய பெற்றோர்களைத் திருமணத்திற்கு அழைப்பதுதான் இந்த நிகழ்ச்சியாகும்.

பெற்றோர்களுக்குத் தரவேண்டிய மரியாதையை இந்த நிகழ்ச்சி வலியுறுத்துகிறது.

வீட்டில் கோலம் போட்டு தடுக்குப் போட்டு வைத்திருப்பார்கள். மணமக்களின் தாய்தந்தையர் அந்தத் தடுக்கில் அமர்ந்து தன் குழந்தைக்கு இந்த நாளில் திருமணம் என்று சொல்லி. ''கல்யாணம் சொல்ல வேண்டும்'' என்று தங்கள் தங்கள் பெற்றோர்களை அழைப்பார்கள். அவர்களுடைய பெற்றோர்களும் இதனை ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாக

வெற்றிலைப் பாக்கும் ரூபாயும் அளிப்பார்கள். இதற்குத்தான் பாக்குப் பணம் என்று பெயர்.

இதுபோலவே மணமகளின் சகோதரி வீட்டிற்கும் தாயாருடைய தாயார் வீட்டிற்கும் சென்று இரண்டு தேங்காய் வெற்றிலைப்பாக்கு ரூபாய் முதலியவற்றை ஓலைக் கொட்டானில் போட்டுக்கொடுத்து ''கல்யாணம் சொல்ல வேண்டும்'' என்று அழைப்பார்கள். அவர்களும் பாக்கு பணம் கொடுப்பார்கள. இந்த நிகழ்ச்சி போலவே மணமகளின் அத்தை வீட்டிலும், ஆயாள் வீட்டிலும் நடக்கும்,

பிறகுதான் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் திருமண அழைப்பிதழ்களை அனுப்பிவைப்பார்கள்.

இதனைச் சிலப்பதிகாரத்தின் சீர்மிகு வரிகள் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன.

> ''யானை எருத்தத்து அணியிழையார் மேல்இரீஇ
> மாநகர்க்கு ஈந்தார் மணம்''

முளைப்பாலிகை

மணமகன் வீட்டில் முளைக்கும் திறனுள்ள நெல், உளுந்து, கடலை. கொள்ளு. எள். சாமை. தினை, துவரை பயிறு ஆகிய ஒன்பது வகைத் தானியங்களை மணநாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்பாக ஊறவைத்து, நீரை வடித்து சிகப்புத்துணியில் கட்டிவைத்து விடுவார்கள். அது மணநாள் அன்று நன்றாக முளைவிட்டு வளரும் நிலையில் இருக்கும்.

இதன் நோக்கம் மணமக்கள் வாழ்வு முளைவிட்டு வளரும் நிலையில் இருக்கும் நவதானியங்களைப்போல பல்கிப் பெருக வேண்டும் என்பதேயாகும். முளைப்பாலிகை என்பது மொளப்பாரி என்று வழங்குகிறது.

> ''விரிந்த பாலிகை முளைக்குட நிரையும்''
>
> —சிலப்பதிகாரம்

மணமகன் கால்விரல்களுக்கு வெள்ளி மோதிரம் அணிவித்தல் :

திருமணத்திற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்பாக மணமகனின் கால் விரல்களில் (இரண்டாவது விரல்கள்) வெள்ளியிலான மோதிரம் அணிவிப்பார்கள்.

இல்லற வாழ்வில் ஈடுபடும் முன்னர் இளமை வாழ்வில் இருப்பவன் அணிமணிகள் அணிவதில்லை.

மணமகனுக்கு அன்று அணிவிக்கப்பெறும் மோதிரம் திருமண வாழ்வில் அவனுக்குள்ள பொறுப்புக்களை நினைவுறுத்துகிறது.

திருமணத்தைக் கோவிலில் பதிவு செய்தல்

திருமணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் இரு வீட்டாரும் அவரவர்கள் சார்த்திருக்கின்ற கோயில்களுக்குத் தங்கள் பங்காளிகளில் ஒருவரை அனுப்பி மணமகள்/ மணமகன், கோயில், பிரிவு, ஊர், முகவரி, திருமணம் நடைபெறுகின்ற நாள், நேரம், இடம் முதலிய விபரங்களைக் கோயிலில் உள்ள பதிவேட்டில் குறித்து அதற்குரிய காணிக்கையைச் செலுத்திவர வேண்டும்.

இத்திருமணத்தை ஒப்புக்கொண்டு, கோயில் புள்ளியாகச் சேர்த்துக் கொண்டதற்கு அறிகுறியாகத் திருமணத்திற்கு முதல்நாள் இரண்டு கோயில்களிலிருந்தும் அந்தந்தக் கோயில்களின் பணியாட்கள் மூலம், மாலை, விபூதி, பிரசாதம் முதலியன பெண் வீட்டாரிடம் கொண்டுவந்து தருவார்கள்.

இவ்வாறு நகரக்கோயில்களிலிருந்து மாலை வந்தால்தான் அந்தத் திருமணம் நகரத்தார் சமூகத்தில் செல்லுபடியாகும்.

இரணிக்கோயிலாரும் பிள்ளையார்பட்டிக்கோயிலாரும் இளையாற்றங்குடிக் கோயிலிலிருந்து பிரிந்து வந்ததினால்

இவ்விருவரும் இளையாற்றங்குடிக் கோயிலில் பாக்கு தைத்த பின்னர் தான் தங்கள் தங்கள் கோயில்களில் பாக்கு வைக்க வேண்டும்.

இளையாற்றங்குடிக் கோயிலிருந்து இரணியூர்க் கோயிலாரும், பிள்ளையார்பட்டிக் கோயிலாரும் பிரிந்த காரணத்தால் அவர்கள் இருவரும் நெருங்கிய இரத்தக் கலப்புடையவர்களாக ஆகிவிடுவதால் இவர்களுக்குள் மணம் செய்து கொள்வதில்லை. ஆனால் இளையாற்றங்குடிக் கோயிலாரும் மாற்றூர்க் கோயிலாரும் தங்கள் கோயில் உட்பிரிவுகளுக்குள்ளேயே மணம் செய்து கொள்கின்றனர்.

மணமக்கள் இருவர் வீடுகளிலும் கூடி உள்ள உறவினர்கள் அனைவரும் தங்கள் மூதாதையர்களை வழிபடும் வகையில் சோறு ஆக்கிப் படைத்து பிறகு உண்பர். இதனைக் 'கூடி ஆக்கி உண்ணுதல்' என்று முன்னம் குறிப்பிடப்படும்.

மணை போடுதல்

மங்கலப் பெண்டிர்கள் சிலர் சேர்ந்து கொத்தனார் உதவியுடன் செங்கலைக் கொண்டு ஒரு மேடை அமைப்பார்கள். வீட்டில் உள்ள மணைகளை அதன்மேல் வைப்பார்கள். இந்த மணைகளில் அமர்ந்துதான் மணமக்கள் திருமண நிகழ்ச்சிகளைச் செய்து முடிப்பார்கள்.

மணமக்கள் இந்த மங்கலப் பெண்களைப் போல எல்லா நலன்களும் பெற்று வாழ வேண்டும் என்பதே அதன் நோக்கமாகும்.

அரசன் ஆணைக்கால் நடுதல்

''அரசாணிக்கால்'' என்று இன்று மருவி வழங்குகிறது. ஒரு மூங்கில் கழியில் கிளுவை மரக்கிளை, பாலைமரக்குச்சி, மாவிலை, அரசஇலை இவைகளைக் கட்டுவார்கள். ஒரு மேடையில் உள்ள பள்ளத்தில் பால்விட்டு பவளத்தைப் போட்டு இந்தக்காலை ஊன்றிவைப்பார்கள்.

அந்தக்காலத்தில் அரசன் ஆணைக்கு ஆட்பட்டு மணம் நிகழ்வதாக ஐதீகம், இன்றும் இந்த வழக்கம் மன்னர் பின்னோராகிய நகரத்தார் திருமணங்களில் தொடர்கிறது.

''கல்யாண வாயிலிலே காவணக் காலுக்குயர்ந்த
நம்பவளக் காலதனை நாட்டினோர்''
—மகாகவி பாடுவார் முத்தப்பர்

பவள வணிகம் செய்த நினைவு, உடலுக்கு வலிவு தரும் பால், எளிதில் கிளைவிட்டு வளரும் கிளுவை, எல்லாப் பருவங்களிலும் உலராமல் பால் சுரக்கும் பாலைக்குச்சி மங்கலம் சேர்க்கும் மாவிலை, நீண்டநாள் நிலைத்திருக்கும் அரசின் இலை என்று பலகருத்துக்களை நினைவுறுத்தக் கூடிய வகையில் இந்த அரசன் ஆணைக்கால் உருவாக்கப்படும்.

மாற்றுக்கட்டுதல்

மணமேடைக்கு மேலே சலவைத்தொழிலாளி தூய துணிகளால் இன்று விதானம் கட்டிச் செல்வதைக் குறிக்கும்.

''நீல விதானத்து நித்திலப் பூம்பந்தற்கீழ்''

என்று சிலப்பதிகாரம்—கோவலன் கண்ணகி திருமணம் நடைபெற்ற எழில் விதானத்தை விவரிக்கிறது.

கோல எழில் கூட்டும் கோலங்கள்

அரிவையர் அரிசி மாவினால் இடும் சித்திரக் கோலங்கள் வீடெங்கும் நிறைந்து மாணெழில் கூட்டி மனதைத் தொடும்.

திருவிளக்கேற்றுதல்

திருமணம் நடைபெறுகின்ற நாளில் உள் வீட்டில் திருவிளக்கு ஏற்றி வைப்பார்கள். மணமக்கள் வாழ்வில் ஒளி பெறவேண்டும் என்பதே இதன் தத்துவம். ''மனை விளக்குறுத்து'' என்று தமிழ்க் காப்பியம் தடயம் தருகின்றது.

பூரம் கழித்தல்

இது நாள் வரை இருந்த கன்னித் தன்மையை நீங்கி இல்லறத்திற்குரிய மங்கையாக மந்திரம் மூலம் ஆக்குவதாகும்.

மணப்பெண்ணை வைகறையில் நீராடச் செய்வார்கள். பிறகு சர மாலையை மணப்பெண்ணின் தாய் மணமகளின் கழுத்தில் அணிவிப்பார். வேப்பிலையை மணமகளின் உடலில் ஏழு உறுப்புகளில் வைப்பார்கள் (தலை, இருதோள்கள் இடுப்பின் இரண்டு பக்கங்கள், இரு பாதங்கள்) பிறகு ஒரு மரக்குச்சியினால் வேப்பிலையைத் தட்டி விடுவார்கள்.

புரோகிதர் விநாயகர் பூஜை, வர்ணகும்ப பூஜை செய்து பூரம் கழிப்பார். பிறகு மணமகள் மற்றொரு முறை நீராட வேண்டும்.

தும்பு பிடித்தல்

மணம் நிகழவிருக்கும் நடு வீட்டில் மங்கள விளக்கேற்றி எட்டுக் கயிறுகளைக் கோலக் கூட்டில் நனைந்து கோபுர உருவில் அறையின் வெளிச்சுவர், உள் வீட்டுச் சுவர், கதவு போன்றவைகளில் வரைவார்கள்.

இது இறைவனை நடு வீட்டில் எழுந்தருளச் செய்வதாகும்.

அழகு ஆலத்தி

மணமகன் மணம் புரிந்து கொள்ள தன் வீட்டில் இருந்து புறப்படும் பொழுது மணமகனுக்கு அப்பத்தாள் (தந்தையாரின் தாய்) மணமகனை நடுப் பத்தியில் முன் நிறுத்தி அழகு ஆலத்தி எடுத்து வழியனுப்பி வைப்பார்கள்.

மாப்பிள்ளை அழைப்பு

மணமகள் வீட்டார் ஒரு பெரிய தட்டில் மணமகனுக்கு அணிவிக்கின்ற உடைகள், மாலைகள், நகைகள் முதலியவை

களை எடுத்துக் கொண்டு மணமகன் தங்கி இருக்கும் இடத்திற்கு மேளம் முழங்கி சங்கம் ஒலிக்கச் செல்வர். மணமகள் வீட்டு உறவினர்கள் ஊர்வலமாகப் பின் வருவார்கள்.

பிறகு மணமகனுக்கு ஆடை அணிகளை அணிவித்து அருகில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு அழைத்துச் செல்வர். மணமகனை அழைத்து வரும் பொழுது அவனுடைய தாயார் ஒரு தாம்பாளத்தில் மணமகளுக்கு உள்ள ஆடை, மாலை, கழுத்து உரு, சிறு தாலி முதலியவைகளை எடுத்து வருவார்கள்.

பகவத்யானம்—காப்புக் கட்டுதல்

திருமண வாழ்வு சிறக்க இறைவனை எண்ணி வழிபடுதலே பகவத்யானம்.

மணமகனுக்கு முதலிலும், பிறகு மணமகளுக்கும் தனித் தனியே புரோகிதர் சங்கல்பம் செய்து வைத்து கணபதி பூஜை செய்வார்.

புரோகிதர் தாய்மாமனைக் கொண்டு வலது மணிக் கட்டில் ஒரு சிறு வெள்ளி நாணயத்தை சிகப்புத் துணியில் முடிந்து விரளி மஞ்சளையும் சேர்த்துக் கட்டிவிடச் செய்வார்.

அரிமணமிடுதல்

மணமக்களை நெல்லும், பூவும் எடுத்து நீரில் நனைத்து, பெரியவர்கள் வாழ்த்துதலை அரிமணமிடுதல் என்று

"நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நல்லொடு தயங்க"

—"அகநானூறு".

மணமகளுக்கு மணமகளின் தாயார் கொண்டு வந்த ஆடைகளை அணிவித்து மணமேடை மீது கிழக்கு முகமாக நிற்கச் செய்வார்கள். பின்னர் மணமகனை அழைத்து வந்து மணமகளுக்கு எதிரே நிற்கச் செய்வார்கள்.

மணமகளின் கைகள் இரண்டையும் ஏந்தச் செய்து அதில் பச்சரிசி, தேங்காய் முதலியவற்றைக் கொடுப்பார்கள்.

மணமகன் திருவருளை நினைவில் நிறுத்தி கோவிலிலிருந்து வந்துள்ள திருநீற்றைத் தான் பூசிக்கொண்டு, மணமகள் நெற்றியிலும் பூசவேண்டும். பிறகு கோவில் மாலையை மணமகள் கழுத்தில் அணிவிக்க வேண்டும்.

பெரியவர் ஒருவர் எடுத்துத் தருகின்ற கழுத்துருவை மணமகளின் கழுத்தில் அணிவித்து மூன்று முடிச்சுகள் போட வேண்டும். அப்பொழுது கெட்டி மேளம் வாசிப்பார்கள். பிறகு சிறு தாலியை அணிவிக்க வேண்டும்.

அதன் பின்னர் திருமாங்கல்யத்திலும் மூன்று முடிச்சுகளின் மேலும் சிறு தாலியிலும் மஞ்சள் தொட்டு வைத்து குங்குமம் இடவேண்டும்.

கழுத்து உரு—சிறுதாலி

கழுத்து உரு இரண்டு பாகங்களைக் கொண்டதாகும்.

மேல்பாகம் :	திருமாங்கல்யம்	— 1
	ஏத்தனம்	— 2
	உரு	— 10
	சரிமணி	— 2
கீழ்ப்பாகம் :	ஏத்தனம்	— 9
	உரு	— 9
	சரிமணி	— 2
	இரண்டு பாகங்களையும் இணைத்து நிற்கும் கடைமணி	— 2
	ஆக மொத்தம்	31

அதன் பிறகு மணமக்கள் இருவரும் மூன்று முறை மாலை மாற்றிக் கொள்ளவேண்டும்.

மூன்று முடிச்சு—விளக்கம்

தாலியினைக் கட்டுகையில் முடிச்சு மூன்று
தன்னிகரில் கணவனவன் போடுகிறான்
நூலிழையில் முடிவதிலே பொருளும் மூன்று
நோன்பாக உடலோடு பொருளும் ஆவி
சேலினது விழியாளைச் சேர்ந்ததென்று
செம்மையுடன் முடிகிறான் முடிச்சு மூன்று.

—பொற்கிழிக் கவிஞர் அரு. சோமசுந்தரம்

விழிப்புநிலை, தூக்கநிலை, கனவுநிலை இந்த மூன்றிலும் நீ என் மனைவி, நான் உன் கணவன்.

—காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஜயேந்திர சுவாமிகள்

இசைவு பிடிமானம்

திருமங்கல நாண் பூட்டியதும் மணமக்களின் தந்தையார் இருவரும் நடு வீட்டில் அமர்ந்து இசைவு பிடிமானப் பத்திரத்தில் கையொப்பமிடுவர்.

திருமாங்கல்யம் கட்டினால் மட்டும் கூட நகரத்தார் திருமணம் சட்டப்படியோ அல்லது சாஸ்திரப் படியோ முழுமை அடைவதில்லை. இந்த இசைவு பிடிமானத்தில் கையொப்பமிட்ட பின்னர் தான் நகரத்தார் திருமணம் செல்லுபடி ஆகும்.

இந்தப் பத்திரம் திருமணத்திற்கு முதல் நாளே தயார், செய்து வைத்து இருப்பார்கள்.

இதில் மணமகன் பெயர், மணமகன் தந்தை பெயர், மணமகள் பெயர், மணமகள் தந்தை பெயர் ஆகியவைகள் உரிய இடத்தில் குறிப்பிடும் வகையில் அச்சிடப்பட்ட படிவமாக இருக்கும்.

இதில் மேலும் நாடு கோயில் கோத்திரப் பிரிவு போன்றவைகளும் சரியான இடத்தில் குறிக்கப்படும். கொடுக்கப்படும் நகைகள், பாத்திரங்களும் தவறாமல் குறிக்கப்பட்டிருக்கும்.

உ

சிவமயம்

..............ஆண்டு.........மாதம்...........தேதி..................

....

....

....

பாணிக்கிரஹணம் பண்ணிக் கொண்டமைக்கு இவர்/அவர் பூஷணம் பூட்டும் பொன் ஒன்பது,[1] ஆறு கல்லெடை பொன் பதிமுக்கழஞ்சு,[2] இவர்/அவர் சீதனங் கொடுக்கும் பொன் இம்மாறு[3] இவ்வெடை பொன் ஆறு கழஞ்சு, வெண்கலம் தராப்பலம்[4] அறுபத்தொன்று. வெள்ளாட்டிக்குப்[5] பணம் முப்பது, சீராட்டுச் சக்கரம் அறுபத்தொன்று இவ்வகைப்படி செய்வோம். இவர்/அவர் நன்கொடை கொடுக்கும் பொன் ஐம்பது, மோதிரம் விராகனிடை மூன்று. இவர்/அவர் உகந்துடைமையாகக் கொடுக்கும் பொன் வளையல் ஏழு கழஞ்சு, இவ்வகைப்படி செய்வோம். இந்த நாள் இவரிடும்/அவரிடும் பொன் இவர்/அவர் சொற்படி தெரிசனை பதின்முக் கழஞ்சு இவ்வகைப்படி செய்வோம்.

இந்த இசை குடிமானத்தில் எழுதினேன்...............................

....

....

கையெழுத்து...

கையெழுத்து...

இதே மாதிரி அவரவர்கள் வழக்கப்படி தங்கள் கோயில், பிரிவு, பெயர் முதலியவைகளைக் கோடிட்ட இடத்தில் எழுதி முழுமை செய்வார்கள். இந்த சீர் முறைகள் இன்றைய நடை முறைக்கு ஒவ்வாததாக இருப்பினும் இதுவே நாம் தொன்று தொட்டு எழுதி வருகிற பத்திரத்தின் வாசகம். மணமகன் வீட்டுப் பத்திரத்தில் அவனுடைய தகப்பனார் முதலிலும், மணமகள் வீட்டுப் பத்திரத்தில் அவளுடைய தகப்பனார் முதலிலும் கையொப்பமிடுவர். கோயில், பிரிவு முதலியன பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன், இந்த இரண்டு கையொப்பமிட்ட பத்திரங்களும் மணமகள் தந்தை யாரிடமே பாதுகாப்பாக இருந்து வந்திருக்கிறது. இப்போது சில வீடுகளில் இப்படியும், சில இடங்களில் வீட்டுக்கொரு பத்திரமாகவும் வைத்துக் கொள்கின்றனர். இசைவு பிடிமானம் எழுதியவரும் இதில் சாட்சிக் கையெழுத்து இடவேண்டும்.

திருப்பூட்டிய சடங்கு

திருப்பூட்டி முடிந்ததும் தொடர்ந்து திருப்பூட்டிய சடங்கு நடைபெறும்.

ஒரு சடங்குத் தட்டில் ஏழு கிண்ணங்கள் இருக்கும். ஒன்றில் பிள்ளையாரும், வெற்றிலைபாக்கும் இருக்கும். மற்ற ஆறு கிண்ணங்களில் முறையே மஞ்சள், விபூதி, பச்சரிசி' உப்பு, புளி, பஞ்சு போன்றவைகள் இருக்கும்.

---

1 ஒன்பது மாற்றுள்ள ஆறு கல்லெடை கொண்ட பொன் (நாணயம்) பொன்-10 பணம். பணம் என்பது இரண்டு அணா.

2 1/6 அவுன்ஸ் 5/12 தோலா அல்லது ஒன்றேகாலே வீசம் வராகனெடை. பல்லவர் காலத்தில் செலாவணியில் இருந்தது.

3 இவ்விதம் அல்லது இங்ஙனம்.

4 எட்டுப் பங்கு செம்பு, ஐந்து பங்கு ஈயம் கொண்ட கலப்பு உலோகம்.

5 பணிப்பெண் அல்லது வேலைக்காரி.

ஒருபடி நிறைய நெல்நிரப்பி அதன்மேல் ஒரு கத்தரிக் காயை வைத்திருப்பார்கள். இதை நிறைநாழி என்று அழைப்பார்கள். ஒரு கொண்டிச் சொம்பில் நீர்நிறைத்து வைத்திருப்பார்கள்.

மணமகளை மணையின்மீது கிழக்குமுகமாக நிற்கவைத்து சடங்கு செய்பவர் பனைஓலைத் தடுக்குபோட்டு நின்று கொள்வார். சடங்குத் தட்டில் உள்ள விபூதியை எடுத்துத் தானும் பூசிக்கொண்டு பிறகு மணமகளுக்கும் பூசிவிடுவார். இவ்வாறு ஒவ்வொரு கிண்ணத்தையும் மூன்று மூன்று முறைகள் தொட்டு மொத்தம் 21 முறைகள் விபூதி பூசிக் கொண்டு மணமகளுக்கும் பூசி விடுவார்,

பிறகு நீர்நிறைந்த கொண்டிச் செம்பை வலது கரத்தில் எடுத்துக்கொண்டு மணமகள் கையில் வெற்றிலையைக் கொடுத்து தண்ணீரை அதன்மேல் சிறிது சிறிதாக ஊற்றி அந்த நீர் மணமகளின் பாதங்களில் விழுமாறு பார்த்துக் கொள்வார்கள். பிறகு மணமகள் இரு கைகளாலும் அந்த வெற்றிலையை நெற்றியில் வைத்து வணங்கச் சொல்வார்கள்.

வேவு

மணமகள் வாழப் புகுந்த இடத்தில் வளமுடன் வாழவும் தன் தாய் வீட்டிலிருந்து பொருட்கள் வரவில்லையே என்ற குறையினைப் போக்கவும் அனைத்து உணவுப் பொருட்களை யும் தாங்களாகவே விரும்பித் தலைச்சுமையாகவே கொண்டு வந்து கொடுப்பதுதான் வேவு.

ஆடிவேவு, கார்த்திகைவேவு, முதல்வருட வேவு, விளையாட்டுப் பெட்டி வேவு என்று பல திறத்ததாகும்.

தலைச்சீலையில் முடிதல் :

மணமகளின் தந்தை தன் மகளை மணமகன் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்போது வழிச் செலவுக்குக் கொடுக்கின்ற முதல் பணப்பரிசுதான் ''தலைச் சீலையில் முடிதல்''! ''தலைச் செலவிற்காக முடிதல்'' என்ற சொற்கள் மருவி இருக்கலாம்,

'மணமகளின் தந்தை ஒரு தொகையை மணமகனின் தலையில் வைப்பார். அதனை மாமன்காரர் எடுத்து மண மகன் தந்தையிடம் கொடுத்துவிடுவார். பின்னர் இந்தத் தொகை மணமகளுக்குக் கொடுக்கின்ற சீதனப் பணத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும்.

மாமப்பட்டு :

ஒரு பாத்திரத்தில் மஞ்சள், அரிசி, தேங்காய் போன்றவை களைப் போட்டு பட்டுத்துணியால் மூடி மணமக்களின் மாமன் முறையினர் பிடித்திருப்பார்கள்.

மணமக்கள் அதை ஒருவருக்கொருவர் மூன்று முறை மாற்றிக்கொள்வர். இந்தத் தருணத்தில் மணமகளின் தந்தை மணமகனுக்கு மோதிரம் அணிவிப்பார்.

மொய்எழுதுதல் :

மொய் என்றால் நெருங்கிய உறவினர்கள் என்று பொருள்.

மணவறை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கும் பொழுதே மணமகனின் பங்காளிகள் சிலர் தனித் தனியே அமர்ந்து கொண்டு ஒரு முக்காலியின்மீது பாத்திரம் வைத்துப் பால் ஊற்றி வெற்றிலையைக் கிள்ளிப் போடு வார்கள்.

பிறகு சங்கு ஊதி முதன்முதலில் மணமக்களின் தந்தைக்கு தந்தையின் பெயரை எழுதி மொய்ப்பணம் பெறுவார்கள். பிறகு உற்றார் உறவினர் நண்பர்கள் எல்லோரும் மொய் எழுதுவார்கள்.

மறுபடியும் சங்கு ஊதி மாமன்காரர்களிடம் 'மாமப் பணம்' பெறுவார்கள்,

கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல்

மணமக்கள் நடுவாசலில் வந்து நின்று கொண்டு பெற்றோர், உற்றோர், உறவினர் மற்றும் சான்றோர்களை விழுந்து வணங்கி வாழ்த்துப் பெறுவார்கள்.

சீராட்டுக் கொடுத்தல்

மகளுக்குத் தகப்பனாரும், அவருடைய சகோதரர்களும் தருகின்ற பணம்தான் சீராட்டு எனப்படும்.

மஞ்சள் நீராடுதல்

நகரச் சிவன்கோயில் வயிராவி ஒருவர் மணமகனுக்கு எண்ணெய் தேய்த்து விடுவார். மணமகனின் உறவினப் பெண் ஒருவர் மணமகளுக்கு எண்ணெய் தேய்த்து விடுவார். பிறகு மணமக்கள் நீராடி வந்ததும், மணமகனுக்கு மாமனார் புதுத்துணி கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொல்வார், இது போலவே மணமகளுக்கு மாமியார் புதுத்துணி கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொல்வார்.

பிறகு தண்ணீரில் மஞ்சளைக் கரைத்து மணமக்களின் தந்தையார், தாயார், சகோதரர் தங்கள் ஆடைகளின் நுனியை நனைத்துக் கொள்வார்கள்.

காப்புக்கழற்றி கால்மோதிரம் அணிதல்

மணமகனின் தாயார் மணமகளுக்குத் தன் கையில் அணிந்திருக்கும் காப்பைக் கழற்றி அணிவித்து கால்விரல் களில் வெள்ளி மோதிரம் அணிவார்கள். இதனை 'மிஞ்சி' என்றும் அழைப்பதுண்டு,

மாமியார் தன் மருமகளுக்கு நல்ல நாளில் தன் அணிகலன் களைக் கொடுத்து குடும்பப்பொறுப்பைக் கொடுக்கிறார் என்று பொருள்.

பகவத் யானத்தின் போது மணமக்கள் கைகளில் கட்டிய மஞ்சள் காப்பை அவிழ்த்து விடுவார்கள்,

நாணாளைச் சடங்கு

திருமணம் முடிந்து புகுந்த வீட்டுக்கு வருகின்ற மணமகள் எல்லாப் பேறுகளும் பெற்று மகிழ்வோடு வாழவேண்டும் என மாமியார் வாழ்த்துவதே இந்தச் சடங்கின் உட்பொருளாகும்.

பிள்ளை எடுக்கிக் கொடுத்தல்

வெள்ளியினால் செய்த ஒரு குழவியை ஒரு சிறுபட்டுத் துணியில் வைத்து மணமகள் ''தான்மகப்பேறு பெற்றுவிட்டதாகவும், அதனை வாழ்த்த வேண்டும்'' என்றும் தாயார், தந்தையார் மற்றும் பெரியவர்கள் கால்களில் விழுந்துவணங்கி ஆசி பெறுவதாகும்.

பெண் சொல்லிக் கொள்ளுதல்-குடி அழைப்பு

திருமணத்தன்று மாலையில் ஒரு நல்ல நாழிகையில் மணமகள் நடுவீட்டுக்குப் பக்கத்தில் உள்ள பத்தியில் விரித்திருக்கும் பாய் ஒன்றில் கிழக்கு முகமாக கையில் வெற்றிலை பாக்குடன் வந்து நிற்கவேண்டும்.

மணமகளின் பெற்றோர், சுற்றத்தார் ஒவ்வொருவராக வந்து அந்தப் பாயின்மீது நிற்க அவர்களிடம் வெற்றிலை பாக்கைக் கொடுத்து அவர்களின் காலில் விழுந்து வணங்கிச் 'சென்று வருகிறேன்' என்று சொல்லி வாங்கிக் கொள்ள வேண்டும்.

இதன் பிறகு மணமக்கள் இருவரும் நடுப்பத்தியில் உள்ள கோலத்திற்கு வந்து நிற்பார்கள்.

மணமகளுக்கு ஆயாள் வந்து ஸ்லேட் விளக்கு வைத்து அழகு ஆலாத்தி எடுத்து மணமக்கள் இருவருக்கும் திருநீறு இட்டு கட்டுச்சோறுடன் வழியனுப்பிவைப்பார்கள்.

உண்டியல் :

மணமகளின் தந்தை தன் மகளுக்குத் தருகின்ற சீதனப் பணத்திற்கு உண்டியல் எழுதி உடனே செல்வைத்துப் பணத்தைக் கொடுப்பதாகும். உண்டியல் என்பது பணம் கொடுக்கல் வாங்கலுக்காக ஏற்பட்ட அத்தாட்சி ஆகும். இதன் மாதிரி கீழே தரப்பட்டுள்ளது.

உண்டியல்

உ

சிவமயம்

.... ஆண்டு ....மாதம் ....தேதி (சரியான ஆங்கிலத் தேதி) .... (இன்ன ஊர்) .... (இன்னார் மகன்) .... (இன்னார்) பற்று.........(இன்ன ஊர்) ....(இன்னார் மகன் (அதாவது மணமகன்)க்கும் அவர் மனைவி......... (மணமகள்) வரவு நாளது தேதியில் திருமணம் செய்து கொண்டபோது நாலு நாள் கணக்குப் பார்த்து ஸ்ரீதனமாகக் கொடுத்தது ரூபாய் ..../- (ரூபாய் எழுத்தால்)யும் தலைச்சீலையில் முடிந்தது ரூபாய்............./-ம் பாக்குச் சுருளில் வைத்தது ரூபாய்........./-ம் ஈடு பொன்னுக்காக* தந்தது ரூபாய்....../-ம் ஆக ரூபாய்........./- (எழுத்தால்)யும் வருடம் ஒன்றுக்கு வட்டி ரூபாய்........./-ம் சேர்த்துக் கூடிய அசலும் வட்டியும் தந்து இதைச் செல்லுடன் வாபஸ் பெற்றுக் கொள்வேனாகவும்.

20 பைசா ரெவினியூஸ்டாம்பில்
மணமகளின் தந்தையின் கையொப்பம்

---

*(ஈடு பொன் என்பது மணமகன் வீட்டார் திருமாங்கல்யத்திற்காக தருகின்ற பணம்,)

உடனே அந்த உண்டியலின் பின்புறம்

இந்த உண்டியலில் கண்டபடி ரூ ..../-ம் நாளது தேதி வரை வட்டிக்காக ரூ ..... /-ம் ஆக ரூபாய் ..../-ம் பெற்றுக் கொண்டு இதில் செல் வைத்துக் கொடுத்துள்ளோம்.

மணமக்கள் இருவரின் கையொப்பம்

இப்படி உண்டியல் எழுதி, செல்வைத்து. அந்த உண்டியலையும் அதற்குண்டான ரொக்கத்தையும் ஒரு தாம்பாளத்தில் மலர், மஞ்சள், எலுமிச்சம்பழம். முதலியவற்றுடன் வைத்து, மணமக்களின் தந்தையார் பெரியவர்கள் முதலியவர்களிடம் மணமகன் கொடுத்து வணங்கிப் பெற்றுக் கொள்ளவேண்டும். பிறகு எல்லோரும் விருந்தளித்தபின், மணமகள் வீட்டார் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு செல்வார்கள். அப்படிச் செல்லும்போது மணமக்களை நீச்சோறு (நீர்ச் சோறு என்பது தான் நீச்சோறாக மருவிவிட்டது) சாப்பிட அதாவது முதல் வெளிக்கு மாமனார் வீட்டிற்கு முதன்முறையாக அழைத்துச் செல்வார்கள்.

திருமணத்தன்று மணமகள் வீட்டில் நீச்சோறு சாப்பிட்டு விட்டு மணமகன் வீட்டுக்குத் திரும்பியதும் அன்று நல்ல நாளாக இருப்பதால், பெரும்பாலும் அன்று இரவே மணமக்களைத் தனி அறையில் துயிலச் செய்வார்கள்.

இதுகாறும் சடங்குகளின் விளக்கங்களைக் கூறியிருந்த போதிலும் ஒரு திருமண நிகழ்ச்சியை வரிசைப் படுத்திக் கீழே தரப்பட்டிருக்கின்றது.

1. பேசி முடித்துக் கொள்ளுதல்
2. கழுத்துருவுக்குப் பொன் கொடுத்தல்
3. முகூர்த்தக் கால் ஊன்றுதல்
4. கல்யாணம் சொல்லுதல்
5. பாக்கு வைத்தல்
6. மணை போடுதல்

7. அரசன் ஆணைக்கால் ஊன்றுதல்
8, மாற்றுக் கட்டுதல்
9. பூரங்கழித்தல்
10, மாப்பிள்ளை அழைப்பு
11. பகவத் தியானம்
12. மணமக்களுக்குக் காப்புக் கட்டுதல்
13. திருப்பூட்டுதல்
14. திருப்பூட்டுகிற சடங்கு
15. கல்யாண வேவு
17. மணவறை
18. கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல்
19. சீராட்டுக் கொடுத்தல்
20. மொய் எழுதுதல்
21. மஞ்சள் நீராடுதல்
22. காப்புக் கழற்றிக் கால்மோதிரம் இடுதல்
23. நாணாளைச் சடங்கு
24. பால்பழம் சாப்பிடுதல்
25. பெண் சொல்லிக் கொள்ளுதல்
26. குடி அழைப்பு
27. பெண் அழைப்பு
28. பால்பானை வேவு
29. ஸ்ரீதன உண்டியல் கொடுத்தல்
30. நீச்சோறு சாப்பிடச் சென்று வருதல்
31. மணமகள் வீட்டிற்கு இரண்டாம் வெளி மூன்றாம் வெளி சென்று வருதல்,
32. மணமக்களின் தாய் மாமன் வீடுகளுக்குச் சென்று காய்ச்சி ஊற்றிக் கொண்டு வருதல்

காய்ச்சியூற்றிக் கொள்ளுதல் என்பது, ஒரு குடும்பத்தில் சிறப்பான நிகழ்ச்சி ஒன்று நிறைவேறியதை முன்னிட்டு இரு

குடும்பத்தாரையும் பாராட்டி அவரவர்களுடைய தாய்வழிப் பாட்டன் அல்லது மாமன் கொடுக்கின்ற விருந்துதான்.

திருமணச் சடங்குகளில், எந்தவிதமான மாற்றமும் இல்லையெனினும் சிற்சில சிறிய மாறுதல்கள் ஒவ்வொரு வட்டகைப் பழக்க வழக்கங்களைப் பொறுத்து மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முதல் இரவு முடிந்து மறுநாள்காலை மங்கலப் பெண்டிர்கள், மணமகளுக்குக் கட்டிய கழுத்துருவையும் குச்சி, தும்பு, துவாளை என்ற மூன்று உருப்படிகளையும் கோத்துவைத்து விடுவார்கள். இந்தக் குச்சி, தும்பு, துவாளை கழுத்துருவில் கோக்கப்பட்டுவிட்டால் அந்தப் பெண் கன்னித்தன்மை கழிந்துவிடுகிறாள் என்று பொருள்படும்.

வேறு வைத்தல் :

தன் மகனுக்குத் திருமணம் முடிந்து ஓரிரண்டு ஆண்டுகளில் அவனுடைய பெற்றோர்கள் ஒரு நல்ல நாள் பார்த்து, அவளையும் அவள் மனைவியையும் தனிக் குடித்தனம் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொடுப்பதே வேறு வைத்தல் என்பதாகும். தன் மகனுக்குக் குடும்பப் பொறுப்பும், தன் காலிலேயே நின்று தன் குடும்பத்தைக் கட்டிக் காக்க வேண்டும் என்ற தன்னம்பிக்கையும் ஏற்படுத்துகிறது இந்த வேறு வைத்தல் நிகழ்ச்சி. குறிப்பிட்ட அந்த நல்ல நாளில் பெண்ணின் தாய் வீட்டிலிருந்து எல்லாப் பொருள்களையும் கொண்டு வந்து கொடுப்பார்கள். பையன் வீட்டிலிருந்து சமையல் செய்து புழங்குவதற்கு உள்ள சாமான்களும், மூன்று பொதி நெல்லும் (அதாவது 150 படி) ஆண்டு ஒன்றுக்கொன்று ரூபாய் 150ம் கொடுப்பதுடன், உப்பு, புளி முதலிய தீஞ்சாமான்களும் கொடுப்பார்கள். அன்று அந்தப் பையன் வீட்டில் அவனுடைய பெற்றோர்கள், உறவினர்கள், மனைவியின் பெற்றோர்கள், உறவினர்கள் முதலியவர்களுக்கு

முதன் முதலாக விருந்து சமைத்துப் பராமரிக்கப்படும். சில வட்டகைகளில் வேறு வைத்த வேவு எடுக்கும் நிகழ்ச்சியும் நடைபெறுவதுண்டு. சிலப்பதிகார காலத்தில் கோவலன் கண்ணகி திருமணம் முடிந்தபின் அவர்களைத் தனிக் குடித்தனம் நடத்த ஏற்பாடு செய்த செய்தியும் இங்கு ஒப்பு நோக்க வேண்டும்.

சடங்கு கழித்தல்

ஒரு பெண் பூப்பெய்துதல் சமூக வாழ்க்கையில் ஒரு பெரிய நிகழ்ச்சியாகக் கொண்டாடப்பெறுகிறது. உறவினர் களும் நண்பர்களும் திரளாகக் கூடி அவளுக்கு நீராட்டி புத்தாடை அணிவித்து, அணிமணிகள் சூட்டி அவளுக்குச் சுவையும் சத்தும் நிறைந்த உணவும் அளிப்பார்கள். பின்னர் அந்தப் பெண்ணைத் தனி இடத்தில் இருக்கச் செய்வார்கள். 16 நாட்கள் கழிந்ததும் அவளுக்குள்ள தீட்டைக் கழிப்பதற்காக அன்று காலை அவள் குளித்ததும், அவளுடைய தாயாரோ அல்லது தந்தையோ, அவளுடைய தலை தோள்பட்டை 2, இடுப்பின் இரு பக்கங்கள், கைகள் 2 ஆகிய 7 இடங்களில் வேப்பிலையை வைத்து சோத்துமாறு அல்லது ஒரு குச்சியால் தட்டி விடுவார்கள். பின்னர் கண்ணேறு கழிவதற்காக ஆலத்தி எடுத்து மறுபடி குளிக்கச் செய்து புத்தாடை ஆபரணங்கள் அணிவித்து வீட்டுக்குள் அழைத்துக் கொள்வார் கள். இந்த நிகழ்ச்சியே நகரத்தார் சமூகத்தில், சடங்கு கழித்தல் என்று கொண்டாடப் பெறுகிறது.

மருந்து அல்லது தீர்த்தம் குடித்தல் :

முக்கியமாக எந்த இல்லத்திலும் முதல் குழந்தை பிறப்பது மிக்க மகிழ்ச்சிகரமான ஒன்று. கருவுற்ற பெண்கள் கடுமையான வெப்பத்தால் உடல் நலம் பாதிக்கப் பெறுவதைத் தவிர்ப்பதற்காக வாரத்தில் இரண்டு நாட்கள் எண்ணெய் நீராடுவர். பெண்கள் செவ்வாய்க்கிழமையும் வெள்ளிக்

கிழமையும்—ஆண்கள் புதன்கிழமையும், சனிக்கிழமையும் எண்ணெய் நீராடுவர். இதற்குக் காரணம் எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் நாள்கள் ஒய்வு நாளாக இருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக ஆண் பெண் சேர்க்கையிலிருந்து ஒய்வுபெறும் நாளாக இருக்க வேண்டும் என்பதே.

பெண் கருவுற்ற ஐந்தாவது மாதத்தில் அவரவர் வீட்டு வழக்கப்படி 5 மருந்து குடித்தல் அல்லது தீர்த்தம் குடித்தல் என்ற விழா நடைபெறும். ஒரு நல்ல நாளில் உறவினர்கள் எல்லோரும் கூடி

தலைசுருட்டி இலை
கோழியவரை இலை
வெடுகிளாச்சி இலை
பருத்தி இலை
அஞ்சலம்பிச்சி இலை.

இந்த ஐந்து பச்சை இலைகளையும் கொண்டுவந்து, சுத்தமாக ஆய்ந்து கழுவி இதனுடன் சிறு வெங்காயம், சீரகம் இரண்டும் சேர்த்து நீராகாரத்தில் கலந்து கருவுற்ற பெண் களைக் குடிக்கச் செய்வர். வேறு சிலர் தங்கள் குல தெய்வத்தின் கோயிலிலிருந்து தீர்த்தம் எடுத்து வந்து அதனைக் குடிக்கச் செய்வர். அன்று எல்லோருக்கும் நல்ல சுவையான விருந்து படைத்து மகிழ்வர், நகரத்தார் அல்லாத மற்ற இனத்தவர்கள் வளைகாப்பு என்றும் சீமந்தம் என்றும் கொண்டாடுவர். நகரத்தார்களில் பெரும் பகுதி யினர் கருவுற்ற பெண்ணையும் அவள் கணவனையும் அழைத்துக் கொண்டு இராமேசுதரம் சென்று அங்கு தீர்த்தம் ஆடி வழிபட்டு வருவதே வழக்கமாகக் கொண்டிருக் கிறார்கள்.

காதுகுத்தலும் முடி இறக்குதலும் :

குழந்தை பிறந்ததும் செய்யப்படும் முக்கியமான நிகழ்ச்சி களில் ஒன்று காது குத்துதல்.

குழந்தை பிறந்த 16 நாட்களுக்குள் ஒரு நல்ல நாளில் குழந்தையைக் குளிப்பாட்டி புத்தாடை உடுத்தி இரண்டு காதுகளிலும் துளையிட்டு (பொற்கொல்லரின் துணை கொண்டு) கடுக்கண் அணிவிப்பார்கள். இந்த நிகழ்ச்சியை ஒரு சாலத்தில் பெரிய விழாவாகவே கொண்டாடி வந்திருக்கிறார்கள். ஆயினும், இப்போதும் இந்த நிகழ்ச்சியை மிக எளிமையான முறையில் நடத்திக் கொள்கிறார்கள்.

நகரத்தார்கள் அவரவர்கள் வழிபடுகின்ற குலதெய்வக் கோயில்களுக்குச் சென்று குழந்தைக்குத் தலைமுடி சிரைத்து குளிப்பாட்டிப் புத்தாடை உடுத்தி, குலதெய்வத்திற்கு அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டு வருவதும் இவர்கள் பழக்க வழக்கங்களில் ஒன்றாக அமைந்துள்ளது.

சஷ்டியப்தபூர்த்தி (மணிவிழா)வும்
சதாபிஷேகமும் :

குழந்தை பிறக்கும்போது குவா, குவா என்ற சொல்லைச் சொல்லிக் கொண்டே பிறக்கிறான். (வடமொழியில் க்வா, க்வா என்பது குவா, குவா என்று மருவியது) க்வா என்பதற்கு எங்கே என்பது பொருள். குழந்தை தாயின் வயிற்றிலிருந்து விழுந்ததும் ''நற்கருமம் எங்கே நான் செய்யவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டே பிறக்கிறான்.

நற்கருமம் செய்பவர் பல நலங்களையும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் பல காலம் வாழ்வர்.

நிலையாத யாக்கையைக் கொண்டு நிலைத்த நற்காரியங்கள் செய்ய வேண்டுமல்லவா? அதற்கு வழி வகுத்தவர்கள் வானசாஸ்திர வல்லுநர்கள் பதினெண்மர் 1. சூரியன் 2. பிர்மா 3. வியாசர் 4. வசிஷ்டர் 4. அத்திரி 6. பராசரர் 7. காசியபர் 8. நாரதர் 9. காரிக்கியர் 10. மரீச்சி 11. மனு 12. ஆங்கிரசர் 13. உரோமசர் 14. பௌருடகுட்சர் 15. சியவனர் 16. யவனர் 17. பிருகு 18. சௌனகர்.

மனிதன் பிறந்த ஓராண்டில் அப்தபூர்த்தி சாந்தியும் (புதுமை) 7வது வருஷத்தல் உக்ரத சாந்தியும் 60வது வயதில் பீமரத சாந்தியும். எட்டு மாதங்கொண்ட 80வது வயதில் சதாபிஷேக சாந்தியும், ஆயிரம் பிறை பார்க்கும்போது சதாபிஷே ஸஹஸ்ரசந்திர தர்ஸன சாந்தியும், 100 வயதில் மகாபிஷேகமும் விதிமுறைகளோடு செய்து கொள்கின்றனர்.

எல்லா மனிதர்களுக்கும் 60 ஆண்டு முடிந்து 61வது ஆண்டு தொடக்கத்திலிருந்து காலன், யவனன், யமனன், ஸிமதூம்ரன் என்ற நான்கு வித துஷ்ட கிரஹங்களால் எந்தச் சமயத்திலும் அபமிருத்தியு தோஷங்கள் வரக் கூடுமென்றும் அதன் தோஷ நிவிருத்தியாக 60 வருஷத்துக்கும் 60 தேவதைகள் வைத்துப் பூஜித்து மஹா மிருத்தியுன் ஜயஹோமமும் செய்து கொண்டால் 61வது வயதிலிருந்து 120 வயது வரை நீண்ட ஆயுளோடு வாழ்வார்கள் என்று மறை நூல்கள் கூறுகின்றன.

புண்ணிய நதிகளின் நீரிலும் மண்ணிலும் தெய்வங்களை இருக்கச் செய்து தூய்மை பெறுவதே கும்பம் வைப்பதும் ஹோமம் செய்வதும் ஆகும். அதனால்தான் சௌனகரும் 4 தீய கிரஹங்களின் பிடியிலிருந்து விலகி, பல காலம் வாழ்வதற்கு நீர் நிரம்பிய கும்பத்திலேயே தெய்வங்களை ஆவாஹனம் செய்து அபிஷேகம் செய்து கொள்வது எனவும் நெருப்பிலேயே துஷ்டக் கிரஹங்களின் சக்திகளை எரித்து ஹோமம் செய்து கொண்டு ரட்சை தரித்துக் கொண்டு பல காலம் வாழ்வதற்கு எனவும் சாந்தி கர்மாவை வகுத்துத் தந்தார்.

திருமண நிகழ்ச்சிகளுக்கு முகூர்த்தக் கால் ஊன்றி மணை போடுவது போலவே இந்த நிகழ்ச்சிகளுக்கும் செய்து கொள்வார்கள். மணைக்கு முன்னதாக 63 குடங்கள் வைப்பதற்குத் தோதாக ஒரு மேடையும் அதற்கு முன்பாக சதுர வடிவம், எண்கோண வடிவம், வட்ட வடிவம் உள்ள 3

ஹோம குண்டங்களையும் கட்டி 63 குடங்கள் வைக்கின்ற மேடையை மலர்களால் அலங்கரித்துக் கொள்வர். மணி விழாவிற்கு முதல் நாள் மாலை மங்கள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாகச் சென்று ஊரில் உள்ள பிள்ளையார் கோயில் சென்று வழிபட்டு இல்லம் திரும்பி மணிவிழா நிகழ்ச்சிகளைத் தொடங்குவர். அன்று தம்பதிகள் மணையில் அமர்ந்தபடி உற்றார், உறவினர்கள், மக்கள், மருமக்கள், பேரன் பேத்தியர்க்கு புத்தாடைகள் வழங்குவர்.

ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தியில் கும்பம் வைக்க வேண்டிய விபரங்கள்.

மஹாமிருத்யுன்ஜயர்	1	கிருபாசாரியார்	1
விஷ்ணு	1	ஆயுள்தேவதை	1
மார்க்கண்டேயர்	1	பரணி	1
அக்கினி	1	ரோஹிணி	1
நிர்ருதி	1	திருவாதிரை	1
குபேரன்	1	பூசம்	1
சூரியன்	1	மகம்	1
அங்காரகன்	1	உத்திரம்	1
குரு	1	சித்திரை	1
சனி	1	விசாகம்	1
கேது	1	கேட்டை	1
மஹா பலி	1	பூராடம்	1
பிர்மா	1	திருவோணம்	1
ருத்ரன்	1	சதயம்	1
இந்திரன்	1	உத்தரட்டாதி	1
யமன்	1	அபிஜித்	1
வாயு	1	ஸப்தரிஷி	1
ஈசானன்	1	விபீஷணன்	1
சந்திரன்	1	பரசுராமர்	1
புதன்	1	அசுவதி	1
சுக்கிரன்	1	கார்த்திகை	1
ராகு	1	மிருகசீரிஷம்	1
அசுவத்தாமா	1	புனர்பூசம்	1
வியாஸர்	1	ஆயில்யம்	1
ஹனுமான்	1	பூரம்	1

ஹஸ்தம்	1	அவிட்டம்	1
சுவாதி	1	பூரட்டாதி	1
அனுஷம்	1	ரேவதி	1
மூலம்	1	விருஷதேவதை	1
உத்திராடம்	1	வருணன்	1

ஆக 60 கும்பம் தான் மகரிஷி சொல்லியிருக்கிறார். பின்னே வந்த மகான்கள் திருமூர்த்திகளுக்கும் சக்திகளாகிய துர்க்கா, லெக்ஷ்மி, சரஸ்வதி மூன்றையும் சேர்ந்து 63 கும்பங்கள் வைக்க வேண்டுமென்று வழி வகுத்தார்கள். கும்பங்களில் கங்கை, யமுனை, சரஸ்வதி. கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி, சமுத்திரதீர்த்தம், தாமிரபரணி, வைகை, புஷ்கரணி, சரவணப் பொய்கை முதலிய புண்யநதி தீர்த்தங்களை நிரப்பி மேற்படி தீர்த்தங்களின் மணல்கள். புற்றடிமண், பசுவின் குழம்பு மண், முதலியவைகளும் கும்பத்தில் சேர்த்து சுகந்தமான சாமான்களும் சேர்த்து ஆசார்ய முகமாவும் வேத விற்பன்னர்களைக் கொண்டும் பூஜிக்க வேண்டியது. என்றும், அந்தந்த தெய்வங்களுக்கு உரிய மந்திர ஜப பாராயணங்களையும் செய்ய வேண்டியது பன்னிரு திருமுறைப் பாராயணங்களையும் செய்தும் கும்ப ஸ்தாபனம் செய்து விதிப்படி பூஜிக்க வேண்டும் என்றும் வழி வகுத்தார்கள்.

நாற்கோண வடிவமுள்ள ஹோம குண்டத்தில் அரசம் சமித்துவும் பசுவநெய்யுங் கொண்டு ஆயுஷ்ய ஹோமம் செய்தும், எண்கோண குண்டத்தில் சிந்திக்கொடி பசுவநெய் கொண்டு மஹா மிருத்யுட்சய ஹோமமும் செய்தும் வட்ட வடிவமுள்ள குண்டத்தில் வெள்ளருக்கு, பொரசு, கருங்காலி, நாயுருவி, அரக, அத்தி, வன்னி, அருகம்புல், தர்ப்பை இந்த ஒன்பது சமித்துக்களும் பசுவநெய்யுங் கொண்டு நவக்கிரஹ ஹோமம் செய்தும் பூர்ணாஹுதி செய்தும் பிறகு பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து பந்து மித்ராள் புத்திரி. புதல்வர்களால்

கும்பம் அபிஷேகம் செய்து கொண்டும், பெரியோர்களிடத்தில் ஆசீர்வாதம் பெற்றும், தங்கள் மக்களுக்கு ஆசீர்வாதம் செய்ததும் மீண்டும் மணையில் அமர்ந்து கொண்டு அந்தணர் ஒருவருக்குத் திருமணம் செய்து வைத்த பிறகு, தன் துணைவிக்குத் திருப்பூட்டுவார்கள். அதன் பின்னர் சுற்றத்தாரோடு மங்கல வாத்தியம் முழங்க உள்ளூரில் உள்ள சிவன்கோயிலுக்குச் சென்று சிவதரிசனம் செய்து கொண்டு வருவார்கள்,

அது போலவே, 70வது வயதில் பீமரத சாந்தியும், எட்டு மாதங்கொண்ட 80வது வயதில் சதாபிஷேகமும், ஆயிரம் பிறை பார்க்கும் அதாவது 100 வயதில் மகாபிஷேகமும் இந்த முறைப்படியே செய்து கொள்வார்கள்.

சிறு தெய்வ வழிபாடு: நகரத்தார்கள் தெய்வ வழி பாட்டில் சிறந்தவர்களாகவும், கடவுளுக்குப் பயந்தவர்களாக வும் வாழ்ந்து வருகிறார்கள். ஆரியக் கடவுள்களைத் தவிர வேறு பல சிறு தெய்வங்களையும் பயபக்தியுடன் வழிபட்டு வருகிறார்கள். அவைகளில் முக்கியமானது ஐயனார், காளி, கருப்பர், பதினெட்டாம்படிக் கருப்பர் முதலிய சிறுதெய்வங் கள். நகரத்தார்கள் மேலேகுறிப்பிட்ட 9நகரக் கோயில்களைச் சார்ந்தவர்களாக இருந்தபோதிலும், அவர்கள்ஒவ்வொருவருக் கும், ஒவ்வொரு அய்யனார் கோயில் இருக்கும். பல ஏரிகள், கண்மாய்கள் ஆகியவற்றின் கரைகளில் அந்தந்த நீர் நிலை களின் பெயர்களைச் சார்ந்தே அய்யனார் கோயில் உண்டு. பெரும்பாலும் எல்லா நகரத்தார்களுக்கும் ஏதாவது ஒரு கிராமத்தில் இந்த அய்யனார் கோயில் இருந்து வரும். இந்த அய்யனார் கோயில்களுக்குத்தான் குழந்தைகள் பிறந்ததும் முடி இறக்கும் விழாக்களை நடத்தி வருகிறார்கள். இந்த அய்யனார் கோயிலில் காளி, கருப்பர், பதினெட்டாம்படிக் கருப்பர், முதலிய திருஉருவங்களை வைத்து வழிபட்டு வரு கின்றனர். ஐயனார் கோயில் முற்றத்தில் புரவி (மண்குதிரை) செய்து வைப்பதும் ஒருவகை பிரார்த்தனையாகக் கொண்டி

ருக்கின்றனர். நகரத்தார்கள் தங்கள் வீட்டில் நடத்துகின்ற நல்ல நிகழ்ச்சிகளுக்கு முன்னால் தங்கள் மூதாதையர்களை எண்ணி வழிபடும் வழக்கமும் உண்டு. இதற்குப் படைப்பு என்று பெயர். சிலர் இதை சைவப் படைப்பாகவும் சிலர் அசைவப் படைப்பாகவும் (ஆடு, கோழி, இறைச்சி முட்டை வைத்து) படைப்பதை வழக்கமாகக்கொண்டு இருக்கிறார்கள். இந்தப் படைப்பில் புதுத்துணிமணிகள் வைத்து பாச்சோறு (பச்சரிசி. கருப்பட்டி தேங்காய்கீற்று முதலியவைகளால் செய்யப் பெற்றது) பணியாரம், வாழைப்பழம் முதலியவை களோடு, கத்தரிக்காய், வாழைக்காய் குழம்பு வைத்து படைப்பில் செய்து வீட்டில் உள்ள அனைவரும் வழிபடு வார்கள்.

இங்ஙனம், அவரவர்கள் வீட்டில் சுப நிகழ்ச்சிகளுக்கு முன்னும் அல்லது ஏதாவது ஒரு காரியத்தை எண்ணி நேர்ந்து கொண்டதுமான படைப்புகள் படைத்துவந்த போதிலும் ஆடி மாதம், மாசி மாதங்களில் ஒரு பங்காளி இனத்தின் ஏழு ஊர் நகரத்தார்கள் கூடி ஏதாவது ஒரு ஊரில் இதற்கு என்று உள்ள படைப்பு வீட்டில் கூடிப்படைத்தும் வழிபடுவார்கள். இதனையே இவர்கள் ஏழு ஊர்ப்படைப்பு என்று சொல்லி வருகிறார்கள்.

ஒவ்வொரு வகைப் பங்காளிகளுக்கும் இத்தகைய ஏழு ஊர்ப்படைப்பு வீடுகள் ஒவ்வொரு ஊரிலும் அமைந்து இருப்பதைக் காணலாம்.

நகரத்தார் மக்களுடைய ஒவ்வொரு நாள் வாழ்வும் மதத் தோடு பின்னிப் பிணைந்ததாகவே இருக்கும். இறைவன் மீதுள்ள அச்சமும், முன்னோர் வழக்கத்தை மீறாமல் நடந்து கொண்டால்தான் வாழ்க்கை வசதியாயும் கவலையற்றதாயும் அமையும் என்ற நம்பிக்கையும் சேர்ந்து நகரத்தார்கள் பல விரதங்களைக் கையாண்டு வருகின்றார்கள்.

ஞாயிற்றுக் கிழமைகளில் சூரியநாராயணர் விரதமும், திங்கள் கிழமை சோமவார விரதமும், வெள்ளிக் கிழமை சுக்கிரவார விரதமும், சனிக்கிழமைகளில் சனீஸ்வர பகவானுக்கு விரதங்களும் இருந்து வருவார்கள்.

இதை தவிர, பிரதோஷ விரதமும், சதுர்த்தி, விரதமும், சஷ்டி விரதமும், கார்த்திகை விரதமும் முறையாகக் கைக்கொண்டு செய்து வருவார்கள்.

விரதங்களின் முழுநோக்கம் அலையும் மனம் ஒருங்கி இறைவன் திருவடியிலேயே தோய்ந்திருக்கச் செய்தல். மனம் ஒடுங்க வேண்டுமாயின், பொறிகள் ஐந்தும் காரியத்தில் ஈடுபடாமல் ஒடுங்கவேண்டும். பொறி ஒடுக்கம், உணவு ஒடுக்கத்தில்தான் அமைந்துள்ளது. ''அன்னம் அடங்க அஞ்சும் அடங்கும்'' என்பது பழமொழி. ஆதலால், உணவு நியமத்தை முதலாகக் கொண்டு உள்ளத்தை ஒடுக்குதலே விரதம் என்பது ஆகும். பொதுவாக விரதம் இருப்பவர்கள், காலையில் எழுந்து நீராடி இறைவனைத் துதி செய்து அன்று முழுதும் உணவு அருந்தாமல் தூய சிந்தனையோடு இறைவன் திருநாமத்தை இடையறாது சிந்தித்துக் கொண்டு இருக்கவேண்டும். மாலையில் விளக்கேற்றி இறைவனைத் துதித்து பால்பழம் அருந்தி விரதத்தைப் பூர்த்திசெய்து விடுவர்.

இவர்களுக்கென்று எத்தகைய விழாக்களும் குறிப்பாக இல்லையென்றாலும். பிற இனத்து மக்களுடன் கலந்து பழகியதாலும் ஆசிரியர்களுடைய ஆதிக்கத்தாலும், நவராத்திரி, தீபாவளி, கந்தர்சஷ்டி. திருப்பள்ளியெழுச்சி, வைகுண்ட ஏகாதசி, தைப்பூசம், பொங்கல் போன்ற விழாக்களை இவர்கள் கொண்டாடி வந்தபோதிலும், இவர்களுக்கென்று உரிமையான விழாவும் நோன்பும் இரண்டாகக் கருதப்படுகிறது.

1. கார்த்திகை தீபம்

மற்றொன்று

2. பிள்ளையார் நோன்பு

கார்த்திகை தீபம் : தொல்காப்பியர் காலத்தில் இருந்து தமிழ்நாட்டில் கார்த்திகைத் தீபத் திருநாள் கொண்டாடி வந்திருப்பதாக இலக்கியங்கள் மூலம் அறியப்படுகிறது. வீடுகள்தோறும் கிளிஞ்சல் சிட்டியை விளக்கேற்றிவைத்து அலங்கரித்திருப்பார்கள். கார்த்திகை மாதம் முழுவதும் விளக்கேற்றுபவர்களும் உண்டு. சிலர் பரணி கார்த்திகை ஆகிய இருநாட்களிலும் விளக்கேற்றி வைப்பார்கள். சொக்கப்பம் கொழுத்தியும் வெடிகளை வெடித்தும் சிறுவர் சிறுமியர் மகிழ்வார்கள், இந்த நாள் வேறு எல்லாத் தலங் களையும் விட, திருவண்ணாமலையில் மிகப் பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது.

திருவாரூரில் பிறத்தல்
சிதம்பரத்தை வழிபடல்
திருவண்ணாமலையை நினைத்தல்
காசியில் இறத்தல்

இந்த நான்கு பேறும் வீட்டைப் பெறுவதற்கு உறுதுணையாக இருக்கும் என்பது நகரத்தார்களின் நம்பிக்கை.

பிள்ளையார் நோன்பு :

விநாயக வணக்கம் ஒவ்வொரு செயலுக்கும் முன்னிலை யாக எல்லோராலும் மேற்கொள்ளப் பெறுவதுபோல. நகரத் தார்களாலும் மேற்கொள்ளப் பெறுமாயினும், சிறப்பாக ஆண்டுக்கு ஒருமுறை மார்கழி மாதத்துச் சுக்கிலபக்ஷ சஷ்டி நாளில், ''பிள்ளையார் நோன்பு'' என்னும் பெயரில் குடும்ப விரதமாக வழிபாட்டை நகரத்தார்கள் நிகழ்த்தி வருகிறார் கள். இவ்வழிபாடு எந்தக்காலத்தில் இவர்களால் மேற் கொள்ளப் பெற்றது என்று குறிப்பிட முடியாத பழைய காலத்திலிருந்து. நிகழ்ந்து வருகிறது. இவ்வழிபாட்டால் இவர்களுக்கு இறைவன் திருவருள் சித்திப்பது ஒருபுறம்இருக்க, ஏதாவது காரணம் பற்றிக் குடும்பத்தில் பிணக்குகள் ஏற்பட் டிருந்தால் அப்பிணக்குகள் தீர்ந்து ஒற்றுமை ஆவதற்கும், இது துணையாய் இருந்து வருகிறது. தமிழ் மக்கள் அனைவருக்கும்

பொங்கல் விழா எப்படி இன்றியமையாததோ அப்படியே, நகரத்தார்களுக்குப் பிள்ளையார் நோன்பு இன்றியமையா தனவாய் இருக்கின்றன.

புராணங்களில் பிள்ளையார் வழிபாட்டிற்குச் சிறந்தன வாக, ஆவணி மாதத்துப் பூர்வபக்ஷச்சதுர்த்தியும் மார்சழி மாதத்துப் பூர்வபக்ஷ சஷ்டியும் குறிக்கப் பெறுகின்றன. சஷ்டி திதியும் சதய நக்ஷத்திரமும் கொண்ட இந்நாளில் விநாயகர் கஜமுகா சூரசம்ஹாரம் செய்து அடியார்களைக் காத்த நாள் என்று கருதப்படுகிறது. இந்நாளில் வழிபாடு செய்வது இன்ப ஆக்கம், துன்பநீக்கம், இரண்டையும் பெறுவதற்கென்று போற்றப்படுகிறது.

நகரத்தார்கள் கொண்டாடும் பிள்ளையார் நோன்பு முறை. நோன்பு நாள் மாலையில், விநாயகப் பெருமானது திரு உருவத்தை வீட்டில் புனிதமான இடத்தில் எழுந்தருளி வித்து நிவேதனத்திற்காக எள், நெல் முதலியனவற்றாலான பொரிவகைகளும், பணியாரம், அப்பம் வகைகள் முதலியவை கள் ஆசாரத்துடன் தயாரித்து, நிவேதித்து ஆவாரம் பூவால் கொண்டு கட்டி சுவாமி திருமுன் வைத்து. ஆவாரம் பூவி னாலேயே அர்ச்சித்து, வேழமுகம் ஓதித் தோத்திரம் செய்து, இருபத்தொரு நூலிழைகள் கொண்ட திரியை வெல்லம் சேர்த்த அரிசிமா, திரட்டுப்பால், வாழைப்பழம் ஆகிய, மூன்றில் ஏதேனும் ஒன்றில் சேர்த்து பசுநெய் விளக்கில் ஏற்றி உட்கொண்டு நோன்பை நிறைவு செய்வது வழக்கமாக இருக்கிறது.

இந்த நோன்பு திருக்கார்த்திகை தொடங்கி சதய நக்ஷத்திரம் வரை உள்ள இருபத்தொரு நாளில் அமையும் சஷ்டியில் கொண்டாடப் பெறுவதால் அவ் இருபத்தொரு நாட்களை நினைவு கூரும் வகையில் அமைந்துள்ளது.

ஆவரம்பூவால் அருச்சிப்பதும், துன்பநீக்கத்தைச் செய்வதாகிய விநாயகப் பெருமானது. அங்குசத்தை, நினைவுபடுத்தும் வகையில் பூச்செண்டை அவர் திருமுன் வைப்பதும் விரதநாள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு இதழை நூலாக இருபத்தொரு இழைகளைத் திரியாக ஒன்றுகூட்டித் திருவிளக்கு ஏற்றுவதும் அந்த விளக்குக்கு ஆதாரமாக இனிப்புச் சுவைப் பொருள்களைக் கூட்டித் திருவருட் பிரசாதமாக உட்கொள்ளுவதும் இந்த நோன்புச் செயல்களில் அமைந்த தத்துவங்கள்

சுவீகாரம் (பிள்ளை கூட்டிக் கொள்ளுதல்)

ஊழ்வினை காரணமாகவோ அல்லது உடல்நிலை கோளாறு காரணமாகவோ, மக்கட்பேறு பெற முடியாதவர்கள் தாங்கள் சார்ந்திருக்கின்ற கோயிலில்— பிரிவிலுள்ள பையன் ஒருவனை தங்கள் வாரிசாகத் தத்து எடுத்துக் கொள்கிற வழக்கமும் நகரத்தார்களிடையே உண்டு, ஒரு நல்ல நாளில் ஒரு ஊரில் இருந்து உற்றார் உறவினர் சுற்றத்தாருடன் அந்தப் பையனைத் தங்கள் ஊருக்குச் சுவீகாரமாக அழைத்துவந்து, இயற்கையாகவே குழந்தை பிறந்தபோது நடத்துகின்ற புதுமையைப் போலவே, சுவீகாரப் புதுமையையும் நடத்தி வருகிறார்கள். திருமணங்களில் எழுதிக் கொள்ளுகிற திருமண உடன்பாட்டு ஒப்பந்தத்தைப்போல, (இசைவுபிடிமானம்), இந்தச் சுவீகாரம் செய்து கொள்ளும் போதும் ஒரு ஒப்பந்தம் எழுதி, அதில் பிள்ளை விடுகிறவர், பிள்ளை கூட்டிக் கொள்பவர் இருவரும் கையெழுத்துச் செய்து முறி ஒன்று எழுதிக் கொள்வார்கள். இதுவும், இசைவு பிடிமானத்தைப் போலவே. எந்த நீதி மன்றங்களிலும் செல்லுபடியாகத்தக்க பத்திரம் என்ற உரிமையைப் பெறும். இந்தப் பிள்ளை கூட்டிக் கொள்வதற்கு எழுதிக் கொள்ளும் மாதிரி முறியும் கீழே தரப்பட்டுள்ளது.

உ
சிவமயம்

ஆங்கிரச வருடம் ஆவணி மாதம் 17ந் தேதி கல்வாச நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான ராசநாராயணபுரத்தில் பிள்ளையார் பட்டியான திருவேட்பூருடையான் தேவகோட்டை சு.ப.ராம. சுப்பிரமணியன் செட்டி ராமசாமிக்கு, காரைக்குடி முரு. கு. முருகப்பன் செட்டியார் மகன் குமரப்பன் என்ற ராமசாமியை சுவீகார புத்திரனாகக் கூட்டிக் கொண்டதினாலே மேற்படி, சுந்தரேசனின் தேட்டு, ஆட்டு, நீட்டுப்பெட்டி, தெய்வ ஆதாயம், ஆஸ்தி பூஸ்தி சகலமும், மேற்படி மனைவி வள்ளி யம்மையின் ஸ்ரீதனம் சீர்முறை நகைப் பணம் நகை யாவற்றையும், மேற்படி குமரப்பன் அடைந்து அனுபவித்துக் கொள்கிறது. சண்முகநாதபுரம் வள்ளியப்ப செட்டி அருணாசலம் வகையறா தாய்மாமனாக இருந்து மாமசி சடங்கு செய்து வருகிறது. இப்படிக்கு நகரத்தார் சொல்ல இது எழுதியது, கல்வாச நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங்குடியான இராச நாராயண புரத்தில் பிள்ளையார்பட்டியான திருவேட் பூருடையான் சாமிநாதன் செட்டி செந்தில்நாதன்.

பிள்ளை கூட்டிக் கொள்பவர் கையெழுத்து
பிள்ளை விடுபவர் கையெழுத்து
பிள்ளை கூட்டிக் கொள்ளும் தாய்மாமன் கையெழுத்து
பிள்ளை பிறந்த இடத்து தாய்மாமன் கையெழுத்து

(மேலே கண்டிருப்பது மாதிரிக்காக எழுதியிருப்பதால் பிள்ளை கூட்டிக் கொள்ளும் ஒவ்வொரு கோயிலாகும். அந்தந்தக் கோயில் பிரிவுகளை இசை பிடிமானத்தில் உள்ளபடி வாசகத்தை எழுதி வருஷம் மாதம் தேதி ஊர் விலாசம் பெயர் களை மாற்றி எழுதிக் கொள்ள வேண்டியது).

குறிப்பு: ஆட்டு என்பது பூர்வீகச் சொத்துக்கள். தேட்டு என்பது தான் சொந்தமாய் சம்பாத்யம் செய்தது. நீட்டுப்பெட்டி என்பது முன்னோர்கள் சிலருக்குப் படைக்கும் பேழை.

ஆஸ்தி. பூஸ்தி, நகைகள், ரொக்கம், நிலங்கள் (அசையும் பொருள், அசையாப் பொருள்).

இறுதிச் சடங்கு: மண்ணில் பிறந்தவர்கள் எவரும் இறப்பது நிச்சயம். நகரத்தார் சமூகத்தில் இந்த இறுதிச் சடங்கு ஒவ்வொரு விதமாக அமைந்திருக்கிறது. உறவினர்களின் அன்பும், பாசமும், இறந்தபின் நடத்தப்படும் இறுதிச் சடங்கு முதலிய நேரங்களில் மிகவும் உச்சக் கட்டமான நிலையில் காணப்படும். இவற்றில் தாய்வழி, மனைவி வழி உறவினர்கள் செய்ய வேண்டிய பல கடமைகளும் உள்ளன. விதவைக்கு வெள்ளை ஆடை வழங்கும் உரிமையும், கடமையும், அவளுடைய தாய்வழி ஆடவனுக்குத்தான் உண்டு.

எப்பொழுதுமே, எதையும் அமங்கலமாகச் சொல்ல விரும்பாத நகரத்தார்கள்—ஒருவரின் மரணத்தை இறந்து விட்டார் என்று எழுதுவதில்லை. அதற்கு மாறாக சிவபதவி அடைந்து விட்டார் என்றோ அல்லது தற்கால வழக்கப்படி இயற்கை எய்தி விட்டார் என்றோ எழுதுவதுதான் வழக்கம்.

ஒருவர் இறந்துவிட்டால் அவர் இறந்தவுடன் இறைவனிடத்தில் இணைந்து விட்டதாகவே கருதி முதலில் நீராட்டித் திருநீறுபூசி, மாலையிட்டு தெற்குப் பக்கம் தலை வைத்துப் படுக்க வைப்பார்கள். பக்கத்தில் திருவிளக்கு ஏற்றி தேங்காய் உடைத்து வைப்பார்கள். கைகளை மடக்கிக் கட்டியும் கால் சட்டை விரல்கள் இரண்டையும் இணைத்துக் கட்டியும், வாயையும், துணியினால் கட்டி வைப்பார்கள்.

பிறகு, உற்றார் உறவினர்களுக்குத் தகவல் சொல்லி அனுப்புவார்கள். பறைக் கொட்டுக்குச் சொல்லி அனுப்பிக் கொட்டச் செய்வார்கள். ஒருவேளை அவ்வூரில் திருவிழாக்கள் ஏதேனும் நடந்து கொண்டிருந்தால் இந்தப் பறைக் கொட்டு கொட்டுவதில்லை. உறவினர்கள் எல்லாம் வந்ததும், இறந்தவரின் மகனிடமோ சகோதரர்களிடமோ துக்கம் விசாரிப்பார்கள். பாடை கட்ட வேண்டிய பொறுப்பு தோட்டிக்கே உரியது. ஆயினும், இப்பொழுது எல்லாம் ஒவ்வொரு ஊரிலும் சவ ஊர்தி வந்துவிட்டதால், இந்தப் பாடை கட்டும் பழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. உறவினர்கள் எல்லோரும் வந்ததும் மீண்டும் பிணத்தைக் குளிப்பாட்டி (அப்படிக் குளிப்பாட்டுவதற்கு முன்பு மக்கள், மருமக்கள், பேரன், பேத்தியர் அனைவரும் எண்ணெய் தொட்டு வைப்பார்கள்). இந்த நேரத்தில் இறந்தவரின் மகள் வீட்டு முற்றத்தில் ஒரு குந்தாணியில் (உரலில்) பச்சை நெல்லை வைத்து உலக்கையால் குற்றி அரிசி தயார் செய்கிறார்கள். இந்த அரிசியே சுடுகாட்டில் வாய்க்கரிசியாகப் போடப்படுகிறது. இந்த நிகழ்ச்சியைப் பச்சை குத்துதல் என்று நகரத்தார்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். வீட்டு முற்றத்தில் பந்தல்காலிட்டு அதற்கு நடுவே பாய் விரித்து அதில் பிணத்தைக் கிடத்துவார்கள். இறந்தவரின் மனைவியைப் பிணத்தின் தலைமாட்டில் உட்கார வைத்து மகள் முன் செல்ல, (ஒரு சருவச் சட்டியில் கோடித்துணி ஒன்றை வைத்துக் கொண்டு) தந்தை வழி உறவினர்கள், பங்காளிகள், எல்லோரும் அந்தப் பந்தல்காலை மூன்று முறை சுற்றிக் கீழே அமர்ந்து பிணத்தின் மீது கோடித் துணியை வைப்பார்கள். அதன் பின்னர், இறந்தவரின் மனைவி வழி பங்காளிகள் எல்லோரும் மனைவியின் சகோதரனிடத்தில் இதே போல் (சருவச் சட்டியில் கோடித் துணியை வைத்து) பந்தல்காலை மூன்று முறை சுற்றி வந்து

அமர்ந்து, பிணத்தின் மீது கோடித்துணியை வைப்பார்கள். இது இறந்தவரின் மனைவிக்கு தாய் வீட்டிலிருந்து வந்த கோடித்துணியாகக் கருதப்படும்.

பிறகு. பிணத்தை பங்காளிகள் சவ ஊர்தியில் வைத்து பறைக் கொட்டுடன் இறந்தவரின் மூத்த மகன் தீச்சட்டி ஏந்திச் செல்ல, சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்வார்கள். பிணத்தை பங்காளிகள் தூக்கிச் சென்றதும் பிணத்திற்காகப் பந்தல்காலில் விரித்திருந்த பாயை இறந்தவரின் மகள் சுருட்டி வைக்க வேண்டும். இதை பாய் சுருட்டும் சடங்கு என்று நகரத்தார்கள் நடத்தி வருகிறார்கள்.

பொதுவாக சுடுகாடு ஊரின் தென் திசையில்தான் இருக்கும். சிதையும், தெற்கு வடக்காகவே அமைந்திருக்கும். சவ ஊர்தியில் இருந்து பங்காளிகள் பிணத்தைத் தூக்கிக் கொண்டு, எரிகுழியை மூன்று முறை வலம் வந்து தலை தெற்குப் பக்கமும் கால்கள் வடக்குப் பக்கமும் இருக்கிறாற் போல், வைப்பார்கள். நாவிதனைக் கொண்டு இறந்தவனின் மூத்த மகனுக்குத் தலைவழித்துக் குளித்ததும், ஈர வேட்டியுடன் வந்து மயானக் காவலன் பிணத்தின் மீதுள்ள ஆடைகள் களைந்த பின், வராட்டி, சந்தனக் கட்டைகள் முதலியவற்றைப் பிணத்தின் மீது வைத்து மண்ணால் பூசிவிட்ட பின் கர்மம் செய்கின்றவன். நீர்ப் பானையை இடது தோளில் சுமந்து கொண்டு மயானக் காவலன் துணையோடு பிணத்தை மூன்று முறை வலம் வரவேண்டும். ஒவ்வொரு வலம் வரும் போது மயானக் காவலன், பானையில் ஓட்டை போட நீர் வழிந்து கொண்டே இருக்கும். மூன்று முறை வலம் வந்ததும், பிணத்தின் தலைமாட்டுப் பக்கம் போட்டு உடைத்துவிட வேண்டும். பின்னர், இறந்தவரின் மகன் உறவினர்கள் எல்லோரும் வாய்க்கரிசிபோட்ட பின், கர்மம் செய்கின்றவன் சிதைக்குத் தீ மூட்டவேண்டும்.

பிணத்தின் வாயில் போடப்படும் அரிசியே வாய்க்கரிசி எனச் சொல்கிறார்கள். சுடுகாட்டில் இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறபோது, இறந்தவர் வீட்டில் பந்தல் கால் களின் நடுவில் இறந்தவரின் மனைவியை அமரச் செய்து மங்கலப் பெண்டிர்கள், ஆண்பிள்ளைகள் யாரும் பார்க்காத வண்ணம் இரண்டு விதவைகள் அவரது தாலியைக் கழற்றி எதிரில் வைத்து இருக்கும் பால்சட்டியில் போட்ட பின்னர். இறந்தவரின் மனைவி குளித்து வெள்ளாடை அணிந்து திருவிளக்குக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்து கொள்வர். சுடுகாட்டில் இருந்து திரும்பி வந்த, இறந்தவரின் பிள்ளைகள் அனைவரும் இறந்தவரின் மனைவியிடம் வணங்கி விபூதி பெற்றுக் கொள்கிறார்கள்.

காடேத்தல் :

இது இரண்டாம் நாள் சடங்கு. இறந்தவருடைய மகன், மறுநாள் காலை பங்காளிகள் இருவருடன் சுடுகாட்டிற்குச் சென்று பிணம் எரிப்பவன் உதவியைக்கொண்டு பிணம் எரித்த இடத்தில் பால்விட்டு—இறந்தவரின் எலும்புத் துண்டுகளைக் கொஞ்சம் பொறுக்கி எடுத்து வீட்டிற்கு கொண்டு வந்து ஒரு டப்பாவில் வைத்து மூடித் தோட்டத்தின் ஒரு மூலையில் புதைத்து வைப்பார்கள். பின்னர் ஒருநாள் இந்த எலும்புத் துண்டுகளை (அஸ்தி) எடுத்துக்கொண்டு போய் ஒரு ஆற்றங் கரையிலோ, கடற்கரையிலோ விட்டுக் கரைத்து வருவார்கள். இறந்தவரின் பிணத்தை எரித்த இடத்தின் வெம்மை குறைந்து இறந்தவரின் ஆன்மா சாந்தி அடையவே இந்தப் பால் ஊற்றும் நிகழ்ச்சிகாடாற்றுதல் எனப் பெயர் பெற்றது. நகரத்தார்கள் இதனைச் சொல் வழக்கில் காடேத்தல் என்று குறிப்பிடு கிறார்கள்.

கல் எடுத்துப் புலால் ஊற்றுதல்

இது பழங்காலத்தில் இறந்தோர்க்கு அவர் நினைவாக ஒரு கல்லை எடுத்து அதில் அவர் பெயர், பெருமை முதலியன

குறித்து பலர் கண்ணில் படுமாறு நட்டுவைத்தனர். அது நினைவுக்கல் ஆகையால் நடுகல் எனப்பெயர் பெற்றது. இப்போது இறந்தோர்க்கு நினைவுச் சடங்காகச் செய்யும் கல் எடுத்தல் நடுகல் மரபின் மாற்ற நிலையாக ஆகி விட்டது.

இறந்தவர் உபதேசம் பெற்று இருந்தால் ஊருணிக்கரையிலும், உபதேசம் பெறாவிட்டால் வீட்டில் நீர்த்தாரை (தூப்பாய்)யின் முன்பு ஒரு செங்கல்லை வைத்து அதற்கு இறந்த நாள் அன்று செய்கின்ற கருமங்கள் அத்தனையும் செய்து எண்ணெய், சீயக்காய், மஞ்சள், பால், இளநீர் முதலியவற்றால் குளிப்பாட்டி தேங்காய் உடைத்துத் தீபம் காட்டி, ஊருணியிலேயே அந்தக் கல்லைப் போட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்புவர். இந்தச் சடங்கு பெரும்பாலும் ஐந்தாம்நாள் அல்லது ஏழாம் நாள் நடைபெறும். ஒருவாரம் துக்கம்காத்து அழுது அரற்றியதால் ஏற்பட்ட உடல் சூட்டைத் தணிப்பதற்காக அன்று உற்றார் உறவினர் எல்லோரும்கூடி புலால் உணவு அருந்துவர். இத்தப் புலால் உணவு உண்ணும் வழக்கம் இப்பொழுது நகரத்தார்களிடையே முற்றிலும் மறைந்து விட்டது என்று சொல்லலாம்.

சவண்டி

சபீண்டிகரம் என்ற வடமொழிச் சொல்லின் திரிபே சவண்டி என்று உருமாறியிருக்கிறது. இதற்குத் தீட்டுக் கழித்தல் என்று பெயர், பதினாறாம்நாள் வீட்டில் புரோகிதர் ஒருவரால் கணேஷஹோமம் செய்யப்பட்டு தீட்டுக் கழிப்பர். இதனால் உறவினர்கள் சகோதரிகள் முதலியவர்களின் தீட்டு நீங்குகிறது.

பழம், காய்கறி, அரிசி, தேங்காய் முதலிய பொருள்களை நார் பெட்டியில் நிரப்பி புரோகிதர்களுக்குக் கொடுப்பார்கள். ஏழை, எளிய வறிஞர் முதலியவர்களுக்குப் பொருட்களைத் தானமாகக் கொடுத்தும் பாவத்தைக் கழித்து கொள்வர். தந்தைக்குப் பிறகு நாங்களும் உங்களுக்கு செய்வோம் என்ற

கருத்தில் இறந்தவரின் பெண் குழந்தைகளுக்கு அரிசி, பழம், காய்கறி முதலியன கொடுத்து அனுப்புவார்கள், அன்று பெண் குழந்தைகள் விடை பெற்றுச் செல்வார்கள்.

பிற செய்திகளும் நிகழ்ச்சிகளும்

இதுகாறும் கூறியவை ஒரு ஆண் இறந்தபோது செய்யக் கூடிய நிகழ்ச்சிகள் திருமணமான ஒரு பெண் இறந்தால், அந்தப் பிணத்தை பந்தக்காலிட்டு மகன், பங்காளிகள் முதலில் சுற்றிவந்ததும், சகோதரனும், தாய் வீட்டுப் பங்காளி களும் சுற்றி வருவர். சுற்றி வந்ததும் இடுகாட்டிற்குப் பிணத்தை எடுத்துச் செல்வர். இதில் தாலி வாங்கும் நிகழ்ச்சி யைத் தவிர மற்ற எல்லா நிகழ்ச்சிகளும் நடைபெறும். சிறு குழந்தைகள், வயதுக்கு வராத பெண்குழந்தைகள், ஆண் குழந்தைகளின் பிணங்களைப் புதைப்பதும் மற்றவர்களை எரிப்பதும் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

இறந்துபோன நாள் நல்ல நாளாக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது நகரத்தார்களின் இயல்பு. திருவாதிரை, ஏகாதசி முதலிய நாட்களில் உயிர் நீப்பது. உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. சுடுகாடு தென்கிழக்கு மூலையில் அமைந் திருக்கும் என்பது மரபு வடகிழக்கு ஈசானிய மூலை என்றும், தென்கிழக்கு உப்பு மூலை என்றும், தென்மேற்கு கன்னிமூலை என்றும் வடமேற்கு வரயு மூலை என்றும் வல்லுநர்கள் வகுத்து வைத்த ஒன்று, உப்பு மூலையில் சுடுகாடும், வாயு மூலையில் ஆலயமும் அமைய வேண்டும் என்பது சம்பிரதாயம்.

இறப்பு என்பது வருத்தத்தைத்தரும் செய்தி எனவே, ஊரில் உள்ளவர்களை அழைக்கும் வழக்கம் கிடையாது, தப்புக் கொட்டுவதால் அந்த ஒலிகேட்டு, ஊரில் யாரோ ஒருவர் இறந்து விட்டார் என்பதை அவ்வூர் மக்கள் உணர்ந்து, அறிந்து கொண்டு இறந்த வீட்டிற்குத் துக்கம் விசாரிக்கச் செல்லுகிறார்கள்.

ஒருவரின் சாவை ஊர்மக்களுக்கு அறிவிக்கும் பொருட்டே கொட்டு, தப்பு, சங்கு சேகண்டி முதலியன பயன்படுத்தப்படுகின்றன. இறந்தவரின் உடல் அடக்கம் செய்வது அல்லது எரிப்பது முதலிய சடங்குகளைக் குளிகை காலத்தில் செய்வதையும் இரவு 11 மணிக்கு மேல் காலை 4 மணி வரை பிணத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்வதையும் நகரத்தார் சமூகத்தில் காண முடிகிறது.

ஈமக்கிரியைச் சடங்குகளில் கலந்து கொள்ள வருபவர்கள் இறந்தவர் வீட்டின் முன்பு இருவர் கையேந்தி நிற்க, அவர்கள் இவர்களின் கைகளைத் தொட்டு ஆறுதல்கூறி உள்ளே சென்று துக்கம் விசாரிப்பர். இதனை நகரத்தார்கள் கை கோர்த்தல் என்று கூறுகிறார்கள்.

அவிட்டம் முதல் ரேவதி நட்சத்திரம் வரை உள்ள நட்சத்திரங்களில் உயிர் நீத்தவர்களை பாதத்தில் இறந்த தாகச் சொல்வதுண்டு. இதனால், 'இறந்தவரின் குடும்பத்தில் எஞ்சியிருப்பவர்களுக்கு கெடுதல்கள் நேரலாம் என்பது நகரத்தார்களின் நம்பிக்கை இதற்காகச் சில பரிகாரங்களும் செய்வதுண்டு.

சனிக்கிழமையன்று ஒருவர் இறந்தால் விரைவில் அதே குடும்பத்தில் வேறு ஒரு சாவு ஏற்படும் என்றும் நகரத்தார்கள் நம்புவதால், இறந்தவரின் பிணத்தைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும்போது பாடையில் ஒரு கோழியையோ அல்லது ஒரு தேங்காயையோ கட்டி அனுப்புவார்கள். "சனிப் பிணம் தனிப்போகாது" என்ற பழமொழியை இவர்கள் நம்புவதாலேயே இத்தகைய வழக்கத்தைக் கைக் கொண்டிருக் கிறார்கள்.

சிலப்பதிகாரத்தை அடியொற்றி இருக்கின்ற நகரத்தார் கள், கண்ணகியின் துக்க மரபை அவர்களும் பின்பற்றி வந்திருக்கிறார்கள் என்று அறிய முடிகிறது. கண்ணகியைப்

போலவே, பதினான்கு நாட்கள் துக்கம் காத்து 15ஆம் நாள் கல் எடுத்து 16ஆம் நாள் சவண்டி கொடுத்து (தீட்டுக்கழித்து) வந்த நகரத்தார்கள் இப்பொழுது காலத்தின் மாறுபாட்டாலும், பொருளாதாரச் சூழ்நிலைகாரணமாகவும், 5 அல்லது 7 நாட்களுக்கு மட்டுமே துக்கம்காப்பது என்கின்ற முறையை நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

சுடுவோர்; இடுவோர், தொடுகுழிப் படுப்போர், தாழ்வையினடைப்போர், தாழியில் கவிழ்ப்போர் என மணிமேகலைப் பாடல்கள் மூலம் ஐவகை அடக்கங்களில் விளக்கங்கள் இருந்த போதிலும், நகரத்தார்கள் எரிப்பதையே வழக்கமாகக் கைக் கொண்டு இருக்கிறார்கள்.

ஐந்து, ஏழு, அல்லது பதினாறு நாட்கள் துக்கம் காத்த பின்னர், இறந்தவரின் மகன் தன் மாமனார் வீட்டிற்கோ அல்லது தாய் வழிப் பாட்டன் வீட்டிற்கோ சென்று காய்ச்சியூற்றிக் கொண்டு வருவது நகரத்தார்களிடையே ஒரு வழக்கமாகி இருக்கிறது. இந்தக் காய்ச்சியூற்றுதல் என்பது துக்கம் காத்தவருக்கு ஆறுதல் சொல்லுவதற்காகவே அமையப் பெற்ற ஒரு நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

நகரத்தார் பெருமக்கள் தாங்கள் வாணிகம் கருதிச் செல்கின்ற பல நாடுகளிலும் மிகக்குறுகிய காலத்தில் அந்தந்த வட்டார மொழிகளில் தேர்ச்சி பெற்றுவிடுவர். இருப்பினும் இவர்களுக் கென்றே சில சொற்கள் தமிழ் மொழியில் வழங்கிவருகிறது. அவைகள் பெரும்பாலும் தமிழ்ச் சொற்களின் திரிபாகவும் பிறமொழிச் சொற்களின் திரிபாகவும் இருக்கும். அகராதியிலோ அல்லது கலைக்களஞ்சியத்திலோ கீழ்க்காணும் சில சொற்களுக்கு பொருள் தேடினால் அகப்பட மாட்டாது. எனினும் அவர்களுக்குள்ளேயே இந்தச் சொற்கள் கையாளப்படும் போது, சாதாரண சிறு குழந்தை கூடப் புரிந்துகொண்டுவிடும், பல சொற்கள் இவர்களுடைய பேச்சில் வழங்கப் பெற்று வந்தாலும், முக்கியமான சில

செட்டிநாட்டு வட்டார வழக்குச் சொற்களும் அவற்றிற் கான சரியான பொருள்களும் கீழே தரப்பெற்றிருக்கின்றன :

செட்டிநாட்டு வட்டார வழக்குச் சொற்கள்

அகஸ்மாத்து	—	தற்செயல், திடீரென்று
அங்கனே	—	அந்த இடத்தில்
அங்கிட்டு	—	அங்கு, அந்தப்பக்கம், அவ்விடம்
அசப்பில்	—	ஒரு கோணத்தில்
அடசல்	—	பொருள் நெருக்கமுள்ள
அடங்கி	—	ஒதுங்கி, விலகி
அடாவிடி	—	கொடுஞ்செயல்
அடிக்கட்டை	—	நகல், Counterfoil
அட்டணக்கால்	—	கால்மேல் கால் மடித்திடுதல்
அண்டிமேன்	—	பணம் கடனாகக் கொடுப்பதற்கு எழுதி வாங்குகிற சீட்டு On Demand
அண்ணமுண்டி	—	அண்ணனின் பெண்டிர், அண்ணனின் மனைவி
அத்தருதி	—	அற்றறுதி என்பதன் திரிபு, ஆகையால்
அப்பச்சி	—	அப்பன்+அச்சு=அப்பச்சு, அப்பச்சி என்று மருவியது, தந்தை
அம்மான்	—	தாயுடன் பிறந்தவன்
அம்மாமுன்டி	—	அம்மான் பெண்டிர்
அம்புட்டுக்கிட்டான்	—	அகப்பட்டுக் கொண்டான்
அம்புட்டும்	—	அவ்வளவும்
அம்புட்டுத்தான்	—	அவ்வளவுதான்
அசத்து	—	மறந்து
அரசாளுவான்	—	அரசு ஆள்வான்
அவலச்சமத்து	—	போலிச் சாமர்த்தியம்

அவலை சவலை	—	அடுத்தடுத்துப் பிறக்கும் பச்சைக் குழந்தைகள்
அவுட்டா	—	ஒருவகையான பொய்வதந்தி
அலமாரி	—	நிலைப்பேழை
ஆகச்சே	—	ஆகச்செய்தே என்பதன் திரிபு ஆகையால்
ஆச்சி	—	தமக்கை, வயதான நகரத்தார் பெண்களைப் பொதுவாகக் குறிப்பிடும் ஒருசொல் ஆய் ச்சியர் என்பதன் குறுக்கம்
ஆத்தாடி	—	ஆச்சரியக்குறிப்பு
ஆத்தா(ள்)	—	அகத்தாள், தாய்
ஆமக்கன்	—	ஆண்மகன், கணவன்
ஆவிச்சுக் கிட்டான்	—	அபகரித்துக் கொண்டான், கவர்ந்து கொண்டான்
ஆலாத்தி	—	ஆராத்தி ஒலிகாட்டி வழிபடல்
இங்கிட்டு	—	இங்கு இட்டு, இந்தப்பக்கம்
இஞ்சே	—	இன்செய் என்பதன் விரித்தல்
இம்புட்டு	—	இவ்வளவு
இவுக	—	இவர்கள், தனக்கு முன் இருப்ப வர்களைச் சுட்டிச் சொல்லும் ஒரு சொல்
ஈரட்டு	—	இரண்டு ஒட்டு ஈரொட்டு-உறுதி யின்மை,
ஈரங்கி	—	Hearing என்ற ஆங்கிலச் சொல் லின் மரூஉ; வாய்தா வழக்கு மன்றங்களில் உபயோகப் படுத்தக்கூடிய ஒரு சொல்
ஈருவலி	—	மரத்தாலான ஒரு பேன்வாரும் கருவி
உங்கிட்ட	—	உன்வசம்

உதுத்தபய	—	மானம், வெட்கம் முதலிய வற்றை விலக்கிவிட்டவன்
உண்டன	—	நிரம்ப, அதிகமான
உப்புக்கண்டம்	—	உப்புச் சேர்த்துக் காயவைத்த ஆட்டு இறைச்சித் துண்டம்
ஊக்காலி	—	ஊர்க்காலி
ஊத்தம்	—	வீக்கம்
ஊரா வீடு	—	அயலார் வீடு
எக்குத்தப்பு	—	எதிர்பாராத விதமாக
எசகேடு	—	இசைவு கேடு என்பதன் திரிபு காரியத் தவறு
எனத்துட்டி	—	வராக்கடன் (Bad Debts)
எளவு	—	மரணம், இழத்தல் என்பதன் திரிபு
ஏமஞ்சாமம்	—	இரவு எந்த நேரத்திலும்
ஏப்பசாப்பை	—	எளிதில் ஏமாறக்கூடியவர்
ஐய்த்தியாண்டி	—	அத்தை பெண் (உறவுச்சொல்)
ஐந்துகை	—	முதல், வரவு, செலவு, இருப்பு, ஆதாயம் என்ற ஐந்துதொகை களைப் குறிப்பிடுகின்ற கணக்குச் சீட்டு (Balance Sheet)
ஒக்கிடுதல்	—	ஒக்க இடுதல், ஒழுங்குபடுத்துதல்
ஒட்டுக்க	—	எல்லாரும், எல்லாம், அவ்வளவும்
ஒடவொத்தவன்	—	உடன் ஒத்தவன். தன்வயதிற்கு ஒப்பானவன்
ஒப்புக்கு	—	மனம் இல்லாமல், பேருக்கு
ஒப்பேத்து	—	எப்படியாவது ஒருகாரியத்தைச் செய்தல்
ஒரண்டை	—	வம்பு
ஒள்ளத்தி	—	ஒள் அத்து—கொஞ்சம்
கசமுசா	—	ஒழுங்கில்லாமல்

கச்சாத்து	—	நிலவரி முதலிய கணக்கு
கச்சடா	—	கீழ்த்தரமான
கடவு	—	சந்து அல்லது வாசல்
கடகம்	—	பனைநாரால் பின்னப்பட்ட பெரிய பெட்டி
கடகால்	—	வாளி
கடுதாசி	—	காகிதம்
கட்டவிளக்குமாறு	—	தேய்ந்து சிறிதாய்ப்போன விளக்குமாறு
கட்டுத்துறை	—	மாடுகட்டும் இடம்
கண்டாங்கி	—	சேலை
கண்டங்கண்டமா	—	பகுதி பகுதியாக
கண்றாவி	—	பார்க்கச் சகிக்காதது
கம்சு	—	முழுக்கைச் சட்டை
கருக்கடை	—	கண்ணுங் கருத்துமாக
களவாணி	—	களவை ஆள்பவன்—திருடன்
கழுசடை	—	கீழ்த்தரமான
கழுத்திரு	—	கழுத்துஉரு, திருமணத்தில் கட்டப்பெறும் பெரிய தாலி
கரிசனை	—	அக்கறை
கல்லுளிமங்கன்	—	கூர்மையான கல்லாலும், உளியாலும் உடம்பில் காயங்கள் ஏற்படுத்தினாலும் உண்மை சொல்லாத ஒருவனைக் குறிக்கும் விளிச்சொல்
காளாஞ்சி	—	தேங்காய்மூடி, வெத்திலை, பாக்கு பழம் முதலியன
காலக்கிரகம்	—	தலைவிதி
கிரகம்பிடிச்சவன்	—	சனிக்கிரகம் பிடித்தவன் 'சனி' என்ற சொல்லை உபயோகப்

		படுத்தக் கூடாததால், சனி என்ற சொல்லை ஒதுக்கி உச்சரிக்கும் சொல்.
கிளியஞ்சட்டி	—	மண்ணாலான சிறிய அகல் விளக்கு
குசும்பு	—	குறும்பு
குதாவிடை	—	நட்டம்
குட்டி	—	சிறு வேலைக்காரப் பெண்
குறளி	—	பொய்
கும்பா	—	உணவிட்டு உண்ணும் பாத்திரம்
குறிச்சி	—	மரத்தாலான சாய்மானப் பலகை
கூதரை	—	கூறு கெட்டவன், வழி தெரியா தவன்
கெசவாலு	—	நீளமான வாலையுடையவன், அதிகமாகக் குறும்பு செய்ப வனைக் குறிப்பிடும் ஒரு சொல்.
கேதம்	—	மரணம் சம்பவித்தல்
கைமாத்து	—	கைமாற்று-வாய் மொழியாகக் கடன் பெறுதல்.
கொசுறு	—	உதிரி
கொசுவம்	—	பெண்கள் சேலை கட்டுவதில் அழகுக்காக வைக்கும் மடிப்பு
கொட்டான்	—	பனைநாரால் செய்யப்பெற்ற சிறிய பெட்டி
கொழுமோர்	—	திருஷ்டி கழிப்பதற்காக உபயோகப்படுத்தும் சூடுபடுத்திய மோர்.
கோக்காலி	—	மரத்தாலான உயரமான நாற்காலி
கோக்கு மாக்கு	—	ஒன்று கிடக்க ஒன்று செய்தல், முறைகேடாய்ச் செய்தல்

கோசா	—	அயல் நாடுகளில் வாரிசுக்காக எடுக்கப்படும் சான்றிதழ்.
சகட்டுமேனி	—	ஒட்டு மொத்தமாய்
சகலை	—	ஒரே குடும்பத்தில் பெண் கொண்ட இருவரின் உறவு முறை
சஞ்சாயம்	—	குத்தகைக்கு விடாமல் தாமே நிர்வாகம் செய்வது
சத்தகம்	—	சிறு கத்தி வகை
சமஞ்சிட்டாள்	—	பூப்பெய்திவிட்டாள், பருவம் அடைந்துவிட்டாள்
சலுக்கி	—	சல்லடை
சல்லி	—	ஒரு பணம், புதுக்கோட்டை மாவட்டத்தில் சேதுபதி காலத்தில் செலாவணியான நாணயம்
சல்லிசு	—	சல்லி என்ற நாணயத்தால் வாங்க முடிவது, எளிது
சவுங்கத்தனம்	—	சுறுசுறுப்பு இல்லாத தன்மை
சவுடால்	—	வீண்பகட்டு
சவுரியம்	—	சுகம், மலிவான
சவுக்கை	—	நாற்புறமும் திறவையான ஒரு மேடையில் கால் நிறுத்தி மேலே கூரையால் வேயப்படும் சிறு கட்டிடம்.
சமத்து	—	புத்திசாலி
சவுத்து	—	மதிப்பிழந்து, மலிவு
சக்களத்தி	—	சக்களத்தி, தன் கணவரின் மற்றொரு மனைவி.
சப்சாடாய்	—	அனைத்தையும், முழுவதும்
சாமானியம்	—	இலகுவான
சிவனேன்னு	—	சிவனே என்று (எதுவும் செய்யாமல் சும்மா இருத்தல்)

சிமிட்டா	—	இரண்டு விரல்களின் இடுக்கிக் கொள்ளும் தூளின் அளவு
சிராப்படி	—	மரங்களை இழைக்கும் போது கிடைக்கின்ற தூள்.
சிரட்டை	—	கொட்டாங்கச்சி
சிறுவாடு	—	பெண்கள் தங்களுக்கென்று சிறிது சிறிதாகச் சேகரித்து வைத்துக் கொள்ளும் பணம் சிறு தேட்டு என்ற சொல்லின் திரிபு.
சீமைச்சமத்தி	—	கெட்டிக்காரி, உலக அறிவாளி களுடன் ஒப்பிடக்கூடியவள்.
சீமை எண்ணை	—	மண்ணெண்ணெய்
சீப்பட்டு	—	தரம் இழந்து
சீனியரங்காய்	—	கொத்தவரங்காய்
சூட்டா	—	போலியான
சூப்பிடி	—	சூள்படி, கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை அன்று ஆண் குழந்தைதளுக்குச் செய்கின்ற மங்கள நிகழ்ச்சி
சேதி	—	செய்தி
சொழகு	—	முறம்
சோமாத்தி	—	சுவமமாற்றி என்ற சொல்லின் திரிபு, உதவி,
டாண்ணு	—	சுவர்க் கெடிகாரம் மணி தவறாமல் சரியான நேரத்திற்கு அடிப்பதுபோல மிகச் சரியாக, கச்சிதமாய்
தங்கமாப் போச்சு	—	நல்லதாய்ப் போயிற்று
தங்கச்சி	—	உடன்பிறந்த இளைய சகோதரி

தடுமன்	—	ஜலதோஷம்
தடுக்கு	—	பனை ஓலையால் முடையப் பெற்று ஒரு ஆள் உட்காரக் கூடிய, தவிசுப்பலகைக்குப் பதிலாக உபயோகப்படுத்துவது
திட்டக்குறைச்சல்	—	கணக்கு முடிக்கும்போது ஏற்படு கின்ற ஏற்றத்தாழ்வு
திடுதிப்புன்னு	—	எதிர்பாராமல், திடீரென்று
திராபை	—	புத்தியற்ற, பயனற்ற
திருகுதாளம்	—	நிலையிலிருந்து மாறிச்செய்தல்
துஷ்டி	—	சாவு அல்லது இழவு
துப்புக் கெட்டவன்	—	அறிவு கெட்டவன்
தூத்தல்	—	மழைத் தூறல், பிறிதொருவனை அவதூறாகப் பேசுதல்
தெகிட்டு	—	வித்தியாசம்
தேன்குழல்	—	தின்பண்டங்களில் முறுக்கு போன்ற ஒரு வகை.
தோசி	—	தோசம் பிடித்தவன், ஒன்றுக்கும் உதவாதவன்
நக்கல்	—	கேலி பேசுதல்
நறுவிசு	—	கண்டிப்பாக
நம்மள்	—	நம்முடைய
நட்டாமுட்டி	—	வஞ்சகம்
நமுத்து	—	நனைந்து
நாத்தினா	—	நாத்தூண் நங்கை, மைத்துனி
நாதாங்கி	—	தாழ்ப்பாள்
நிமிண்டு	—	நகம்படாமல் கிள்ளுதல்
நீச்சத்தண்ணி	—	நீராகாரத் தண்ணீர்
நூலாம்படை	—	நூலான (சிலந்தி) படை, ஒட்டடை

நெலச்சூடு	—	பகலில் நிலத்தில் அடித்த வெயிலால் இரவில் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவரும் சூடு
பக்கா	—	உறுதியாக, பட்டணம் படி
பட்டுக்கெடப்பான்	—	பட்டில் கிடப்பான் என்ற சொல்லின் திரிபு
படுக்காளி	—	போக்கிரி, பொய்யன்
பணிக்கம்	—	எச்சில் துப்பும் கிண்ணம்
பல்லிக்கருவான்	—	பள்ளிக்கு இருப்பான் என்ற சொல்லின் திரிபு
பட்டியக்கல்லு	—	தாழ்வாரத்தின் தள விளிம்பில் போடப்படும் ஒழுங்கு செய்யப் பட்ட நீண்டகல்
பள்ளயம்	—	படைக்கப்பட்ட சோறு (நிவேதனம்)
பாச்சோறு	—	பச்சை அரிசியில் வெல்லம் தேங்காய் சேர்த்துச் சமைக்கும் உணவு
பாதாளகரண்டி	—	கிணற்றில் தவறி விழுந்த வாளியை எடுக்க உதவும் கருவி
பிக்கல்பிடுங்கல்	—	சிரமங்கள்
பிடிமானம்	—	ஒப்பந்தம்
பெருவாரி	—	கணக்கற்ற
பெரிய ஆச்சி	—	குடும்பத்தின் தலைவியை விளிக்கும் ஒரு சொல்
பேத்தி	—	பெயர்த்தி, தன்மகனுக்கு/மகளுக்கு பிறந்து தன் மனைவியின் பெயரை உடையவள்
பேரன்	—	பெயரன், தன் மகனுக்கு/மகளுக்குப் பிறந்து தன்னுடைய பெயரை உடையவன்

பொக்குண்ணு	—	சீக்கிரம், எதிர்பாராமல்
பொண்டுகசெட்டி	—	பெண் இயல்பு கொண்ட ஆண்
பொழப்பத்தவன்	—	பிழைப்பற்றவன்
பைய	—	மெதுவாக
மகமுண்டி	—	மகனின் மனைவி, மகனின் பெண்டிர்
மக்கமனுச	—	தன் மக்கள் வழி ஏற்பட்ட உறவினர்கள்
மக்களுக்கு அப்பச்சி	—	தன் மக்களுக்கு அப்பன், அதாவது கணவன்
மருக்கொளி	—	மாசுடையவன், ஒன்றும் தெரியாதவன்
மரவை	—	மரத்தால் ஆன தாம்பாளம்
மாப்பு	—	மன்னிப்பு
மாறல்	—	பொறுப்பில்
மானம்பு	—	மகர்நோன்பு
மானி	—	மான உணர்ச்சியுடையவன், தன் வயதிற்கு இளமையான சிற்றப்பனை விளிக்கும் ஒருசொல்
மானாங்கண்ணி	—	தாறுமாறான
மிஞ்சி	—	கால் விரலில் அணியும் வெள்ளியிலான மோதிரம், மிச்சமாக
முகப்பு	—	வீட்டின் முன்பகுதி
முண்டாசு	—	தலைப்பாகை
முழுகாமல்	—	பிள்ளை உண்டாகியிருத்தல்
மூளி	—	நகையணியாத
மேலைக்கு	—	வரும் ஆண்டில்
மைனூட்டாய்	—	அதிநுட்பமாக (Minute)
ரவுக்கை	—	முலைக்கச்சு
ராப்தா	—	பழகிய

ராராட்டு	—	தாலாட்டு
ரூல்களி	—	கோடுபோட உதவும் உருண்டையான மரத்தாலான கம்பு
ரெண்டாங்கட்டு	—	வீட்டின் இரண்டாம் பகுதி
ரோக்கா	—	சீட்டு
லேசுவாசு	—	எளிதான
லோட்டா	—	தண்ணீர்குடிக்க உதவும் சிறு போகணி
லோல்	—	தீராத அல்லல்
வக்கணை	—	வகை முறையாக
வரளி	—	பிடிவாதக்காரன்
வல்லிசு	—	முழுமையாக
வாஞ்சாலை	—	மிக அன்பாக
வாசி	—	அனுகூலம்
வாவரசி	—	வாழ்வரசி, மங்கலப்பெண்டிர்
வெஞ்சனம்	—	சமைத்த காய்கறி
வெண்ணலை	—	பொறுப்பில்லாத
வெளம்	—	கோபம்
வெள்ளன	—	விடியும் நேரம்

—ஐந்து—

வாணிபமும் வளர்ந்த முறையும்

பேரறிஞர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களால் குமரப்ப செட்டியார் வசமுள்ள ஓலைச்சுவடியைச் சரி பார்த்துச்செப்பனிட்டு வெளியிடப்பெற்ற, அறப்பட்டயங்கள் என்ற நூலிலிருந்து முதன்முதலில் நகரத்தார்கள் உப்பு வியாபாரம் செய்த செய்தி நமக்குக் கிடைக்கிறது.

அது மட்டுமல்லாமல் நெல், வரகு, திணை, சாமை இருங்கு முதலிய பதினெட்டு வகை கூலமும் விற்று வாணிபம் செய்துவந்த செய்தியை,

"வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணருஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
தூசுந் துகிரும் ஆரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூல"மும்

என்ற பாடல் மூலம் விளக்கிக் கூறியதாலும், நகரத்தார்களின் வாணிகச் சிறப்பு விளக்கமாகத் தெரிகிறது. நகரத்தார்கள் அக்காலத்தில் கடல்வழியாகவும், தரை வழியாகவும் சென்று பண்டமாற்றம் செய்தனர் என்பது சரித்திர உண்மையாகும். மரக்கலத்தால் கடல்கடந்து தூரதேசம் சென்று வாணிகம் செய்யும் பழக்கம் மிகப் பழைய காலத்திலேயே நிலை பெற்றிருந்தது என்பது

''கலத்தினும் காலினும் தருவனர் ஈட்ட
குலத்திற் குன்றா கொழுங்குடிச் செல்வர்''

எனக்குறிப்பதனால் நன்கு விளங்குகிறது.

காவிரிப்பூம்பட்டினம் வணிகர் செழித்த மாநகர் ஆகும். பரதர், கடலோடிகள், பின்னவர் இளங்கோக்கள், தருமக் கிழவர், ஆள்காவலர், உழவர், வணிகர், முத்தொழிலாளர், செட்டியார், சிரேட்டிகள் என்று வைசியர் பெயர் பெறுவர். இவர்கள் அரசனும் விரும்பும் திருவினைப் பெற்றவர்கள். இவர்களது வாணிபத்தை வளர்க்கப் பலதேச வர்த்தகர்களும் புகாரில் வந்து குடியேறியிருந்தனர்,

''நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி (1) மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும் (2)
கங்கை வாரியும் (3. காவிரி பயனும்
ஈழத் (4) துணவும் காழகத் (5) தாக்கமும்
அரியவும் பெரியவும் நெறிய ஈண்டி''

என்ற பட்டினப்பாலைச் செய்யுள் மூலம் அறிய முடிகிறது.

தமிழகத்திலிருந்து அதிலும், குறிப்பாக காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து ரோமாபுர நாட்டுக்குச் சென்ற ஒவ்வொரு கப்பலிலும் பாதிக்குமேற்பட்ட சரக்கு மிளகாகவே இருந்தது. ஏலக்காய், இலவங்கப்பட்டை, வெல்லம், நல்லெண்ணெய் முதலியனவும் உறையூரில் செய்யப்பட்ட மிகஉயர்ந்த மெல்லிய ஆடைவகைகளும் தேக்கு, அகில், சந்தனம் முதலிய மரத்துண்டங்களும் தேங்காய், நெய், சோளம், கம்பு, வாழை, அரிசி முதலிய தானியங்கள் புளி, வெற்றிலை, பாக்கு முதலியனவும், ரோமாபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பெற்றன. இந்தப் பொருள்களை பெற்றுக் கொண்ட உரோமர்கள் இவற்றிற்குப் பதிலாக பொன். வெள்ளி, நாணயங்கள் உயர்ந்த மதுவகைகள், பவளம், ஈயம், தகரம் எந்திரப் பொருள்கள் அனுப்பிவைத்தனர்.

பெரிபுளூஸ் என்னும் நூலை கி.பி. 60ல் எழுதிய ஆசிரியர் இந்தியத் துறை முகங்களில் சேரநாட்டு தொண்டி, முசிறி, குமரி என்ற துறைகளும் பாண்டிய நாட்டில் கொற்கையையும் சோழநாட்டில், காவிரிப்பூம்பட்டினத்தையும் குறிப்பிட்டுள்ளார்கள். காவிரிப்பூம் பட்டினத்துத் துறைமுக நகரங்களில் யவனர் முதலிய அயல்நாட்டு வணிகர்கள் தங்கியிருந்தனர் என்பதைப் பட்டினப்பாலையில் பின்வருமாறு அறிய முடிகிறது.

''மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்''

'யவனர்' கைத்தொழில் திறம் தமிழரால் பாராட்டப் பெற்றது. காவிரிப்பூம்பட்டினத்து அரண்மனைத் தோட்டத்துள் அமைக்கப்பட்ட ஒரு மண்டபத்தை

''மகத வினைஞரும் மராட்ட கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி''

அமைத்தனர் என்றும் (மணிமேகலை காதை 19- வரி 107-109ல்) அறிய முடிகிறது. நம்முடைய தமிழ்நாடு முற்காலத்தில் வியாபாரத்திலும், பிறவற்றிலும் உயர்நிலையை அடைந்திருந்தது என்றும் பழைய தமிழ் நூல்களால் நாம் அறிய முடிகிறது. தொழில்களில் சிறந்தனவாகச் சொல்லப் படுவன. உழவும், வாணிபமுமேயாகும், வேளாண்மையினால் விளைவிக்கப்படும் பொருள்களும், கைத்தொழில்களால் உண்டாக்கப்படும் பொருட்களும் பலநாட்டாரும் பெறுமாறு செய்வித்ததில் வாணிகம் பெரிதும் உதவுகின்றது. வணிகத்தைப் பரம்பரையாகச் செய்துவரும் மரபினர் இவர்தான். இப்பிரிவினர், தான் கொண்ட பொருள் அளவால் பெயர் பெற்றனர். தாம் செய்யும் வியாபாரத்தால் பிரிக்கப்பட்ட கூல வாணிகர், பொன் வணிகர், அறுவை வாணிகர், மணி வணிகர் போன்ற பிரிவினர்களுமுண்டு.

நகரத்தார்கள் அயல் நாடுகளுக்குச் சென்று வியாபாரத்தில் ஏராளமான பொருள்களை ஈட்டி, தாங்கள் ஈட்டிய பொருள் முழுமையும் சில தற்கால வியாபாரிகளைப் போல, மோசடியான சொத்துக்களுக்கு அலைவது போல அல்லாமல் தாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் தங்களுடைய சந்ததி யாரும் அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி அதே தரும வழிகளில் நடக்குமாறு ஆங்காங்கு கோயில்களையும், பிற தரும ஸ்தாபனங்களையும் உருவாக்கியிருக்கிறார்கள், இத்தகைய கோயில்களும், தர்மஸ்தாபனங்களுமே தற்காலத்தில் அவர்களைப் பற்றிய சரித்திரங்கள் எழுதுவதற்கு ஆதாரங்களைத் தந்து கொண்டிருக்கின்றன.

இங்ஙனம் நகரத்தார்கள் வாணிபம் செய்யச் சென்ற இடங்களிலெல்லாம்

1) பிறருடைய வியாபாரத்தைக் கெடுக்காமலும்
2) தன்னுடைய வியாபாரத்தைப் பெருக்கிக்கொண்டும்
3) எந்த ஈன வழியிலும் பொருள் சேர்க்காமலும்
4) எந்த புதிய தேசத்திற்கும் நினைத்த மாத்திரத்திலேயே சென்று வரவும்
5) அந்தந்த நாடுகளில் குடியேற வழிவகை செய்து கொண்டும்
6) அங்கு ஒருவரை ஒருவர் கெடுத்துக் கொள்ளாமலும் போட்டி போட்டுக் கொள்ளாமலும், நடந்து கொண்ட விதமே அவர்களுக்கு அவர்களாலேயே ஏற்படுத்திக் கொண்ட கொள்கைகளாக இருந்திருக்கின்றன.

நகரத்தார்கள் கப்பல்கள், ஆகாயவிமானங்கள் போன்ற போக்குவரத்து வசதிகள் இல்லாத நாள்களிலேயே பாய்மரக் கப்பல் துணைக்கொண்டு கடற்கரை ஓரமாகவே பலமைல்கள் பொறுமை இழக்காமல் காற்றை மட்டுமே நம்பி உறுதியான எண்ணத்துடன் தண்டாயுதபாணிக் கடவுளின் துணைக்

கொண்டு 1805-ம் ஆண்டு இலங்கையில் உள்ள கண்டிக்கும். 1824-ம் ஆண்டு சிங்கப்பூர் பினாங்கு முதலிய ஊர்களுக்கும் 1825-ம் ஆண்டு பர்மாவில் உள்ள மோல்மேன் என்ற ஊருக்கும் 1854ல் ரங்கூனுக்கும் 1885-ம் ஆண்டில் மாந்தளை நகரத்திற்கும் சென்று வாணிபம் செய்து வந்த செய்தி அறிய முடிகிறது, இங்ஙனம் இவர்கள் கடல் கடந்து செல்லும் போது, காற்றை நம்பியே கட்டுமரக்கப்பலில் செல்வதால், தாங்கள் உயிரோடு சென்று திரும்ப முடியுமா என்ற ஐயப் பாட்டினால் இவர்கள் புறப்படும்போதே, தாய் நாட்டில் மனைவி மக்களிடமும் உற்றார் உறவினர்களிடமும் வாய்க் கரிசி வாங்கிச் சென்ற பழக்கம் கூட இருந்து வந்திருப்பதாக அந்தநாளில் சென்று வந்தவர்களிடமிருந்து செவிவழிச் செய்தி யாக அறிய முடிகிறது. இதிலிருந்து நகரத்தார் எத்தகைய மன உறுதியோடும் கட்டுப்பாட்டுடனும் வாழ்ந்து வந்திருக் கின்றனர் என்பது தெளிவாகப் புலனாகிறது,

நகரத்தார்கள் இங்ஙனம் மனஉறுதியும் கட்டுப்பாடும் உடையவர்கள் மட்டுமல்ல, இவர்கள் சாதிக் கட்டுப்பாட்டுக் கும் மிக முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கின்றனர். இத்தகைய சாதிக் கட்டுப்பாட்டிற்கு இணங்க, மனைவி மக்களைக் கடந்த தொலைதூரங்களுக்கு கூட்டிச் செல்வது இல்லை.

உள்நாட்டு வாணிபம் கருதி முதன்முதலில் நகரத்தார்கள் 1821 ஆம் ஆண்டு கல்கத்தா சென்று தொழில் நடத்தத் தொடங்கினர். கல்கத்தாவில் பெரும்பாலும் அரிசி வியாபாரமே நடத்தி வந்திருக்கின்றனர். இங்கிருந்து தான் பர்மாவில் உள்ள மோல்மீனுக்கு 1852ல் சென்று பின்னர் நாளடைவில் பர்மாவில் உள்ள சின்னஞ்சிறிய ஊர்களில் கூடத்தங்கள் தொழிலைச் செய்து வந்தனர், குறிப்பாக 1854ல் ரெங்கூனிலும், 1885ல் மாந்தளை என்னும் ஊரிலும், பசுமந்தான், கீமந்தான். லேவு, மோவி, பாக்கலை, சைப்பீ' சோசான், மூப்பின், எவுண்டம், அவுக்கான், தோஞ்ஜை

லேப்பட்டான், மீன்லா. அவுப்போ, சூப்பிங்கான், பாரப்பின், பக்கோ, நத்தலீன் தன்னப்பின், பௌண்டை, சைக்கோ புரோம், ஈனஞ்சான், ஈந்தட்டான், நௌலியப்பன், டாங்கோ, மியாங்மியாங், பியாப்பம், அடாரியா போன்ற பல இடங்களிலும் தங்கள் கொடுக்கல் வாங்கல் தொழிலை அந்தநாட்டின் முன்னேற்றத்திற்கு உகந்த வகையில் செய்து வந்தனர். பர்மா நாட்டில் உள்ள தொண்ணூறு சதவித நிலங்கள் நகரத்தார்களின் உதவியாலேயே வேளாண்மைக்குக் கொண்டுவரப் பெற்றன என்றால் அது மிகையில்லை.

தொழில் காரணமாக அந்தந்தப் பகுதிகளில் லேவாதேவிக் கடைகளைத் தோற்றுவித்தாலும், ஒவ்வொரு ஊரிலும் அவர் களுக்கே உரிய தெய்வமான அருள்மிகு தெண்டாயுதபாணிக் குக் கோயில் கட்டுவதிலும் தான தர்மங்களுக்காகப் பெருந் தொகைகளைச் செலவழிப்பதிலும் தயங்கியதே இல்லை.

பர்மா மட்டுமில்லாமல் நகரத்தார்கள் வேறு பல நாடு களுக்கும் சென்று தொழில் செய்ய வேண்டும் என்ற எண்ணம் முதன்முதலில் இவர்களுக்கு வந்தபோது இலங்கைதான் இவர்கள் கருத்திற்கு வந்தது. 1805-ஆம் ஆண்டு முதன் முதலாக நகரத்தார்கள் இலங்கையில் உள்ள கண்டி என்ற ஊரில் தங்கள் கடைகளைத் தோற்றுவித்து அரிசி விற்பனை, நகை வியாபாரம், கொடுக்கல் வாங்கல் ஆகிய தொழில் களைத் தொடங்கியிருக்கின்றனர். பின்னர் நாளாக ஆக அங்குள்ள கதிர்காமம், திருக்கேத்தீஸ்வரம், காலி, கம்பளை, இரத்தினபுரி, நாவல்பட்டி, குருநாக்கல், மாதம்பை, முனீச்சுரம், பூசவார், யாழ்ப்பாணம், திருகோணமலை, சிவனடிபாதம் முதலிய ஊர்களில் எல்லாம் தங்கள் கடை களைத் தோற்றுவித்திருக்கின்றனர். நாள்கள் செல்லச்செல்ல, வட்டித் தொழிலில் மட்டுமே கவனத்தைச் செலுத்தாமல் ரப்பர் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள், காப்பித்

9

தோட்டங்கள் முதலியவைகளை வாங்கி அவைகளை அபிவிருத்தி செய்து இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு நகரத்தார்களே அச்சாணியாக விளங்கி வந்திருக்கின்றனர்.

நகரத்தார்கள் 1824-25ல் சிங்கப்பூருக்கும் பினாங்கிற்கும் சென்று வர்த்தகம் செய்யத் தொடங்கியதாகத் தெரிகிறது.

பிரெஞ்சு ஆட்சியில் சில நூறு ஆண்டுகள் இருந்த இந்தோசீன நாட்டின் ஒருபகுதிதான் இப்போது தெற்கு வியட்நாம் என்ற பெயரில் தனிநாடாக இருக்கிறது. இதன் தலைநகரம் செய்கோன். 1880ல் நகரத்தார்கள் இங்கு வந்து செய்கோனிலும், அதன் சுற்றுப் பகுதியில் உள்ள பல ஊர்களிலும் தங்கள் தொழில்களைத் தொடங்கினர்.

இந்தோனேசியத் தீவிலும், சுமித்திரா தீவிலும் இதன் தலைநகரமான மயிடான் மல்லியிலும் அதைச் சுற்றியுள்ள சேந்தான், திப்பன் தங்கி, தஞ்சம் பாகை, ஆகிய பல ஊர்களிலும் நகரத்தார்கள் தங்கள் தொழிலைத் தொடங்கி நடத்தி வந்துள்ளனர்.

ஆப்பிரிக்காவின் தென்கோடிக்கு அருகே உள்ள மொரீசியஸ் தீவையும் நகரத்தார்கள் விட்டு வைக்கவில்லை. இந்தத் தீவின் தலைநகரான போர்ட்லூயி என்னும் ஊரில் நகரத்தார்கள் சென்று தங்கள் தொழிலைத் தொடங்கியது 19ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே என்று தெரிகிறது.

கடல் கடந்த நாடுகளில் எல்லாம் இலங்கை, பர்மா, மலேசியா, பங்களாதேஷ், தாய்லாந்து, தெற்கு வியட்நாம் இந்தோனேஷியா, மொரீசியஸ் முதலான நாடுகளில் வாணிபமும் கொடுக்கல் வாங்கல் தொழில்களையும் செய்து வந்த நகரத்தார்கள் இந்த இருபதாம் நூற்றாண்டில்

இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி போன்ற மிகப் பெரிய நாடுகளுடன் வணிகத்தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு பெரியபெரிய தொழில்களை இந்தியாவிலும் குறிப்பாகத் தென்னகத்திலும் உருவாக்கியிருக்கிறார்கள். இன்றையச் சூழ்நிலையில் பலவிதமான தொழில்களில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டிருந்த போதிலும், குறிப்பாக மேலே சொல்லப்பட்ட நாடுகளில் வட்டித் தொழிலையும் கொடுக்கல் வாங்கல் தொழிலையும் பெரிய அளவில் செய்து வரத் தவறவில்லை,

நகரத்தார்கள் வட்டிக்கு கொடுத்தல், நிலத்தின் மீது ஈட்டிற்குப் பணம் கொடுத்தல், நகைஈடுபிடித்தல் முதலிய தொழில்களைமட்டும் செய்யாமல், இன்று வங்கிகள் செய்து வரும் நடப்பு வைப்பு (Current Deposit), அழைப்பு வைப்பு (Deposit at call) குறுகிய வைப்பு (Short term deposit), கடன் வசதி (Credit facility) அதிகப்பற்று (Overdraft), சாதாரணக் கடன் (Demand loan) மறு கடன் (Re-finance), உண்டியல்களைக் கழிவு செய்தல் (Discounting Hundi) முதலிய பலதரப்பட்ட வங்கிகள் நடத்துகின்ற தொழில் களைக் கூட நகரத்தார்கள் அந்த நாட்களிலேயே செய்து வந்திருக்கின்றனர் என்றால், அவர்களை இன்றைய வங்கி களின் முன்னோடிகள் என்றோ அல்லது இன்றைய வங்கி நடைமுறைகள் இவர்களிடமிருந்துதான் கற்றுக்கொள்ளப் பட்டு நடைமுறைக்கு வந்தது என்றோ சொல்வது கொஞ்சங் கூட மிகையாக இருக்காது.

இந்த நவீன வங்கி முறை சமீபத்தில் கொண்டுவரப் பட்டதே எனினும் 12ம் நூற்றாண்டிலேயே இந்த நடை முறைகள் காணப்பட்டதாக சரித்திரச் சான்றுகளிலிருந்து புலனாகிறது. 'பாங்க்' (Bank) என்ற சொல் பாக் என்ற ஜெர்மானியச் சொல்லிலிருந்து திரிந்தது என்று சிலர் கூறுவர். 'பாக்' என்ற ஜெர்மானியச் சொல்லுக்கு நிதி இருப்பு என்று

பொருள். ஆனால் இத்தாலிய மொழியில் வங்கிகளை பாங்கோ (Bango) என்றே அழைத்து வருகின்றனர். (Banks) என்ற இத்தாலியச் சொல்லுக்கு பெஞ்சுகள் என்று பொருள். இத்தாலியர்கள் ஒரு பெஞ்சின் இரு மருங்கிலும் உட்கார்ந்து கொண்டு தொழிலை நடத்துவதாலேயே வங்கிகளுக்கு இந்தப் பெயர் வந்தது என்று தெரிகிறது.

சரித்திரங்களை ஊன்றிப் பார்க்கும்போது பாங்க் ஆப் வெனிஸ் (Bank ot Venis) தான் கி. பி. 1157ல் முதன் முதலாக நிறுவப்பட்ட வங்கி என்று தெரிகிறது. அதன் பின்னர் 770ல் இந்துஸ்தான் வங்கியும் (Hindusthan Bank) 1808ல் பாங்க் ஆப் பெங்கால் (Bank of Bangal) 1840-ல் பாங்க் ஆப் பாம்பேயும் (Bank of Bombay) 1843ல் பாங்க் ஆப் மெட்ராஸ் (Bank of Madras) தோன்றின. அதன் பிறகு நீண்டகால இடைவெளிக்குப் பின்னர், 1906ல் இந்தியன் வங்கியும் (Indian Bank) 1937ல் இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கியும் உருவாகின. பேங்க் ஆப் பெங்கால், பேங்க் ஆப் பாம்பே, பாங்க் ஆப் மெட்ராஸ் இந்த மூன்றையும் ஒருங்கிணைத்து கி. பி. 1921ல் இம்பீரியல் வங்கியென மாற்றப்பட்டது. இந்த இம்பீரியல் வங்கியே 1955ல் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா என்று பெயர் மாற்றம் பெற்றது. இந்தக் காலக்கட்டத்திற்கு முன்னரே பாங்க் ஆப் காரைக்குடி (Bank of Karaikudi) செட்டிநாடு கமர்ஷியல் பாங்க் (Chettinad Commercial Bank) நாட்டுக்கோட்டை பாங்க் (Nattukottai Bank) செட்டிநாடு பயோனியர் பாங்க் (Chettinad Pioneer Bank) நகரத்தார் பாங்க் (Nagarathar Bank) பாங்க் ஆப் மதுரை (Bank of Madurai) முதலிய பல வங்கிகள் தென்னாட்டின் வணிக முன்னோடிகளாகத் திகழ்ந்த நகரத்தார்களின் எண்ணத்தில் உருவான வங்கி களாகும்.

தமிழறிஞர் "சோமலெ" அவர்கள், "தென்கிழக்கு ஆசியாவில் வளம் கொழிக்கும் பெரும் நகரமாகவும், கடற் படைத் தளமாகவும் விளங்குவது சிங்கப்பூர். இங்கும் இதை அடுத்துள்ள மலேசிய நாட்டுக்கும் நகரத்தார்கள் 1800ஆம் ஆண்டிற்குப் பின்னரே வந்ததாகப் பலரும் எழுதியிருக் கின்றனர். இது தவறான கருத்து. டச்சு மொழியில் எழுதப் பட்டுள்ள சில ஆதாரங்கள் அண்மையில் கிடைத்துள்ளன. இவற்றிலிருந்து 10ம் 11ம் நூற்றாண்டிலேயே இவர்கள் மலேயாவிற்கு வந்தனர் என்பது உறுதிப்படுகிறது. ராஜராஜ சோழன் ஆட்சியில் நகரத்தார்கள் கடல் கடந்தது என்று இதிலிருந்து ஊகிக்கலாம்" என்று எழுதுவதிலிருந்து 11-ம் நூற்றாண்டிலேயே நகரத்தார்கள் மலேசியாவில் குடியேறி னார்கள் என்பது புலனாகிறது. இந்த நகரத்தார்களின் முக்கியமான தொழில் பணம் கொடுக்கல் வாங்கல் தான். இவர்கள் இன்று நடைபெறுகின்ற வங்கி முறைப்படியே, வங்கிகள் எல்லாம் உருவாவதற்கு முன்பே இவர்களது கடையில் நடத்தி வந்திருக்கிறார்கள்.

இன்று வங்கிகளில் நடைபெறுகின்ற உண்டியல் பரி மாற்றங்கள் (Hundi Business) நகரத்தார்கள், எங்ஙனம் நடத்தி வந்தனர் என்ற விபரங்களை விரிவாகக் காண்போம்.

உண்டியல் என்பது ஒருவர் மற்றொருவரைப் பணம் கொடுக்கும்படி எழுதிக் கொடுக்கும் ஆர்டர் அல்லது கட்டளை. இது வட்டி உண்டியல், தவணை உண்டியல், தரிசனை உண்டியல் என்று மூன்று வகைப்படும்.

இங்ஙனம், வாணிபத்தில் தனது செல்வாக்கை நிலை நாட்டிக் கொண்டிருந்தபோது பர்மிய நாட்டின் கடுமையான சட்டதிட்டங்களின் தாக்குதலால், நகரத்தார் பெருமக்களில் பெரும்பாலோர் தாயகம் திரும்பவேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. அங்ஙனம் திரும்பி வந்ததும் தமிழ்

நாட்டிலேயே, பஞ்சாலைகள், சிமிண்டு, உரம், சர்க்கரை, சாணைக்கற்கள், கிரானைட், இரசாயனம், காகிதம் முதலிய பல தொழிற்சாலைகள் நிறுவி வாணிபம் செய்யத் தொடங்கினார்கள். தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் இவர்கள் தொடாத துறையே இல்லை என்கிற அளவுக்கு தங்கள் திறமையை உலகு அறியச் செய்து வருகிறார்கள். இவர்கள் தொழில் வளத்தால் பொதுவாக இந்தியத் துணைக்கண்டமும், குறிப்பாகத் தமிழகமும், பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் கண்டு கொண்டிருக்கிறதென்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சி அல்ல.

—ஆறு—

உணவு முறை

நகரத்தார் பெருமக்கள் எதைச் செய்தாலும், அதில் ஒரு அர்த்தமோ அல்லது உண்மையோ இருக்கும் என்பதைப் பலரும் அறிவார்கள். தமிழகத்தில் உள்ள உணவு வகைகள் பல விதங்களாகப்பெருகி விளங்குவதைச் சங்ககால நூல்களும் கல்வெட்டுக்களும் நமக்குத் தெரியப்படுத்துகின்றன. உணவு களை உட்கொள்வதற்குரிய பல சொற்களும், உணவுகளை ஆக்குதலுக்குரிய முறைகள் பற்றியும் பலவாறாக அறிய முடிகிறது.

நகரத்தார்கள் பெண்டிர்கள் (இவர்களை ஆச்சிமார்கள் என்று அழைப்பார்கள்) சங்ககால நூல்களிலோ, கல்வெட்டு களிலோ படித்து அறியாதவர்களாக ஒரு காலத்தில் இருந்தனர். அந்தக் காலங்களிலேயே இவர்கள் பல நூல் களில் காணக் கூடிய உணவு முறைகள், உட்கொள்ளும் முறைகள், அவைகளுக்கு ஏற்றவாறு உணவுப் பண்டங்கள் தயாரித்தல் முதலியவைகளில் கைதேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

இவர்கள் உட்கொள்வதற்குரிய வழி வகைகளை இங்கு விளக்கிக் கூறப்படுகிறது.

அருந்துதல்	—	மிகச் சிறிய அளவே உட்கொள்ளு தலை இந்தச் சொல் குறிக்கும்
உண்ணல்	—	பசிதீர உட்கொள்ளுதல்

உறிஞ்சல்	—	வாயைக் குவித்துக் கொண்டு நீரால் செய்த பண்டங்களை ஈர்த்து உட்கொள்தல்
குடித்தல்	—	நீரால் செய்த உணவுகளை சிறிது சிறிதாகப் பசி நீங்க உட்கொள்தல்
தின்றல்	—	உணவுப் பண்டங்களைக் கொறித்துத் தின்னுதல்
துய்த்தல்	—	சுவைத்து மகிழ்ந்து உட்கொள்தல்
நக்கல்	—	நாக்கினால் துளாவி உட்கொள்தல்
முனுங்கல்	—	பண்டம் முழுவதையும் ஒரே வாகில் ஈர்த்து உறிஞ்சி விரைந்து உட்கொள்தல்
பருகல்	—	நீரால் செய்த பண்டத்தைச் சிறுகச் சிறுகக் குடிப்பது
மாந்தல்	—	பெரும் ஆசையுடன் மடமட வென்று உட்கொள்தல்
மெல்லல்	—	கடிய பண்டங்களைப் பல்லால் கடித்து மென்று உட்கொள்தல்
விழுங்கல்	—	பல்லுக்கும் நாக்கிற்கும் வேலையே இல்லாமல் தொண்டை வழியாக விரைவாக உட்கொள்தல்.

இங்ஙனம் பன்னிரெண்டு வகையான, உட்கொள்ளும் முறைகளை அறிந்த ஆச்சிமார்கள் உணவுப் பண்டங்களை அதற்கு தகுந்தாற்போல், ஆக்குகின்ற முறையை விபரமாகக் கையாண்டு பின்வரும் முறைகளில் சமைத்துச் சுவை கூட்டுகிறார்கள்.

அவித்தல்	—	ஆவியால் வேகச் செய்வது, குழாய் முதலியவற்றுள் பண்டங்களைச்

செலுத்தி அவிப்பது, மாவினை முகந்து இட்டு இட்டலி போன்றவற்றை அவிப்பது, சட்டைத் துளைகளின் வழியே துணியின் மேல் இட்டு அவிப்பது, என்ற மூன்று வகைகளில் உணவுப் பண்டங்களை ஆக்கினார்கள்

இடித்தல் — அரிசி முதலியவற்றை மாவாகவோ அல்லது குருணையாகவோ இடித்து ஆக்குதல்

கலத்தல் — பல பண்டங்களைக் கலந்து உணவாக ஆக்குவது

காய்ச்சல் — பால், கஞ்சி போன்றவற்றைச் சூடேற்றிப் பக்குவப்படுத்துதல்

கிண்டல் — நெய்யிலோ அல்லது நீரிலோ பண்டங்களை இட்டு நீர்வற்றக் கிண்டி ஆக்குவது

கிளறுவது — எண்ணெய் அல்லது நெய்யில் கடுகு உளுந்து போன்றவற்றைத் தாளித்த பின்னர் பண்டங்களை இட்டு தாளிப்பும், தாளிக்கப் படுவதும் கலந்து சேருமாறு செய்வது

சுடுதல் — பண்டங்களை நேரடியாக நெருப்பில் இட்டு வேகுமாறு பக்குவம் செய்தல்

திரித்தல் — அரிசி, பருப்பு போன்றவற்றைத் திருகையில் இட்டு அரைத்து மாவாக ஆக்குதல்

துகைத்தல் — ஒன்று அல்லது ஒன்றுக்குமேற்பட்ட பொருள்களை நசுக்கிக் கலந்து ஒன்றாகி விடுமாறு செய்தல்

துவட்டல் — நீரிலோ அல்லது நெய்யிலோ பண்டங்களை இட்டுத் துவண்டு செறியுமாறு பக்குவப்படுத்துதல்

பிசைதல் — மாவுடன் பாகு அல்லது உப்பு அல்லது வேறுபொருள்களைச் சேர்த்தும் அல்லது தூவியும் கையால் நன்கு கலந்து குழைத்துப் பிசைந்து செய்வது

பிழிதல் — மாவுப் பண்டங்களை அதற்குரிய பொருட்களைச் சேர்த்துப் பிசைந்து சட்டைத்துளைகள் வழியாகவோ அல்லது துணி வழியாகவோ நெய்யிலோ அல்லது எண்ணெயிலோ அமுக்கிப் பிழிந்து செய்யப்படுவது

பொங்கல் — அரிசியைத் தனியாகவோ அல்லது பருப்பு முதலியனவற்றைச் சேர்த்தோ கொதிநீரை வடிக்காமல் அளவாக நீர்சேர்த்து ஆக்குவது

பொறித்தல் — கடுகு முதலியவற்றை காயும் எண்ணெயில் விட்டுத் தாளித்த பின் நீரில் வெந்த அல்லது பச்சைக்காய்கறிகளை அதனுடன் சேர்த்து வேண்டிய நேரம் அடுப்பில் இருக்கச் செய்வது ஒருமுறை, அரிசி, கடலை, நெல் போன்ற

வற்றை ஓட்டிலிட்டு பொரியச் செய்வது மற்றொருமுறை

மசித்தல் — கீரை, கிழங்கு போன்றவற்றை நீரிலிட்டு வேகவைத்து மத்து போன்றவற்றால் மசியக் குழையச் செய்வது

வடித்தல் — அரிசியை நீரிலிட்டு வேகவைத்து வெந்த பின்னர் உபரிநீரை வடித்து விடுதல்

வதக்கல் — காய்கறி முதலியவற்றை எண்ணெயிலிட்டு அவைகளின் நீர்ச்சத்து நீங்கும் வரை துவளுமாறு ஆக்குவது

வறுத்தல் — காய், கிழங்கு முதலியவற்றை எண்ணெயிலிட்டு மொறு மொறு என்று ஆகுமாறு ஆக்குவது

வாட்டல் — பிஞ்சுக் காய்கள் அல்லது பசுங்கதிர் போன்றவற்றை நெருப்பின் அனலில் காட்டி பதமாய்ப் பக்குவம் செய்தல்

வார்த்தல் — கரைத்த மாவை நன்றாகக் காய்ந்த தோசைக் கல்லில் பரப்பி ஊற்றிப் பக்குவம் செய்தல்

வெந்நீர்ப்படுத்தல் — நன்றாகக் கொதிக்கும் நீரில் காய்கறி முதலியவற்றை இட்டு, வேகும்படி செய்தல்

வேகவைத்தல் — நெருப்பிலோ, அனலிலோ கொதிநீரிலோ, ஆவியிலோ அல்லது நெய்யிலோ அல்லாமல், வேறு

ஏதாவது வழியில் அப்பண்டங்களில் உள்ள பச்சைத் தன்மை நீங்குமாறு செய்து பக்குவப் படுத்துதல்.

இவைகள் அல்லாமல் ஊறவைத்தல் மூலமாகவும், வேறு பல முறைகளிலும், பலவிதமான பண்டங்களைத் தயாரிக்கும் கலை கைவரப் பெற்றவர்கள் இந்த ஆச்சிமார்கள். இவர்கள் கைவண்ணத்தில் மேற்சொன்ன வகைகளில் உருவான பலவித மான உணவுப் பண்டங்களில் சிலவற்றை மட்டும் கீழே தரப் பெற்றிருக்கிறது.

அக்கார அடிசில் (கற்கண்டுச்சாதம்) அதிரசம், ஆப்பம், கொழுக்கட்டை, இடியாப்பம், உக்காரை, கும்மாயம், இட்டலி, தேன்குழல், முறுக்குவடை, மாவுருண்டை. மணக் கோலம், திணைமா, பணியாரம், பால்கொழுக்கட்டை. பாற்சோறு, பொங்கல், பொடி, மசியல். வற்றல், வறளி (காய் கறிகளை வெந்நீர்ப் படுத்தி வெயிலில் உலர வைப்பது).

நகரத்தார் பெண்கள் உணவு வகைகளை வெறும் பொழுதுபோக்கிற்காகவோ ஆடம்பத்திற்காகவோ அல்லாமல் விஞ்ஞான முறைப்படியும் உடலுச்குக் கேடு விளைவிக்காத வகையிலும் செய்து வந்தனர் என்பது, எல்லோரும் அறிந்த ஒன்று. மழைக்காலங்களில் மிகுதியும் கிடைக்காத காய்கறி களை வெயில் நாட்களிவ் வாங்கி அவைகளை வற்றல்களாகச் செய்து, மழைக்காலங்களில் உபயோகப்படுத்தும் பழக்கமும் உடையவர்கள். அப்பளம் இவர்களில் யாரும் செய்யாவிட்டா லும் அரிசிவற்றல், கூழ்வற்றல், ஐவ்வரசி வடாம், மிதுக்க வற்றல், கத்திரி வற்றல், மிளகாய் வற்றல், சுண்ட வறறல், கறிவடகம் முதலியன செய்வதற்குரிய பொருள்கள் மலிவாகக் கிடைக்கும் காலங்களில் வாங்கி, வெயில்காலங்களில் தயார் செய்து மழைக்காலங்களில் உபயோகப்படுத்தி வருகின்றனர்.

இவர்களுடைய உணவு முறைகளைப் பார்க்கும்போது இவர்களுடைய நுண்ணறிவு தெளிவாகப் புலப்படுகிறது. விருந்தோம்பலில் நகரத்தார்களுக்கு இணையானவர்கள் எவருமே இல்லை என்று புகழ் பெற்றவர்கள். திருமணம் சஷ்டியப்த பூர்த்தி, போன்ற பெரிய விழாக்களில் மட்டுமல்லாம் சாதாரணமான நாட்களில் கூட விருந்திற்குச் சென்றால் இவர்கள் அளிக்கின்ற உணவும், இவர்கள் தருகின்ற மரியாதையும் இவர்கள் வரவேற்கின்ற பாங்கும் நெஞ்சைவிட்டு அகலாத நீங்காத நினைவாகவே இருக்கும்.

—ஏழு—

தர்மமும் தொண்டும்

நகரத்தார்கள் வாணிபத்தில் மட்டும் சிறந்தவர்களாக அல்லாமல், சைவ சமயப் பற்றிலும் சிறந்து விளங்கியவர்கள். இவர்கள் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து பாண்டியநாட்டில் குடியேறியதும், இரணியூரில் ஏறத்தாழ 15.00,000 ரூபாய் மதிப்பிலும்- இலுப்பைக்குடியில் 5,00,000 ரூபாய் மதிப்பிலும், இளையாத்தங்குடியில் 18.00,000 ரூபாய் மதிப்பிலும், காரைக்குடிக் கோயிலில் 4,00,000 ரூபாய் மதிப்பிலும், நேமம் கோயிலில் 7,00 000 ரூபாய் மதிப்பிலும், பிள்ளையார் பட்டியில் 12,00,000, ரூபாய் மதிப்பிலும் மாற்நூரில் 16,00,000 ரூபாய் மதிப்பிலும், வைரவன் கோயில், வேலங்குடி முறையே 10,00,000 ரூபாய் மதிப்பிலும் கோயில் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்தார்கள்.

நகரத்தார்கள் தோற்றுவித்துக் குடியேறிய 76 ஊர்களில், ஒவ்வொரு ஊரிலும் திருக் கோயில்கள், பசுமடம், ஊருணி, பூங்கா, அந்தணர் உறையுள், வாகனங்கள், ஆபரணங்கள் வெள்ளிப் பாத்திரங்கள் போன்றவற்றை ஏறத்தாழ சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு ரூபாய் நான்கு கோடி செலவு செய்து அமைத்துக் கொண்டிருக்கின்றனர். இவை தவிர, நகரத்தார்கள் வசிக்கின்ற ஊர்களுக்கு அண்மையில் உள்ள ஊர்களில் ஏறத்தாழ 65,00,000 ரூபாய் செலவில் 35 ஊர்களில்

கோயில்கள், குளங்கள் அமைத்தும், இதுவும் போதாது என்று சோழநாட்டில் 78 தலங்களிலும், பாண்டியநாட்டில் 20 தலங் களிலும், கொங்கு நாட்டில் 9 தலங்களிலும், நடு நாடு. தொண்டை நாட்டுத் தலங்கள் ஒவ்வொன்றிலும், 11 இடங் களிலும் ஏறத்தாழ 60,000,000 ரூபாய் செலவில் திருக்கோயில் கள் அமைத்துத் திருப்பணிகள் செய்துள்ளார்கள். இவர்கள் திருப்பணி செய்த மொத்தத் தொகை 1958 ஆம் ஆண்டு வரை கணக்கிடப்பட்டுள்ளது, மொத்தம் 10 65,00,000 ரூபாய் என்று பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் எழுதிய, ''நகரத்தார் வரலாறு'' என்ற நூலில் காணமுடிகிறது. 1958 ஆம் ஆண்டுக்கு முன்னர் இவர்கள் கடல் கடந்து வாணிபம் செய்யச் சென்ற இலங்கையும் அங்குள்ள இரத்தினபுரி, காலி, கம்பளை, நாவலப்பட்டி, மாதமலை குருநாக்கல், பாடுரா, பூசலா, யாழ்ப்பாணம், முனீச்சரம், கண்டி. திருக்கோண மலை, சிவனடிபாதம் என்ற ஊர்களிலும், வங்காளதேசம் அக்கியாப் என்ற ஊரிலும், பர்மாவில் இரங்கூன் முதல் டேரியா வரை 59 ஊர்களிலும், சிங்கப்பூர். மலேசியா, கோலாலம்பூர், சன்னாசிமலை, மூவார், அலோஸ்டார், ஈப்போ, சிரம்பான், சிகாமட், கிள்ளான். தெலுக்கன்ஸாங், தைப்பிங், நிபோங்திபார், கலீம். சுங்குரும்பை, வாலப்பூர், பத்துப்பஹாட் மொர்ஸிங் முதலிய ஊர்களிலும் தாய்லாந்து, தெற்கு வியட்நாம். இந்தோனேஷியா மொரீஷிபஸ் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலும் தெண்டாயுத பாணி கோயில்களும், விநாயகர் கோயில், சிவன்கோயில். மாரியம்மன் கோயில், பெருமாள் கோயில் முதலியன உருவாக்கி நாள் தோறும் வழிபட்டு வரும் சிவநெறிச் செல்வர் களாக இருக்கிறார்கள். தற்போது, அவரவர் ஊரிலோ, வேறு பல ஊர்களிலோ புதுப்புதுக் கோயில்களை திருப்பணி செய்து நிர்மாணிக்காவிட்டாலும், ஒவ்வொரு ஊரிலும் உள்ள கோயில்களைப் புதுப்பித்து சுதை வேலை செய்து, வர்ணம் பூசி குட முழுக்குச் செய்து வருகிறார்கள்.

ஒரு காலத்தில் தங்கள் மூதாதையர்கள் காசி முதல் இராமேச்சுரம் வரை உள்ள அத்துணை கோயில்களுக்கும் திருப்பணி செய்த பொழுது தாங்கள் சென்று வசதியுடன் தங்குவதற்கும் தங்கள் வழித் தோன்றல்கள் பரம்பரையாக வந்து தங்கி தரிசிக்க வேண்டும் என்ற எண்ணத்துடனும், பெரும்பாலான ஊர்களில் சத்திரங்களும், அன்னதான மடங் களும், அமைத்துக் கொடுத்திருக்கின்றனர். விரல்விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையில் இருந்தால் சுலபமாகக் குறிப்பிட்டுச் சொல்லிவிட முடியும். இந்த தர்மங்கள் நீண்ட நெடிய பரம்பரையில் வளர்ந்து வந்திருப்பதால் விரிவாக எடுத்துரைக்க முடியவில்லை.

முன்னோர்கள் செய்து வந்த திருப்பணிகளைப் போல, இப்பொழுது செய்ய முடியாவிட்டாலும், தற்காலத் தேவை களை அனுசரித்துப் பல்கலைக் கழகங்கள் அனைத்து வகைக் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் மேல் நிலைப் பள்ளிகள், உயர் நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள். நர்ஸரிப் பள்ளிகள முதலானவைகளை அமைத்தும் ஆசுபத்திரிகள், தாய்-சேய் நல விடுதிகள் அமைத்தும், தொடர்ந்து வழிவழியாக தர்மங்கள் செய்து வருகிறார்கள்,

திரைகடலோடித் திரவியம் திரட்டிய நகரத்தார்கள் இப்படித் திருப்பணிகள் செய்ததோடு மட்டுமல்லாமல். கோயில்களுக்கு விலை மிக்க நகைகளை, வெள்ளித்தேர்களைச் செய்து வைத்தும், நந்த வனங்கள் அமைத்தும், குருக்கள் பண்டாரங்கள், தேவாரம் பாடுவதற்கு ஓதுவார்கள், நாதசுவரம் வாசிப்பதற்கு இசை வாணர்களாகிய மேளகாரர் களையும் நியமித்து ஒழுங்காகப் பராமரித்து வருகிறார்கள்.

கங்கைச் சமவெளியில் விளையும் அரிசியை வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யும் வணிகத்தை முதன்முதலில் 200 ஆண்டுகளுக்கு முன்னரி காசியில் தொடங்கினர். முதன் முதலில் கல்கத்தா மண்ணை மிதித்ததும் அங்கு ஒரு

தெண்டாயுதபாணி கோயிலைக் கட்டிக் கொண்டார்கள். இவர்களுடைய வாணிபம் நாளும் செழித்து நல்ல இலாபத்தை ஆண்டு தோறும் அளித்துக் கொண்டிருந்தது. இறைவனுக்கு நினைவாகச் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர்கள் ஆதலால், இவர்களுடைய இலாபத்தில் குறிப்பிட்ட சதவிகிதத்தை ஒதுக்கி அதைப் பெரும் தொகையாகப் பெருக்கியதும், 1863 ஆம் ஆண்டில் காசியில் ஒரு கட்டிடத்தை ரூ 7000/-க்கு விலைக்கு வாங்கிப் புதுப்பித்து நகரேஸ்வரர் - நகரேஸ்வரி மூர்த்திகளை ஸ்தாபித்து, நித்திய பூசை நடத்தி வர தலைப்பட்டனர். அதுவே, நகரத்தார்கள் காசியில் போய்த் தங்கும் நகரச் சத்திரமாக இன்றும் விளங்கி வருகிறது. காசிக் கடவுளர்களான விசுவநாதர்-விசாலாட்சி, விநாயகர், அன்னபூரணி, கால பைரவர் போன்ற மூர்த்திகளுக்கு நிறைவான நித்திய பூசை தொடர்ந்து நடத்துவதற்குப் பல கட்டளைகளை ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள்.

காசி நகரத்தில் மட்டுமல்லாமல், பிரயாகை, அயோத்தி கயா, தாடகேஸ்வரம், காளிகாட், கோதாவரி, நாசிக், பஞ்சவடி முதலிய ஊர்களில் நகரத்தார் சத்திரங்கள் அமைத்து, சுவாமி தரிசனத்திற்கு வருகின்ற நகரத்தார் பெருமக்களுக்கு நல்ல பல தொண்டுகளை ஆற்றி வருகிறார்கள்.

63 நாயன்மார்களில் இல்லையே என்னாத இயற்பகை நாயனாரும், இறைவனால் அம்மையே என்று அழைக்கப் பெற்ற காரைக்கால் அம்மையாரும் நகரத்தார் இனத்தைச் சார்ந்தவர்களே!

பெருஞ் சிவஞானியாகிய பட்டினத்தடிகளும் (திருவெண் காடர்), மகாகவி பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்களும் நகரத்தார் வகுப்பில் தோன்றியவரே!

நகரத்தார்கள் இத்தகைய சிவபக்தர்களாகவும், தரும சிந்தனை உடையவராகவும் இருப்பதற்குக் காரணம் அவர்கள் வழிவகுத்துக் கொண்டு, பின்பற்றிய கீழ்க்கண்ட "சாதி முறை நியாயங்களே".

1. தாய், தந்தை, குரு, தெய்வம், குலதேவதை இவர்களை வணங்கி வழிபடுவது
2. கோயில்களுக்கும், குரு நிலையங்களுக்கும் உள்ள சொத்துக்களை நிர்வகித்து அதிலிருந்து வரும் ஊதியததை அந்தந்தத் தருமங்களுக்கே செலவிடுவது.
3. சாதிமுறை நியாயங்கள் தவறாமல் இருப்பது. நல்ல அறச் செயல்களைச் செய்வது.
4. ஆடவரும் பெண்டிரும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் குருபீடங்களிலேயே தீட்சை பெறுவது.
5. சிவமதத்தையே பின்பற்றுவது,
6. ஏக கோத்திரத்தில் திருமணம் செய்துகொள்ளாமல்இருப்பது (கோத்திரம் என்பது கோயில்களும் உட்பிரிவுகளும்)
7. தங்கள் கோத்திரத்திலேயே சுவீகாரம் செய்துகொள்வது.
8. இரத்தினம், சுவர்ணம், பலசரக்கு முதலிய வியாபாரம் செய்தல்.
9. சீவ வதையான வியாபாரங்கள் செய்யாமலிருத்தல்.
10. வாய்மை தவறாத மேலோர்களிடம் பணம் கொடுக்கல் வாங்கல் செய்வது.
11. தரும வட்டியே வாங்குவது.
12. குதிரை வியாபாரமும், வெற்றிலை முதலிய அழுகல் சரக்கு வியாபாரமும் செய்யாமல் இருத்தல்.
13. குடிவாரத்திற்கு உழுது பயிரிடாமல் இருத்தல்.
14. ஊரின் அம்பல நிலைமை பெறாதிருத்தல்.

15. திருட்டு வியாபாரத்தை நினைத்தும் பாராதிருத்தல்.
16. பிறர் மனைவி சேராப் பேராண்மையுடன் இருத்தல்.
17. தாசிகளிடம் கொடுக்கல் வாங்கல் செய்யாதிருத்தல்.
18. நகரமுறை தவறியவர்களோடும், இராசதண்டனை பெற்றவர்களோடும், சோரம் செய்தவர்களோடும் சேரா திருத்தல்.
19. கடலுக்கு மேற்கு, பிரான்மலைக்கு கிழக்கு, வைகைக்கு வடக்கு, வெள்ளாற்றிற்குத் தெற்கு என்ற இந்த நான்கு எல்லைக்குள்ளேயே குடியிருத்தல்.
20. பெண்கள் சுவாமி தரிசனம், தீர்த்தயாத்திரை போன்ற வைகளுக்கு அவரவர் ஆடவர்களுடனேயே சென்று வருதல்.
21. எல்லா விஷயங்களிலும் முன் வழக்கப்படி நடத்தல்.
22. கோயில் வாசல் அல்லது மடத்து வாசலில் சாதிக் கூட்டம் கூட்டிப் பேசுதல்.
23. ஒன்பது கோயில் நகரத்தாரும் அவரவர்க்குரிய கோயில் களிலிருந்து சுவாமிக்குச் சாத்தின மாலையும், விபூதிப் பிரசாதமும் வந்துதான் திருமணம் நடத்த வேண்டும்.
24. திருமணம் நடைபெறும் விவரம் குறித்து கோயில் வாசல் களில் தாம்பூலம் வைத்துத் தெரிவிக்க வேண்டும்.
25. இரணியூர்க் கோயிலாரும், பிள்ளையார்பட்டிக் கோயிலா ரும் சகோதரர்கள் ஆகையால் தம்முள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. மற்றைய கோயிலாருடன் செய்து கொள்ளலாம்,

—எட்டு—

எண்ணும் எழுத்தும்

நகரத்தார்கள் வாணிகத்தில் தேர்ந்தவர்கள் ஆவார்கள். எண்ணையும் எழுத்தையும் நன்கு பயின்றிருந்தார்கள். அவர்களுடைய கணக்குகளில் ஒன்றையும், ஒன்றுக்குக்கீழ்ப்பட்ட சிற்றெண்களையும் அவர்கள் பயன்படுத்தி வந்தது அவர்கள் கணிதப்புலமைக்குச் சான்றாகும். நகரத்தார்கள் அயல்நாடுகளில் கொண்டுவிற்ற காலங்களிலும், அல்லது உள்ளூரில் லேவாதேவி செய்து கொண்டிருந்த காலங்களிலும், அவர்கள் சொந்த வீட்டு வரவு செலவில்கூட, அவர்கள் தமிழ் இலக்கங்களையே பயன்படுத்தி வந்தனர், ஏறத்தாழ 1940-42 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகுதான் ஆங்கில இலக்கங்களை அவர்கள் கணக்குகளில் பயன்படுத்தி வந்ததாகத் தெரிகிறது.

ஒரு கடைக்கு மேலாளாகச் சென்று அந்தக் கடையை நிர்வகிக்க வேண்டும் என்றால், அவர் தன்னுடைய திண்ணைப் பள்ளிக்கூடப் பருவகாலத்திலேயே, கீழ்வாய் இலக்கம், மேல்வாய் இலக்கம், பெருங்குழிமாத்து, சிறுகுழி மாத்து, சதுரம் எண்பது, எண்சுவடி, வருஷப் பிறப்பு முதலிய எல்லாப் பாடங்களையும் மனனம் செய்து அதில் தேர்ச்சி பெற்றவராக இருக்கவேண்டும். அந்தக் காலத்து அத்தனை நகரத்தார்களும் இந்த வாய்ப்பாடுகள் அனைத்தையும் மனனம் செய்தவர்களாக இருந்ததால்தான், கணிதத்தில்

வல்லவர்களாய் இருக்க முடிந்தது. எவ்வளவு பெரிய சிக்கலான வட்டிக் கணக்காக இருந்தால்கூட. இந்தக் காலத்தில் உபயோகத்தில் இருக்கக் கூடிய கால்குலேட்டர்கள் இல்லாமலேயே, காகிதம் பென்சில்கூட இல்லாமல், மனக் கணக்காகவே போடக்கூடிய வல்லமை பெற்றவர்கள். இந்தக் கால இளைஞர்களுக்கு அந்தத் தமிழ் இலக்கங்களின் வரி வடிவம் ஒலி வடிவம் என்ன என்பதுகூடத் தெரியாத காரணத்தால் அவைகள் இங்கே விளக்கமாகத் தரப்பட்டிருக்கின்றன.

தமிழறிஞர், கம்பனடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்கள் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிட்ட ''கையேடு'' என்ற நூலில் நம்முடைய தமிழ் எண்களும் இலக்கங்களும் கி.பி. 2ம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகிற விபரங்களைப் பட்டியலிட்டுக் காட்டியிருப்பது நமக்குப் பெரிதும் பயனுடையது. அந்தப் பட்டியலும் தமிழ் இலக்கங்களின் வரிவடிவம், அதனுடைய ஒலிவடிவம்(உச்சரிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும்), அதனுடைய மதிப்பு முதலியவை களை விபரமாகக் காட்டியுள்ள பட்டியலும் இங்கே தரப் பட்டிருக்கின்றன. இவைகளை முறையாகத் தெரிந்து கொண்டுவிட்டால் முந்திரி இலக்கம், எண்சுவடி, கீழ்வாய் இலக்கம் முதலிய வாய்பாடுகளைப் படித்துப் புரிந்து கொள்வது சுலபமாக இருக்கும்.

தமிழ்க் கணக்கு தனித்தன்மை கொண்டது. தமிழ் எழுத்துக்களே எண்களாகக் கையாளப்பட்டன. க என்பது ஒன்றாகவும், ரு என்பது ஐந்தாகவும், உ என்பது இரண்டா கவும், ய என்பது பத்தாகவும், ள என்பது நூறாகவும், அ என்பது எட்டாகவும் வ என்பது காலாகவும், இ என்பது அரை யாகவும் இப்படித் தமிழ் எழுத்துக்களே எண்களாகக் கொண்டு கையாளப்பட்டு வந்திருக்கிறது. இவ்வழக்கு இப்போது இல்லை.

உ. சிவமயம்

நகரத்தார்களுடைய நல்ல பழக்கவழக்கங்களில் கடிதம் எழுதுகின்ற முறை (Letter Writing) ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டியவைகளாகும். தன்னுடைய வயதிற்கு மூத்தவர்களுக்கு எழுதுகின்ற விதமும், தனக்கு இளமையில் இருக்கின்றவர்களுக்கு எழுதுகின்ற விதமும் ஒரு முதலாளி தன்னுடைய ஏஜெண்டிற்கு எழுதுகின்ற கடிதத்தின் விதமும், ஒரு ஏஜண்ட் தன்னுடைய முதலாளிக்கு எழுதுகின்ற கடிதத்தின் விதமும் கீழே தரப்பட்டிருக்கின்றது.

ஒரு கடிதத்தைப் படிக்கின்ற போதே, அந்தக் கடிதம் எப்படிப்பட்டவரிடமிருந்து, எப்படிப்பட்டவருக்கு எந்தச் சூழ்நிலையில் எத்தகைய தன்மையில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை எளிதாகப் புரிந்துகொள்ளலாம். இலக்கியங்களைப் படித்துப் படித்து இன்புறுவதுபோல, இந்தக் கடிதங்களையும் படித்துப் படித்து இன்புறமுடியும். பண்டித ஜவஹர்லால் நேரு தன் மகள் இந்திராவுக்குத்தான் சிறையில் இருந்தபோது எழுதிய கடிதங்களை வைத்து, அந்தக் காலக்கட்டத்தில் உலகத்தினுடைய சரித்திரத்தையே நம்மால் உணர்ந்து கொள்ளமுடிந்தது. அதுபோல, ஒரு முதலாளிக்கும் அவருடைய இரங்கூன் கடையின் ஏஜண்டுடன் பரிமாறிக் கொண்டுவந்த மூன்று ஆண்டுகளின் கடிதங்களையும் வரிசையாக எடுத்துவைத்துப் படித்துப் பார்த்தால், அந்தக் காலக் கட்டத்தில், இரங்கூனில் நடைபெற்ற அத்துணை நிகழ்ச்சிகளும், விலைவாசி ஏற்றத்தாழ்வுகளும், அரசியலில் ஏற்படுகின்ற மாற்றங்கள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், மக்களின் பழக்கவழக்கங்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள் முதலிய எல்லாச் செய்திகளும், தங்கள் தொழில் சம்பந்தமாய் உள்ள விபரங்களும், தெரிந்துகொள்ள முடியும். இரங்கூனில் உள்ள பெரியகடையின் 10, 20 ஆண்டுகால கடித பரிமாற்றங்களை ஒரு ஆராய்ச்சியாளன் எடுத்துவைத்துப் படிப்பானேயானால்

அந்த நாட்டுக்குச் செல்லாமலேயே, அந்த நாட்டினுடைய சரித்திரத்தை அவனால் எழுதமுடியுமானால் நகரத்தார் களுடைய கடிதம் எழுதுகின்ற கலையே காரணமாக இருக்கும். எந்த ஒரு கடிதத்தை முடிக்கும் பொழுதும் அவர் கள் எவ்வளவு செல்வாக்கு உள்ளவர்கள் ஆனாலும் சரி, தங்கள் கையெழுத்தைப் போடுவதை வழக்கமாகக் கொள் ளாமல், தாங்கள் சார்ந்திருக்கின்ற தெய்வத்தின் துணையா லேயே அந்தக் கடிதங்களை முடித்து வைப்பார்கள். எவ்வளவு இக்கட்டான சூழ்நிலையிலும், அல்லது கோர்ட்டுகளில் ஏற்படு கின்ற வழக்குகளிலும், எந்தவொரு கடிதமும் சாட்சியாக எடுத்துக்கொள்ளக் கூடியசூழ்நிலை வந்தாலும், அது கையெழுத்து இல்லாத கடிதம் என்று எந்தக் கோர்ட்டிலும் தள்ளுபடியானது இல்லை, காரணம் தங்கள் கையெழுத்தைக் காட்டிலும் தாங்கள் சார்ந்திருக்கின்ற தெய்வத்தின் துணை யையே நம்பியிருந்ததுதான்.

உ சிவமயம்

சோம மா,
தேவகோட்டை

அரு. பழ.
மோல்மேன்

ஸ்ரீமுக வருஷம் மாசி மாதம் 29உ

பழநியப்பன் எழுதிக் கொண்டது. அவடம் தங்கள் சௌக்கியத்திற்தும் எழுதியனுப்பி வைக்கும்படி செய்ய வேண்டியது,

ஆச்சியும் அத்தானும் சென்றவாரம் இங்கு வந்திருந் தார்கள். அவர்கள் மகன் அண்ணாமலைக்கும் காப்புக்கட்டுப் புதுமை செய்யவேண்டும் என்று ஆச்சியினுடைய மாமனார் அவர்களும், ரொம்பவும் கண்டிப்பாகச் சொன்னதாகவும் ஆகையால் வருகிற பவ வருஷம் சித்திரை மாதம் 7உ காப்புக் கட்டுப் புதுமைக்கு நாள் பார்த்திருப்பதாகவும் தங்களுக்கு

விபரம் எழுதியனுப்பிவைக்கும்படியும் அய்த்தானும் தங்க ளுக்கு விபரம் எழுதியனுப்பிவைப்பதாகச் சொல்லிச், சென்றார்கள்.

இவ்விடம் வசூலாக வேண்டிய வாடகைகளையும்.வட்டிப் பாக்கிகளையும் ஒழுங்காக வசூல் செய்து, பாங்கில் சமால் செய்து கொண்டுவருகிறேன். நம்மள் வீட்டு பால் தேவைக்கும் பசுமாடு ஒன்று இருந்தால் நல்லது. என்று, ஆத்தாளும் சொல்லியதால் நம்மள் ஊர் சுப்பையாகோனார் மூலமாக ரூ. 175/-க்கு செவலை மாடு ஒன்றும் வாங்கியிருக்கிறது. தினமும் காலையிலும், மாலையிலும் 2 பக்காக்களுக்கு குறை யாமல் கறக்கிறது. நம்மள் தேவைபோக பாக்கியை விற்று வருகிறோம்.

தம்பியும் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் சென்று நல்லவித மாகப் படித்து வருகிறான். நம்மள் பங்காளி செ.அ. வீட்டிலும் வருகிற பங்குனி மாசம், அவர்கள் பொண்ணுக்கு கல்யாணம் வைத்து இருக்கிறார்கள், மாப்பிள்ளையும் கண்டனூர் ராம, அண.ராம, சின்னக்கருப்பன் செட்டியாரு டைய மகன். இரண்டு விராகன் சீதனமும். முறைக்குச் சிட்டையும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

இவடம் ஆகவேண்டிய வேலைகளுக்கு தாங்கள் எழுதி யனுப்பிவைக்கச் செய்கிற வகையில் செய்து, தகவல் எழுதி யனுப்பிவைக்கிறேன்.

மைற்ற தாக்கல் பின்பு.
வேணும்
அண்ணாமலையார் துணை

உ சிவமயம்

அரு. பழ.   சோம. ம,
மோல்மேன்   தேவகோட்டை

ஸ்ரீமுக வருஷம் பங்குனி மாசம் 7உ

மாணிக்கம் எழுதியது இப்பவும் அவடம் மாசி மாதம் 29உ தபாலும் வந்து சேர்ந்தது. இவடம் நானும் சௌகரிய மாக இருக்கிறேன். அவடம், தானும், தன் தாயாரும், தம்பியும் மைற்றவர்களும் உள்ள சௌகரியத்திற்கு எழுதி யனுப்பவும்.

தன்னுடைய கடிதத்தில் மாசி மாதம் 17உ நான் எழுதிய கடிதம் வந்து சேர்ந்ததாக எழுதவில்லையே மேற்படி கடிதத் தில் சமையல்கார சேதுவுக்கு அண்டிமேன் எழுதி வாங்கிக் கொண்டு ரூ 250/- கொடுக்கும்படி எழுதியிருந்தேன். அது விபரமும் எழுதவில்லை. தன் தமக்கை வள்ளியம்மை மகன் அண்ணாமலையுடைய காப்புக் கட்டுப் புதுமை சம்பந்தமாக மாப்பிள்ளையும் அவர்கள் தகப்பனார் அவர்களும் எனக்கு எழுதியிருக்கிறார்கள். நானும் இவடம் வரவேண்டிய இனங் களில் வசூல் செய்து கொண்டு. ஆசாமிகள்பேரால் போட்ட இரண்டொரு கேசுகளும். பைசல் ஆகவேண்டி இருப்பதால், அவைகளையும் முடித்துக் கொண்டு. பங்குனி மாதக் கடைசி யில் ஊருக்கு வந்துசேர ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேன், அதற்கிடையில் நாமள் அவர்களுக்குச் செய்யவேண்டிய தீஞ் சாமான் வகையறாக்களுக்கும், பலகாரவகையறாக்களுக்கும், அவடம் நம்மள் பங்காளி வீட்டுப் பெண்களைக் கேட்டுக் கொண்டு அதுபோல செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து கொள்ளவும்.

பசுமாடு வாங்கியிருக்கிற விபரமும் பார்த்துக் கொண்டேன், நம்மள்தோட்டத்தில் குடியிருக்கிற சின்னையா வையும் வந்து மாடு கன்றுகளைப் பார்த்துக் கொள்ளும்படி

சொல்லவும் சம்பளமும் மாதம் 5 ரூபாய்க்கு மேல் போகாமல் பார்த்துப் பேசிக் கொள்ள வேண்டியது.

அவடம் இனங்களில் கொடுத்து இருக்கிற துகைகளுக்கும் தொடர்ந்து வட்டிவாசிகளை வாங்கிக் கொண்டு வரவும். நமக்கு சிலவு நடைகள் கூடிக் கொண்டே போவதால் அசலை யும் இணங்கிய வரை வசூல் செய்யவும், புதிதாக எதுவும் கொடுக்க வேண்டாம்.

தம்பியினுடைய அரை வருஷப் பரீக்ஷை மார்க்குகள் பார்த்துக் கொண்டேன். மைற்ற பாடங்களைவிட இங்கிலீஷில் மார்க் குறைவாக வாங்கியிருக்கிறானே. கவன மாகப் பார்த்துப் படிக்கும்படி சொல்லவும். வாத்தியார் ராமு அய்யரிடம் சொல்லி சாயங்காலம் ஒருமணி நேரம் வந்து வீட்டுப்பாடம் சொல்லும்படி சொல்ல வேண்டியது. சம்பளம் வகையறாக்களை நான் வந்தபிறகு பேசிக்கொள்ளலாம். நம்மள் பங்காளி செ.அ. வீட்டுக்கல்யாணத்துக்கும் பங்காளி வழக்கப்படி போய்வர வேண்டியது,

மைற்ற தாக்கல் பின்பு,
வேணும்
அண்ணாமலையார் துணை

மேலே காட்டியுள்ள இரண்டு கடிதங்களும் தன்னைவிட வயதில் மூத்தவர்களுக்கும், மூத்தவர்கள் இளையவர்களுக்கும் எழுதிக் கொள்கிற கடிதங்களின் மாதிரிகள் ஆகும். இந்த இரண்டு கடிதங்களின் பின்னணியை வைத்துச் சிந்தித்துப் பார்த்தால், இந்தக் குடும்பத்தினுடைய சூழ்நிலையும், பெரிய வர்களுக்குக் கொடுக்கின்ற மரியாதையும், அவர்கள் வீட்டில் நடக்கின்ற ஒவ்வொரு நிகழ்ச்சிகள் பேரிலும் உள்ள கடமையும் அதை செயலாற்றுகின்ற விதமும் புலனாகும்.

இனி கீழ் வருகின்ற இரண்டு கடிதங்களும் ஒன்று ஒரு முதலாளி தன்னுடைய ஏஜெண்டுக்கு எழுதுகின்ற கடிதமும், ஒரு ஏஜண்டு தன்னுடைய முதலாளிக்கு எழுதுகின்ற கடிதமும் மாதிரியாகக் கீழே தரப்பட்டிருக்கின்றன.

உ

சிவமயம்

ஆ. முத்துப்பட்டணம் தோஞ்சை
சு.நா. சு.நா.

வெகுதானிய ஹு ஐப்பசி மீ 16உ

நாச்சியப்பன் கதிரேசனுக்கு எழுதியது. இப்பவும் இவடம் இது கடதாகியும் நாளது மாதம் 3உ கட தாசியும், 5 உயில் வெங்கடாசலத்திடம் கணக்குகள் எழுதிக் கொடுக்கும்படி எழுதியிருக்கிற கடதாசியும் வரத் தெரிய வருமே. அவடம் தேதிக்கு முன் மாதம் 27உ கடதாசியும், நாளது மாதம் 3உ கடதாசியும் அத்துடன் 56 நிர். குறிப்பு நகலும் வந்து சேர்ந்தது.

தவணைக் கணக்குகளுக்கெல்லாம் வட்டி போட்டுத் தாக்கல் செய்யவும்.

தனக்கு பதிலாளும் நற்சாந்துபட்டியில் வருஷம் 3க்குப் பேசி இருக்கிறது. எப்ப வேண்டுமென்றாலும் பிறப்பட்டு வருவான். செல்லையாவும் நாளது மீ 20உ பிறப்பட்டு வருகிறான்.

இனங்களில் சுருதி செய்து பணம் வாங்க வேண்டியவை களை வாங்கி நேர் செய்ய வேண்டிய இனங்களை நேர் செய்தும், வட்டி போடவேண்டியவைகளை வட்டி போட்டு தாக்கல் செய்தும், ஆள் வந்ததும் பிறப்பட்டு வர வேண்டியது. பெருந்தொகையாய் உள்ளதுகளை வசூல் செய்தால்தான் பணம் மிதப்பு ஏற்படும். அவைகளையும் கவனித்து வசூலிக்கவும்.

வீட்டுச் சேவாவை வாங்கி அவடத்தில் சிலவுக்கு வைத்துக் கொள்ளப்படாது. குடியிருக்கிற 35 நிர் வீட்டுக்கு சாயம் பூசவும், சில்லரைச் செலவும் செய்ததைச் சிலவு எழுதாமல், சேவா கணக்கில் பற்று எழுதும்படி யார் சொன்ன யோசனை.

169 நிர் அண்டிமேனுக்கும் பணம் வாங்காமல் கிஸ்தியும் வாங்காமல் சீட்டு எழுதி மாதம் 17 ஆகியும் மூன்று கிஸ்தி தான் வாங்கியிருக்கிறாய், ஆகச்சே பணத்தை வாங்குகிறது இல்லாதிருந்தால் சமன் செய்யவும்.

தீபாவளிக்கு வருஷா வருஷம் சிலவு எழுதியும் அப்பால் ஊடே சிலவு எழுதியும், இப்ப தனக்கு தீபாவளி வேட்டிக்காக ரூ 45/- எழுதியிருக்கிறாய். அதுவும் முறையல்ல.

1வது நிர். நிலத்துக்கு 245 கூடை நெல் வந்திருக்கிறது. அதுவும் நல்ல வரும்படி. அப்படி இருக்க விலை ரெம்ப குறைச்சலாய் விற்று விட்டாய். நட்ட லாபங்களைப் பார்த்து எல்லாம் யோசித்துச் செய்ய வேணும்.

இருப்பு ரெம்ப இறங்குதே முன் பொருமுறை அதைப் பற்றி விபரமாக எழுதும்படி எழுத இதுவரை பதில் இல்லையே.

குறிப்பு நகல் எழுதி வருவதும், சில எழுத்துக்கள் திறனா யில்லாமலும் வீச்செழுத்தினால் சரியாய் விளங்கவும் இல்லை. அடுத்தாளிடமும் எழுத்துக்களை நிறுத்தி வீச்சில்லாமல் எழுத்துக்களைப் பெரிசாகவும் எழுதியனுப்பும்படி சொல்லவும். தானும் சுணங்காமல் கணக்குகளை எல்லாம் முடித்துக் கொண்டு, பழைய கணக்குப் புஸ்தகங்கள், ரொக்கச் சிட்டை, வீட்டுச் சேவா, புத்தகங்கள், கச்சாத்து முதலியவைகளையும் பக்காவாய்க் கட்டிக்கொண்டு சங்கராந்திக்கு ஊருக்கு வரும்படி பார்த்துக் கொள்ளவும்.

மைற்ற தாக்கல் பின்பு,
வேணும்
ஸ்ரீதெண்டாயுதபாணி துணை

உ

சிவமயம்

தோஞ்சை ஆ. முத்துப்பட்டணம்

சு. நா. சு. நா.

வெகுதானிய வருஷம் அர்ப்பிசி மீ 23உ

கதிரேசன் எழுதிக் கொண்டது. இப்பவும் அவடம் அர்ப்பிசி மீ 16உ கடிதாசியும் வந்து சேர்ந்தது. இவடம் நாளது மீ 19உ கடதாசியும் அத்துடன் ரூ 200/-க்கு லெட்சுமி ஆச்சி உண்டியல் கணக்கு வட்டிச்சிட்டை நகலும் ரூ 600/-க்கு ஷை தேதி உண்டியல் ஒன்றும், வீட்டுச்சேவா லிஸ்டு ஒன்றும் வந்து சேர்ந்த விபரம் எழுதியனுப்பி வைக்கும்படி செய்ய வேண்டியது.

அடுத்தாள் செல்லையாவும் இவடம் வந்து சேர்ந்ததும் விபரம் எழுதி அனுப்பி வைக்கிறேன்.

கருப்பையா கணக்கையும் தாக்கல் செய்து பற்று வழி நீக்கி பாக்கி இருக்கிற ரூபாய்க்கும் இன்னும் ஒரு வாரம் முன் பின்னாக உண்டியலும் எழுதி வாங்கி, அவடத்துக்கு அனுப்பி வைத்து ஷை கணக்குகளுக்கு நகலும் எழுதி அனுப்பி வைக்கிறோம்.

கரு நா. நடப்புக் கணக்கில் பாக்கி இருப்பதற்கும், நமக்குத் தொகை சேரச்சேர கொடுத்துவரச் செய்கிறோம்.

141 நிர், ஆசாமியிடம் ரூ 150/- நட்டம் வந்தாலும் இவடம் நோக்கம்போல் பணம் வாங்கவும் அல்லது மேல் நடத்தி வசூல் செய்யக்கூடிய விபரத்துக்கு விபரம் எழுதி யனுப்பி வைக்கும்படி செய்ய வேண்டியது.

முன் எழுதியபடி அ.ராம. பணத்துக்கு உண்டியல் வாங்கி அனுப்பி வைத்துக் கணக்கு எழுதி ஷை கணக்கு குறிப்பு நகலும் அனுப்பி வைக்கிறோம்.

52, 58, 67, 94. நிர். அண்டிமேன்கள் பாக்கிக்கும் அந்தந்தத் தேதி வரை வட்டிக் கணக்குப் பார்த்து வசூல் செய்திருக்கிறது.

95 நிர் ஆசாமியும் ஷெ மகன் இருவரிடமும் தொகை ரொம்பவும் ஜாஸ்தியாகத் தெரிவதால், எல்லாத்தையும் சேர்த்து வேறொரு அண்டிமேனில் பேர்த்தெழுதி வட்டியைக் கையில் வாங்கிக் கொண்டு ஷெ ஆசாமியின் குடும்பத்தில் எல்லோரிடமும் கையெழுத்து வாங்கிக் கொள்கிற விபரமும் எழுதியனுப்பி வைக்கும்படி செய்ய வேண்டியது.

114 நிர். ஆசாமிகளுக்கு நோட்டீசு அனுப்பினால் வந்து வட்டி தருவார்கள். அது சமயம் அண்டிமேனையும் பேர்த் தெழுதி வாங்கிக் கொள்கிறோம்.

117 நிர் ஆசாமியிடம் வட்டி வசூல் செய்திருக்கிறது. பட்டா நிர். பி. எஸ். 7950 ஷையானிடம் இருந்தால் கொண்டு வந்து தரும்படியும், இல்லையென்றால் ஷெ பட்டாவிற்கு கவர் மெண்ட் காப்பி ஒன்றும் எடுத்துத் தரும்படியும் சொல்லி யிருக்கிறது. அதையும் பார்த்து வாங்குவதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

39, 41, 45, 90, 69, 77, 80, 91, 103, 107, 121, 144, 163, 199, 217 நிர். இனங்களில் போய் வட்டியையும், கிஸ்தி களையும் டிகிரிப் பாக்கிகளையும், வாங்கி கணக்கில் வரவு செலவு செய்து கொண்டிருக்கிறோம்.

நம்மள் குடியிருக்கிற 35 நிர் வீட்டுக்கு பின்புறமும் பக்கத்து சைடிலும் ரெம்பப் பள்ளமாக இருக்கிற படியால் அதற்கு மட்டும் சாம்பல் கொண்டு வந்து போட்டு நிரவிவிட்டு இருக்கிறது. பின்னீடு எந்தத் தொந்தரவும் ஏற்படக் கூடிய தாக ஒரு வேலைகளும் மேற்படி வீட்டில் பார்க்க இல்லை. முக்கியமாகப் பார்க்க வேண்டிய வேலைகளை மட்டுந்தான் பார்த்து வருகிறோம்.

அவுப்போ பெரி. நா. நாவும் கேசை அப்பீல் செய்து இருக்கிறார்கள். நாளது மீ 29உக்கு மேல் மேற்படி கேசும் நடைபெறும். ஏற்கனவே லாயர் மங்களதாசு ஆபீசு மூலமாக நமக்கு கேசு பேசியதால் அப்பீல் கேசுக்கும் மேற்படி லாயரி ஆபீசில் இப்போது இருந்து வருகிற வெள்ளைக்கார மோரீசு என்பவரிடம் பீசு ரூ 150/- பேசி கேசுக் கட்டுக்களையும் கொடுத்திருக்கிறது. கேசு அனுகூலமானால் கேசுச் செலவு தொகை பூறாவும் நமக்குத் தர மேற்படி லாயர் ஒத்துக் கொள்ளாததனால் ரூ 150/- மட்டும் திரும்பத் தருவதாகப் பேசி இருக்கிறது, கேசு முடிவு தெரிந்ததும் விபரம் தெரியச் செய்கிறோம்.

அவடம் இருந்து எனக்கு பதிலாள் வருவதற்குள் கூடுமானவரை வசூல் ஆக வேண்டியவைகளை வசூல் செய்து கொண்டு மேற்கொண்டு, இனங்களில் எதுவும் கொடுக்காமல் பார்த்துக் கொண்டும் மேற்படி பதிலாள் வந்ததும் கணக்கு விபரங்கள் ஆசாமி விபரங்கள் மைற்ற எல்லா விபரங்களும் வழக்கம் போலச் சொல்லி. தாங்கள் எழுதியிருக்கின்றபடி, பழைய கணக்கு புஸ்தகங்கள், ரொக்கச்சிட்டை, வீட்டுச் சேவா புஸ்தகங்கள், கச்சாத்து முதலியவைகளையும் பக்காவாய்க் கட்டிக் கொண்டு சங்கராந்திக்கு ஊருக்கு வந்து வரும்படி பார்த்துக் கொள்கிறேன்.

மைற்ற தாக்கல் பின்பு
வேணும்
ஸ்ரீதெண்டாயுதபாணி துணை

மேற்படி கடிதங்களிலிருந்து ஒரு முதலாளி தன்னுடைய சொந்த ஊரிலிருந்து கொண்டே அயல் நாடுகளில் உள்ள தன்னுடைய கடைகளிலுள்ள ஏஜண்டுகளுக்கு கடிதங்கள் மூலமாகவே விபரங்கள் எழுதி, கடைகளை நடத்தி வருகின்ற பாங்கும், ஒரு கடையின் ஏஜண்டு தன்னுடைய முதலாளியிடம் எவ்வளவு மரியாதையுடனும், அவர் எழுதுகின்ற ஆர்டர்படி

கடையை நிர்வாகம் செய்து வருகின்ற விபரங்களும் மிகத் தெளிவாகப் புரியும். ஏஜண்டு எழுதுகின்ற ஒவ்வொரு கடிதத்திலும் எழுதுகின்ற நாளிலுள்ள நெல் விலையையும், பவுன்விலையையும் வைத்தே ஒரு முதலாளி அந்தப் பருவ காலங்களில் ஏற்படுகின்ற பண வீக்கத்தையும் பணத் தேவைகளையும் தீர்மானம் செய்து இனங்களில் கொடுக்க வேண்டியவைகளுக்கும், அல்லது இனங்களிலிருந்து வசூல் செய்வதற்கும் ஆர்டர்கள் அனுப்புவதற்குத் தோதாக இருக்கும்.

எத்தனை நாட்டவர்களும் இலக்கியவாதிகளும் எவ்வளவோ விதமான கடிதங்கள் எழுதி இருந்தாலும், நகரத்தார்கள் ஒருவருக்குள் ஒருவர் எழுதிக் கொள்கின்ற கடிதங்களில் காணப்படுகின்ற சூட்சுமமும், திறமையும் வேறு எந்தக் கடிதங்களிலும் காண முடியாது. கடிதம் எழுதுவதை ஒரு கலையாகவே நகரத்தார்கள் கைக் கொண்டிருந்தார்கள் என்று சொன்னால் அது மிகையே இல்லை.

ஒரு கடையில் ஒரு மேலாள் நல்ல விதமாக மூன்று கணக்குகள் கொண்டு விற்று கணிசமான லாபம் சம்பாதித்துக் கொடுத்தால் அந்த மேலாளையே முதலாளி தன் கடையில் கூட்டாளியாகச் சேர்த்துக் தான் மட்டும் முதலாளியாக இல்லாமல் அடுத்தவரையும் முதலாளி ஆக்குகின்ற பரந்த மனப்பான்மை நகரத்தார்களிடையே இருந்து வந்திருக்கிறது என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

—ஒன்பது—

வழி காட்டியவர்களும் வழி காட்டுபவர்களும்

உலகத்தில் உள்ள எந்தத் துறையாயினும், அது தொழில், மருத்துவம், கல்வி, சட்டம், கவிதை, எழுத்து, ஓவியம், இசை, கலை, பொறியியல், கணக்குத் தணிக்கை போன்ற பல துறைகளிலும் நம்மவர்கள், வல்லவர்கள் என்ற முத்திரையைப் பதித்துள்ளனர். அவர்களைப் பற்றிய விபரங்கள் அவர்கள் காட்டிய வழி பற்றிக் கீழே தரப் பெற்றிருக்கிறது. குறிப்பாக ஒன்றினைச் சொல்ல வேண்டும். இந்தச் செட்டி நாட்டைப் பற்றி யார் நூல் எழுதத் தொடங்கினாலும் அவர்கள் மதிப்புமிகு செட்டிநாட்டரசர் குடும்பத்தைப்பற்றி எழுதாமல் இருக்க முடியாது. ஏனெனில் தனி ஒரு மனிதனே மாபெரும் பல்கலைக்கழகத்தை உருவாக்கியதும், செட்டிநாட்டில் வாழ்கின்ற, நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் பால் அவர்கள் கொண்டுள்ள அளவிலாப் பற்றும் தான் அதற்குரிய காரணங்களாம். அவர்களைப் பற்றி நீங்கள் அறிய வேண்டாமா?

மு.அ. அண்ணாமலை செட்டியார் இராசாசர்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மனிதர். தமிழ் நெஞ்சங்களில் எல்லாம் நீங்காத இடத்தைப் பெற்றவர்.

சிதம்பரத்தை அடுத்துள்ள திருவேட்களம் என்ற ஊரில் 1924ல் மீனாட்சி கல்லூரியைத் துவக்கினார். 1929ல் தமிழ்க் கல்லூரி மறைந்தபின் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மலர்ந்து மணம் வீசியது. அதே ஆண்டு தமிழ்ப் புலம் பிரிக்கப் பட்டு பேராசிரியர் அமர்த்தப்பட்டதோடு, பி. ஏ. ஆனர்ஸ் என்ற பட்டம் வழங்கப் பெற்றது.

உ.வே.சா, விபுலானந்தர், காசுபிள்ளை, நாவலர் பாரதியார், பண்டிதமணி, சேதுப்பிள்ளை, கவிமணி ஆகியோரை ஆதரித்தார்.

அரசர் சின்ன அண்ணாமலைக்கு ஒரு கட்டளையிட்டார். அதன்படி டி.கே.சி, கல்கி, சின்ன அண்ணாமலை ஆகிய மூவரும் சாந்தி நிகேதனத்தில் நூல்களைத் தொகுத்தனர்.

1930-ல் அண்ணாமலை நகரில் ராஜா அண்ணாமலை இசைக் கல்லூரி துவக்கப்பெற்றது. துன்பங்களையும் துயர் களையும் வென்று இசை வளர்த்தார். எத்தனையோ நூல்கள் நூறு நூறாக வெளிவந்துள்ளன, இவர் ஆதரவால், அளவில்லாத ஒரு தொகையைத் தான் ஒரு தனி மனிதனே மட்டும் கொடுத்து அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கண்டார் என்றால் அது அவனி போற்றும் ஒன்றல்லவா! இந்தியாவிலேயே தனி ஒருவர் பல்கலைக்கழகம் கண்டது இந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மட்டுந்தான் என்றால் அது மிகையேயில்லை.

அழகப்ப செட்டியார் இராம. டாக்டர்

வள்ளல், தமிழ்ப் பேச்சாளர், தமிழ்ப் புரவலர், காரைக்குடிக் கம்பன் கழக முன்னாள் தலைவர், குமுதம் வார இதழின் கௌரவ ஆசிரியர்.

1943-ல் தன் அருமை மகள் உமையாள் திருமணத்தில் கேரளப் பல்கலைக்கழகத்துக்கு 1,00,000 ரூபாய் நன்கொடை வழங்கித் தமிழ்த் துறையை வளர்த்தது. டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் தொகுத்த சொல்லடைவு நூலுக்கு இவர் தந்த ஆதரவு.

கலைக் களஞ்சியம் தொகுக்கக் காரணமாக இருந்ததோடு 1947-ல் ரூ 10,001 நன்கொடை வழங்கி செயற் குழுவிலும் பங்கேற்றார்.

1958-ல் தமிழ் முதுகலை வகுப்புத் தொடங்கியது. இவர் திரு அழ. இராமநாதன் செட்டியாருக்கும், திருமதி உமையாள் ஆச்சிக்கும் மகனாக 6-4-1909-ல் பிறந்தார். காரைக்குடிமீனாட்சி உயர்நிலைப்பள்ளி யில் தான் பயின்றார். 1930-ல் சென்னை மாநிலக் கல்லூரியில் எம்.ஏ., பட்டம் பெற்றார்.

நம் நகரத்தார் சமூகத்திலேயே முதல் எம். ஏ., பட்டம் பெற்ற பெருமை இவரையே சேரும். அதே போல் இலண்டன் சாட்டர்டு பாங்கியில் பயிற்சி பெற்ற இந்தியரும் இவரே ஆவார்.

இலண்டன், க்ரைடன் விமானத் தளத்தில் 1933-ல் விமானம் ஓட்டும் சான்றிதழ் பெற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1943, சென்னைப் பல்கலைக்கழகம் 1944 ஆகிய ஆண்டுகளில் முறையே இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. 1957-ல் பத்மபூஷண் விருது பெற்றார். அண்ணாமலை, சென்னைப் பல்கலைக்கழகங்களுக்கு முறையே ரூ 5,00,000 கொடுத் துள்ளார்.

காரைக்குடி தொழிலியல் ஆய்வுப் பணிக்கென 300 ஏக்கர் நிலத்தினைக் கொடுத்தார். ரூ 15,00,000/- வழங்கியது இவரது வள்ளன்மையையும், முன்னாள் பிரதமர்

ஜவஹர்லால் நேரு, குடியரசுத் தலைவர்கள் பாபுஜி ராஜேந்திர பிரசாத் போன்றோர் இவர் பணியைப் பாராட்டியதுகுறிப்பிடத் தக்கது.

A. K. செட்டியார்

உலகம் சுற்றிய தமிழர். கோட்டையூர் இவரின் ஊர். 1934-ல் தனவணிகன் ஆசிரியராகப் பணியாற்றினார். வை. கோவிந்தன் நடத்திய சக்தி முதல் இதழிலிருந்தே இவர் கதை, கட்டுரை எழுதினார். அந்தத் தொகுப்பே உலகம் சுற்றிய தமிழன் என்ற தொகுப்பு நூலாக வெளி வந்தது. "காந்தி மகான்" படத்தை உருவாக்கினார். அதற்கு அரசு உதவி எதுவும் கிடைக்கவில்லை. அன்று ஆங்கிலேயர் ஆட்சிமுறை நிலவியது. 1937-1939 ஆண்டுகளில் இவர் இங்கிலாந்து' ஐரோப்பா, தென்ஆப்பிரிக்கா, அமெரிக்கா போன்ற நாடுகளில் இந்தப் படத்திற்கான படங் களைச் சேகரித்தார். 24-8-1940-ல் இப்படம் தமிழிலும். தெலுங்கிலும் வெளி வந்தது. இந்தப் படத்தின் படியை அன்பளிப்பாகவே அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டார்.

1943-ல் இவரால் குமரி மலர் என்ற ஒரு இதழ் தொடங்கப் பெற்றது. அது 1983 வரை வெளி வந்தது. வாயாடி என்ற புனை பெயரில் எழுதினார்.

1944-ல் குமரி மலர் போட்டோ ஆப்செட்டில் முதன் முறையாக வெளி வந்தது. மூவேந்தர் முத்து இவரின் நெருங்கிய நண்பர் என்பது குறிப்பிடத் தக்கது.

சி. ராம. இராமசாமிச் செட்டியார்

இவர் பண்டிதமணியின் மாணவர். புலவர். நல்ல புரவலர். சொற்பொழிவாளர், பாடகர், ஓதுவார்களை நன்கு ஆதரித்தவர். மலேசியாவில் இவர் செய்த தமிழ், சைவத் தொண்டிற்கென இவருக்கு குன்றக்குடி அடிகளார்

சித்தாந்த மணிமொழிச் செல்வர் என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார். நல்ல கட்டுரையாளர்.

வயிநாகரம் அ. இராமநாதச் செட்டியார்

செல்வ வளம் மிக்க வயிநாகரம் குடும்பத்தில் அமராவதி புதூரில் அவதரித்தார்.

சைவ, தமிழ், இலக்கிய, இலக்கண நூல்களை நன்கு கற்றுத் தேர்ந்ததால் தருமபுரி ஆதீன வித்துவ சிரோமணி என்ற பட்டம் பெற்றவர். இவர் தொகுத்த தொகுப்பின் மூலம் நகரத்தார் வரலாறு வந்திருக்கிறது. தனிப் பாடல் இயற்றுவதில் வல்லவர் அதற்கு ஒரு உதாரணம்.

துஞ்சாத புகழ் மதுரை மீனாட்சி
    இறைசோம சுந்தரேசர்க்கு
எஞ்சாத திருப்பணியைக் காற்கோடி
    பொருட் செலவில் இயற்றி உள்ளோம்
அஞ்சாதபடியிருபத் தெட்டாண்டு
    கமிட்டியினில் அரசு செய்தேன்
செஞ்சாலி வயல் அமரா வதி புத்தூ
    ரினிற் பிறந்து சிறந்துள் ளேனால்.

அரு. இராமநாதன்

கண்டனூரில் பிறந்தவர். பூரம், ராமையா என்பன இவரது புனைப் பெயர்கள்.

காதல், கலைமணி, மர்மக்கதை என்பன இவரது பத்திரிகைகள். 1947-ல் திருச்சியில் 'காதல்' பத்திரிகை தொடங்கப் பெற்று பின் 1952-ல் சென்னைக்கு மாற்றலாகியது. 1952-ல் பிரேமா பிரசுரம் தொடங்கப் பெற்றது.

விவேகசிந்தாமணி, பைபிள், திருக்குரான் போன்ற சிறந்த நூல்களை அளித்தவர். சிறந்த சரித்திர நாவலாசிரியர்.

அசோகனின் காதலி, வீரபாண்டியன் மனைவி மக்களின் வரவேற்பைப் பெற்றவை. டி.கே.எஸ். சகோதரர் நடித்து 1000 முறைக்கு மேலாக இவ்வுலகில் நடைபெற்று இவருக்குப் பெருமையைச் சேர்த்தது இராஜ இராஜ சோழன் நாடகம்.

சிவப்பு ரோஜா, கருப்பு திராட்சை, முதல் முத்தம் இவர் எழுத்துக்குச் சான்று. எழுத்தாளர்களுக்குப் பணம் கொடுத்து உதவிய வள்ளல் பெருந்தகை.

இவர் இலக்கியக் காதலைத் தமிழ் உலகுக்கு நன்கு படம் பிடித்துக் காட்டியவர்.

கரு முத்து தியாகராாசச் செட்டியார்

புலவர். மகாவித்துவான் அரசன் சண்முகனாரிடம் தொல்காப்பியம் கற்றார். தான் மீனாட்சி ஆலைக்குத் திரும்பும்போது நாவலர் சோமசுந்தர பாரதியாரைத் தினமும் சந்தித்து தமிழ் இலக்கியம் பற்றி உரையாடுவது இவரது வழக்கம். நூல் நிலையம் நிறுவினார். ஹிந்தி ஆதிக்கத்தை விரும்பாமல் காங்கிரஸிலிருந்து விலகினார். மதுரையில் தமிழ் விழா எடுத்தார்.

'ஸ்ரீ' என்பதற்குப் பதில் 'திரு' என்றே போட வேண்டுமெனப் பெரிய போராட்டம் ஒன்றினை நடத்தினார். உழைப்பைப் போற்றினார். தியாகராயர் கல்லூரியில் அவ்வை துரைசாமிப்பிள்ளை, அ,கி. பரந்தாமனார், டாக்டர். இராசமாணிக்கனார், அ.மு. பரமசிவானந்தம், டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார், பேராசிரியர் சி. இலக்குவனார். பெரும் புலவர் சேலம் வரத நஞ்சையப்ப பிள்ளை ஆகியோரை ஆதரித்தார்.

தொல்காப்பியம் ஆங்கில மொழியில் வெளிவர இவர் பொருள் தந்துதவினார். மதுரையில் தமிழ் முதுகலை வகுப்பைத் துவக்கினார். 'தமிழ்நாடு' நாளிதழ் தொடங்கினார்.

1968-ல் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடந்த போது எல்லோர்க்கும் விருந்து அளித்தார். கட்டிடக் கலையைவ ளர்த்தார். மதுரை வங்கியைத் தோற்றுவித்தவர் இவரே.

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்

16-10-1881-ல் மகிபாலன்பட்டியில் பிறந்தார். பிறக்கும் போதே நோய்வாய்ப்பட்டிருந்ததால் இவருக்கு ஒரு காலில் வாத நோய் ஏற்பட்டது. திண்ணைப் பள்ளியில் படித்த பண்டிதமணி அரசஞ் சண்முகனாரின் கல்வி போதனையின் மூலம் நல்லதொரு புலவரானார். தருவை நாராயண சாத்திரியின் வடமொழி மாணவராக இருந்தார். மிருச்ச கடிகம் எனும் மண்ணியல் தேர் இவரின் எழுத்துக்கு முத்திரை. 1903-ல் உ.வே.சாவும், 1906-ல் மறைமலையடிகளும் இவரை நெருங்கினர், 1906-ல் அரசஞ் சண்முகனாரால் இவர் மகாவித்துவான் பட்டம் பெற்றார். 1909-ல் மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையைத் தோற்றுவித்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடு, பாண்டித்துரைத் தேவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். நகரத்தார் குலத்தில் பிறந் திருந்ததால் புலவர்களுக்குப் பொருளுதவி செய்தார். வட மொழிப் புலமையில் சமகால அறிஞர்களை விஞ்சி நின்றார்.

27-8-1925-ல் பண்டிதமணி என்கிற பட்டத்தினை டாக்டர் உ.வே.சா. அவர்களின் மூலம் மேலைச்சிவபுரியில் பெற்றார்.

11-6-1942-ல் மகாமகோபாத்தியாய விருது பெற்றார். சைவ சித்தாந்த வித்தகர், முதுபெரும் புலவர் என்ற பெயர் களும் இவருக்குண்டு.

சுக்கிரநீதி, சாணக்கியம், மண்ணியல் சிறுதேர் இவர் பெயர் சொல்லும் நூல்கள்.

இவர் செய்ததற்கு இணையாக எவரும் செய்ய இயலாது

கம்பனடிப்பொடி சா. கணேசன் செட்டியார்

4-4-1939-ல் காரைக்குடியில் கம்பன் கழகத்தைத் தோற்றுவித்தார். பங்குனி மாதங்களில் ஆண்டுதோறும் கம்பன் விழாக்கள் நடைபெறும். கம்ப இராமாயணம் அரங்கேற்றப் பட்ட நாளை உறுதி செய்தவர் கம்பனடிப்பொடி.

தமிழகத்தின் தனிப்பெரும் விழாவாகக் கம்பன் திருநாளை அமையச் செய்தவர்.

கம்மனைக் கடவுளுக்கு அடுத்த படியாகப் போற்றிய காரணத்தால் 1977-ல் 'கம்பன் அடிப்பொடி' என்று மாற்றிக் கொண்டார்.

இளமைக் காலங்களில் பர்மாவில் இருந்தார். இந்தியாவின் அரசியல்வாதி. பொதுநலவாதி.

கப்பன் பாடல்களுக்கு இராகம் சொன்னவர். 1941-ல் காரைக்குடியில் தமிழ் இசைச் சங்கம் தொடங்கினார். நவயுகப் பிரசுராலயத்தைத் தொடங்கியதற்கு இவரும் காரணம். செட்டி நாட்டில் புரட்டாசி மாதத்தில் மட்டுமே இராமாயணம் படிக்கப் பெறும் அதை ஒரு பெரும் இயக்கமாக மாற்றிய பெருமை இவரைச் சாரும்.

நூற்பவர்க்கு. இராஜ இராஜ சோழன், 'பிள்ளையார் பட்டிக் கோவில் வரலாறு' ஆகியன இவரின் எழுத்தாற்றலுக்கு ஒரு அபிநயம்.

மகாத்மாகாந்தி திரைப்பட விளக்கம் எழுதியவர். 1968-ல் உலகத் தமிழ் மாநாட்டில் அண்ணாத்துரையுடன் கலைக்காட்சித் தலைவராகச் செயல் புரிந்தார்.

தமிழன்னைக்குத் திருவுருவம் செய்து கோயில் எழுப்பிய தூய நெஞ்சம் கொண்டவர். நல்ல பண்பாளர். காலம் போற்றிய ஞானி.

வித்துவான் காசிவிசுவநாதன் செட்டியார்

15-9-1898 ஆம் நாள் பாகனேரியில் பிறந்தார். தனது ஏழாவது வயது முதல் நூல்களைப் படிப்பதில் ஆர்வம் காட்டினார். அது ஆயிரம் பிறைகண்ட பின்னரும் கூட அவரைவிட்டு அகலவில்லை, நூல்களைத் தன் உயிரினும் மேலாக மதித்தார், படிப்பகம் ஒன்று தொடங்கி அதில் 1500 நூல்களை வழங்கினார். பின்பு திருவள்ளுவர் நூலகம் ஒன்றினைத் தொடங்கி அஃதையும் இத்துடன் இணைத்தார். பர்மாவிற்கு இவர் கொண்டு விற்கச் சென்றகாலத்திலும் புத்தகம் வாங்கவும்—படிக்கவுமாகவே இருந்தாராம். அதனால் இவருக்கு பத்மஸ்ரீ சுப்பையா பிள்ளை இணை பிரியாத நண்பரானார்.

இன்றுமக்களால் பெரிதும் போற்றப்படும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினை வளர்த்ததில் இவருக்குப் பெரும் பங்குண்டு. 1975ஆம் ஆண்டுவரை இவரே அதன் ஆட்சிக் குழுத்தலைவராக இருந்துவந்தார். நூலகத்தில் 10,000நூல்கள் இருக்கின்றன, 1921 லிருந்து 1974 வரை இயங்கி வந்திருக்கிறது. இதனை நூலக ஆணைக்குழுவும், சோமலெயும் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

இவர் வித்துவான் காவன்னா என்றே எல்லோராலும் அழைக்கப்பட்டார். காட்சிக்கு எளியர். கடுஞ்சொல் இலாதார். தமிழ் வாழத் தானும் வாழ்வார்,

கவியரசு கண்ணதாசன்

இவர் திரு, சாத்தப்ப செட்டியாருக்கும், திருமதி விசாலாட்சி ஆச்சிக்கும் மகனாக செட்டிநாட்டிலுள்ள சிறுகூடற்பட்டி என்னும் ஊரில் 24-6-1927ல் பிறந்தார்.

பெற்றோர் இவருக்கு முத்தையா என்று பெயர் சூட்டினர். காரைக்குடிக்கு சுவீகாரம் சென்றார். அங்கு

இவருக்கு நாராயணன் என்று பெயரிட்டனர். இருவீட்டிலும் கூப்பிட்ட பெயர்கள் நிலைக்காது இவர் தனக்குத்தானே சூட்டிக் கொண்ட கண்ணதாசன் என்னும் பெயரே புகழ் உச்சிக்கு இவரை அழைத்துச் சென்றது.

கவியரசர் கண்ணதாசனுக்கும் இரவீந்திரநாத்தாகூருக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. அது என்ன எனில் இருவருமே தத்தம் பெற்றோருக்கு எட்டாவது குழந்தைகள். எட்டாவது வரைக்குமே படித்து எட்டாத புகழ் கண்டவர். 1944ல் திருமகள் ஆசிரியராக இருந்தபோது கண்ணதாசன் என்கிற பெயரை இவரே இட்டுக்கொண்டு இந்தத் தமிழ் இலக்கிய உலகுக்கு அறிமுகமானார், இவரின் முதல்கவிதை 'அவள்'-வெளியானது திருமகளில் 1944 ஆம் ஆண்டு முதற்காவியம் மாங்கனி. சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் 1948ல் கதை இலாகாவில் இவர் பணியாற்றினார்.

கன்னியின் காதலி என்கிற படத்திற்கு முதன் முதலில் பாடல்களை எழுதினார்.

கவிஞரின் கவிதைகள் 7 தொகுதிகளாக வெளிவந்தன. ஆட்டனத்தி ஆதி மந்தி, மாங்கனி, தைப்பாவை இவரின் சிறப்பு.

1954ல் தென்றல் வெண்பாப் போட்டியில் பல கவிஞர்களை இவர் உருவாக்கினார். கல்லக்குடிப் போராட்டத்தில் (டால்மியாபுரம்) தி. மு. கவில் சேர்ந்தார். 20 நவீனங்களையும், 2) கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

வனவாசம் இவரது வாழ்க்கைநூல், அர்த்தமுள்ள இந்து மதம், பொன்மழை, அம்பிகை அழகு தரிசனம், இயேசு காவியம் இவரது ஆன்மீக ஈடுபாட்டுக்கு எடுத்துக்காட்டு.

இவரது புனைப்பெயர்கள் வணங்காமுடி, காரைமுத்துப் புலவர் என்பவை ஆகும். அழகி என்னும் இவரது கவிதை 14

மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 1958ல் இவரது 'பாடாய் தும்பி, மணவறைப் பாட்டினை சாகித்ய அகாடமி பல மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிட்டு இவருக்குச் சிறப்புச் செய்தது. புஷ்பமாலிகா, விளக்கு மட்டுமா சிவப்பு என்பன மலையாளத்தில் வெளிவந்தன.

சரத்பாபு எழுதிய அற்புதமான சந்திரநாத் என்கிற நாவலை மாலையிட்ட மங்கை எனும் பெயருடன் தானே வசனம் பாடல்கள் எழுதிச் சொந்தமாகத் தயாரித்தார்.

25 திரைப்படங்களுக்கு வசனம் எழுதி 500 கவிதைகளையும், சுமார் 5000 திரைப்படப் பாடல்களையும் எழுதிய பெருமை இவரையே சேரும்.

1970ல் சிறந்த பாடலாசிரியர் விருது பெற்றார். இவரை ஆதரித்த வள்ளல் M.M.A சின்னப்பா தேவர் ஆவார். கவிஞர் என்ற பட்டம் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இவருக்கு அளித்தது. தமிழ்வாணன், சின்ன அண்ணாமலை, வலம்புரி சோமநாதன் ஆகியோர் இவரது நெருங்கிய நண்பர்கள் ஆவார்கள். இவரின் நூலுக்குப் பெருமை சேர்த்தவர்— வெளியீடு செய்தவர் வானதி திருநாவுக்கரசு ஆவார். சேரமான் காதலி என்ற நூலுக்கு இவர் சாகித்ய அகாடெமி பரிசு பெற்றார்.

கட்டுரை இலக்கியத்தில் தேர்ந்த கண்ணதாசன் குமுதம் வார இதழில், 'இந்த வாரம் சந்தித்தேன்' தொடர் கட்டுரை மூலம் வளம் சேர்த்தார். இவரை இனங்கண்டு உரிய சந்தர்ப்பத்தில் புரட்சித்தலைவர் டாக்டர் எம்ஜிஆர் அரசவைக் கவிஞர் என்ற சிறப்பை ஏற்படுத்தினார்.

1981ல் அமெரிக்கத் தமிழர்களின் அழைப்பை ஏற்று, இலக்கியச் சொற்பொழிவுகளை அங்கு சென்று நிகழ்த்தி வந்தார்.

பாடிப்பறந்த குயில் 1981 அக்டோபர் 17ஆம் தேதியன்று சிகாக்கோவில் தன் ஓசையை அடக்கிக் கொண்டது ஆனால் அந்த ஓவசயைத் தேனாறு போலச் செவியில் சேர்த்துக் கொண்ட தமிழ் மக்கள் மகிழும் வண்ணம் இந்நாள் தமிழக முதல்வர் டாக்டர் ஜெயலலிதா அவர் பிறந்து வாழ்ந்த செட்டிநாட்டுக் காரைக்குடியில்கண்ணதாசன் மணிமண்டபம் எழுப்பிச் சிறப்புச் செய்தது போற்றுதலுக்குரியது.

கண்ணதாசனே கண்ணதாசனே வந்துவிடு
கவிதை வரிகளைக் கொஞ்சம் தந்துவிடு !

கருமுத்து மாணிக்கவாசகம்

தொழிலதிபர், அறச்செல்வர், நல்ல எழுத்தாளர். தந்தை வழி தானும் எத்துறையிலும் முதன்மை பெற்று நல்ல சாதனையாளராகத் திகழ்ந்தார். பல நூற்பு நெசவாலை களுக்குத் தலைமை ஏற்று நடத்தினார். கல்லூரி, உயர் நிலைப்பள்ளி, கலைக்கூடங்களை நிர்வகித்தார். கல்விக் காவலர் ஆகிய இவர் ''தமிழ்நாடு'' இதழின் ஆசிரியர். கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள் ஆகிய நூல் களுக்கு ஆராய்ச்சி மேற்கொண்டு நூல் எழுதினார். இவர் எழுதிய நாடக நூல்கள் இலங்கேசுவரன், பாஞ்சாலி சபதம், இராதாகிருஷ்ணன் என்பன. சமூக சேவகராக விளங்கிய கருமுத்து மாணிக்கவாசகனார் ரோட்டரி சங்கம் சுழற்குழு இயக்கத்தில் ஆளுநராக இருந்து அருந்தொண்டு ஆற்றினார், மதுரை—இராமநாதபுரம் வாணிபச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றினார்.

தீவிரமான சைவர். தாய்மொழியின் பால், சைவ சமயத் தின்மீது கொண்ட பற்று அளவிடற்கரியது.

இவர் 1980 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

வை.சு. சண்முகனார்

கவியரசர் பாரதியாரை நேரில் கண்டு பேசும் நிமிர்ந்த நன்னெஞ்சு உடையவர்.

1918 ஆம் ஆண்டில் புதுச்சேரியில் போய்ப் பாரதியாரைச் சந்தித்து வந்தார்.

மீண்டும் 7-2-1919ல் கீழ்க்கடையத்தில் பாரதியாரைச் சந்திந்தார்.

தலைசிறந்த தமிழறிஞர். கவிஞர்களின் வள்ளல் இவர், கானாடுகாத்தானில் பிறந்தவர். இவரின் வள்ளல் தன்மை பற்றிக் கானாடுகாத்தானுக்கு நேரிலேயே வந்து வாழ்த்திப் பாடல் ஒன்று பாடி இருக்கிறார் பாரதியார்.

... ...
... ...

மீனாடு கொடியுயர்த்த மதவேளை
நிகர்த்தஉரு மேவி நின்றாய்
யா(ம்) நாடு பொருளையெமக் கீந்தெமது
வறுமையினை இன்றே கொல்வாய்
வானாடு மண்ணாடுங் களியோங்கத்
திருமாது வந்து புல்கக்
கானாடு காத்தநக ரவதரித்தாய்,
சண்முகனாங் கருணைக் கோவே.

—சி. சுப்பிரமணியபாரதி

(இது சித்தார்த்தி—ஐப்பசி ௰௫ 1919 அக்டோபர் 31 கானாடுகாத்தானில் பாடியது)

வீர.லெ. சின்னையா செட்டியார்

தேவகோட்டை இவரது சொந்த ஊர். எல்லோராலும் மேலவீட்டுச் சின்னையா செட்டியார் என்றே அழைக்கப் பட்டவர். பெரும் புலவர். இவருக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்த பாண்டித்துரைத் தேவர் நெருங்கிய நண்பர், சொக்கலிங்க ஐயாவின் பள்ளித் தோழர்

வன்றொண்டர், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் இவர்களின் மாணவர்.

1906ஆம் ஆண்டு முதல் 1911ஆம் ஆண்டு வரையில் இரா. இராகவையங்கார் அவர்கள் பெரிய மைனர் வீடு, தேவகோட்டையில் அருணாசலம் செட்டியார் அவர்களுக்கு திருவாசகம், தேவாரம் படிப்பித்தார். அந்தப் பணிக்கு சின்னையச் செட்டியாரே காரணம். இவர் கொடுந்த நற்சான்றிதழை அய்யங்கார் போற்றிப் பாதுகாத்துவந்தார். தேவைத்திரிபந்தாதி பெரும் புகழ்பெற்றது. பல்கலைக் கழகப் பேராசிரியர் மு. இராகவையங்கார் மேற்சொன்ன அய்யங்காரிடம் அவ் அந்தாதி பாடம் கேட்டது குறிப்பிடத் தக்கது.

சங்ககாலக் காப்பியங்களை மாதிரி பிரபஞ்ச பந்தகம் என்ற நூலை எழுதியுள்ளார்.

இவர் ஒருவரே நல்ல கல்வியாளராகவும், வள்ளல்களா கவும், தொழில்களின் முன்னோடிகளாகவும், நாணயம். நேர்மைமிக்க சராசரி வாழ்வை நிர்ணயிக்கிற நல்ல குடும்பஸ் தர்களாகவும் தேசாபிமானிகளாகவும் விளங்கிய நாட்டுக் கோட்டை நகரத்தார் வரலாறு எழுதியிருக்கிறார் என்றால் அது நாம் பெற்ற பேறு எனலாம்,

தேவகோட்டையில் பிரசித்தி பெற்ற சிலம்பணி ஸ்ரீ சிதம்பர விநாயகர்மீது இவர் வைத்திருந்த நம்பிக்கை அசைக்க முடியாதது, அதனால் இவர் எழுதிய நூலே சிலம்பைப் பதிற்றுப் பத்தந்தாதி, அதேபோல்,

1. குன்றக்குடிப் பிள்ளைத் தமிழ்
2. திருவொற்றியூர்ப் புராணம்
3. தேவைத் திரிபந்தாதி
4. மயின்மலைப் பிள்ளைத் தமிழ்
5. மதுரை மீனாட்சியம்மைப் பதிகம்

6. காசி யமக வந்தாதி

7. அருணைச் சிலேடை வெண்பாமாலை

என்ற நூல்களையும் எழுதியுள்ளார். இவரது கவித்துவம் ஈடு இணையிலாத ஒன்று. 'பன்னூற்றிரட்டு' எனும் நூல் இவரால் சாற்றுக்கவி பெறப்பட்டது.

சின்ன அண்ணாமலை

சுதந்திரப் போராட்ட வீரர். நல்ல எழுந்தாளர். திரைப் படக் கதாசிரியர். மாபெரும் அரசியல்வாதி. சிவாஜி கணேச னின் நெருங்கிய நண்பர். காமராஜரின் நல்ல தொண்டர்.

காரைக்குடி வட்டம் உய்யக்கொண்டான் சிறுவயல் என்னும் கிராமத்தில் 18-6-20ல் பிறந்தவர். நாகப்பன் என்று இவருக்குப் பெற்றோர் பெயர் வைத்தனர். தாய்மாமன் லெட்சுமணன் செட்டியார் உதவியால் மலேசியா சென்று படித்தார். பின்பு சொந்த ஊரில் இருந்தவரைப் பெற்றோர் தேவகோட்டைக்கு சுவீகாரம் செய்து வைத்தனர். அங்கே இவருக்கு அண்ணாமலை என்று பெயரிட்டனர்.

இராஜாஜி தான் மற்ற அண்ணாமலை என்கிறவர்களிட மிருந்து வித்தியாசப்படுத்திட சின்ன அண்ணாமலை என்று அழைக்கலானார். அதுவே இன்றும் நிலைக்கிறது.

14 வயதில் மேடைப்பேச்சாளரானார். அண்ணாமலை அவர்கள் தமுக்கைக் கழுத்தில் கட்டிக் கொண்டே தான் பேசுவதைப் பிறருக்கு அறிவிப்பது வழக்கமாம்.

1942ல் ஆகஸ்டு 8ஆம் தேதி காந்தியடிகள் கைது செய்யப் பட்டார். அப்போது ஊரெல்லாம் வெள்ளையனே வெளி யேறு ஆர்ப்பாட்டம் நடந்தது. தேவகோட்டையிலும் அதே போல் நடந்தது. 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட் டிருந்தது. அண்ணாமலை தடை உத்திரவை மீறியதால்

கைது செய்யப்பெற்று திருவாடானைச் சிறையில் அடைக்கப் பெற்றார்.

மக்கள் வெள்ளம் அது பொறுக்காது திருவாடானைச் சிறைச்சாலையை உடைத்து எறிந்து அண்ணாமலையை விடுவித்தனர். தோளில் சுமந்து வந்தனர்.

சின்ன அண்ணாமலையை தந்தையார் திட்டி விரட்டிட தந்தையாரின் பேச்சுகளைக் காதில் போட்டுக்கொண்டு சென்னை வந்தார். ஏ. கே. செட்டியார், வை. கோ. சத்துருக்கணன் ஆகியோர் உதவியால் தமிழ்ப் பண்ணை தொடங்கினார். இராஜாஜியே தொடங்கிவைத்தார்.

மகாத்மா காந்தியடிகள் இறுதியாகச் சென்னைவந்த போது சின்ன அண்ணாமலை இராஜாஜியின் மூலம் அறிமுகம் ஆனார். அத்துடன் ஹரிஜன் பத்திரிகை தமிழில்வர காந்தியடிகள் துவக்கிவைத்து வாழ்த்தும் கூறினார்.

1978ல் முதன் முதலில் கண்ணதாசன் பிறந்த நாள்விழாக் கொண்டாடினார்.

நூலாசிரியர்களுக்கு பதிப்புரிமை கொடுக்கும் வழக்கத்தை சின்ன அண்ணாமலைதான் பரப்பினார் என்றால் அது வெறும் புகழ்ச்சியில்லை. நகைச்சுவை மன்னன் அண்ணா துரையுடன் இரயிலில் பயணம் செய்தார், (சட்ட விதிகளைப் புறக்கணித்தே)

மணிவிழா மங்கல மேடையில் அமரன் ஆனார்.

தமிழ்ப்பணி செய்த நன்னெஞ்சம்.

கோனூர் ஜமீன்தார்
பெ.ராம. ராம. சித. சிதம்பரம் செட்டியார்

நற்சாந்துபட்டி இவரின் சொந்த ஊர், புலவர்—புரவலர். புதுக்கோட்டையில் இவரின் ''இராம நிலையம்'' உள்ளது. அதில் தமிழாய்வு நிறைய நிகழ்ந்திருக்கிறது. திருக்கொள்ளம்

புதூர் இவர்கள் திருப்பணி செய்த ஊர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் புரவலர்—தமிழ் இசைச் சங்கம், மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை ஆகியவற்றிற்கு நிதி நிறைய குவித்துக் கொடுத்திருக்கிறார்கள். பண்டிதமணியின் இனிய நண்பர்—மணிவிழா மலரை அவருக்கு அளித்தவர். காரைக்காலம்மை யார் வரலாறு வெளியீடு செய்தவர்.

விபுலாநந்தரின் "யாழ்நூல்" இவர்கள் திருப்பணி செய்த திருக்கொள்ளம்புதூரிலேயே அரங்கேற்றம் செய்யப்பெற்றது.

சைவசித்தாந்தத்தை ஆங்கில வழியில் பதிப்பிக்க முயற்சித்த போது இவர்கள் உயிருடன் இருக்க இயலவில்லை. அமரத்துவம் அடைந்துவிட்டனர்.

தமிழ் நெஞ்சங்களின் நீங்கா நினைவு பெற்ற இவர் போன்ற அறிஞர்களை நாம் என்றுபெற இயலும்?

நல்லறிவாளர். நாளும் அவர்போல் நாமும் தமிழ்த் தொண்டு செய்ய எண்ணலாம். ஆனால், நம் கையில் என்ன இருக்கிறது?

சொக்கலிங்க அய்யா

இவரது சொந்த ஊர் காரைக்குடி. இவர்கள் வீட்டிற்கு யாழ்ப்பாணத்தார் வீடு என்று பெயர், யாழ்ப்பாணத்தில், சுப்பையா பிள்ளை, சுவாமிநாத பண்டிதர் இருவரிடமும் தேவகோட்டையில் வன்றொண்டரிடமும் இவர் மாணவராக இருந்தார். சிறந்த கவிஞர். 1923ல் கலாசாலை தொடங்கக் காரணமாக இருந்தவர். பண்டிதமணி இவரைப் போற்றினார் சிலேடை எழுதியதில் சிறப்புப்பெற்றார். சிறுகாப்பியம் இயற்றுவதில் வல்லவர்,

இவர் எழுதிய செய்யுள் நூல் 49, உரைநடை நூல் 14 ஆகும், இவரைச் சிறப்புறச் சொல்லியவர் தமிழ்ச்செம்மல் கா. சுப்பிரமணியபிள்ளை ஆவார்.

தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் செட்டியார்

செட்டிநாட்டிலேயே சிறை சென்ற எத்தனையோ தியாகிகளில் இவரே முதல் நபர். சிறந்த தேசாபிமானி. காந்தியடிகளைத் தம் இல்லத்திற்கு அழைத்து வந்து விருந்து படைத்த பேறு பெற்றவர். காந்திபிள்ளைத் தமிழ் பாடினார். ஊழியன் இதழைச் சீரோடும் சிறப்போடும் நடத்தினார். காரைக்குடி இவரது சொந்த ஊர். நல்ல தமிழறிஞர். தலைசிறந்த பேச்சாளர். சிற்றிலக்கியம். பேரிலக்கியம் இரண்டையுமே பதிப்பித்த பதிப்பாசிரியர். மனவேறுபாடு இல்லாமல் நேர்மை, நியாயம் கலந்த பண்பாளர். காங்கிரஸ்காரர். நகரத்தந்தையாக இருந்தவர். பாவகை அத்தனையும் இவர்க்குள் அடக்கம். தேசப்பற்று மிக்கவர், தேசியப் பாடல்களை முழங்கியவர்.

காந்தி நூற்றாண்டில் நூற்றுக்கணக்கான கவிதைகளைத் தொகுத்து ‘காந்தி கவிதை’ எனும் நூலை 2-10-1969-ல் வெளியீடு செய்தார்.

செட்டிநாட்டில் எவ்வளவோ பேர் இவரது மாணாக்கர். இந்து மதாபிமான சங்கம் இவர் ஏற்படுத்தியது. இங்கு பாரதியார் வந்து நகரத்தாரைப் பற்றிப் பாடியுள்ளார். சனி ஞாயிறுகளில் இதிகாச, புராண விளக்கங்களை உரைநடை வகுப்புகளாக நடத்திய பெருமை இவரையே சேரும். சிவநெறிச் செல்வர். நல்ல கொடையாளி. இவர் நூல்களில் தலைசிறந்தது திருத்தலப் பயணம் ஆகும். இவரே இந்து மதாபிமான சங்கத்தில் மூத்த தலைவராக இருந்ததால் அதன் எதிர்புறம் இவரது சிலை அமைந்துள்ளது.

நல்ல தமிழாளரை இழந்தாலும் அவரின் படைப்புக்கள் நமக்கு அவரின் உயிராகக் காட்சி தந்து கொண்டே இருக்கின்றன.

பெ. அ. க. சித. சோமசுந்தரம் செட்டியார்

அருட்கவி, கடாட்சகவி என எவராலும் அழைக்கப் பட்டவர். ஆசுகவி, சிலேடை பாடுவது இவரின் சிறப்பு.

எல்லோரும் போற்றும் இவரது பாடல் கீழே.

நண்பால் அரைமேவி
 நன்னூல் இடையாகி
ஒண்பாவினில் பொருந்தி
 ஓங்குதலால் கண்பார்த்தோர்
அம்பரமே என்பதனால்
 அங்கையற்கண் ணிக்குநிகர்
பம்புதலை யென்னப் பகர்

என்று அன்னைக்கும் அரைவேட்டிக்கும் சிலேடை பாடியது இது.

சோமலெ

நெற்குப்பை இவரின் சொந்த ஊர். உலகம் சுற்றிய தமிழறிஞர் நல்ல நூலாசிரியர். நம் குலத்தின் கண் நாம் கண்டெடுத்த நன்முத்து. இவரது நூல்களில் 'செட்டிநாடும் செந்தமிழும்' என்ற நூலே எல்லா இல்லங்களிலும் இன்று கையாளப்பெற்று வருகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழா நிகழ்ச்சிகளை இவர் திரைப்பட மாகவே எடுத்திருக்கிறார். சோமலெயின் பாட்டனாரும் நல்ல நூலாசிரியர். அவர் நூலறிஞர் பி. ஸ்ரீயின் வறுமைக் காலத்தில் ஆனந்தவிகடன் ஆசிரியர் பாலு அவர்களுடன் தொடர்பு கொண்டு பணம் அனுப்ப ஏற்பாடு செய்தவர். இவரால் "கம்பராமாயண மேதை" என்ற பட்டம் பி. ஸ்ரீக்கு கிடைத்தது. பண்டிதமணி பற்றிய நூல் ஒன்றினை எழுதினார். அது கல்லூரி புகுமுக வகுப்புக்குப் பாடப் புத்தக மாக அமைந்தது. மலர்கள் தயாரிப்பதிலும், கட்டுரை எழுதுவதிலும் வல்லவர், நல்ல உழைப்பாளி,

தமிழ்வாணன்

மாஸ்டர் ஆப் ஆல் சப்ஜெக்ட்ஸ் (Master of all Subjects) என்று போற்றப்பெறுகிற நல்ல பத்திரிகையாளர். பிச்சம்மை ஆச்சிக்கும் இராம, இலக்குமண செட்டியாருக்கும் மகனாகி தேவகோட்டையில் 5-5-1926-ல் பிறந்தார். ஜில்ஜில் பதிப்பகம் தொடங்கி ''அணில்'' பத்திரிகை வெளியிட்டு மழலை மலர்களை எல்லாம் மலர்ச்சி கொள்ளச் செய்தார்.

1946-இல் தமிழ்வாணனை எஸ்.ஏ.பி. அண்ணாமலை அவர்கள் ஒரு மாதிரி இதழ் தயாரித்துச் தரச் சொல்லிக் கேட்டிருக்கிறார். அது தான் கல்கண்டு. அவ்வாறே தயாரித்துக் கொடுத்தும் எஸ்.ஏ.பி. விரும்பியபடி ஆசிரியராக இருந்தும் 1948லிருந்து கல்கண்டினை வெளியிட்டார். 1950-ல் 40, 000 பிரதிகள் விற்பனை ஆயிற்று. துணிவே துணை என்ற தாரக மந்திரத்தின் மூலம் இவர் ''சங்கர்லால்'' துப்பறியும் கதையை எழுதி எல்லோர் மனத்திலும் இடம் பெற்றார். தொப்பி, கண்ணாடி என்றால் அது தமிழ்வாணன் என்ற முத்திரையை நிலை நாட்டினார். 500 நூல்களை வேறுபல துறைகளில் எழுதியுள்ளார்.

அதே வழி மக்களும் பின்பற்றி மணிமேகலைப் பிரசுரமும் உலகம் போற்றும் பதிப்பகமாகச் செயல்படுகிறது என்றால் அது மிகையில்லை. லேனா தமிழ்வாணன் அவர்கள் தந்தை வழி கல்கண்டு வார இதழைச் சீர்பெற நடத்தி வருகிறார்.

வள்ளல் பெத்தாச்சி செட்டியார்

அன்புள்ளம் கொண்டவர். கானாடுகாத்தான் ஊரினர். ஆண்டிப்பட்டிக் குறுநில மன்னர் என்றே அழைக்கப்பெற்றார், கருவூரில் தங்கி புலவர்களுக்குப் பரிசில் வழங்கியவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் துணைத் தலைவராக இருந்தவர்.

பெத்தாச்சி புகழ் நிலையம் என்ற நூல்நிலையம் இவர் இறந்த பிறகு தம்பி முத்தையாச் செட்டியாரால் திறந்துவைக்கப் பட்டது. பாளையங்கோட்டை சைவசபை, திருவாங்கூர் பல்கலைக் கழகம் ஆகியவற்றிற்கு இவர் பொருளுதவி செய் துள்ளார்.

வ.சுப. மாணிக்கனார்

'உ' என்ற பிள்ளையார் சுழிக்குப் பதிலாக 'த' என்றே முதலில் எழுதும் பழக்கங் கொண்டவர். தீராத தமிழ்க் காதலர். வள்ளல் அழகப்பர் மீது கொடைவிளக்கு என்ற நூலை எழுதியவர்; மேலைச் சிவபுரி இவரது ஊர், 17-4-1917ல் சுப்பையா செட்டியாருக்கும் தெய்வானை ஆச்சிக்கும் புதல்வராகத் தோன்றினார். பி ஓ.எல்., எம்.ஏ., பிஎச்.டி இவர் பெற்ற பட்டங்கள். 20 ஆண்டுகள் வள்ளல் அழகப்பர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைத் தலைவராக, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணிபுரிந்தவர்.

தமிழ்வழிக் கல்வியியக்கம் நடத்தி ஊர்தோறும் ஊர்வலம் நடத்தியவர்.

இவருக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் டி.லிட் என்ற பட்டத்தினையும், சன்மார்க்க சபை மேலைச்சிவபுரி யில் டி.லிட் என்கிற பட்டத்தினையும், குன்றக்குடி ஆதீனம் முதுபெரும்புலவர் என்ற பட்டத்தையும் சூட்டி மகிழ்ந்தன. உண்மை பேசும் உயர்ந்த ஞானி.

சாவில் தமிழ் படித்துச்
சாக வேண்டும்
சாம்பல் தமிழ் மணந்து
வேக வேண்டும்

என்று அவரே பாடிய வரிகள் அவருக்குத் திருமகுடம் சூட்டு கின்றன.

இராஜாசர் மு.அ. முத்தையா செட்டியார்

செட்டிநாட்டரசர் 5-8-1905ல் தோன்றினார். இலட்ச இலட்சமாக சைவம்வளர, தமிழ், வடமொழி, இந்திய மொழி ஆராய்ச்சிக்காக, தென் சென்னையில் காந்திநகர் கல்விக் கழகம் வளர, என வாரிவழங்கிய வள்ளல், இந்திய அரசு வானொலி தொடங்கு முன்பே சென்னை மாநகராட்சியின் சார்பில் இவர் வானொலி நடத்தியது சாதனை. 1941ல் சர் பட்டம் பெற்றார். 1934-35ல் மேயர், 1936ல் சுகாதார அமைச்சர் 1936ல் சென்னைப் பல்கலைக் கழக இணை வேந்தர். 1939ல் எதிர்க்கட்சித் தலைவர். 1946–50ல் எம் பி. 1930-1970 சட்டமன்ற உறுப்பினர் (இவர் ஒருவரே சட்ட சபையில் நீண்டநாள் பதவி வகித்தவர்.) 1960-65ல் இந்தியத் தொழில் நுட்பக்கழக உறுப்பினர், 1973ல் பத்மபூஷண் விருது பெற்றார். 1979ல் எம்.ஜி.ஆர், அவர்களால் தமிழ் இசைக் காவலர் என்ற பட்டம் பெற்றார். 1982ல் உலகப் பல்கலைக் கழகம் வழங்கிய ''டாக்டர் பட்டம்'' பெற்றார். அதேபோல் 1983லும் சென்னைப் பல்கலைக் கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கி மகிழ்ந்தது.

தொழில் துறையில் இவர் பங்கு அநேகம். 1965ல் மணி விழா நிகழ்ந்தது. தன் வாழ்வையே நகரத்தார் இன மக்களுக்காக அர்ப்பணித்த மாபெரும் மனிதர் இராஜாசர் முத்தையா செட்டியார் அவர்கள் தமது 79 ஆம் ஆண்டு 12-5-1984ல் இறைவனடி சேர்ந்தார்.

அ.மு.மு. முருகப்ப செட்டியார்

1902ஆம் ஆண்டு திவான்பகதூர் அ.மு. முருகப்ப செட்டியாரின் மகனாகப் பிறந்தார். சென்னையில் கல்வியும், பர்மா, இலங்கை, மலேயா ஆகிய நாடுகளில் தொழிலும் கற்று வளர்ந்தார். 1930ல் உலகம் எல்லாம் சென்று தொழில்

சிந்தனையில் உலா வந்தார். மரபுத்தொழிலான வட்டித் தொழிலை விடுத்து தொழில் தொடங்கினார்.

இங்கிலாந்து டியூப் இன்வெஸ்ட்மெண்ட் நிறுவனத்தாருடன் தான் சேர்ந்து டியூப் இன்வெஸ்ட்மெண்ட் ஆப் இந்தியா நிறுவனத்தைத் தொடங்கித் தானே நிர்வாக இயக்குநராகவும் செயலாற்றினார். அம்பத்தூரில் தொடங்கிய இந்த நிறுவனம் உலகப் பிரசித்தி பெற்றது. அவை. ஹெர்குலிஸ், பிலிப்ஸ், பி.எஸ்.ஏ, என்பன. அதேபோல் அமெரிக்காவில் உள்ள கார்பொரண்டம் கம்பெனி இங்கிலாந்தில் உள்ள யூனிவர்ஸல் கிரைண்டிங் வீல் என்ற கம்பெனிகளுடன் கூட்டுச் சேர்ந்து திருவொற்றியூரில் ஆரம்பித்தார், இந்தக் கம்பெனியில்தான் மக்களுக்குப் பயன்படும் உப்புத்தாள், சாணைக்கற்கள் தயாரிக்கப்படுகின்றன. இதுபோல இவர் பல அறப்பணிகளையும் தொழிற்பணிகளையும் செய்தார். அ.மு.மு. வின் தொழிற்பணி அளவிடற்கரியது. அவரது உழைப்பால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நன்னிலை பெற்றிருக்கின்றன என்றால் அது போற்றற்குரியது.

தர்மபூஷணம்

தி.நா.மு. முத்தையா செட்டியார்

இராமச்சந்திரபுரத்தில் பிறந்தவர். திருப்பாதிரிப்புலியூர்-இதர தர்மங்களுங்கென 25,00.00ப ரூபாய் செலவு செய்தவர், இவரது தந்தையார் நாச்சியப்ப செட்டியார். முத்தையாச் செட்டியாரவர்கள் 32,00,000 ரூபாய் செலவு செய்தார். இராமலிங்க அடிகள் இயற்றிய பிரபந்தத் திரட்டு இவர்களால் வெளியீடு செய்யப்பெற்றது.

வடலூரிலிருந்து கையெழுத்துப் பிரதிகளை எல்லாம் சேகரம் செய்து 2000 பிரதிகள் பதிப்பித்த பெருமையுடையவர். திருவாசக நூலை மலிவுப்பதிப்பில் தந்தவர்.

முத்தையா செட்டியார் தமிழ்ப்பாடசாலை ஒன்றைத் திருப்பாதிரிப்புலியூரில் நிறுவினார்.

திருமெய்யம் சத்தியமூர்த்தி பாடசாலை இவர்கள் கைங்கர்யத்தில் உருவாகியது.

டாக்டர் உ.வே.சா. நூல்கள் வெளிவரப் பெரிதும் துணை நின்றவர்.

நாகபட்டினத்து நீலலோசினி இதழ், ரசிகரஞ்சனிசபா ஆகியவற்றிற்கு இவரே புரவலராக இருந்தார்.

வாரிவழங்கும் வள்ளல் என்ற பேறு பெற்றவர்கள். தரும சிந்தனையாளர்.

ரோஜா முத்தையா

புத்தகக் காவலர். ஆயிரக்கணக்கான புத்தகங்களைக் கருத்துக் கருவூலங்களை நாளும் காத்து நம் தமிழ்நாட்டின் மொழிச் சேவை செய்தவர். புத்தகங்களே என் உயிர் என வாழ்ந்தவர். ஓவியக் கலையில் நல்ல பயிற்சி பெற்றவர், ஸைன் போர்டுகளை முதன்முதலில் எழுதினார். ஓய்வு நேரங்களில் படிக்கத் தலைப்பட்டார். புத்தகங்கள் ஒரு முறை தொலைந்து போயிற்று மீண்டும் தொலைந்து போயிற்று நண்பர் மூலம், ராசியில்லை என்று எல்லோரும் இவரைக் கிண்டலாகப் பேச ஆரம்பித்தனர். அன்றுதான் இவர் வைராக்கியமாக புத்தகங்களைச் சேர்ப்பதும் அவற்றைப் பாதுகாப்பதும்தான் நமது வேலை என 'உறுதி கொண்டு முப்பதாண்டுகளாக உழைத்து, தேடிப்பிடித்துச் சேர்த்த நூலகம் இன்று உலகம் போற்றுகிற அளவு உயர்ந்துள்ளது, ரோஜா ஆர்ட்ஸ் என்ற பெயரில் தொழில் நடத்தியதால் இவரது பெயரோடு ரோஜா என்பது இணைந்தது. எல்லாத் துறை நூல்களும் இங்கு கிடைக்கின்றன.

இவரின் அரிய முயற்சியால் ஆயிரக்கணக்கான அறிஞர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்றால் அது மிகையில்லை.

50,000 பொன்மொழிகளைத் திரட்டினார். இவரது புத்தகம் சேர்க்கும் கலை புகழ் உச்சிக்குச் செல்லும் பொழுது, இவரின் ஆன்மா இறைவனின் எல்லையை அடைந்தது.

சொ. முருகப்பா

தென்னாட்டில் இவரை ராஜாராம் மோகன்ராய் என்றே சொல்வார்கள். சீர்திருத்தத் தந்தை இந்துமதாபின சங்கம் வளரப் பாடுபட்டவர். 'குமரன்' இதழாசிரியர் கம்ப இராமாயணம் வெளியிட்டவர். பாரதியைப் பற்றிய செய்திகளை நாளும் பரப்பியவர்.

கவிமணியின் பாடலை முதன்முதலில் குமரனில் வெளியீடு செய்தார்,

1920ஆம் ஆண்டு ஜீவகாருண்யம் பற்றி கருணைக்கடல் என்கிற நூலை கவிமணி எழுதிட இவர் காரணமாக இருந்தார்,

தமிழ் இதழ்கள் நடத்தினார், தமிழ் இசை இயக்கத்தின் நல்ல தளபதி என்கிறார்கள். கோடைக்கானல் குளிர் தென்றல்போல தமிழை இதமாக எல்லோருக்கும் போதித்தவர். தமிழ் அறிஞர்களின் பால் இவருக்கிருந்த அக்கறை இவரைச் செட்டிநாட்டு மக்கள் எல்லோரிடமும் அணுகச் செய்தது, அதனால் தொடர்பு அதிகமாகித் தமிழ் அலைஓசை நாடெங்கிலும்,குறிப்பாகச் செட்டிநாட்டில் எழ ஆரம்பித்தது.

அண்ணாமலை அரசரின் தமிழ்ப்பணியில் இவருக்கும் பங்கு உண்டு எனலாம், காந்தீயவாதி முருகப்பர் மரகதவல்லி திருமணம் ஒரு க்ளைமாக்ஸ். பெரியாரின் சீர்திருத்த வழியைப் பின்பற்றியவர். விதவா விவாகம் பற்றிய அக்கறை கொண்டவர் மகளிர் இல்லம் அமைத்தார்.

பவுன் தங்கத்தை எல்லாம் பாலகாண்டத்திற்காகச் செலவு செய்தவர். எல்லாச் சொத்துக்களையும் மரகதவல்லி

அம்மையார்க்கே எழுதி வைத்தார் என்றால் அது அவரின் பெருந்தன்மைக்கு எடுத்துக்காட்டு.

முருகு. சுப்பிரமணியம்

சோனாபட்டில் பிறந்தவர், 1944-1946 குமரனில் பணி புரிந்தார். 1947-1952 புதுக்கோட்டையில் இருந்து பொன்னி இதழை நடத்தினார். 1953-தமிழ் நேசனில், 1954-1962 தமிழ் முரசு, 1976 மறுபடியும் தமிழ் நேசனில் வேலைபார்த்தார். 1977ல் புதிய சமுதாயம் எனும் நூலை வெளியிட்டார். அரு. பெரியண்ணன் இவரின் அருமை அம்மான். இளமைக் காலத்தில் இவர் நடத்திய கையெழுத்துப் பிரதிதான் இளந்தமிழன் என்பதாம்.

மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று மிக்கவர்.

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக இருந்தவர். செயல் வீரர்.

உலகம் சுற்றிய தமிழர் வரிசையில் இவரும் ஒருவர்.

பாரதிதாசன், கலைஞர் கருணாநிதி, கவிஞர் கண்ணதாசன் ஆகிய மூவரும் இவரது பொன்னியில் எழுதியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தேவகோட்டை

உ.ரா.மெ.சுப.சேவு.மெ. மெய்யப்ப செட்டியார்

திருவையாற்றில் திருப்பணி செய்தவர்கள் பெரும் புலவர் சக்திவேல் பிள்ளையின் தொடர்பால் தமிழ்நூல்கள் பல வற்றை வெளிவரச் செய்தவர்கள். தமிழ் நூல் வெளியிட என்று யார் கேட்டாலும் 'மெ' உதவினார்கள். அதே போல் தமிழ் மொழியின் மீது அவர்கள் வைத்திருந்திருந்த பற்றின் காரணமாக யார் வந்து தமிழ் படிக்க வேண்டும் என்று

கேட்டாலும் உடனே பொருளுதவி செய்து படிக்க வைப்பார்கள். இதில் இன, மத வேறுபாடுகள் என்பதே இல்லை, தமிழுக்கு அள்ளித் தந்த வள்ளல்.

இவர் தமிழ்த் தேவர் மகன் என்றே விளங்கியதால் தேவகோட்டை தமிழ்ச்சங்கமாகவே திகழ்ந்தது. புலவர் வீடுகளுக்குப் பொங்கல் பானை கொடுத்து மகிழ்ந்தவர். பள்ளிகளில் நூல்களை பரிசாகக் கொடுக்க வேண்டும் என்று சொன்னவர். தொ. பொ. மீயைப் போற்றியவர். வெள்ளி விழா சிலை அமைத்தது ஆகியவற்றில் பங்குகொண்டவர். மெ. அவர்கள் தகைமை நூல் புலவர் என்பதற்கு இதோ சில சான்றுகள்.

1. சிவ பூசை அனுட்டான விதி.
2. திருவையாறு அறம் வளர்த்த நாயகி பதிகம்.
3. கருதாவூரணி ஸ்ரீகைலாச விநாயக நான்மணிமாலை
4. சைவசித்தாந்த விதி
5. குன்றை நகர்க் குமரன் போற்றிப் பதிகம்

வன்றொண்டர் நாராயணன் செட்டியார்

திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய தேசிகரும் இவரும் சகமாணவர்கள். அவரால் இவர் பெற்ற பெயர் தான் வன்றொண்டர். இவர் எழுதியது "சிவஞான போத லகுவசனம்" ஆகும். இவரைப் பற்றி உ.வே.சா எழுதிய 'என் சரித்திரத்தில்' நிறையச் சொல்லியிருக்கிறார். இவருக்குக் கண்பார்வை இல்லை. நினைவு வளம் மிக்கவர். தமிழ் வித்துவான் சொக்கலிங்க அய்யா, சின்னையாச் செட்டியார் இருவரும் இவரின் மாணவர்கள்.

அழ. வள்ளியப்பா

குழந்தைக் கவிஞர் 7.11.1922ல் இராயவரத்தில் தோன்றினார். 13 வயது முதல் கவிதை எழுதினார். இந்தியன்

வங்கி மேலாளராகவும், கோகுலம் இதழ் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். 1966ல் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர். நல்ல சொற்பொழிவாளர், யுனெஸ்கோவிற்கு இவர் அறிக்கை நூலாக வெளிவந்துள்ளது.

இவரது நம் நதிகள் எனும் நூல் 14 மொழிகளில் நேஷனல் புக் டிரஸ்ட் நிறுவனத்தாரால் வெளியீடு செய்யப் பெற்றுள்ளது. 1000க்குக் குறையாமல் குழந்தைப் பாடல்கள் எழுதியவர். இவருடைய கவிதைகளை வைத்துப் பலர் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர்.

இனிமை கலந்த பேச்சும் எளிமையும் இவரை இவ்வுலகில் நிலை பெறச் செய்தன, தமிழகக் குழந்தைகளின் தேன் மிட்டாயே இவரின் பாப்பா பாட்டுதான்,

இங்ஙனம் வழிகாட்டியவர்கள் பல நகரத்தார் பெரு மக்களின் அடியொற்றி தொழில் துறை. மருத்துவம், விஞ்ஞானம், கல்வி, பொறியியல், நீதித்துறை, பொருளாதாரம், தமிழ்த்துறை, ஆசிரியத்துறை, பதிப்புத் துறை, திரைப்படத்துறை, புகைப்படத் துறை, முதலிய பல்வேறு துறைகளிலும் வல்லவர்கள் என்ற முத்திரையைப் பதித்து வருங்கால இளைய சமுதாயத்தினருக்கு வழிகாட்டி களாக இருந்து வருகிறார்கள்.